# SC/ST மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு சட்டங்கள்

ARK.தமிழ்ச்செல்வன்

# எஸ்.சி-எஸ்.டி மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள்

தொகுப்பு
**ARK. தமிழ்ச்செல்வன்**

வெளியீடு :-
**தென்பெண்ணை நதிகரை பதிப்பகம்**
அறம்கண்டநல்லூர்

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | SC/ST மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் |
| ஆசிரியர் | : | ARK.தமிழ்ச்செல்வன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | பிப்ரவரி 2020 |
| பதிப்பு விவரம் | : | முதற் பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 70 GSM |
| நூலின் அளவு | : | டெம்மி சைஸ் |
| அச்சு எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | 256 |
| நன்கொடை ரூபாய் | : | ரூ. 250 |
| வடிவமைப்பு | : | து.பிரசாந்த் |
| ஒளி அச்சு | : | வள்ளி பிரிண்டர்ஸ் திருக்கோவிலூர். |
| அச்சிட்டோர் | : | புகழ் பிரிண்டர்ஸ், சென்னை-5. |
| வெளியீடு | : | தென்பெண்ணை நதிகரை பதிப்பகம் அறம்கண்டநல்லூர் 605 752 கைப்பேசி: 9443441683 |
| நூல் தேவைக்கு | : | கைப்பேசி: 9445102867, |
| மின்னஞ்சல் | : | arkdemocracy45@gmail.com |

# அணிந்துரை

*தலித் மக்கள் மற்றும் பழங்குடி—மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு சட்டங்கள் எனும் சிறப்பான புத்தகம் தமிழ் கூறும் நல் உலகிற்கு நன்கொடை என அளித்துள்ளார் தோழர் ARK. தமிழ்ச்செல்வன் அவர்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை சாதிகளற்ற சமூகம். சுரண்டலற்ற சோசலிஷம் எனும் உயர் சிந்தனைகள் அவர் எழுத்தில் வடிந்த வண்ணமுள்ளது, களமாடிய அனுபவமும் அறிவுத்தேடலுமாக இணைந்து. ஏராளமான கருத்துக்களை இவர் இப்புத்தகத்தில் பதிவு செய்துள்ளது குறிப்பிடதக்கது, அதோடு மலைமக்களின் உரிமைகள். பஞ்சமி நில மீட்பு. சட்ட பூர்வ அனுகுமுறைகள் குறித்தும் நூல் ஏராளமாக பதிவு செய்கிறது. சனாதன வழக்கொழிந்த கருத்துக்களை நிராகரிப்பதும். சமூக அறிவியல் கருத்துக்களை முன் மொழிவதுமாக நூல் உரையாடல் செய்கிறது,*

*இன்றுள்ள சர்வதேசிய சிந்தனைகள் உலக பொருளியல் வாழ்வு முறைகள். இந்திய தேசியம் வளர்ந்துள்ள சூழல். அறிவும்—விஞ்ஞான தொழில் நுட்பமும் வளர்ந்தோங்கும் நிலை என. சாதி அழிந்திட வேண்டும் சாதி மனித மனங்களிலிருந்து உலர்ந்து உதிர்ந்திருக்க வேண்டும். மாறாக சாதி மனித மனங்களில் ஆழமான படிமமாகி இறுகி நிற்கிறது, ஆச்சறியமளிக்கிறது,*

*அன்றாட வாழ்வியல் முறையில் சாதி மிக கௌரவமான இடத்தை அளிப்பதாக. தலித் மக்களை தவிர. பிற சமூகங்களின் முற்போக்கு என்னம் கொண்டவர்களை தவிர அனைத்து சாதியினருமே மிக திடமாக என்னுகிறார்கள், சாதிய சமூகத்தில் நீண்டகாலம் துயரங்களையும்— அவமானங்களையும் தாங்கியபடி தலித் மக்கள் வாழ்கிறார்கள் பிறப்பால் தாழ்வு எனும் கருத்து உலகில் வேறெங்கும் இல்லை என்றார் டாக்டர்*

அம்பேத்கர், மாறாக உயர் சாதியினர் சாதிய பெருமிதங்களால் சாதியை பேணுகிறார்கள் அகமனமுறை. நிலம். அதிகாரம். செல்வ குவியல் என பொருளியல் முறைகளிலும் புறக்கணிக்கப்படுவதும் ஒடுக்கப்பட்ட இம்மக்களே.

இந்திய சமூகம் சாதி தொகுப்பாய் நிலை பெறுவது மட்டுமல்ல. சமூகம் வர்க்க சமூகமாய் மலர்வதையும் தடுத்து வளர்கிறது. இந்திய மண்ணில் வர்க்கம் வேறு. சாதி வேறு அல்ல என்ற அம்பேத்கரின் கூற்று இன்றைய உரையாடலுக்குறியது, தொழிற்சாலைகள்—முதலாளிகள் உற்பத்தி பொருள்கள்—தொழிலாளர்கள் தோன்றுவதற்க்கு முன்னேற இந்திய சமூகத்தில் கடினமான வேலைகளையும். மிக தாழ்வான கடைநிலை வேலை என குறிப்பிட்ட வேலைகளையும் தலித் மக்களே செய்தனர். செய்கின்றனர், அதாவது உழைக்கும் மக்கள் பாத்திரத்தை தலித் மக்களே வகித்தனர். வகிக்கின்றனர், சமூகம் தன்னை எவ்வளவு புறக்கணித்தாலும் அவமதித்தாலும். எளிய இம்மக்கள் ஜனநாயகத்தின் அடித்தளமாய் – நாகரிகத்தின் நட்பின். நல்லிணக்கத்தின் அடையாளமாய் அவர்கள் திகழ்கின்றார்கள். எனினும் சமூக தீமைகள் யாவும் தலித் மக்கள் மீதே குவிக்கப்படுகிறது, தலித் சமூகம் இதனை மௌனமாக ஏற்பதேன்?

தொன்மை தமிழ் சமூகத்தில் சாதிகளற்ற தமிழ் சமூகம் உலகை தனது சொந்த குடிலாக பார்த்த தமிழ் சமூகம் மானிடர் யாவும் தன் சொந்த உறவாக பார்த்த தமிழ் சமூகம். மானுடம் வென்றதம்மா என உரக்கசொன்ன தமிழ் சமூகம். பிறப்பொக்கும் உயிர்கள் சமம் என முழங்கிய தமிழ் சமூகம். காலம் இடம் என அறிவுசூழ் திசைகளோடு வாழ்வு கொண்ட தமிழ் சமூகம் சமூக அறிவியலின் உச்சமாக வளர்ந்திருக்க வேண்டாமா?

மாறாக சாதி. மதம் என அறிவின் தடைகளை அள்ளி அணைத்துக்கொள்கிறதே ஏன்? இதே போல் தான் தொன்மை தமிழ்குடிகள் மலை மக்கள் அறம் வரம். காதல் போர்நெறிகள். இயற்கையோடு இசைவு. இயற்கையை பாதுகாத்தல் என ஏராளமான வாழ்வியல் உணர்வுகளை நமக்களித்தவர்கள் இம்மக்கள் தான், மொழி. காதல். குடும்பம். கூத்து. பாட்டு. திசைவழி. வானியல். நெருப்பு. கருவிகள் என வாழ்வின் ஆரம்பநிலையில் நமக்களித்தவர்கள் மலைமக்களே வேளிர் குடிமக்களே தமிழ் பேசிய மலையின மக்களே,

*கார்பரேட் ஆதரவு கொள்கைகளால் மலைமக்கள் வசிப்பிடம் அவர்களின் வாழ்வியல் முறைமை என யாவும் கேள்விகுறியாகிவிட்டது, எனவே சாதி ஒழிப்பு மலைமக்களின் உரிமைகள். சுறண்டலற்ற சமூகம் என அனைத்தையும் இணைத்து போரிடும் மார்க்சிய அணுகுமுறை தேவை. வர்க்கப்போர் என்பது சுரண்டலை – எதிர்ப்பது மட்டுமல்ல. மூலதனத்தை எதிர்ப்பது மட்டுமல்ல உழைக்கும் மக்களின் அதிகாரம் மட்டும் அல்ல மக்கள் மீதான பிறப்பினால் ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்து நடக்கும் போரும் வர்க்ககப்போரே எனும் சிந்தனைகள் வலுப்படுத்தவேண்டும், புதிய சமூகம் தேவை அது சாத்தியமே. அதற்கு புதிய மனிதர்கள் தேவை. தங்களுக்கு தாங்களே உரையாடல் செய்து தங்களை தாங்களே தோலுரித்து கொண்டு. லெனின் கூறுவதுபோல புதிய மனிதர்கள் பிரசவிக்கப்படவேண்டும். அவர்களால் தான் புதிய சமூகம் சமதர்ம சமூகம் பிறக்க இயலும். புதிய கருத்துகளுக்கு மார்க்சியம் தேவை. பெரியார். அம்பேத்கர் அவசியம் தேவை. நூல் இதனை வலியுருத்துகிறது, சமூக அறிவியல் சிந்தனைகள் வளர்வதும் நூல் ஆசிரியர் கனவு. ஒடுக்கப்பட்ட மக்களின் கனவு. ஆகையால் அது வாகைசூட்டும்.*

**தோழமையுடன்**

**மூ.வீரபாண்டியன்**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர்**
**வாழ்வுரிமை இயக்கம்**

# வாழ்த்துரை

**துயர்படும் மனித இனத்தின் ஒரே தலைவவர் நான் தான் என்று என்றென்றைக்கும் உரிமை கொண்டாடியவன் நான் அல்ல. தீண்டாமை எதிர்ப்பு மட்டுமே என் சக்திக்கு உட்பட்டது. வேறு எந்த பிரச்சனையும் அதே அளவுக்கு மேம்பட்டது இல்லை என நான் கூற மாட்டேன். ஆனால் மனித வாழ்வு என்பது குறுகிய கால வரையறைக்கு உட்பட்டது. என் நிலையில் ஏதோ ஒரு லட்சியத்தை மட்டும் எடுத்து கொண்டுதான் பணியாற்ற முடியும். எனவே, தீண்டாமை கொடுமைக்கு உள்ளானவர்களுக்காக பணியாற்றுவதை தவிர வேறு எதற்கும் நான் ஆசைப்படவில்லை.**

- Dr.**அம்பேத்கர்**

*தீண்டாமை ஒழிப்பை தன் பிரதான அம்சங்களில் ஒன்றாக பிரகடனம் செய்யும் இந்திய அரசியல் அமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்து 70 ஆண்டுகள் ஆகியும் அண்ணல் அம்பேத்கரின் லட்சியம் நிறைவேறாத கனவாக உள்ளது.*

*மானுட பரப்பில் வேறு எங்கும் கண்டிராத சாதிய வன்மம் கட்டமைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தும் பணியை மனு அதர்மம். பன்னெடுங்காலமாய் செய்து வரும், மனு அதர்மத்தை தூக்கி பிடிக்கும் இந்துத்துவ அரசு, மதச்சார்பற்ற மண்ணில் நீடித்து இருப்பதும் மனித துயரங்களுக்கு வழிவகுக்கும். இடதுசாரி இயங்கங்கள் தலைமையில் ஒருங்கிணைந்த தஞ்சை மண்ணில், ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கான உரிமைகளையும், தலித் மக்கள் வென்றெடுத்த சமூக மாற்றங்களில் பாதி அளவுக்கு கூட வேறு இயக்கங்களில் வேறு இயக்கங்களால் பெற முடியவில்லை என்பதை தலித் ஆய்வாளர்களே ஒப்பு கொள்கின்றனர்.*

*அண்ணல் அம்பேத்கர் அவர்கள் ஜனநாயகம் என்ற அம்சத்தின் மீது ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். அரசியலில் மட்டும் ஜனநாயகம் இருந்தால் போதாது, சமூக ஜனநாயகமும் முக்கியமானது என்பதையே அவர் மீண்டும் வலியுறுத்தினார். சுருக்கமாக சொன்னால் அம்பேத்கர் நமக்கு சொன்ன செய்தி ஒன்றே ஒன்று தான். எல்லா மனிதர்களுக்கும் சமமான வாய்ப்பு அளியுங்கள். எனக்கு மேலே ஒருவரும் இல்லை. எனக்கு கீழே ஒருவரும் இல்லை என்பதை மனித விழுமியமாக மாற்றுங்கள் என்பதுதான் அது.*

*தீண்டாமையை முற்றாக ஒழிக்கவும், வர்ணாசிரம அதர்மத்தில் இருந்து தலித் மக்களை விடுவிக்கவும் வாழ்நாள் முழுவதும் இறுதிவரை போராடி அம்பேத்கர் முடியாமல் தான் இத்தகைய சாதியத்தின் ஊற்று கண்ணாய் வர்ணாசிரம அதர்மத்தின் அரணாய் விளங்கும் இந்து மதத்திலிருந்து விலகி பல்லாயிரக்கணக்கான தலித்துகளுடன் புத்த மதத்தை தழுவினார்.*

*பா.ஜ.க.ஆளும் மாநிலங்களில் தலித்களுக்கு எந்த பாதுகாப்பும் இல்லை. சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்து வைத்துக்கொண்டு சங்பரிவார காவி கூட்டம் புரியும் அட்டூழியம் அளவு கடந்தது ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக குஜராத் உனாவில் செத்த பசுமாட்டின் தோலுரித்ததாக நான்கு தலித் இளைஞர்கள் காவிகளால் சித்ரவதைக்கு உள்ளாகி அதன் விளைவாக நிகழ்ந்தது உனா பேரெழுச்சி.*

*சாதியமும், மதவாதமும் உடலும் உயிருமாய் ஜீவித்து வருவதிலிருந்து மனித குல விடுதலை மார்க்சியத்தால் மட்டுமே சாத்தியம். வர்க்க ரீதியாக அணிதிரளில் உழைக்கும் வர்க்கம். அரசு அதிகாரத்தை கைப்பற்றலில் தான் வர்ணாசிரம் அதர்மத்திலிருந்து முழு விடுதலை கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. அதைத்தான் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்ட நாடுகளில் காண முடிந்தது. அந்த வகையில் இந்நூல் இவைகுறித்த விவரங்களை கடந்து செல்வதுடன் தற்கால பாதுகாப்பு நடவடிக்கைக்கு சட்டப்போராளிகள் தேவை என்பதை வலியுறுத்துகிறது. களத்தில் வர்க்க ஒற்றுமையை கட்டுவதற்கும், சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை இன்னும் வீரியப்படுத்த இந்நூல் உதவும். அதற்கான அணிதிரட்டலை மேற்கொள்வதும் வர்க்கபோர் நிகழ்த்துவதும், அம்பேத்கார் உள்ளிட்ட முற்போக்கு மற்றும் ஜனநாயகவாதிகள் கனவை நனவாக்கும் என்பது தின்னம். அவ்வகையில் உதவியாக இந்நூல் இருக்கும். இன்றைய காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு ஆழமான தேடல் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது, சிறப்புக்குரியது. இந்நூலை உருவாக்கிய தோழர். ARK. தமிழ்ச்செல்வன் மிகுந்த பாராட்டுக்குரியவர். ஆகவே, வரவேற்போம், வாழ்த்துவோம்..*

**தோழமையுடன்**

**ஏ.வி.சரவணன்**
**மாவட்டச் செயலாளர்,சிபிஐ**

# வாழ்த்துரை

இந்திய துணை கண்டத்தில் பல நூற்றாண்டுகளாக அடிமை படுத்தப்பட்டு, அடிப்படை உரிமைகள் கூட கிடைக்கப் பெறாமல் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின சமுதாய மக்கள், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக அந்தஸ்து போன்றவைகளை பெற்றுத் தீர வேண்டும் என்கிற கட்டாயத்தில் இருந்திடும் இம்மக்களுக்கு இந்திய அரசியல் சட்டத்தை வகுத்து தந்த சட்ட மாமேதை அண்ணல் டாக்டர்.B.R.அம்பேத்கர் அவர்கள் SC/ST மக்களுக்காக உரிமைகளை சட்டமாக படைத்தளித்துள்ளார். அது மூலமாக பின்பற்றப்படுவதற்கு, பாதிக்கப்பட்ட இம்மக்கள் இந்த சட்டம் பற்றி அறிந்திருக்க வேண்டும், புரிந்திருக்க வேண்டும். சாமான்ய SC/ST மக்களும் புரிந்து கொண்டு செயலாற்றும் விதத்தில் மிகவும் பயனுள்ள புத்தகமாக தொகுத்து படைத்திருக்கிற தோழர் ARK.தமிழ்ச்செல்வன் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர் மட்டுமல்ல, பாதுகாக்கப்படவும் வேண்டியவரும் கூட.

பல தளங்களில் நின்று SC/ST மக்களுக்காக பல களப்போராட்டங்களை நடத்தி பெரும்பான்மையாக வெற்றியும் கண்டவர். அண்ணல் டாக்டர் B.R.அம்பேத்கர் அவர்கள், இந்திய மக்கள் அனைவருக்காகவும் சட்டம் படைத்தார். இன்றளவும் நிலைத்து நிற்கிறது. ARK.தமிழ்ச்செல்வன் அவர்கள், உரிமைகளுக்காக முயற்சிக்கும் SC/ST மக்களுக்கான சட்டங்களையும் உரிமைகளையும் தொகுத்து வழங்கியதை அவரின் வாழ்நாள் சாதனையாகவே நான் கருதி பெருமை அடைகிறேன், பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

**தோழமையுடன்**

**சி.சோமசுந்தரம்**

**நிறுவனர் சுவாசம் பவுண்டேஷன் ட்ரஸ்ட்**

**நெய்வேலி**

# முன்னுரை

**நல்லாரை உழைப்போரைப் பறையர் என்றார்**
**நயவஞ்சகமுடையோரை மேல்சாதி யென்றார்**
**பொல்லாத கொடியவரை மன்னர் என்றார்**
**பொய் உரைத்த கயவர்தமை குருக்கள் என்றார்**
**சொல்லாகும் தாயினத்தை அடிமை என்றார்**
**சூதுமிகும் ஆசாரம் சமயம் என்றார்**
**இல்லாத பொய் வழியில் சென்றதாலே**
**இந்நாட்டார் அடிமைவாழ் வெய்தினாரே -**

**என்றார் தோழர்.ப.ஜீவானந்தம்**

**இருட்டறையில் உள்ளதடா உலகம் – சாதி**
**இருக்கிறது என்பானும் இருக்கின்றானே.**

*எனப் புரட்சி கவிஞர் பாரதி தாசன் நொந்து போய் பாடியுள்ளார். பிறிவியிலேயே ஏற்றதாழ்வுகளை கற்பிக்கும் சாதியமைப்பும் அதன் பல்வேறு நிகழ்வுகளும் சிந்தனையாளர்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்டே வந்துள்ளன.*

**செத்த பிறகு இடுகாட்டிற்கு எந்த பாதையில்**
**பிணத்தை கொண்டு போவது என்ற முரண்பாட்டில்**
**இங்கு பலர் செத்து போக நேரிடுகிறது.**

*தலைச்சாதி, இடைச்சாதி, கடைச்சாதி ஆகியோர் ஒரே தெய்வங்களை வழிபட்டாலும் கடைச்சாதியான தாழ்த்தப்பட்டோர் வணங்கும் தெய்வங்களுக்கு தீட்டு கறிப்பித்து தலைச்சாதிகளின், ராணுவமாக மாறிடும் இடைச்சாதியர்களும், கடைச்சாதியர் வழிபடும் சாமி பொது பாதையில் வரக்கூடாது என, சாமியையும் எரித்த சாதிய வன்கொடுமையை, சேஷ சமூத்திரத்தில் இந்திய சுந்திரம் அடைந்த 70 வது ஆண்டில் கண்டோம். ஆதிக்கவாதிகள் உழைப்பாளிகளைச் சுரண்டச் சாதியை பயன்படுத்துவதோடு மட்டுமின்றி, உழைப்பாளிகள்*

*தத்தமக்குள் இரண்டு எதிரெதிர் அணிகளாக பிரிந்து ஒருவரை யொருவர் வெட்டி கொள்வதற்கும், குத்திக் கொள்வதற்கும் சாதி பயன்படுகிறது.*

*விண்வெளியில் தேவலோகமும் தேவர்களும் உள்ளனர் என்ற அறிவுக்கு ஒவ்வாத சிந்தனை கொண்ட இந்தியாவில் தான் 30க்கு மேற்பட்ட விண்கலங்கள் வெற்றிகரமாக விண்வெளியில் அனுப்பி உள்ளனர். அறிவியல் முன்னேற்றம் இருந்தாலும்,*

*அறிவிற்கு புறம்பான செயல்களும் வீச்சடைந்து கொண்டுதான் உள்ளது. இந்திய துணைக் கண்டத்திற்கு மட்டுமே உரிய சாதிய சமுக அமைப்பு முறை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்ச்சி அடைந்து இன்று 111 வடிவங்களில் தீண்டாமை கொடுமைகள் உலவும் கொடுமை முதலாளித்துவ சமூகத்திலும் நிலைபெற்றிருக்கிறது என்பதை பல சம்பவங்களில் இன்றும் காண்கிறோம்.*

*நாகரிகம் இல்லாமல் காட்டு மிராண்டி மனநிலைக்கு சென்று, சொந்தமகளையும், சகோதரியையும் ஆணவப் படுகொலை செய்யும் கொடுமைகள் ஈரகுலையும் நடுங்க செய்கிறது.*

*நிறவெறி தாண்டவமாடிய அமெரிக்காவில் தற்போது குடும்பம் குடும்பங்களாக வெள்ளையர்களும், கருப்பர்களும் வாழ்ந்து வருகிறார்கள்.*

*எல்லா சமூகத்திலும் அதிகார படிநிலைகளும் அடுக்கமைவுகளும் இருக்கின்றன. பொதுவாக அவை வர்க்கம் சார்ந்ததாக இருக்கும். அதற்குள்ளாக வேறு சமூகப் பிரிவுகளும் அடுக்குகளும் காணப்படுகின்றன.*

*இந்திய சமூக அமைப்பு முறையில் காணப்படும் விசித்திரம் என்ன வென்றால் வேலை பிரிவினையாக தொடங்கிய சமூக படிநிலைகள் பல நூற்றாண்டுகளாக வடிவமைவு பெற்று, ஒரு அதிகார படிநிலை அமைப்பாக கெட்டிப்பட்டன.*

*சந்தேகத்திற்கு இடமின்றி அவை பிறப்பின் அடிப்படையானது. சாதிய அமைப்பு சமூக வியலாளர்கள் குறிப்பிடும் அகமண முறையை கொண்டு பராமரிக்கப்படுகிறது. கண்டிப்பான விதத்தில் கடைபிடிக்கப்படும் இந்த சமூக அமைப்பு, முறையினை மத நிறுவனம் அங்கிகரித்து வளரத்தெடுக்கிறது.*

*பிறப்பின் அடிப்படையில் மக்களைப் பிளக்கிற வேலை வேத காலத்திலேயே ஆரம்பமாகிப் போனது. ரிக் வேதத்தின் “புருஷ சூக்தம்” பகுதயில் “புருஷன்” எனப்பட்ட கடவுளின் சிரசிலிருந்து பிராமணர், தோளிலிருந்து சத்திரியர், தொடையிலிருந்து வைசியர், காலிலிருந்து சூத்திரர் பிறந்தார் எனும் சூத்திரம் உள்ளது. படிநிலை வருண அடுக்கு இப்படியாக முன்னிறுத்தப்பட்டது. ஆனால்,*

**வேத காலத்திலும் சரி, அடுத்து வந்த இதிகாச காலத்திலும் சரி இந்த அடுக்கு கறாராக கடைபிடிக்கப்படவில்லை. ரிஷிகளின் வாழ்க்கை பின்புலத்தைக் காணும்போது ஒரு வருணத்திலிருந்து மாறுகிற வாய்ப்பு இருந்தது தெளிவாகிறது. இதனால் தான் “நதி மூலம் ரிஷி மூலம் பார்காதே” எனும் சொலவடை உருவானது.**

*விரைவிலேயே இதில் மாறுதல் ஏற்படத் துவங்கியது என்பதை ராமாயணத்தின் சம்பூகன் வதமும், மகாபாரதத்தின் ஏகலைவன் கட்டைவிரல் வாங்களும் உணர்த்தின. அப்போதும் ஒரு ராமனின், ஒரு துரோணரின் தனித்த செயல்பாடுகளாக அவை இருந்தனவே தவிர திட்டவட்டமான விதிமுறைகளாக மாறவில்லை. அந்த ஏற்பாடு பகவக்கீதையில் துவங்கி மனுதர்ம சாஸ்திரத்தில் நிறைவடைந்தது. பகவானே வருண தர்மத்தை உருவாக்கியதாக முன்னதில் கூறபட்டது என்றால் அதை மீறினால் என்ன தண்டனைகள் தரப்படவேண்டும், அந்த மீறலில் பிறந்த குழந்தைகளைச் “சண்டாளர்கள்” எனச் சொல்லி எப்படி ஒதுக்கி வைக்கவேண்டும் என்று பின்னதில் கூறப்பட்டது. அந்த காலத்திய சாஸ்திரங்கள் இந்த காலத்திய சட்டங்களை விட சிவில் சமூகத்தின் ஒப்புதலோடு சத்திரிய ராஜாக்களால் - பிராமணர்களின் வழிகாட்டு தலின்படி - நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதை நினைவுப்படுத்திக் கொண்டால் வருணாசிரமச் சமூகக் கட்டமைப்பு இயல்பானதாகக் கருதப்பட்டதன் இரகசியம் புரிபடும்.*

*இத்தகையக் கட்டுப்பாடுகளையும் மீறி இயற்கை சிரித்தது. வருணக் கலப்பு மட்டுமல்ல, நால் வருணத்தவர் பஞ் சமருடன் உடலுறவு கொள்கிற மீறலும் நடந்தது. இதில் பிறந்த பிள்ளைகளை வகைவகையாகப் பிரிக்க புதுப்புது சாதிகள் உதயமாகின. எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்த உயர் வருணத்தவர் தங்களது ஆதிக்கத்தை அரசாட்சியிலும் சிவில் சமூகத்திலும் நிலைநிறுத்த எண்ணிக்கையில் மிக அதிகமாக*

இருந்த வைசியர் - சூத்திரர் - பஞ்சமர் ஆகியோரை பல உட்சாதிகளாகத் துண்டு போட்டார்கள். அவர்களுக் கிடையே நிரந்தர மோதல்களை நிலை நிறுத்தினார்கள். தங்களது தலைகளை உயர்சாதியினின் கால்கள் மிதித்து கொண்டிருப்பதை உணராத வகையில் தங்களது கால்கள் கீழ்சாதியினரின் தலைகளை மிதிப்பதில் சுகம் காண வைத்தார்கள். ஒவ்வொரு சாதியினருக்கும் தங்களுக்கு கீழான சாதியினர் மீது ஒரு வகை அருவருப்பை உருவாக்கி, மனத் தடைகளை ஏற்படுத்தி, கீழ் சாதி வெறுப்பை ஓர் இயல்பான உளவியல் பாங்காய் கட்டமைத்தார்கள்.

மேலும் கீழுமாய் இருந்த ஒவ்வொரு சாதியும் தன்னை தனித்த பிரிவாகக் கருதிக் கொண்டு இயங்கியது என்றால், கீழ்சாதிகளை எல்லாம் வலங்கை - இடங்கை எனப் பிரித்து மோதவிடும் வேலை சோழ சாம்ராஜிய காலந்தொட்டு 18ஆம் நூற்றாண்டின் வரை தொடர்ந்தது. இவர்களுக்கிடையே கட்டப் பஞ்சாயத்து செய்யும் வேலையை பிரமாணர்கள் - சத்திரியர்கள் மேற்கொண்டு அப்படியாகவும் தங்கள் மேலாண்மையை நிலைநிறுத்திக் கொண்டார்கள்.

அது சமூகரீதியாக மட்டுமல்லாது பொருளாதார ரீதியாகவும் இருந்தது. சரியாகச் சொல்வதென்றால் பொருளாதார ஆதிக்கத்தை நிறுவிக் கொள்ளவே சமூகரீதியான படிநிலை வருண அமைப்பு உருவானது. உலக அளவில் பொதுவுடைமைச் சமுதாயத்திலிருந்து அடிமைச் சமுதாயமும், அதிலிருந்து நிலப் பிரபுத்துவ சமுதாயமும் உருவானது. என்றால் இங்கே வருணாசிரமம் எனப்பட்ட புதுவகை அடிமைச் சமுதாயம் உருவானது. அதுவே சில மாறுதல்களுடன் நிலப் பிரபுத்துவ சமுதாயமாக உருமாறிக் கொண்டது. அந்த கட்டமைப்பில் பிராமண - சத்திரிய - வைசிய சாதியினர் எஜமானர்களாக இருந்தார்கள் என்றால் சூத்திரர்கள் கிட்டத்தட்ட அடிமை நிலைமையிலும் பஞ் சமர்கள் அடிமைகளாகவும் இருந்தார்கள்.

19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கே ஆங்கிலேயர்கள் ஆட்சி வந்தபோதும் இது தான் நிலைமை. நிலப் பிரபுத்துவ எஜமானர்களின் கொடுமை தாங்காமல் ஓடிப்போன அடிமைகளான பஞ்சமர்களை பிடித்து கொடுக்கும் வேலையை கலெக்டர்கள் பார்த்ததை அவர்களது ஆவணங்கள் விவரிக்கின்றன. அதாவது, அன்று ஆளும் வருணங்களே ஆளும் வர்க்கங்களாகவும், ஆளப்பட்ட வருணங்களே ஆளப்பட்ட

வர்க்கங்களாகவும் இருந்தன. அப்படி வருணங்களும் வர்க்கங்களும் பின்னிப் பிணைந்த சமுதாயமே இங்கே நிலவியது.

அதிலொரு மாறுதல் என்பது இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையை அறிமுகப்படுத்திய பிறகுதான் நிகழ்ந்தது. அப்போது தான் உயர் சாதிகளிலிருந்து தொழிலாளி வர்க்கம் உருவாவதும், சூத்திர சாதிகளிலிருந்தும் முதலாளி வர்க்கம் உருவாவதும் ஆரம்பமானது. சரித்திர நியாயப்படி பார்த்தால் நிலப் பிரபுத்துவத்தின் சமூக குணமாகிய வருணாசிரமம் என்பதை முதலாளித்து வமானது முற்றிலுமாகத் தகர்த்திருக்க வேண்டும். ஏகாதிபத்தியவாதிகளால் இறக்குமதி செய்ப்பட்ட இந்திய முதலாளித்துவம் அப்படியொரு வேலையை செய்யவில்லை. மாறாக அது நிலப்பிரபுத்துவத்துடன் கூச்சமின்றி சமரசம் செய்து கொண்டது. இதுதான் இங்கு நடந்த மிக மோசமான துக்க நிகழ்வு.

20ஆம் நூற்றாண்டு பிறந்த பிறகும் இதுதான் நிலைமை என்பதை 1901ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பு காட்டியது. அன்றைய சென்னை மாகாணத்தில் மட்டும் 350 சாதிக் தொகுதிகள் இருந்தது. பிராமணர்களை புரோகிதர்களாக அமர்த்துதல், தீட்டு, மாட்டுக்கறி சாப்பிடுதல் எனும் மூன்றின் அடிப்படையில் அவர்களை பத்துப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்க முடிந்தது. ஐரோப்பாவில் பண்ணை அடிமைகளை கூலித் தொழிலாளிகளாக மாற்றி தன்னை வளர்த்துக் கொண்ட முதலாளித்துவம் அதைக் கூட இந்தியாவில் செய்யாமலேயே, சாதியத்தைப் பெரிதும் குலைக்காமலேயே அந்த காரியத்தைச் செய்ய பார்த்தது. இது சமூகம் - அரசமைப்பில் தீவிரமான முரண்களையும் மோதல்களையும் கொண்டு வந்தது.

இதன் வெளிப்பாடாகத்தான் இந்த நாட்டில் சமூக சீர்த்திருத்த இயக்கம் எழுந்தது. பின்னர் அது தேசிய அரசியல் இயக்கத்திலும் பிரதிபலித்தது. அயோத்திதாசர், பெரியார், அம்பேத்கர், காந்திஜி, சிங்காரவேலர் போன்றோரின் சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகளை இந்த பின்புலத்தில் தான் ஆராய்ந்தளிக்க வேண்டும். அவற்றின் நிறை குறைகளை நிதானமாக உள்வாங்க வேண்டும். அவற்றையும் வெளித்தாண்டி அடுத்த இலக்குகளை நோக்கி முன்னேறவேண்டும்.

பவுத்த நெறி, இட ஒதுக்கீடு, ஆலய நுழைவு, சட்டத் திருத்தம், எதிர்ப்பு பிரச்சாரம், நிலச் சீர்த்திருத்தம் என்ற பூட்டைத் திறக்க ஒவ்வொரு சாவியாகப் போட்டுப் போட்டு பார்த்தார்கள் இந்த தலைவர்கள், விஷயம் என்னவென்றால், சாதி ஒரு பூட்டால் அல்ல பல பூட்டுகளால் பத்திரப்படுத்தப்பட்டிருந்தது. சகலத்தையும் விட முதலாளித்துவப் பொருளாதாரத் தடை எனும் பெரிய பூட்டு வெகு மக்களது தோளில் தொங்கியது. இதற்கான திறவுகோலையும் தேட வேண்டியிருந்தது. வங்கியின் நவீன லாக்கர் போல பல சாவிகளை ஒரே நேரத்தில் போட்டால் தான் இந்த சாவித் திறக்கும் என்பதை சரித்திரம் இடித்துச் சொன்னது. வேறு வார்த்தைகளில் சொன்னால், இங்கே பிராமணியமும் முதலாளித்துவமும் சாரைப்பாம்புகளாய் பின்னி பிணைந்துள்ளன. இரண்டையும் எதிர்த்து ஒரு சேரப் படை நடத்த வேண்டியுள்ளது.

இந்திய கம்பெனிகளது இயக்குநர் அவைகளில் சாதியம் எப்படி உள்ளது என்பது பற்றி கனடா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் சமீபத்தில் செய்த ஓர் ஆய்வு உள்ளது. ஆயிரம் பெரிய கம்பெனிகளை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்ததில் இயக்குநர்களில் 46% பேர் வைசியர்களாகவும் 44% பேர் பிராமணர்களாவும் இருப்பதைக் கண்டறிந்தார்கள். மீதி 10%ல் தான் மீதி சாதியினர் மற்றும் மதச் சிறுபான்மையோர் வருகின்றனர். இந்த புள்ளி விவரம் போதும் இங்கு இன்றும் நிலவும் நிலப்பிரபுத்துவ - முதலாளித்துவ சமரசத்தினை உணர்ந்து கொள்ள.

இரு பெரும் ஆளும் வர்க்கங்களது கூட்டணியை அஸ்திவாரமாகக் கொண்டு தொடர்கிற சாதியத்தை ஒழித்துக் கட்ட அடுக்கடுக்கான நடவடிக்கைகளும், விரிந்த அணிவகுப்பு உருவாக்கலும் தேவை. கடந்த காலத்துக் தலைவர்களது பணிகள் எல்லாம் பயனற்றுப் போய்விடவிலலை. சாதி எதிர்ப்புப் பிரச்சாரமும், இட ஒதுக்கீடும், ஆலய நுழைவும் போராட்டங்களும், ஓரளவுக்கான நிலச் சீர்திருத்தமும் அடித்தட்டு சாதியினரின் வாழ்வில் மற்றும் சிந்தனையில் ஒரளவு நல்ல மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. அதனால் அவர்கள் பெற்ற விழிப்புணர்வைத் தங்க முடியாமல் தான் ஆதிக்கவாதிகள் எரிச்சலடைந்திருக்கிறார்கள் என்பது தர்மபுரி உள்ளிட்டு பல்வேறு சம்பவங்கள் வெளிப்படையாகத் தெரிகிறது. எனவே, இந்த வரலாற்று ஆளுமைகளின்

பங்களிப்பை அங்கீகரித்துக் கொண்டே அடுத்த கட்டத்தை நோக்கிக் காயை நகர்த்த வேண்டும். பெரியார், அம்பேத்கர், காந்திஜி போன்றோர் மீதான முரட்டுத்தனமாக கோபதாப வெளிப்பாடுகள் சாதிய எதிர்ப்பு இயக்கத்திற்கு பயன்படப் போவதில்லை.

அதே நேரத்தில், அடுத்தக் கட்டம் என்பது இந்த மகத்தான தலைவர்களது சிந்தனை, செயல்பாடுகளையும் தாண்டிய மகத்தான நிகழ்வு என்பதை மனதில் உந்த வேண்டும். இந்த தலைவர்களது இவ்வளவு பணிகளுக்குப் பிறகும் சாதியம் ஒழியவில்லை என்பது மட்டுமல்ல. தீண்டாமைகூட முற்றிலுமாக ஒழியவில்லை என்பது உத்தமபுரம் உள்ளிட்டு பல சம்பவங்கள் நாமறிவோம். தீண்டாமையும் வன்கொடுமைகளும் விதவிதமான வடிவங்களிலும், முறைகளிலும் வெளிப்பட்டு நிற்பதை யதார்த்த வாழ்வு சுட்டி காட்டிக்கொண்டே இருக்கிறது. இவையே இன்னும் ஒழியவில்லையே ஓட்டுமொத்தச் சாதியம் என்று ஒழிவது எனும் ஏக்கப் பெருமூச்சு இதயத்திலே எழுந்தாலும் அது நடவாமல் இந்திய சமூகம் அடுத்த கட்டத்தை அடையப் போவதில்லை என்பது பட்டப்பகல் வெளிச்சமாகத் தெரிகிறது. அந்த தேவையிலிருந்து அதை அடைவதற்கான வழிமுறைகளை நமது உள்ளம் தேடுகிறது, அதேவேளையில் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது.

- தீண்டாமை தொடங்கி முழு சாதிக் கட்டமைப்பையும் தகர்ப்பதற்கு பன்முகத் தாக்குதல் தேவை. ஒற்றை ஏவுகனை போதாது. அதாவது சாதியத்தை வெறும் சாதி எதிர்ப்பு நோக்கால் மட்டும் முறியடித்துவிட முடியாது. சாதியம் ஒடுக்குமுறைகள், லஞ்ச லாவண்யங்கள், பெண்ணடிமைத்தனம், மூட நம்பிக்கைகள் இத்யாதிகளால் நசுக்குண்டு கிடக்கிறது. சாதி ஒழிப்புப் போராளிகள் தங்களின் பிரதான குறிக்கோளில் நின்று கொண்டே வாழ்வின் இதர பிரச்னைகளிலும் கம்பு சுழற்ற வேண்டும். அப்போது தான் அடித்தட்டு மக்களை ஈர்க்க முடியும், அவர்களது உணர்வு தளத்தை உயர்த்த முடியும்.
- சாதி ஒழிப்பை யார் சாதியத்தால் அதிகம் ஒடுக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களை திரட்டு வதிலிருந்து ஆரம்பிப்பது என்பது இயல்பே. அதன் படியாகத் தாழ்த்தப்பட்ட மக்களை குறிவைத்து திரட்டுகிற பணியில் இறங்குகிறோம். கொடுமை என்னவென்றால் இந்த மக்களையும் கூறு போட்டு வைத்திருக்கிறது பிராமணியம்.

மூன்று பெரும் பிரிவுகளாக உள்ள மக்களை ஒன்றுபடுத்த வேண்டியுள்ளது. ஒற்றுமை என்பது எப்போதும் அவரவருக்கு உரியதை கொடுப்பதின் மூலம் தான் உருவாகும். இதுகாறும் தங்களது உரிமையை இழந்திருந்த அருந்ததியர்களுக்கு அது கிடைப்பதைச் சகலரும் அங்கீகரிக்கவேண்டும். அப்படி உருவாகும் ஒற்றுமையயைக் கொண்டு தீண்டாமையின் சகல வடிவங்களையும், வன்கொடுமையின் சகல முறைகளையும் ஒழித்துக் கட்டியாக வேண்டும். ஒரு நாகரிக சமுதாயம் உருவாவதற்கான முன் நிபந்தனை இது. இதில் சமரசத்திற்கு இடமில்லை. இதற்காக கருத்தியல் தளத்திலும், நேரடித் தளத்திலும் ஒரு சேர இறங்கியாக வேண்டும்.

- தாழ்த்தப்பட்ட மக்களை திரட்டுவது, தீண்டாமை வன்கொடுமைகளை வேரறுப்பது எனக் கிளம்பும் போது வண்டி பிற்படுத்தப்பட்ட மக்களிடம் போய் முட்டி நிற்கும் வினோதம் உள்ளது. உயர் சாதியினரிடமிருந்து தங்களது உரிமைகளைப் பெற அவர்களும் போராடியவர்கள் தாம். இப்போழுதும் போராடுபவர்கள் தாம். ஆனால் அறிந்தோ, அறியாமலோ தாங்களும் தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்கி வருகிறோம் என்பதை இன்னும் உணராமல் இருக்கிறார்கள். அதை தயக்கமின்றி அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிற பெரிய வேலை இருக்கிறது. வெறும் பேச்சளவில் மட்டுமல்ல, செயலளவிலும் இவர்கள் மத்தியிலிருந்து புறப்படும் ஆதிக்கவாதிகளை எதிர்த்து போராட வேண்டும். முறியடிக்க வேண்டும். இதற்கு, மூன்று விஷயங்கள் உதவிக்கு வருகின்றன. ஒன்று, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் எனும் இரு பிரிவுகளிலும் உழைப்பாளி மக்கள் இருக்கிறார்கள். அந்த வர்க்க ஒற்றுமையைக் கட்ட முடியும் என்பது மார்க்சியம் எனும் மாமருந்து இங்கே வேலை செய்கிறது. இரண்டு, பிற்படுத்தப் பட்டோரிலும் சாதிய எதிர்ப்பு முற்போக்கு உள்ளங்கள் இருக்க முடியும், இருக்கிறார்கள் எனும் யதார்த்தம் மூன்று, பிற்படுத்தப்பட்டோரின் நியாயமான கோரிக்கைகளுக்காகவும் போராடுவது இந்த மூன்றையும் பயன்படுத்தினால் பிற்படுத்தப்பட்டோரில் பெரும் பகுதியினரை தாழ்த்தப்பட்டோருக்கு ஆதரவாகத் திருப்ப முடியும்.

- எவ்வளவு கறாரான விதிகளுக்கும் மீறல்கள் உண்டு. மேற்கூறப்பட்ட முற்போக்கு உள்ளங்கள் உயர்சாதி களிலும் உண்டு. இடதுசாரி - ஜனநாயகச் சிந்தனைகள் அங்கும்

ஊடுருவியிருக்கின்றன என்பது மட்டுமல்லாது, அங்கும் ஒரு பகுதியில் உழைப்பாளி வர்க்கம் உருவாகியிருக்கிறது. சாதியத்திற்கு எதிரான மக்கள் திரட்சி அங்கும் "சாத்தியம் பிறப்பின் அடிப்படையிலான சூழலும், கருத்தியலும், செயற்கையான மனத்தடையும் தான் எதிரிகளே தவிர தனி மனிதர்கள் அல்ல". எவரிலும் பிறவி எதிரியைத் தேட வேண்டியதில்லை. வாழ்வின் பொதுவான பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுவது இவர்களைத் திரட்ட பெரிதும் உதவும்.

- சாதியத்திற்கு எதிரான விரிந்த அணிவகுப்பு என்பது தனி மனிதர்களை மட்டுமல்லாது கருத்தியல் ரீதியான அமைப்புகளையும் உள்ளடக்கியதுதான். "பெரியாரியவாதிகள்" மற்றும் "அம்பேத்கரியவாதிகள்" இன்னும் "தலித்தியவாதிகள்" எனப்படுவோரில் பலர் சாதிப் பிரச்சனையை ஒற்றைப் பரிமாணமாகப் பார்க்கிறார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளிட்ட அரசியல் பிரச்சனைகளில், ஏகபோக எதிர்ப்பு உள்ளிட்ட பொருளாதாரப் பிரச்சனைகளில், லஞ்ச லாவண்ய எதிர்ப்பு உள்ளிட்ட நியாயமான பிரச்சனைகளில் அவர்கள் அக்கறை காடடுவதில்லை. சாதிய ஒழிப்புக்கு ஒரு விரிந்த அணிவகுப்பு தேவை என்பதிலும் ஆர்வம் காட்டுவதில்லை. சிலரிடம் மிக மோசமான இடதுசாரி எதிர்ப்பு மனோபாவமும் உள்ளது. அதாவது, "அடையாள அரசியல்" எனப்பட்டதன் தன்மைகளை அவர்களிடம் காண முடிகிறது. இருந்த போதிலும் அவர்களது சாதிய எதிர்ப்பு தாகம் இந்த அணிவகுப்பில் இடம்பெறும் தகுதியை அவர்களுக்க தருகிறது. அவர்களது தவறான போக்குகளை சுட்டிக் காட்டியபடியே ஒற்றுமையை கட்டமைக்கிற பொறுமையும், இயக்கச் செயல்பாடு களும் வேண்டும். ஐக்கிய முன்னணியானது எப்போதும் எங்கும் போராட்டம், ஒற்றுமை எனும் இரு கூறுகளைக் கொண்டிருக்கிறது என்பது நிதர்சனமான உண்மையாகும்.
- இத்தகைய பன்முக நோக்கும் - விரிந்த அணிவகுப்பும் தீண்டாமை ஒழிப்புக்கிற்கும் சாதி வெறி எதிர்ப்பிற்குமான திட்டவட்டமான கோரிக்கைகளை உருவாக்கி, அவற்றை வென்றடைவதற்கான உறுதியான தீவிரமான இயக்கங்களைக் காணும். கூடவே, சாதியத்தின் அடி வேரை வெட்டுவதற்கான எழுச்சிகரமான பயணத்தைத் துவக்கி வைக்கும்.

- சுயசாதிக்குள்ளேயே மீண்டும் மீண்டும் திருமணம் நடப்பதே சாதி பாதுகாக்கப்படுவதன் ஓர் அடிப்படைக் காரணம். இந்த அகமண முறையை ஒழித்துக் கட்ட சாதி மறுப்புத் திருணத்தை - அதற்கு வழிவகுக்கும் காதலை ஆதரித்து நிற்பது, சாதித் திருமணத்திற்கான விளம்பரத்தை எதிர்ப்பது, சாதி மறுப்புத் திருமணத்தில் பிறக்கும் பிள்ளைகளுக்கு கல்வி வேலைவாய்ப்பில் தனி இட ஒதுக்கீடு கோருவது போன்ற செயல்பாடுகளுக்கு உரிய வடிவம் கொடுத்தாக வேண்டும். சகலத்திற்கும் மேலே, உயர்சாதிய அருவருப்பு எனும் செயற்கையான மனத்தடையை உடைத்து நொறுக்க ஒரு வீரியமான சாதி எதிர்ப்புக் கருத்துப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட வேண்டும்.

சாதியம் ஒழிய வேண்டும் எனும் நமது நியாய ஆவேசம் இன்னும் சில வழிமுறைகளையும் கண்டு கொள்ளும் இவற்றில் எவை உடனடி சாத்தியம் எனும் கேள்வி எழலாம். ஆனால் சாதிய ஒழிப்புக்கான யுத்தத்தை தொடங்கியே ஆகவேண்டும். இல்லையெனில் இந்திய சமூகம் நற்கதியை அடையாது எனும் மகா உண்மை சாத்தியமில்லாததையும் சாத்தியமாக்கும்.

தலித் மக்களிடம் படிப்பு பெருகியிருக்கிறது, படிப்பினைகளும் பெருகி இருக்கின்றன. அவற்றை ஒட்டித்திருத்தங்களும் போதுமான அளவில் நிகழவில்லை. "வெள்ளத்தனைய மலர் நீட்டம்" என்பார் அய்யன் திருவள்ளுவர். நீரின் உயர்வு தாழ்வுக்கு ஏற்ப நீரில் பூத்துள்ள தாமரையும், அல்லியும் உயரும் தாழும் என்பது கருத்து. அவற்றை போலவே மானுட கூட்டமும் கற்கக்கற்க படிப்பினைகளை பெற்று கொள்ள, பெற்று கொள்ள மாற்றங்களும் வளர்ச்சியும் வருதல் வேண்டும். அதுவே உயர்வுக்கு வழி, உய்வுக்கும் வழி என்பதை உணர்ந்து அந்த வகையில் சாதி ஒழிப்பு போராளிகள் சட்ட போராட்டங்களையும் திட்டமிட்டு நடத்திடும் போதுதான் நாம் அடுத்த கட்ட முன்னேற்றத்தை அடைய முடியும்.

இங்கு நிலைமை எப்படி இருக்கிறது என்றால் பல வன்கொடுமைகள் புகார் ஆவதில்லை. பல வண்கொடுமை புகார்களை காவல் நிலையத்திலேயே பஞ்சாயத்து செய்யும் சட்ட விரோதம் தொடர்கிறது. அதற்கு காரணம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உடன் நிற்கும் செயல்பாட்டாளர்கள்

அல்லது அமைப்பு களுக்கும் சட்டம் குறித்த புரிதல் இன்மையாகும். ஆகவே, ஒவ்வொரு பட்டியல் சாதியினரும் மற்றும் அவர்கள் உரிமைக்காக பாடுபடும் இடதுசாரிகள் மற்றும் ஜனநயாக வாதிகளும், சமத்துவ சமூகம் அமைந்திட, தீண்டாமை ஒழிந்திட சட்ட போராட்டத்திர்க்காண ஆயுதமாக இந்நூலை பயன்படுத்திக் கொண்டு, ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலம் நம்செயல்பாடுகளை துவக்குவோம் நிச்சயம் நாம் வெல்வோம்.

தோழமையுடன்

**ARK தமிழ்ச்செல்வன்**
**E-mail : arkdemocracy45@gmail.com**
**Cell : 9445102867**

***

# உள்ளடக்கம்

பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | தீண்டாமை ஒழிப்பில் சட்டங்கள் தீண்டாமைக்கு எதிரான சட்டங்கள் ஒரு வரலாற்றுபார்வை | 21 |
| 2. | வன்கொடுமை தடுப்பு திருத்த சட்டம் 2015 | 57 |
| 3. | குற்றமும் தண்டனையும் - பட்டியல் | 104 |
| 4. | வன்கொடுமைக் குற்றங்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்த நடைமுறை விதிகள் | 127 |
| 5. | கல்வி அரசாணை 92 | 145 |
| 6. | சாதி ஆணவக் கொலைகள் உயர்நீதிமன்ற தீர்ப்புகள், வழிகாட்டல்கள் | 167 |
| 7. | பஞ்சமி நிலங்கள் (AD கண்டிசன் DC நிலங்கள்) | 172 |
| 8. | அகில உலக மனித உரிமைப் பிரகடனம் - 1948 | 181 |
| 9. | ஐக்கிய நாட்டவையின் மனித உரிமைக் காப்பளர்களுக்கான உரிமைப் பிரகடனம் - 1988 | 188 |
| 10. | தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம்.2005 | 195 |

# தீண்டாமை ஒழிப்பில் சட்டங்கள்
# தீண்டாமைக்கு எதிரான சட்டங்கள்
# ஒரு வரலாற்றுபார்வை

*இந்தியாவில் தமிழகத்தில் சாதிய அடக்குமுறை களுக்கு எதிராக பல்வேறு காலக் கட்டங்களில் கலக் குரல்கள் தோன்றினாலும், சாதிக் கொடுமைகள் குறைந்தபாடில்லை. தீண்டாமைக் கொடுமைகளின் விஷ வித்துகள் அடியோடு அழிய மறுக்கின்றன. சமூகத் தளத்தில் தொடர்ந்து சாதி மறுப்புப் போராட்டங்கள் எழுந்தாலும், அவை ஒன்றுபட்ட எதிர்ப்பு இயக்கமாக, வலுவான அமைப்பாக எழவில்லை. இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயர் சாதிப் பாகுபாடுகளைக் களைந்திடும் முயற்சிகளை பெரிதாக மேற்கொள்ளவில்லை. தங்களது நலன்களுக்குக் குறுக்கே இல்லாதவரை இறுகிப்போன இந்தியச் சமூகக் கட்டமைப்பை உடைப்பதோ அல்லது சாதியக் கட்டுமானத்தைத் தகர்ப்பதோ அவர்களது முதன்மையான திட்டமாக இல்லை.*

*எனினும் ஆங்கிலேயர் ஆட்சியின் போதே 1850-இல் சாதிப் பாகுபாடுகளைக் களைந்திடுவதற்காக சாதி முட்டுப்பாடுகள் அகற்றுதல் சட்டம்* (The Caste Disabilities Removal Act, XXI) *என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தினால் பெரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆங்கிலேயர் இந்தியாவில் 1861-முதல் சட்டமன்றங்கள்* (Legislative Bodies) *உருவாக்கப்பட்டாலும், தீண்டாமை அல்லது தாழ்த்தப்பட்டோரின் மேம்பாடு பற்றிய விவாதங்களோ அல்லது தாழ்த்தப்பட்டோர் நலன்கள் சார்ந்த தீர்மானங்களோ கொண்டு வரப்படவில்லை.*

*ஆங்கிலேயர் கொண்டுவந்த அடிமை ஒழிப்புச் சட்டம் சாதி ஒழிப்பை கருத்தில் இருத்தினாலும் நடைமுறையில் பெரியதாக வெற்றியடையவில்லை. 1891-இல் டிரிமென் ஹீர்* (Tremen Heere) *முயற்சி எடுத்து நடைமுறைப்படுத்திய பஞ்சமி நிலச் சட்டம் அமலாக்கம்கூட இக்குறிக்கோளை நோக்கிய ஒரு சிறப்பான*

முயற்சியாக இருந்தாலும் பெரியளவில் தீண்டாமை ஒழிப்பில் தாக்கத்தையோ, இந்திய சாதியக் கட்டமைப்பில் மாற்றத்தையோ கொண்டுவரவில்லை என்பது வரலாறு கூறும் பாடம்.

1909-ஆம் ஆண்டு முதல் தீண்டாமைப் பிரச்சினை அரசியல் முக்கியத்துவம் பெறலாயிற்று தாழ்த்தப் பட்டோருக்கு சட்டமன்றங்களில் உரிய பிரதிநிதித்துவம் வேண்டி கோரிக்கைகள் வலுப்பெறலாயின. 1916-இல் சர் மேனக்ஷி தாதாபாய் (Sri Manakji Dadabhoy) என்ற பார்சி இனத்தவர் தீண்டத்தகாதோருக்கு கூடுதலாகப் பொருளாதார உதவியும், கல்வித் தொகையும் ஒதுக்கிடும் வகையில் மத்திய சட்டம் கொண்டு வரவேண்டி. ஒரு தீர்மானத்தை முன்மொழிந்ததும், 1928-இல் ஐயகர் (Jayakar) என்பர், தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும், குறிப்பாக காவல்துறையில், ஒதுக்கீடு கோரி மத்தியச் சட்டம் கொண்டு வருவதற்கான மற்றொரு தீர்மானத்தை முன்மொழிந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு தீர்மானங்களுமே உயர்சாதி இந்துக்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டன. 1930-களில் தீண்டாமை எதிர்ப்பு மசோதாக்கள் (Anti - disabilities Bills) மத்திய சட்டமன்றத்திலும் (Central Legislative Assembly) சென்னை மற்றும் பம்பாய் போன்ற மாகாண சபைகளிலும் தாக்கல் செய்யப்பட்டன.

### அ) கோவில் நுழைவு

1920-களின் தொடக்கத்திலிருந்தே தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவு இந்திய தேசிய காங்கிரசில் தேசியத் திட்டத்தில் இருந்தாலும் அதை நோக்கிய முனைப்பான போராட்டங்களால் எதையும் காங்கிரஸ் கட்சி முன்னெடுக்கவில்லை. ஆனால் நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவுக்கான தொடர் போராட்டங்களை 1920 முதலே நடத்தி வந்தன. (சுசீந்திரம் பத்மநாதசுவாமி கோவில் (1926) மதுரை மீனாட்சியம்மன் கோவில் (1927), மயிலாடுதுறை மாயூரநாதசுவாமி கோவில் (1928), ஈரோடு சிவன் கோவில் (1929), இப்போராட்டங்களுக்கு ஆதிக்க சாதியினரிட மிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்ததோடு, பல வேளைகளில் சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் போராட்டங்களில் ஈடுபட்டோர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

1933-ஆம் ஆண்டு மத்திய சட்டமன்றத்திலும், சென்னை மாகாண சபையிலும் காங்கிரஸ் கட்சி முன்மொழிந்த கோவில் நுழைவு குறித்த மசோதாக்களுக்கு அம்பேத்கரின் ஆதரவை காந்தியடிகள் வேண்டிய போது, கல்வி, பொருளாதாரம் மற்றும்

அரசியலில் தலித்து களுக்குத் தேவையான முன்னேற்றம் இருந்தால், கோவிலில் அவர்கள் நுழைய அனுமதி தானாகவே வந்துவிடும் என அம்பேத்கர் கூறிவிட்டார். "இந்து மதம் தலித்துகளுக்கான மதமாக இருக்க வேண்டுமெனில், அது சமூக சமத்துவத்தை முன்மொழியும் மதமாக (religion of social equality) இருக்க வேண்டும். கோவில் நுழைவு தொடர்பாக திருத்தங்களை கொண்டு வந்தால் மட்டுமே போதாது. நாட்டில் நிலவும் அனைத்து வகையான ஏற்றத் தாழ்வுகளுக்கும், கெட்டிதட்டிப்போன சாதிய அமைப்புக்கும், தீண்டாமைக் கொடுமைகளுக்கும் ஊற்றுக் கண்ணாக இருக்கும் சதுர் வருணம் என்ற தத்துவம் அடியோடு அழிய வேண்டும்" என்ற தெளிவான நிலைபாட்டை முன்வைத்தார்.

1939-ஆம் ஆண்டு ஜுலை 8-ஆம் தேதி வைத்தியநாத ஐயர் தலைமையில் ஐந்து தலித்துகளும் (கக்கன், முருகானந்தம், சின்னையா, பூவலிங்கம், முத்து) சண்முகம் என்ற நாடாரும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் நுழைந்ததை எதிர்த்து அதே ஆண்டு ஜுலை 13-ஆம் தேதி மதுரை கீழமை நீதிமன்றத்தில் (Madurai Subordinate Judge) நடேச ஐயர் வழக்கு ஒன்றைத் தொடுத்தார். இதைத் தொடர்ந்து அப்போதைய ராஜாஜி தலைமையிலான சென்னை மாகாண அரசு அவசர ஆணை (Indemnity Ordinance) ஒன்றைப் பிறப்பித்தது. கோவிலில் தாழ்த்தப்பட்டோருக்கு அனுமதி மறுப்பது குற்றம் என அந்த ஆணை அறிவித்தது. அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கோவில் நுழைவு அதிகாரமளித்தல் மற்றும் உறுதிப்படுத்தல் சட்டம், 1939 (Temple Entry Authorization and Indemnity Act, 1939) என்ற ஒரு சட்டத்தையும் இயற்றியது. கோவில் நுழைவை எதிர்த்து நடேச ஐயர் தொடுத்த வழக்கும், அதைத் தொடரந்து மேல் முறையீடும் பின்னர் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் (Madurai District Court) தள்ளுபடி செய்யப்பட்டன.

## தேவதாசி ஒழிப்பு

தாழ்த்தப்பட்ட இளம்பெண்களை கோவில்களில் "நேர்ச்சையாக்கி" விடுவதன் மூலம் அப்பெண்களைத் தேவதாசிகளாக்கி ஆதிக்க சாதியினரின் பாலியல் சுரண்டலுக்குப் பயன்படுத்துவது ஒரு வகையில் கட்டாயப்படுத்தப்பட்ட விபச்சாரமே (Forced Prostitution) இக்கொடுமையைத் தடுத்து நிறுத்திட 1927-ஆம் ஆண்டில் முத்துலெட்சுமி ரெட்டி சென்னை மாகாண அமைச்சரவையில் தேவதாசி முறை ஒழிப்பிற்கான ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். அத்தீர்மானம் ஏகமனதாக மாகாண அவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் தேவதாசி

முறைக்கு ஆதரவான ஒரு கூட்டத்தை ஒரு சில தேவதாசிப் பெண்களைக் கொண்டே சத்தியமூர்த்தி ஏற்பாடு செய்து, தேவதாசி முறை ஒழிப்பு மசோதாவைக் கடுமையாக எதிர்த்தார். காங்கிரஸ் கட்சியின் முன்ணித் தலைவர்களில் ஒருவரும் தொழிற்சங்காதியும், முற்போக்கான பெண்ணியவாதியுமான தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாணசுந்தரம் தேவதாசி ஒழிப்பு மசோதாவை ஆதரித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1934-ஆம் ஆண்டில் மகாராஷ்ட்ர மாகாணமும் தேவதாசி ஒழிப்பு குறித்து ஒரு சட்டத்தை (The Bombay Devedasis Act 1934) இயற்றியது. இச்சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி, எந்தவொரு பெண்ணையும் தேவதாசியாக்க முயற்சிக்கும் செயலோ, சடங்கோ சட்டத்திற்குப் புறம்பானது, அச்சடங்கில் பங்குபெறும் அல்லது அதுபோன்ற சடங்கை நடத்திடத் தூண்டும் நபர் யாராயினும் தண்டனை பெறத்தக்க குற்றம் புரிந்தவராவார் என்று அச்சட்டத்தின் ஐந்தாவது பிரிவு குறிப்பிடுகிறது. 1988-இல் ஆந்திராவும், 1988-இல் கர்நாடகவும் இதேபோன்று சட்டங்களை (Andhar Pradesh Devadasi Prohibition of Dedication Act. 1988), (Karnataka Devadasi Prohitition of Dedication Act. 1992) இயற்றியுள்ளது. இது குறித்த மத்தியச் சட்டம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை.

## இரட்டை வாக்குரிமை:-

தலித்துகளுக்கான அரசியல் உரிமைகளைப் பொறுத்தவரை அம்பேத்கரும், இரட்டைமலை சீனிவாசனும், பிற தலித் தலைவர்களும் நடத்திய தொடர் போராட்டத்தின் விளைவாக தலித்துகளுக்கு இரட்டை வாக்குரிமை என்ற சிறப்புரிமை கிடைக்கப் பெற்றது. 17.08.1932 அன்று அப்போதைய பிரிட்டன் பிரதமர் ராமசே மெக்டோனால்டு (Ramsay Mac Donald) அறிவித்தபடி, பொதுத் தொகுதிகளில் வாக்களிக்கும் உரிமையோடு, சில தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோர் மட்டுமே வாக்களித்து தங்களுக்கான தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் சிறப்புரிமைகளையும் பெறுவர், இதன்படி ஒதுக்கப்பட்ட தொகுகளில் பொதுவில் ஒரு உறுப்பினரும், தாழ்த்தப்பட்டோரால் மட்டுமே தேர்தெடுக்கப்படும் தாழ்த்தப்பட்ட நபர் ஒருவரும் தேர்வு செய்யப்படுவர் என்று ஏற்பாடாயிற்று. ஆனால் தலித்துகளுக்கான இந்த இரட்டை வாக்குரிமை அறிவிப்பை எதிர்த்து 20.09.1932 அன்று புனா ஏர்வாடா சிறையில் காந்தியடிகள் உண்ணாவிரதம் தொடங்கினார். இறுதியில் காந்தியின் பிடிவாதத்தால் தலித்துகளுக்கு வழங்கப்பட்ட இரட்டை வாக்குரிமை திரும்பப் பெறப்பட்டது. காந்தியின் உயிரைக் காப்பாற்றும் நோக்கில்

*இனவாரிப் பிரதிநிதித்துவத் தீரப்பினைத் திருத்தியமைக்க அண்ணல் அம்பேக்கர் அவர்களுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக பொதுத் தொகுதியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனித் தொகுதியைத் கைவிடுவது எனவும், இனவாரித் தீர்ப்பின்படி ஏற்கெனவே தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட 68 இடங்களுக்குப் பதிலாக 148 இடங்களை ஒதுக்குவது எனவும் முடிவானது.*

*புனா ஒப்பந்தத்திலிருந்து காங்கிரஸ் சாற்றை உறிஞ்சிக் கொண்டு சக்கையை, தீண்டத்தகாதவர் எனக் கருதப்படுவோரின் முகத்தில் வீசியெறிந்தது எனக்கூறி இந்த நீண்ட சோகக் கதையினை முடிக்கலாம் என்று புனா ஒப்பந்தம் குறித்து அம்பேத்கர் மனம் வெதும்பி 1939-இல் எழுதினார்.*

**குடிமையியல் உரிமைகள்:-**

*1938-இல் சென்னை மாகாண அரசு சென்னை குடிமையியல் முட்டுப்பாடுகள் அகற்றுதல் சட்டம்* (The Madras Removal of Civil Disabilities Act. Madras Act XXI of 1938) *ஒன்றை இயற்றியது. தாழ்த்தப்பட்டோரைத் தீண்டத்தகா தவராகப் பாகுபடுத்திப் பார்ப்பது குற்றம் என இச்சட்டம் அறிவித்தது. இச்சமூகத் தீட்டுகளைக் களைந்திடும் நோக்கில் கொண்டு வரப்பட்ட இச்சட்டம், பொதுச் சாலைகளில் தலித்துகள் நடமாடத் தடை பொதுக் கிணறுகளைப் பயன்படுத்தத் தடை, பொது வாகனங்களில் பயணப்படத் தடை, உணவகங்கள், விடுதிகள், கடைகளில் நுழைய அனுமதி மறுப்பு, பொது இடங்களைப் பயன்படுத்துவதற்கான வழக்காற்று உரிமை மறுப்பு போன்றவற்றை குற்றங்களாக அறிவித்தது.*

*1943 முதல் 1960 வரையிலான ஏழு ஆண்டுகளில் இந்தியாவின் பல்வேறு மாகாணங்களில் சமூக மற்றும் மதம் சார்ந்த பாகுபாடுகளை ஒழிக்கும் நோக்கில் 21 சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை அனைத்துமே மாகாண அளவில் இயற்றப்பட்டவையே, சென்னை மாகாணம் தவிர, பம்பாய், பீகார், மத்திய மாகாணம், ஒரிசா, மைசூர், திருவிதாங்கூர், சௌராஷ்ரா, ஐதராபாத், கிழக்கு பஞ்சாப் போன்ற மாகாணங்களும் இது போன்ற சட்டங்களை இற்றியுள்ளன. கோவில் நுழைவு தொடர்பாக ஆறு மாகாணச் சட்டங்கள் இதே காலக் கட்டத்தில் இயற்றப்பட்டன.*

**மனித மலத்தைக் கையால் அள்ளுவதை ஒழிக்கும் சட்டம்.**

*மனித மலத்தைக் கையால் அள்ளவதும், நகரங்களில் சாக்கடையைச் சுத்தம் செய்வதுமான சாதிய அடிப்படையில்*

அமைந்த இத்தொழிலை ஒழிக்கும் வகையில் (The Employment of Manual Scavengerw and Construction of Dry Latrines (Prohibition Act) என்ற சட்டம் ஒன்றை 1993-ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டு வந்தது. இதற்கு ஒரு தனி ஆணையமும் பின்னர் அமைக்கப்பட்டது. (The National Commission for Safai Karamcharis Act, 1993) எதிர்பார்த்த அளவு இச்சட்டம் கறாராக அமல்படுத்தப்படவில்லை. இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின் கையால் மலம் அள்ளுவோரின் சமூக - பொருளாதார நிலை பெரிய அளவில் மாறியதாகவும் தெரியவில்லை. மனித மலத்தை அள்ளுவோர் தேசிய மைய நீரோட்டத்திலிருந்து முற்றிலுமாக தனிமைப்படுத்தப்பட்டு, தேசிய முன்னேற்றத்தின் எந்தப் பலனையும் பெறாமல் விடப்படுவதோடு, மிக மோசமான ஒடுக்குதலுக்கும். இழிவுக்கும் ஆளாகிறார்கள் என்ற சபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் 1997-ஆம் ஆண்டு அறிக்கை குறிப்பிடுகிறது. நாடு முழுவதிலும் கையால் மலம் அள்ளும் தொழிலாளர்களின் எண்ணிக் கையைக் கணக்கெடுத்து, இந்த இழிதொழிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களை வழங்கிடும் வகையில் 1992-ஆம் ஆண்டில் மத்திய அரசு தேசியக் திட்டம் ஒன்றை அறிவித்தது. எதிர்பார்த்த அளவு இத்திட்டம் பலனிளிக்கவில்லை. கையால் மலம் அள்ளும் நடைமுறை தங்கள் மாநிலங்களில் இல்லை என்றும், தண்ணீர் பற்றாக்குறையால் நவீன கழிவறைகளைக் கட்டமுடியவில்லை என்றும் மாநில அரசுகள் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றன என்ற அதே ஆணைய அறிக்கை அளிக்கிறது.

**பிற சட்டங்கள்:-**

கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்புச்) சட்டம் 1976 (The Bonded Labour System (Abolition) Act. 1976) குறைந்தபட்சக் கூலிச் சட்டம், 1948 (The Minimum Wages Act, 1948) சமவேலைக்கான சமகூலிச் சட்டம், 1976 (Equal Remuneration Act. 1976), குழந்தைத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் ஒழிப்புச்) சட்டம், 1986 (The Child Labour Prohibition and Regulation Act. 1986) மாநிலங்களுக் கிடையே புலம் பெயரும் (தொழிலாளர்களுக்கான வேலை மற்றும் பணிச் சூழல் ஒழுங்குபடுத்தும் சட்டம், 1979 (Inter - State Migrant Workmen (Regulation of Employment and Conditions of Services) Act. 1979), போன்ற இந்திய விடுதலைக்குப் பின் இயற்றப்பட்ட ஒரு சில சட்டங்கள் பிற சாதியினரைவிட தாழ்த்தப்பட்டோருக்கே கூடுதலான பலன்களைப் பெற்றுத் தந்திருக்க வேண்டும். ஆனால் எதிர்பார்த்த பலன்கள் அவர்களுக்குக் கிட்டவில்லை

என்பதே யதார்த்தம். சமூகத்தளத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் கொத்தடிமைகளாக, குழந்தைத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகளில் அதிகமானோர். குறைந்த கூலிக்குச் செல்லும் கூலித் தொழிலாளர்களில் அதிகமாக தாழ்த்தப்பட்டோராகவே இருக்கின்றனர் என்பதை புள்ளி விபரங்கள் நிரூபிக்கின்றன. மேலே குறிப்பிட்ட பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம் எந்த அளவிற்கு மோசமான உள்ளது என்பதையும் இதனால் அதிகமாகப் பாதிப்பிற்குள்ளாவது தலித்துகளே என்பதையும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை எடுத்துரைக்கிறது.

**இந்திய அரசியலமைப்பு:-**

*1950-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இந்திய அரசமைப்பு* **(The Constitution of India)** *சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி, சனநாயகம் போன்ற பொருட்செறிந்த கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கின்றது. சமூகம், பொருளாதரம், அரசியல் ஆகிய மூன்று தளங்களிலும் அனைவருக்கும் சமநீதி என்பதை இந்திய அரசமைப்பின் முகப்புரை தெளிவுபடுத்துகின்றது. இதையே இந்திய அரசமைப்பு சட்ட வரைவுக்குழுத் தலைவர் அம்பேத்கர் சமூக சனநாயகமும்* (Social Democracy) *பொருளியல் சனநாயகமும்* (Economic Democracy) *இல்லையெனில் அரசியல் சனநாயகம்* (Political Democracy) *நீடிக்காது சமூகத் தளத்தில் பெரும்பலான மக்கள் தாழ்த்தப்பட்ட (ஒடுக்குன்ட) நிலையிலும் ஒரு சிலர் உயர்ந்த அந்தஸ்திலும், பொருளாதார நிலையில் வாழும் நிலையும் தொடர்ந்து சமனற்ற நிலைக்கு இட்டுச்செல்லும் என்றார்.*

*தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசமைப்பில் உருவாக்கப்பட்ட சட்ட வழிவகைகளை மூன்று நிலைகளில் காணலாம்.*

**(1) சமுத்துவம், சமூகநீதிக்கான சட்டப் பாதுகாப்புகள்:-**

*சமத்துவம், சமூக நீதி மற்றும் பாகுபாடின்மையை வலியுறுத்தி, தீண்டாமையை அகற்றிடும் நோக்கில் உருவாக்கப்பட்ட சட்ட வழிவகைகள் இந்திய அரசமைப்பில் அடிப்படை உரிமைகள்* (Part III) *பகுதியில் மைய இடம் பெறுகின்றன. அரசியல் சாசனத்தில் 14 முதல் 18 வரையிலான பிரிவுகள் சட்டத்தின்மூலம் சமத்துவம், பாகுபாடின்மை* (Non-discrimination) *பொது வேலை வாய்ப்புகளில் சம வாய்ப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்றவை குறித்துப்*

பேசுகின்றன. சட்டத்தின்முன் சமத்துவம் (பிரிவு 14) என்பதுவே இப்பிரிவுகள் எல்லாவற்றுக்கும் அடிநாதமாகும். எச்சூழலிலும் இவ்வுரிமை பறிக்கப்பட இயலாதது (Non-derogable) மீறப்பட முடியாதது (Inviobable) மனித உரிமைகள் குறித்த அகில உலகச் சட்டங்களும் இதனடிப்படையில் அமையப் பெற்றவையே.

1948-இல் இயற்றப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் (Universal Declaration of Human Rights) சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (International Convenant on Civil and Political Rights) அனைத்து வகை இனப்பாகுபாட்டு வடிவங்கள் ஒழிப்பு குறித்த அகில உலக உடன்படிக்கை (International Cnvention on the Elimination of all Forms of Discrimination) போன்ற பல்வேறு உடன்படிக்கைகளின் அடிப்படையே சமத்துவம்தான், எல்லா மனிதர்களும் உள்ளார்ந்த சுதந்திரத்தோடும், மாண்போடும், உரிமைகளோடும், சமத்துவத்தோடும் பிறக்கிறார்கள் என்று உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் முதல் பிரிவும், சட்டத்திற்கு முன் மனிதராக அங்கீகரிக்கப்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு என்று அப்பிரகடனத்தில் ஆறாவது பிரிவும், சட்டத்தின் முன் அனைவரும் சமம், எவ்விதப் பாகுபாடின்றி சட்டத்தின் முன் சமப் பாதுகாப்பைப் பெறுகின்ற உரிமை அனைவருக்கும் உண்டு என்று அதே பிரகடனத்தின் ஏழாவது பிரிவும் கூறுகின்றன. இதே உரிமைகளை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச உடன்படிக்கையின் பிரிவுகள் 3,16 மற்றும் 26 எடுத்தியம்புகின்றன.

உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் முகப்புரையின் முதல் வாசகம் “மனித சமூகத்தின் உள்ளார்ந்த மாண்பும் (Inherent dignity) சமத்துவமும், பிரிக்க இயலா உரிமைகளும் (Inalienable rights) இந்த மானுட சமூகத்தின் சுதந்திரம், நீதி, அமைதிக்கான அடித்தளங்களாகும்” என்று அறைகூவல் விடுகிறது. எனவே சமத்துவம் இல்லாத சமூகத்தில் சமூக நீதியும், சுதந்திரமும் இருக்க இயலாது.

சமத்துவம் எனும்போது குடிமைச் சமத்துவம், (Civil equality), அரசியல் சமத்துவம், (Political equality), சமூக நிலைகளில் சமத்துவம், (Social equality) இயற்கைச் சமத்துவம் (Natural equality) மற்றும் பொருளியல் சமத்துவம் (Economic equality) போன்ற பல தளங்களிலும் நிலவும் சமத்துவத்தைக் குறிப்பிடலாம். சமத்துவம் என்பது நேர்மறை (Positive) மற்றும் எதிர்மறை (Negative) குணாம்சங்கள் இரண்டையும் தன்னகத்தே கொண்டது. நாட்டில் வசிக்கும் அனைத்துக் குடிமக்களுக்கும் அனைத்து

வகையான வாய்ப்புகளையும், பாகுபாடின்றி வழங்குவதே அதன் நேர்மறையான நிலை. சாதி, மதம், இனம், நிறம், தகுதிநிலை என்ற அடிப்படையில் மனிதனை மனிதன் வேறுபடுத்திப் பார்க்கும் பாகுபாட்டை ஒழிக்க வேண்டும் என்பது எதிர்மறையான நிலையாகும் சமத்துவ சிந்தனையை சட்டத்தின் மூலமாக மக்கள் மீது திணிக்க இயலாது. இதுபோன்ற சமத்துவ சிந்தனைப் போக்கை மக்கள் மனங்களில் வளர்த்தெடுக்கும் போதுதான் சமூக நீதியை அடைய முடியும்.

மேலே குறிப்பிட்ட சமத்துவ சிந்தனையே மனிதச் சமூகங்களுக்கிடையே பாகுபாடில்லாத சமூக உருவாக்கத்திற்கான சட்ட அடிப்படையாகவும் அமைக்கின்றது. இந்திய அரசியல் சாசனச் சட்டப் பிரிவு 15, மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் மற்றும் பிற ஏதாவது காரணத்தைக் கொண்டு அரசும், குடிமக்களும் தனிநபரையோ, மக்களையோ பாகுபடுத்திப் பார்க்கக் கூடாது என்று தெளிவுபடுத்துகின்றது.

மேலே கூறப்பட்ட காரணங்களில் ஏதாவது ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு சாராரை ஒதுக்குவதோ, தனிமைப்படுத்துவதோ, கட்டுப்படுத்துவதோ, விலக்கி வைப்பதோ பாகுபாடு காடடுவதாகும். கடைகள், பொது இடங்கள், உணவு விடுதிகள், தங்குமிடங்கள், மனமகிழ் மன்றங்கள் ஆகியவற்றில் நுழைய ஒரு சாராருக்கு அனுமதி மறுப்பதும், அரசு நிதியிலிருந்து முழுமையாகவோ அல்லது நீர்த்தேக்கத் தொட்டிகளை பயன்படுத்த அனுமதி மறுப்பது பாகுபாடு காடடுவதேயாகும் (இந்திய அரசியல் சாசனப் பிரிவு 15(2).

இந்திய அரசியல் சாசனத்தில் இடம்பெறும் பிரிவுகள் 17, 23, 24 மற்றும் 25 (2) (b) ஆகியவை தாழ்த்தப் பட்டோருக்கான சமூகப் பாதுகாப்பு அம்சங்களாக (social safeguards) அமைக்கின்றன. தீண்டாமை ஒழிப்பு பற்றிய பிரிவு 17-ஐ அடியொற்றி இரு முக்கிய சட்டங்கள் பின்னர் நிறைவேற்றப்பட்டன. 1955-இல் இயற்றப்பட்ட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டமும், 1989-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டமும் ஆகும். (இவ்விரு சட்டங்களையும் பின்னர் விரிவாகக் காணலாம்)

உழைப்புச் சுரண்டலுக்கு எதிரான வடிவங்களையும் செயல்களையும் இந்திய அரசியல் சாசனம் குற்றங்களாகவே அறிவிக்கிறது. மனிதர்களைக் கடத்துவதும், விற்பதும், வாங்குவதும் (trafficking in human beings) தடை செய்யப்படுகின்றன. இவை தொடர்பான எந்தச் செயலும் தண்டனை பெறக்கூடிய

குற்றமே என்று அரசியல் சாசனத்தின் 23-வது பிரிவும், 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலைகளிலோ அல்லது சுரங்கங்களிலோ அல்லது உயிருக்கு தீங்கு நேரும் எந்தத் தொழிலிலுமோ ஈடுபடுத்தக் கூடாது என்ற 24-வது பிரிவும் கூறுகின்றன. கொத்தடிமைகளாகவும், குழந்தைத் தொழிலாளர்களாகவும் அதிகமாக தலித்துகளும், தலித் குழந்தைகளுமே ஈடுபடுத்தப் படுகின்றனர். இந்த இழிசெயல்களை ஒழிக்க பல்வேறு சட்டங்களை மத்திய அரசு இயற்றியிருந்தாலும் அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துதலில் உள்ள சிரமங்களால் தொடர்ந்து எண்ணற்ற கூலித் தொழிலாளர்களும், தலித் குழந்தைத் தொழிலாளர்களும் தங்கள் வாழ்க்கையை இழந்து வருகின்றனர்.

சமூக நீதித் தத்துவத்தின் அடித்தளமாக அமைவது சமத்துவமும், பாகுபாடின்மையுமே சட்ட நீதியைவிட (Legal Justice) சமூக நீதி (Social Justice) ஒருபடி மேலானது. சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் நிலவுகின்ற சமதத்துவத்தைக் குறிப்பதாக சமூக நீதி அமைகிறது. அரசியல் மற்றும் பொருளாதார நீதி உட்பட அனைத்துக் கூறுகளும் இதில் இடம்பெறுகின்றன. எனவே அனைத்து வகையான ஏற்றத்தாழ்வுகளும், முரண்பாடுகளும் ஒழிக்கப்பட்டு, சமூகத்தளத்தில் நிலவும் சமனற்ற தன்மை அகற்றபட்டு, தொடரும் மோதல்கள் குறையும் போதுதான் சமூக நீதி இருப்பதாகச் சொல்ல முடியும்.

ஒரு நாட்டில் வசிக்கும் அனைவருக்கும் சம வாய்ப்பை வழங்கி, அவர்களுக்கிடையே சமத்துவத்தை உத்திரவாதப் படுத்துவதற்கான அடிப்படைக் கோட்பாடே சமூக நீதி, ஒரு சமூகத்தில் உள் போட்டிக் குழுக்களை அல்லது போட்டி, நலன்களை சமப்படுத்தி, அனைவருக்கும் நல்லதையும், நியாயமானதையும் வழங்குவதே சமூக நீதி, ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாட்டை நிறுவுவதற்கும், நல அரசு என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தவும் இச்சமூக நீதித் தத்துவம் அடிப்படையாக அமைகிறது.

எனவே ஒரு சிலரின் சொத்துக்கள் குவிவதையும் பொது வளங்களை ஒரு சிலர் மட்டுமே சொந்தம் கொண்டாடுவதையும் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அது சமதர்மக் கொள்கைக்கும், சமூக நீதிக் கோட்பாடுகளுக்கும் முரணானது.

### (2) நேர்மறைப் பாகுபாட்டு அம்சங்கள் (Positive Discrimination)

அனைவருக்கும் சம அந்தஸ்து (equality of status) மற்றும் சமவாய்ப்பு (equality of opportunity) என்பதை இந்திய அரசியல்

சாசனத்தின் முகப்புரை குறிப்பிடுகிறது. இதையொட்டியே இந்திய அரசியலமைப்பு பிரிவுகள் 15(4) மற்றும் 16 (4) சம வாய்ப்புகளை போக்குவதற்கும் வழி வகை செய்கின்றன. இந்திய அரசியல் சாசனத்தில் இடம்பெறும் அடிப்படை உரிமைகள், குறிப்பாக சமத்துவம் பற்றி பிரிவுகள், நலிந்த பிரிவினருக்கான சமூகப் பொருளாதார உரிமைகள் இடம்பெறும் வழிகாட்டு நெறிமுறைகளின் (Directive Principles of State Policy) பின்னணியில் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

நேர்மறை அல்லது பாதுகாப்புப் பாகுபாட்டு அம்சங்களாக (measures of positive or protective discrimination) அரசாங்க வேலை வாய்ப்புகளில் தேர்வு மற்றும் பணி உயர்வுகளில் தாழ்த்தப்பட்டோருக்கு முன்னுரிமை வழங்கப்படல், (பிரிவு 16(4) A) நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி தேர்தல்களில் ஒதுக்கீடுகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்புகளில் வயது வரம்பு விதிவிலக்குள் ஆகியவற்றைச் சொல்லலாம். நலிவுற்ற பிரிவினரின் மேம்பாட்டிற்காக அரசு மேற்கொள்ளும் இவை போன்ற சிறப்புத் திட்டங்களுக்கு உறுதியாக்க நடவடிக்கைகள் (affirmative actions) என்று பெயர், இந்திய அரசியல் சாசனப் பிரிவு 330, நாடாளுமன்றத்தில் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு குறித்தும், பிரிவு 332 மாநில சட்டமன்றங்களில் இப்பிரிவினருக்கு ஒதுக்கப்படும் இட ஒதுக்கீடு பற்றியும் 243 (D) கிராமப் பஞ்சாயத்துகளிலும் 243 (T) நகராட்சிளில் இவர்களுக்கான இடஒதுக்கீடு குறித்தும் பேசுகின்றன. ஆண்டாண்டு காலமாக சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்டு, கல்வி உரிமை மறுக்கப்பட்டு வந்த மக்களுக்கு அனைத்து நிலைகளிலும் உரிய பிரதிநித்துவம் வழங்கப்படும் வகையில் அரசியல் சாசனத்திலே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

சமனற்ற தளத்தில் சமத்துவத்தை வலியுறுத்துவது, இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கவே வழிவகுக்கும். நடப்பிலுள்ள பாகுபாடுகளை விஞ்ஞானப்பூர்வமாக அலசி ஆராய்ந்து, அப்பாகுபாட்டிற்கான காரணிகளை ஒழிக்கும் நோக்கில் நலிவுற்றோரை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதே சரியான பலனைத் தரும்.

சமூக ரீதியாகவும், கல்வியிலும், பின்தங்கிய நலிவுற்ற பிரிவினர் மேம்பாடு அடையவும், அரசுத் துறைகளில் போதிய அளவில் பிரதிநிதித்துவம் இல்லாதோர்க்கு அரசு வேலை வாய்ப்புகளில் ஒதுக்கீடுகளைச் செய்யவும், இந்திய அரசியல்

சாசனப் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4) வழிவகுக்கின்றன. இந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு அந்தந்த மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன்படி தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு 1950 முதல் இருந்து வந்தாலும், பணி உயர்வுகளில் (promotions) முன்னுரிமை என்பது 1996 முதல் தான் நடைமுறைக்கு வந்தது. 1992-ஆம் ஆண்டு நவம்பர் 16-ஆம் தேதி உச்சநீதிமன்றம் ஒரு வழக்கில் வழங்கிய தீர்ப்பில் “வேலை நியமனத்தில் அளிக்கப்படும் இடஒதுக்கீடு பணி உயர்வுக்குப் பொருந்தாது” என்று குறிப்பிட்டது. உச்சநீதிமன்றத்தின் இத்தீர்ப்பு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் நலன்களைப் பாதிக்கும் என்ற நோக்கில் மத்திய அரசு இந்திய அரசியல் சாசனத்தில் 1995-ஆம் ஆண்டு சட்ட திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்தது, போதிய அளவு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் பிரதிநிதித்துவம் இல்லாத அரசுத் துறைப் பணிகளில் பணி உயர்வுக்கான இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்தும் வகையில் மாநில அரசுகளுக்கு இப்பிரிவு அதிகாரமளிக்கிறது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான இத்தனை சிறப்புப் பாதுகாப்புகள் இந்திய அரசியலில் இருந்தாலும், மத்திய மாநில அரசுகளின் பல்வேறு துறைகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும், தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்பட்ட 15 சதவீத இடஒதுக்கீடும், பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 7.5 சதவீத இட ஒதுக்கீடும் முழுமையாக நிரப்பப்படாமல் உள்ளன என்பதை மத்திய அரசின் புள்ளி விபரங்ள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. குறிப்பாக முதல் மற்றும் இரண்டாவது நிலை அரசுப் பணியிடங்களில் குறைவான அளவிலே தலித்துகள் இருப்பதைக் காண முடிகிறது. இக்குறையைச் சரிசெய்யும் நோக்கில் தாழ்த்தப் பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் சிறப்புப் பயிற்சிகளை வழங்குவது போன்ற ஆக்கப்பூர்வமான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று தேசிய தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் ஆணையம் பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

இதற்கிடையே தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு, பணி நியமனம், பதவி உயர்வு, பணி மூப்பு ஆகியவை குறித்து மத்திய அரசின் துறைகளிலிருந்து பிறப்பிக்கப்படும் அதிகாரப்பூர்வ ஆணைகள் (executive orders) அவர்களின் நலன்களுக்கு எதிராக அமைவதோடு, அவர்கள் ஏற்கெனவே அனுபவித்து வந்த உரிமைகளைப்

பறிப்பதாகவும் அமைகின்றன என்று தேசிய தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் ஆணையம் இந்திய அரசியல் சாசனப் பிரிவு 338 (5) (d)-ன் கீழ் குடியரசுத் தலைவருக்கு 1998-ஆம் ஆண்டு சமர்ப்பித்த சிறப்பு அறிக்கை விரிவாக எடுத்துரைக்கிறது. அரசியல் சாசன 77-வது திருத்தத்திற்கு முரணாக மத்திய அரசு பிறப்பித்த இந்த அதிகாரப்பூர்வ அறிக்கைகள் (official memorandums) அமைவதைச் சுட்டிக்காட்டியதோடு, அவை பணியிலிருக்கும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் பணிமூப்பு, பணி உயர்வு மற்றும் பணிச் சூழலை எதிர்காலத்தில் எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதையும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டியது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின அரசு ஊழியர்களைப் பாதிக்கும் இதுபோன்ற ஐந்து ஆணைகளைப் பிறப்பிக்கும்முன்பு இத்துறை (Department of Personal and Training) தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் தேசிய ஆணையத்தைக் கலந்தாலோசிக்கக்கூட இலலை என்று ஆணையத்தின் இச்சிறப்பு அறிக்கை வேதனையோடு குறிப்பிடுகிறது.

**3.சமூகப் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கை:-**

நலிந்த பிரிவினரின் மேம்பாட்டிக்காக, குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு உண்டு.

நலிவுற்ற பிரிவினரின் கல்வி மற்றும் பொருளாதார நலனில் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி சமூக அநீதிகளிலிருந்தும், அனைத்து வகையான சுரண்டல் களிலிருந்தும், குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களைக் காப்பாற்ற அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்திய அரசியல் சாசனப் பிரிவு 46-இல் மாநில அரசுகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளாக குறிப்பிட்டுள்ளது.

பொருளாதார, சமூகத் தளத்தில் பிற வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்திடும் நோக்கில் கூடுதலான நிதி ஒதுக்கி, சிறப்புத் திட்டங்களை அறிவித்து அவற்றை நடைமுறைப்படுத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பொருளாதார நிலையில் நலிவுற்று இருக்கும் தாழ்த்தப்பட்டோரின் மேம்பாட்டுக்காக பல புதிய திட்டங்களை அறிவிக்கவும், அவற்றை நடைமுறைப் படுத்திடவும் திட்டமிடலிலே குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான

வழிவகையை உருவாக்கிடவும் ஆறாவது ஐந்தாண்டித் திட்டத்தின் போது சிறப்புக் கூறுத் திட்டம் (Special Component Plan) என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் மத்திய, மாநில அரசுகளில் வரவு செலவுத் திட்டங்களில் போதிய ஒதுக்கீடு செய்யும் வகையில் சம்மந்தப்பட்ட துறைகள் தனியான திட்டத்தை உருவாக்கித் தர வேண்டும். தவிர, இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்திட மத்திய அரசும் சிறப்பு நிதியுதவியையும் வழங்கிட (Speical Centtal Assistance) வேண்டும்.

தலித்துகள் நேரடியாக பொருளாதார ரீதியில் பயனடையும் வகையில் திட்டங்களை உருவாக்கிடவும், சமூகப் பணிகள், அடிப்படைக் கட்டுமானங்கள் மற்றும் பல்வேறு அடிப்படை வசதிகள் வழியாக திட்டங்கள் தலித் மக்களைச் சென்றடையவும்வேண்டும் என்ற நோக்கில் சிறப்புக் கூறுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கப்படுகின்றது.

மொத்த திட்ட ஒதுக்கீட்டு நிதியிலிருந்து தலித் மக்கள் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதி அந்தந்த மாநிலத்தின் மக்கள் தொகையிலே, தலித்துகளின் மக்கள் தொகை விகிதத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும். சிறப்புக் கூறு திட்டத்தின்கீழ் மாநில அரசின் ஒவ்வொரு துறையும், தலித் மக்களின் குறிப்பிட்டத் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த சீரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று சமூக நீதி மற்றும் அதிகாரப்படுத்துதல் அமைச்சகம் குறிப்பிடுகிறது.

சிறப்புக் கூறுத் திட்டத்தின் கீழ் வரும் அனைத்து வரவு செலவுகளும் வரவு, செலவுத் திட்ட இணைப்பு நூலில் (Plan Budget Link Book) தனித்தனியாக வரவு செலவுத் திட்டத் தலைப்புகளின் கீழ் காட்டப்பட வேண்டும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பாற்றாக்குறையைச் சரிசெய்ய மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரப்படுத்துதல் அமைச்சகம் சிறப்பு மத்திய நிதி உதவியாக (Special Central Assistance)நூறு சதவீத மானியாமாக மாநில அரசுகளுக்க வழங்க வேண்டும்.

தலித்துகளின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நல்ல அம்சங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இத்திட்டம் அரசுத் துறையினரின் மெத்தனப் போக்காலும், அரசியல் உறுதிப்பாடின்மையாலும், முழுமையாக அமல்படுத்தப்படவில்லை. பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், 62

மத்திய அமைச்சகங்கள் / துறைகளில் மட்டுமே சிறப்புக் கூறுத் திட்டம் இதுவரை அமைக்கப்பட்டுள்ளது. என்பது உண்மையிலே வருத்தமளிக்கிறது என்று நலத்துறை வேதனையோடு (Ministry of Welfare) குறிப்பிடுகிறது.

தமிழக அரசின் வரவு, செலவுத் திட்ட இணைப்பு நூலிலே, சிறப்புக் கூறு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளை ஆய்வு செய்யும்போது, இத்திட்டம் தமிழகத்திலே சீரிய முறையில் நடைபெறவில்லை. நிதி ஒதுக்கீடுகள் மிகக் குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு துறைகளுக்கான சிறப்புக் கூறுத் திட்டம் பற்றி புள்ளி விபரங்களில் சில உண்மையான ஒதுக்கீடுகளாகவும், பல வெறும் கருத்தளவிலான போலியான ஒதுக்கீடுகளாகவும் உள்ளன. வெறும் கருத்தளவிலான நிதி ஒதுக்கீடுகளையும், உண்மையான நடைமுறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எந்த அளவுக்கு தலித் மக்களுக்கு சென்றடைய வேண்டிய பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்கள் கடந்த பல ஆண்டுகளாக பறிபோயிருக்கின்றன என்பது தெரியும்.

நிதி ஒதுக்கீடுகளில் உள்ள குளறுபடிகள் ஒருபுறமிருக்க, தலித்துக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியும் முழுமையாகச் செலவழிக்கப்படாமல் மீண்டும் திருப்பியனுப்படுவது இன்னும் ஒரு கொடுமையான விஷயம். இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 2001-ஆம் ஆண்டிற்கான அறிக்கை (எண். 1 சிவில்), மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரப்படுத்துதல் அமைச்சகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட சில நிதி ஒதுக்கீகள் மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து செலவழிக்கப்படாது பெருமளவில் திருப்பியனுப்பப்படும்போக்கு திருப்பி அனுப்பப்படு வதற்கான காரணங்களும் எடுத்துரைக்கப்படவில்லை.

### ஏ) தேசிய தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் ஆணையம்

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாடிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் நடப்பில் உள்ள பல்வேறு சட்டங்களின் அமலாக்கம் குறித்து விவாதிக்கவும், பயனுள்ள பரிந்துரைகளை மத்திய அரசுக்கு வழங்கவும், ஒரு சிறப்பு அதிகாரி (Speical Officer) இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார் என இந்திய அரசியல் சாசனப் பிரிவு 338 கூறுகிறது.

1950-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் தேதி தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான ஆணையாளர் (Commissioner) என்ற பதவியில் சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

அதிகரித்துவரும் தீண்டாமைக் குற்றங்களைக் கணக்கில் கொண்டு 1978-ஆம் ஆண்டு இந்த சிறப்பு அதிகாரிக்குப் பதிலாக பல நபர் கொண்ட ஓர் அமைப்பு (A multi - member body) உருவாக்கத் திட்டமிடப்பட்டது. இதுவே தேசிய தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் ஆணையமாக 1990-இல் வடிவம் பெற்றது. இதற்காக இந்திய அரசியல் சாசனச் சட்டப் பிரிவு 338 மூன்று முறை திருத்தப்பட்டது. இந்திய அரசியல் சாசனம் பிரிவு 338, உட்பிரிவு (9) இன் படி மத்திய அரசும், மாநில அரசுகளும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரைப் பாதிக்கும் கொள்கை முடிவுகளை எடுக்கும் போது இந்த ஆணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டியது அரசியல் சாசனக் கடமையாகும்.

அதேபோல பிரிவு 338, உட்பிரிவு 5(C) இன்படி தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மேம்பாடு குறித்த திட்டமிடல் கூட்டங்களில் இவ்வாணையம் பங்கேற்று, பரிந்துரைகளை முன்வைப்பது அவசியம். அதோடு மத்திய அரசும் மற்றும் மாநில அரசுகளும் மேற்கொள்ளும் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கான மேம்பாட்டு நடவடிக்கைகளைத் திறனாய்வு செய்வதும் அரசியல் சாசனப்படி இவ்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமையாகிறது.

## குடியுரிமைப் பாதுகாப்பு சட்டம், 1966.

“தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது, எந்த வடிவத்திலும் தீண்டாமையைக் கடைப்பிடித்தாலும் அது சட்டப்படி குற்றமே” என்று இந்திய அரசமைப்பு பிரிவு 17 அறிவிக்கிறது. அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழிக்க காங்கிரசுக்கு சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க அதிகாரம் வழங்கி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசமைப்பில் கொண்டு வரப்பட்ட 13-வது அரசியல் சாசன திருத்தத்திற்கு ஒத்தது இது என்பார் அவெஸ்தி என்ற சட்ட அறிஞர்.

இந்திய அரசியல் சாசனம் இயற்றப்பட்ட பின்பும் தீண்டாமை ஒழியாததால் 1955-ஆம் ஆண்டு தீண்டாமைக் குற்றங்கள் சட்டம் (The Untouchabiltiy Offences Act. 1955) கொண்டு வரப்பட்டது. தீண்டாமை என்ற வார்த்தைக்கான விளக்கம் இச்சட்டத்தில் எங்கும் இடம் பெறவில்லை. இச்சட்டத்திற்கான வரைவு மசோதாவில் தீண்டத்தகாதோர், என்பதற்கான விளக்கம் இடம் பெற்றிருந்தாலும், இம்மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போது, கூட்டுக்குழுவில் நடைபெற்ற நீண்ட விவாதங்களுக்குப் பின்

அந்த வரையறையை இச்சட்டத்திலிருந்து நீக்கிவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன் விளைவாக தீண்டாமைக் குற்றங்கள் சட்டத்தில் தீண்டாமை என்பதற்கான வரையறை நீக்கப்பட்டது.

இச்சட்டத்தில் பிரிவுகள் தீண்டாமைக் குற்றங்களுக்கான தண்டனைகளைப் பட்டியலிடுகிறது. தீண்டாமை காரணமாகவோ, சாதியப் பாகுபாட்டினாலோ பொது இடங்களில் ஒரு நபரை நுழையவிடாமல் தடுப்பது, அவருக்குப் பொருட்கள் அல்லது சாமான்களை வழங்க மறுப்பது, மருத்துவமனைகளிலோ, கல்வி நிலையங்களிலோ, உணவு விடுதிகளிலோ அவரை அனுமதிக்க மறுப்பது இச்சட்டப்படி குற்றங்களாகும். தீண்டாமை காரணமாக புரியக்கூடிய சமுகக் கொடுமைகள், சமயம் சார்ந்த கொடுமைகள் எதுவாயிருந் தாலும் இச்சட்டப்படி குற்றமாக அறிவிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோரை கட்டாய வேலை வாங்குவது, கையால் மலத்தை அள்ள வைப்பது, இறந்த மிருகங்களின் பிணச்சிதைவுகளை (அல்லது) சடலத்தை அப்புறப்படுத்தக் கட்டாயப்படுத்துது, இதுபோன்ற எந்த ஒரு இழிவான வேலையாக இருந்தாலும் அது தீண்டாமைக் கொடுமையே.

1955-இல் இச்சட்டம் இயற்றப்பட்டு பல ஆண்டுகள் ஆன பின்னும்கூட தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக இழைக்கப்டும் தீண்டாமைக் குற்றங்களும், சாதியக் கொடுமைகளும் முறையாக காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படவில்லை. எனவே இச்சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வரும் நோக்கில் 1965-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தீண்டாமை, தாழ்த்தப்பட்டோர் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் குழு ஒன்றை திரு. இளையபெருமாள் தலைமையில் மத்திய அரசு அமைத்தது. மிக விரிவாக ஆய்வை மேற்கொண்ட இளையபெருமாள் குழு பல முக்கிய திருத்தங்களை 1969-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முன்வைத்தது. அவ்வாறு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டு இச்சட்டத்தை திருத்தி அமைத்தது. சட்டத்தின் பெயரிலே தீண்டாமை என்ற வார்த்தைப் பிரயோகம் இருப்பதால் இச்சட்டம் 1976-ஆம் ஆண்டு திருத்தம் பெற்று குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் என்று (The Protection of Civil Rights Act. 1976) மாற்றப்பட்டது.

திருத்தப்பட்ட இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்களாக கூட்டு அபராதம், கடமையைப் புறக்கணிக்கின்ற புலனாய்வு அதிகாரிகளின் மீது நடவடிக்கை, இச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றத் தீர்ப்பு பெற்றவர் தேர்தலில்

நிற்கத் தடை, இச்சட்ட அமலாக்கத்தில் மத்திய மாநில அரசுகளுக்குள்ள கடமைகள் ஆகியவை இடம் பெற்றன. சுதந்திர இந்தியாவில் இயற்றப்பட்ட குற்றவியல் சட்டங்களில் புலனாய்வு அதிகாரிகளின் கடமை புறக்கணிப்பை ஒரு தண்டமைக்குரிய குற்றமாக முதன் முதலில் அறிவித்தது இச்சட்டத்தில் தான். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் அனைத்து குற்றங்களும் கைது செய்யதலுக்குரியவை (Cognizable)

முந்திய 1955-ஆம் ஆண்டைய சட்டத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டும் இன்னொரு முக்கியமான அம்சம். இச்சட்டத்தின்கீழ் பட்டியல்படுத்தப்பட்டுள்ள குற்றங்கள் சமரசம் செய்ய இயலாதவை (Non Compoundable) பாதிப்பிற்குள்ளான தாழ்த்தப்பட்ட மக்களை சமரச முயற்சிகளுக்கு இணங்க வைப்பதும், வன்கொடுமைகள் புரிந்த ஆதிக்க சாதியினர் சட்டத்தில் மிக எளிதாகத் தப்பிப்பதும், இச்சட்டத்தின் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக உள்ளதால் அதைத் தடுக்கும் பொருட்டு சட்ட ரீதியான பாதுகாப்புக் கவசம் திருத்தப்பட்ட இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இதுபோன்ற அடிப்படையான ஒருசில மாற்றங்கள் 1976-ல் திருத்தங்களாக இணைக்கப்பட்டன. இதன்கீழ் பதிவு செய்யப்படும் குற்றத்திற்கு குறைந்தபட்சத் தண்டனையாக ஒருமாத கால சிறைத் தண்டனையும், ரூ. 100 அபராதமும் அதிகபட்சத் தண்டனையாக ஆறுமாத கால அளவிலான சிறைத் தண்டனையும், ரு. 500 அபராதமும் விதிக்கப்படும். அதே நபர் இரண்டாவது முறையாக அதே குற்றத்தைப் புரிந்தால், குறைந்த பட்டசமாக ஆறுமாதச் சிறதைத் தண்டனையும் ரூ. 200 அபராதமும் விதிக்கப்படும். அதிகபட்டசமாக ஓராண்டு சிறைத் தண்டனையும் ரூ. 500 அபராதமும் விதிக்கப்படும் அதே நபர் மூன்றாவது முறையும் அக்குற்றத்தை இழைப்பாரேயானால், குறைந்தபட்சமாக ஓராண்டு சிறைத் தண்டனையும் ரூ. 500 அபராதமும் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ. 1000 அபராதமும் விதிக்கப்படும்.

தீண்டாமை காரணமாக தாழ்த்தப்பட்டோருக்குப் பொருட்களை விற்கவோ அல்லது பணியாற்றவோ மறுத்தால் அவ்வாறு செய்யும் நபர்களுக்கு அரசு வழங்கியுள்ள தொழில் அல்லது வர்த்தக ரீதியான உரிமத்தை இச்சட்டப் பிரிவு 8-ன் படி நிறுத்திவிடலாம். இதுகுறித்த வழக்குகளை விசாரிக்கின்ற நீதிமன்றம் எடுக்கிற எந்த முடிவும், சம்பந்தப்பட்ட உரிமத்தை ரத்து செய்கின்ற ஆணையைப் பிறப்பிக்க அதிகாரம்கொண்ட அமைப்பு எடுத்த முடிவாகக் கருதப்படும்.

இதுபோன்ற குற்றங்களைப் புரிந்த நபர்களுக்கு விதிக்கப்படும் அதே தண்டனை இக்குற்றங்களைச் செய்யத் தூண்டுவோருக்கும் வழங்கப்படும். இச்சட்டத்தின் கீழ் கடமையை ஆற்றத் தவறும் அரசு அதிகாரிகள் அக்குற்றத்தை தூண்டியதாகவே எடுத்துக் கொள்ளப்படும். அதற்குரிய தண்டனையும் அவர்களுக்கு வழங்கப்படும்.

இச்சட்டம் பிரிவு 10-Aஇன் படி ஒரு குறிப்பிட்ட பகுதியில் வசிக்கின்ற மக்கள் இச்சட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு குற்றத்தைப் புரிந்தோ அல்லது குற்றவாளிகளை தற்காத்து வைத்தோ அல்லது இது குறித்து அதிகாரத்தில் உள்ளவருக்கு உரிய தகவல்கள் வழங்காமலிருந்தாலோ அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏதோ ஒரு குற்றத்தைப் புரிந்ததற்கான தடயங்களை அழித்தோ அல்லது மறைக்க முயற்சி செய்ததாகவோ இருந்தால் அவர்களுக்குக் கூட்டு அபராதம் (Collective fine) விதிக்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது.

மேலும் இச்சட்டத்தின் அமலாக்கம் குறித்து மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொகுத்து பாராளுமன்றத்தில் ஒவ்வொரு ஆண்டும் அறிக்கைத் தாக்கல் செய்ய வேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

ஆயினும் தீண்டாமைக் குற்றங்களுக்கு கடுமையான தண்டனை இல்லாமை, பல்வேறு தீண்டாமை வடிவங்களும், சாதியப் பாகுபாட்டின் கொடுமையான வெளிப்படுகளும் இச்சட்ட வரையறைக்குள்ளே குற்றங்களாகப் பட்டியல் படுத்தப்படாமை, இச்சட்ட அமலாகத்தில் காவல்துறையின் மெத்தனப்போக்கு போன்ற பல அம்சங்களும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படைகளையே கேள்விக்குள்ளாக்கு கின்றன. நடைபெறும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு கடுமையான தண்டனையும், கறாரான அமுலாக்கமும் கொண்ட புதிய சட்டம் ஒன்றின் தேவையை முன்நிறுத்தின.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீது தொடுக்கப்படும் தீண்டாமைக் குற்றங்கள் தொடர்பான புள்ளி விபரங்களை மாநில அரசுகள் முறையாகத் தொகுப்பதில்லை. இவ்வழக்குள் தொடர்பாக மாநில அரசுகள் போதிய அக்கறை எடுப்பதில்லை என்று கவலை தெரிவித்த தேசிய காவல் ஆணையம் 1985 ஜுன் 21-ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த வழக்குகளின் தொகுப்பு குறைபாடுகளுடன் இருப்பதாகத் (defective enumeration of cases) தெரிவித்து, இனி காவல்

நிலையங்களில் பதியப்பெறும் முதல் தகவல் அறிக்கையில் ஒரு பகுதியில் பாதிக்கப்பட்டவர் மற்றும் எதிரி ஆகியோரின் சாதிகளும் குறிப்பிடப்பட வேண்டும். வன்கொடுமை நிகழ வாய்ப்புள்ள அல்லது தீண்டாமைக் கொடுமை நிலவும் பாகுதிகளிலிருந்து வரும் தகவல்களைச் சேகரிக்க முறையாக அமைப்பு (System) உருவாக்கவும் மத்திய மாநில அரசுகளுக்குப் பரிந்துரை செய்தது. பதற்றமான, கலவரம் நிகழ வாய்ப்புள்ள பகுதிகளில் காவல்துறைப் பணிகளை முடுக்கிவிடவும், குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்திடவும் மத்திய அரசிற்குப் பல்வேறு பரிந்துரைகளை முன் வைத்தது.

அதன்படி தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீது இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகள் பதிவு, தொடர் கண்காணிப்பு குறித்து மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கிற்று, அனைத்து மாநில அரசுகளுக்கும், ஒன்றியப்பிரதேச அரசுகளுக்கும் இது குறித்த திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் அனுப்பப்பட்டன. இவ்வழிகாட்டுதல்களின்படி தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீது இழைக்கப்படும் தீண்டாமைக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த அரசுகள் மேற்கொண்ட குறிப்பிட்ட நடவடிக்கைகளை தேசிய காவல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கோரப்பட்டன. ஆந்திரப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், சண்டிகார், டெல்லி, கோவா, டையூ, டாமன் மற்றும் இலட்சத் தீவுகள் ஆகியவை மட்டுமே அனுப்பியிருந்தன.

மத்திய உள்துறை அமைச்சகம் அனுப்பிய வழிகாட்டுதல்களை ஏற்றுக்கொண்டு தீண்டாமைக் கொடுமைகள் நிகழ வாய்ப்புள்ள பகுதிகளில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட மத்தியப் பிரதேச மாநில அரசு விரிவான பதில் ஒன்றை அனுப்பி இருந்தது. அப்பதிலில் கீழ்க்கண்ட விஷயங்கள் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது அந்ததந்த மாவட்டங்களில் தீண்டாமைக் குற்றங்களைத் தடுத்திடும் பொறுப்பு மாவட்ட ஆட்சியரக்கும், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளருக்கும் விடப்பட்டது. தீண்டாமைக் குற்றங்கள் நிகழ வாய்ப்புள்ள பகுதிகளை முன்கூட்டியே இனங்கண்டு, பாதிக்கப்பட்டோரின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை சரிசெய்வதற்கான முயற்சிகளில் உடனே இறங்கிடவும், மாவட்ட உயர் அதிகாரிகள் பணிக்கப்பட்டனர். இவ்வழக்குகளை கெஜட்டு அதிகாரி தலைமையிலான ஒரு குழு விசாரணை செய்யவும், அக்குழுவில் குறைந்தபட்சம் ஒரு தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியின நபராவது இடம்

பெற வேண்டும் என்றும் ஆணை பிறப்பிறக்கப்பட்டது. நிலத் தகராறுகள் தொடர்பான உடனடித் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளவும், தீண்டாமைக் கொடுமை புரிவோர் வைத்திருக்கும் ஆயுத உரிமத்தை உடனே திரும்பப் பெறவும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரை வேலைக்கமர்த்தி மிகக் குறைந்த கூலி வழங்கி கொத்தடிமைகளாக வைத்திருக்கும் நிலையை மாற்றியமைத்திட வழிவகை செய்யவும், பதற்றமான பகுதிகளில் காவல்நிலையங்கள் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன்.

தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக குற்றமிழைக்கும் அரசு ஊழியர்கள் புரிந்த குற்றம் நிரூப்பிக்கப்பட்டு தண்டனை பெற்றால், அவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் சட்டப்படி கிடைக்கப்பெறும் அனைத்துப் பயன்களையும் தடுத்து நிறுத்திடவும், அத்தகையை நபர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக இருந்தால் அவர்களது உறுப்பினர் சேர்க்கையை ரத்து செய்யவும், கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்குவதைத் தடுத்திடவும் வழிவகை செய்யப்பட்டன. அதேபோலத் தீண்டாமைக் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கு மத்திய பிரதேச ஹரிஜன் / ஆதிவாசி ரஹத் யோஜனா (M.P. Harijan / Adivasi yojna) என்ற திட்டத்தின் மூலம் இழப்பீட்டுத் தொகை வழங்கிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன்படி உடல் ரீதியான பாதிக்கப்பட்ட தாக்குதல்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவினருக்கும், அவர்களின் சொத்துக்கள் சேதமடைந்ததற்கும் இழப்பீடு வழங்க சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டன.

இதுபோன்ற ஒருசில மாநில அரசுகள் மிகச் சிறப்பான முன்னுதாரணமான செயல் திட்டங்களை செயற்படுத்தி வந்தாலும், பெரும்பாலான மாநில அரசுகள் இது குறித்து மத்திய அரசிற்கு பதில் அனுப்பக்கூட சிரத்தை எடுக்கவில்லை என்று ஆணையம் வருத்தத்துடன் குறிப்பிட்டது. இப்படிப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடு அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் அமலுக்கு வந்ததிலிருந்து 1971 வரை இத்திட்டத்தின் கீழ் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்துள்ளது. 1972-லிருந்து சற்று கூடுதலான வழக்குகள் பதிவாகியுள்ளதையும், 1976-இல் இச்சட்டம் திருத்தம் பெறப்பட்டது முதல் அதிகமான

வழக்குகள் பதிவாகியுள்ளதையும், 1991 முதல் மீண்டும் குறைவாக பதிவாகியிருப்பதையும் இவ்வட்டணை தெரிவிக்கிறது.

23.04.2002 அன்று மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரப்படுத்துதல் துறை (Ministry of Social Justice and Empowernment) சமர்பித்த 2000-ஆம் ஆண்டுக்கான அறிக்கை கீழ்க்கண்ட தகவல்களை வழங்குகிறது. குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 62.37% வழக்குகள் ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும், 11.15% வழக்குகள் கர்நாடக மாநிலத்திலிருந்து பதியப் பெறுவதாகவும், பீகார், குஜராத், உத்திரப்பிரதேசம், கேரளா, பஞ்சாப், அசாம் மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் எந்த வழக்குகளுமே பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கிறது.

மேலும் காவல்துறையிடம் புலனாய்வு நிலையில் இருக்கக்கூடிய வழக்குகளின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. பதிவான மொத்த 2086 வழக்குகளில் 1216 (58.29 சதவீதம்) புலனாய்வு நிலையிலேயே இருப்பதாகவும், 618 வழக்குகள் (29.63 சதவீதம்) புலன் விசாரணை முடிந்து குற்றப் பத்திரிகை தாக்கல் வழக்குகளின் எண்ணிக்கையும் இதைப் போலவே உள்ளது. இச்சட்டத்தின்கீழ் பதிவான 9949 வழக்குகளில் 7366 நீதிமன்ற விசாரணையில் இருப்பதாகவும், 271 வழக்குகளில் மட்டுமே (02.72 சதவீதம்) குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருப்பதாகவும், 2312 வழக்குகள் (23.24 சதவீதம்) விடுதலையின் முடிந்திருப்பதாகவும் இவ்வறிக்கை கூறுகிறது.

1989-ஆம் ஆண்டு வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டபின் குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவின் கீழ் வகுக்குகள் பதிவானது குறைந்திருக்கலாம் என்று ஒருசில தலித் இயக்க செயற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைவிட கடுமையான தண்டனைகளை வழங்குவதாகவும், பாதிக்கப்பட்டோர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கூடுதலான பயன்களைப் பெறக்கூடிய நிலையில் இருப்பதால் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளது என்ற வாதம் முன்வைக்கப்பட்டாலும் கூட, இது முழுமையாக நிரூப்பிக்கப்படாத ஒன்று. ஏனெனில் பல்வேறு மாவட்டங்கள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக மிகக் கொடுமையான வன்கொடுமைகள் இழைக்கப்படுகின்ற போது அக்குற்றங்களை வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின்

கீழ் வழக்குகளாகப் பதிவு செய்ய காவல்துறை அதிகாரிகள் மறுக்கின்ற போக்கைத் தான் காண முடிகிறது என்ற தேசிய மனித உரிமைகள் ஆணயத்தின் கூற்று இங்கே கவனிக்கத்தக்கது.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட அமலாக்கம் குறித்து தேசிய தாழ்த்தப்பட்டோர், மற்றும் பழங்குடியினர் ஆணையமும், தேசிய மனித உரிமகள் ஆணையமும் கடும் அதிப்தி தெரிவித்துள்ளதை இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது.

தீண்டாமைக் கொடுமைகள் நடைமுறையில் இருக்கும் பகுதிகளை இனங்காண்பதில் அரசு கூடுதலான சிரத்தை எடுப்பதில்லை. அவ்வாறு இனங்கண்ட பகுதிகளில் அவற்றை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் முழு மூச்சாக மேற்கொள்ளப்படவில்லை. இச்சட்டத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து பொது மக்களுக்குப் போதிய அளவில் தெளிவுபடுத்த எந்த முயற்சிகளையும் அரசு எடுக்கவில்லை. இச்சட்ட அமலாக்கம் குறித்து ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசுகள் சமர்பிக்க வேண்டிய ஆய்வறிக்கைகளை முறையாகச் சமர்ப்பிக்கவில்லை. இச்சட்ட அமலாக்கத்திற்கென அரசு அமைக்க வேண்டிய சிறப்பு நீதி மன்றங்களும் அரசு குற்றவியல் வழக்கறிஞர்களும் நியமனம் செய்யப்படவில்லை.

இச்சட்ட அமலாக்கம் குறித்து கண்காணிக்க இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட வேண்டிய கண்காணிப்புக் குழுக்கள் உருவாக்கப்படவில்லை. உறுவாக்கப்பட்டாலும் அவை முறையாக செயல் படுவதில்லை. இதற்கான கூட்டங்கள் தொடர்ந்து நடைபெறுவதில்லை. இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்கத் திறமையான அரசு வழக்கறிஞர்கள் மாநில அரசுகளால் நியமனம் செய்யப்படவில்லை.

மேலும் மத்திய அரசின் சமூக நீதித்துறை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற அறிக்கைகள் அனைத்துமே மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட வெறும் தகவல்களை வைத்து அப்படியே எழுதப்படுபவை. வழக்குகள் பதிவு புலனாய்விலே தள்ளுப்படி, நிர்வாக ஏற்பாடு, இதற்கான செலவுகள் குறித்த எந்தவொரு விமர்சனமோ, குறைகளைச் சரி செய்வதற்குரிய தலையீடுக்கான கருத்துக்களோ இவ்வறிக்கைகளில் இடம் பெறுவதில்லை என்று தேசிய மனித உரிமைகள் ஆணைய ஆய்வறிக்கை இச்சட்ட அமலாக்கம் குறித்து மத்திய அரசையும், மாநில அரசுகளையும் கடுமையாகச் சாடுகிறது.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட அமலாக்கம் தொடர்பாக ஆந்திரப்பிரதேச மாநில அரசு 1976-ஆம் ஆண்டு எடுத்த ஒரு

*சில முன் முயற்சிகளை இங்கே குறிப்பிடலாம். தீண்டாமைக் குற்றங்களில் புலன் விசாரணையை விரைவாக மேற்கொண்டு, அக்குற்ற வழக்குகளை கண்காணிக்கும் நோக்கில் குற்றம் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையில் ஒரு தனிப்பிரிவை உருவாக்கியதோடு, இக்குற்ற வழக்குகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தல்களை வழங்கியது. பாதிக்கப்பட்ட தலித்துகளுக்கு நிவாரணமும், மறுவாழ்வு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அரசாணைகள் 1980-களிலே பிறப்பிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*இதுபோன்ற ஒன்றிரண்டு குறிப்பிடத்தக்க விஷயங்களில் தவிர, ஒட்டு மொத்தத்தில் இச்சட்டம் தீண்டாமை ஒழிப்பில் சொல்லிக் கொள்ளத்தக்க அளவில் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.*

## தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம், 1989.

*தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவர்கள் தொடர்ந்து தாக்குதல்களுக்கும், துன்புறத்துதலுக்கும், அவமானங்களுக்கும் சொல்லொண்ணாத துயரங்களுக்கும் ஆளாகின்றனர். அவர்களது உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலையில் இவ்வன்கொடுமைகள் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. எனவே இதுபோன்ற வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதற் கான கடுமையான சட்டம் ஒன்றின் அவசியம் உணரப்பட்டது.*

*குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் அமலாக்கம், திருப்திகரமாக இல்லை என்பதால் அதைவிடக் கடுமையான தண்டனைகளை வழங்கம் சட்டம் ஒன்றை கொண்டுவர முடிவு செய்து 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய அரசு தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் மிகக் கொடுமையான, வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்த நடைமுறையில் இருக்கின்ற குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டமும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் (Indian Penal Code) இடம் பெறும் பிரிவுகளும், அதற்கான தண்டனைகளும் போதுமானவையாக இல்லை. எனவே வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்த, கடுமையான*

தண்டனைகள் தரத்தக்க ஒரு சிறப்புச் சட்டம் தேவை என்று இச்சட்டம் கொண்டு வருவதற்கான நோக்கம் பற்றி குறிப்பிடப்படுகிறது.

1991-ஆம் ஆண்டு செப்டம்பர் 13-ஆம் தேதி, 60 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு முன்னால் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனிடம் சமர்ப்பித்த அறிக்கையிலிருந்த ஒரு சில வாசகங்களைக் குறிப்பிடுவது இங்கே பொருத்தமாக இருக்கும்.

“மனிதாபிமானமற்ற, காட்டுமிராண்டித்தனமாக முறையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சொந்த நாட்டு மக்களாலே தாக்கப்படுவது ஒரு அவமானமான துன்பமாகும். சில நேரங்களில் இப்பெண்கள் தெருக்களில் நிர்வாணமாக நடத்திச் செல்லப்படுகின்றனர். அவர்களிடம் உள்ள கொஞ்சநஞ்ச வாழ்வாதாரங்களும் தீவைத்துக் கொளுத்தப்படுகின்றன. இக்கொடுமை களையெல்லாம் அரசும், அரசு இயந்திரங்களும் மவுன சாட்சிகளாய் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. அல்லது கண்டுகொள்ளாமல் அலட்சியமாய் இருக்கின்றன. அல்லது இதுபோன்ற கொடுமைகளை நிகழ்த்துவோருடன் கைகோர்த்துக் கூட்டாளிகளாகவே இணைந்து நிற்கின்றன என்பது வேதனையான ஒன்று” என அவ்வறிக்கை வேதனையோடு குறிப்பிடுகிறது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளைத் தடுத்திடும் நோக்கில் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்பதனை இச்சட்டத்தின் முகப்புரையை வாசிக்கும்போது தெளிவாகிறது. எனவே இச்சட்டத்தில் பல்வேறு பிரிவுகளுக்கு விளக்கமளிக்கும் போது அல்லது அவற்றைப் பொருள் கொள்கையில் (Interpretation) இந்நோக்கத்தை மனதில் இருத்திக் கொள்வது அவசியம் என்று உச்சநீதிமன்றம் ஒரு வழக்கில் தெளிவுபடுத்தியுள்ளது.

வன்கொடுமை (atrocity) என்ற வார்த்தைக்கு சட்ட ரீதியான வரையறை எதுவும் இச்சட்டத்தில் இடம்பெறவில்லை. இந்திய அரசு அவ்வப்போது வழங்கும் அறிவுறுத்துதல்கள் (instructions) மூலம் பெறப்படும் பொருள் மற்றும் புரிதலின் அடிப்படையிலே இதற்கான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. 1955-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தீண்டாமைக் குற்றங்கள் சட்டத்தின் (பின்னர் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்) தீண்டாமை என்பதற்கான தெளிவான வரையறை ஏதும் வழங்கப்படவில்லை என்ற

ஏற்கெனவே கண்டோம். பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் நடப்பில் இருந்த அல்லது இருக்கும் நடைமுறைகளே தீண்டாமையின் வடிவங்களாக இச்சட்டத்தில் பொருள் கொள்ப்படுகின்றன. இதற்கான வரையறை இல்லாமலிருப்பது இச்சட்ட அமலாக்கத்தை எந்த வகையிலும் பாதிக்கக் கூடாது என்றும் நிபுணர்கள் கருதுகின்றனர்.

இச்சட்டத்தில் இடம்பெறும் பிரிவுகளுக்குப் பொருள் கொள்கையில் இந்திய அரசமைப்பின் உன்னதமான நோக்கங்களையும் இச்சட்டம் கொண்டு வருவதற்கான தேவையையும் மனதிற்கொண்டு விளக்கமளிக்க வேண்டும். தலித்துக்களுக்கும், பழங்குடியினருக்கும் சமத்துவத்தை நிலைநிறுத்தி பிறருக்கு கிடைக்கின்ற அனைத்துப் பயன்களும் ஒதுக்கப்பட்ட இச்சமூகத்தினரைச் சென்றடையவும், தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கிலும் இச்சட்டத்தின் பிரிவுகளை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று வேறு ஒரு வழக்கில் உச்சநீதிமன்றத்தின் குறிப்புரையையும் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

ஒவ்வொரு மாநில அரசும் வன்கொடுமை குறித்து தங்களுக்குள்ள புரிதலின் அடிப்படையில் வன்கொடுமை பற்றிய புள்ளி விபரங்களை மத்திய அரசிற்கு வழங்குகின்றன. இதன்விளைவாக நாடு தழுவிய அளவில் வன்கொடுமைச் சூழல் குறித்த துல்லியமான மதிப்பீடு (accurate assessment) செய்வதில் சிரமங்கள், விடுபாடுகள் இருப்பதாக தேசிய காவல்துறை ஆணையம் (national Police Commission) கருத்துத் தெரிவித்துள்ளது. தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைகள் பற்றிய குற்றங்கள், புள்ளி விபரங்களைச் (Crime Statistics) சேகரிப்பதில் மாநிலங்களுக்கிடையே ஒரே மாதிரியான அணுகுமுறை (no uniform criteria) மேற்கொள்ளப்படுவதில்லை. இந்திய உள்துறை அமைச்சகம் இவ்வன்கொடுமைக் குற்றங்களை வகைப்படுத்த முழுமையான வழிகாட்டுதல்களை (comprehensive guidelines for classifying crimes as atrocities) வழங்கி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆய்வு செய்திட வழிவகுக்க வேண்டும் என்றும் அது கூறியது.

இழைக்கப்படும் குற்றங்களில் பாதிக்கப்பட்டோர் தாழ்த்தப்பட்டோராகவும் குற்றமிழைப்போர் தாழ்த்தப்பட்டோர் அல்லாதவராகவும் இருந்து, சாதிய உணர்வு (Caste consciousness) வெளிப்படையாக இல்லையெனினும், சாதிய நோக்கு (Caste consitderation) அக்குற்றத்தின் அடிப்படையாக இருக்குமாயின் அது வன்கொடுமைக் குற்றமாகவே கருதப்படும் என்று உள்துறை

அமைச்சகம் பின்னர் தெளிவுபடுத்தியது. இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட குற்றங்கள் பிறரால் தாழ்த்தப் பட்டோர் அல்லது பழங்குடியினருக்கு இழைக்கப்படும் போது அவை வன்கொடுமைகளாகவே கருதப்படும் என்று கூறிய தேசிய தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் ஆணையம் முன்வைத்த கருத்தை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது.

**ஓ) வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் - ஒரு பார்வை:-**

ஐந்து அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு, 23 பிரிவுகளை உள்ளடக்கிய இச்சட்டத்தின் பிரிவு மூன்று இதன் மையப் பகுதியாகும். அடிப்படை வரையறைகளை வழங்கும் முதல் பகுதியும், வன்கொடுமைகளைப் பட்டியல்படுத்தி அதற்கான தண்டனைகளை வழங்கும் பிரிவுகளான 3 முதல் 9 வரையிலான இரண்டாவது பகுதியும், வன்கொடுமைகள் புரியக்கூடிய நபர்களை அப்பகுதிகளிலிருந்து வெளியேற்றுவதற்கான பிரிவுகளைக் குறிப்பிடும் மூன்றாவது பகுதியும், வன்கொடுமை வழக்குகளை விரைவாக விசாரிப்பதற்காக அமைக்கப்படும் சிறப்பு நீதிமன்றங்கள், அந்நீதிமன்றங் களில் நியமிக்கப்படும் அரசு சிறப்பு குற்றவியல் வழக்கறிஞர்கள் பற்றிய பிரிவுகளை உள்ளடக்கிய நான்காவது பகுதியும், இதரப் பிரிவுகள் அடங்கிய கடைசிப் பகுதியுமாக ஐந்து பகுதிகளாக இந்தச் சட்டம் பிரிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூன்றாவது பிரிவு 22 வகையான வன்கொடுமைகளைப் பட்டியல்படுத்துகிறது. 3(I)-இல் 15 வகையான வன்கொடுமைகளும், 3(II)-இல் எழு வகையான வன்கொடுமைகளும் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. பிரிவு 3(I)-இல் இடம்பெறும் வன்கொடுமைக் குற்றங்களுக்கு ஆறு மாதங்கள் முதல் ஆறு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம். 3(II)-இல் பட்டியல்படுத்தப்படும் வன்கொடுமைகளுக்குப் பல்வேறு வகையான தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஏழாண்டுகள் முதல் ஆயுள் தண்டனை, மரண தண்டனை வரையிலும் தண்டனையின் அளவு வேறுபடுகின்றது. மேலே கூறப்பட்ட 22 வகையான வன்கொடுமைகளைக் கீழ்கண்ட ஏழு தலைப்புகளில் வகைப்படுத்தலாம்.

**1.மனித மாண்புக்கு இழுக்கு நேரும் செயல்கள்.**

உண்ணத்தகாத பொருள்களை உண்ணுமாறு கட்டாயப் படுத்துவது குப்பை மற்றும் கழிவுகளை தாழ்த்தப்பட்டோரின்

*அல்லது பழங்குடியினரின் வீடுகளுக்கு அருகாமையில் கொட்டுவது, தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினப் பெண்களை மானபங்கப் படுத்துவது. பொது இடங்களில் தாழ்த்தப்பட்டோரை அல்லது பழங்குடியினரை அவமானப்படுத்துவது போன்றவை.*

**2. பொருளாதாரக் குற்றங்களை இழைப்பது.**

*கட்டாயப்படுத்தி தாழ்த்தப்பட்டோரையோ அல்லது பழங்குடியினரையோ வேலை வாங்குவது. பிச்சை எடுக்க வைப்பது, சட்டத்திற்குப் புறம்பாக அவர்களுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பது அல்லது அவற்றை தங்கள் பெயருக்கு மாற்றிக் கொள்வது அல்லது அவர்களது நிலங்களில் விளைவிப்பது அல்லது தண்ணீர், நிலம், வீடு ஆகியவற்றின் மீது அவர்களுக்குள்ள உரிமைகளை அனுபவிக்கவிடாமல் தடுப்பது அல்லது குறுக்கீடு செய்வது.*

**3. தேர்தல் ரீதியான வன்கொடுமைகள்.**

*தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியின வாக்காளர் களை அச்சுறுத்துவது, ஒரு நபருக்கு வாக்களிக்குமாறு அவர்களைக் கட்டாயப்படுத்துவது அல்லது வாக்களிக்க விடாமல் தடுப்பது.*

*4. தாழ்த்தப்பட்டோர் அல்லது பழங்குடியினர் பயன்படுத்தும் நீராதாரங்களை மாசுபடுத்தி அவர்களின் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் குற்றங்களை இழைப்பது.*

*5. பொது இடங்களில் தாழ்த்தப்பட்டோரோ அல்லது பழங்குடியினரோ நடமாடுவதற்குத் தடைவிதிப்பது அல்லது பொதுப் பதைகள், பொது இடங்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பது. வழக்காற்று உரிமைகளை மறுப்பது (இருப்பிடத்தை அல்லது ஊரைவிட்டு வெறியேறுமாறு வற்புறுத்துவது)*

*6. வேண்டுமென்றே அல்லது தெரிந்தே தாழ்த்தப்பட்டோர் அல்லது பழங்குடி நபருக்கு ஏதிராகப் பொய்ச் சாட்சியங்களை வழங்குவது அல்லது வழக்கில் சாட்சியங்களையோ, தடயங்களையோ அழிப்பது.*

*7. தீயினால் அல்லது வெடி பொருட்களைக் கொண்டு தாழ்த்தப்பட்டோர் அல்லது பழங்குடியினரின் உடைமைகளுக்கு, வீடுகளுக்கு, கோவில்களுக்கு சேதம் விளைவிப்பது.*

**வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்.**

*கடுமையான தண்டனை, இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம்*

(அமர்வு நீதிமன்ற அதிகாரம் கொண்டவை) இந்நீதிமன்றத்தில் வன்கொடுமை வழக்குகளை நடத்திட தனி அரசு குற்ற வழக்கறிஞர் நியமனம், இச்சட்டத்தின் கீழ் ஆற்ற வேண்டிய கடமைகளைப் புறக்கணிக்கும் அதிகாரிகளுக்குத் தண்டனை, தொடர்ந்து வன்கொடுமை புரியும் நபர்களை அப்பகுதியில் இருந்து வெளியேற்ற வழிவகை, வன்கொடுமை புரியப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களைப் பறிமுதல் செய்தல், வன்கொடுமை புரியும் பிரிவினர் மீது கூட்டு அபராதம் வீதிக்க ஏற்பாடு, இச்சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்ட நபர்கள் முன்ஜாமீன் பெற இயலா நிலை என்பன போன்ற பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளன.

- தவிர, இச்சட்ட விதிகளின்படி தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க, அவசியம் ஏற்பட்டால் ஆயுதங்கள் வைத்திருப்பதற்கான உரிமத்தை அரசு வழங்க வேண்டும்.
- தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கு எதிராக இழைப்படும் வன்கொடுமைக் குற்றங்களை புலனாய்வு நடத்துவது காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் அல்லது அவருக்கு மேலே உள்ள உயர் அதிகாரி தான்.
- இச்சட்ட விதிமுறைகளின் அமலாக்கத்தைக் கண்காணிக்க முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட 25 பேர் அடங்கிய உயர்மட்ட கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வுக் குழு உருவாக்கப்பட வேண்டும்.
- இச்சட்ட விதிகளின்படி வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சிகள் மற்றும் பாதிக்கப் பட்டோரைச் சார்ந்தவர்கள் விசாரணைக்காக, புலனாய்வு செய்யும் இடத்திற்கோ, நீதிமன்றத்திற்கோ வந்து செல்வதற்கு பயணப்படி, தினப்படி, நிர்வாகச் செலவு மற்றும் போக்குவரத்து வசதியை அரசே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் பாதிக்கப்பட்டோருக்கு போதிய நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வசதிகளை அரசே வழங்க வேண்டும்.

ஒப்பீட்டளவில், 1955-இல் இயற்றப்பட்ட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைவிட 1989-இல் கொண்டு வரப்பட்ட தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம் கடுமையான தண்டனை தரத்தக்கதாகவும், முந்தியதைவிட கூடுதலான பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி இன்னும் முழுமையானதாகவும் உள்ளது.

இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்ட இந்தச் சட்டம் முறையாகவும் முழுமையாகவும் அமலாக்கம் செய்யப்படுகின்றதா என்பதுவே இவ்வாய்விற்கான மையப் பொருள்.

பதிவான மொத்த வழக்குகளில் ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கு வழக்குகள் புலனாய்வு நிலையிலேயே தள்ளுபடி செய்யப்படுகின்ற என்று அரசின் புள்ளி விபரம் தெரிவிக்கிறது. மீதி 75.89% வழக்குகளில் மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுகின்றன. இத்தனை வழங்குகள் புலன் விசாரணையிலேயே காவல்துறையால் தள்ளுபடி செய்யப்படுவதற்கான காரணங்கள் ஆராய வேண்டிய ஒன்று.

நீதிமன்றங்களுக்குச் சென்ற வழக்குகளில் ஏறக்குறைய எட்டில் ஒரு பங்கு (12.46%) வழக்குகளில் மட்டுமே தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும், மீதி 87.54% வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் இருப்பதாகவும் இப்புள்ளி விபரங்கள் தெரவிக்கின்றன.

நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளிலும் தண்டனை பெற்ற வழக்களின் எண்ணிக்கை ஏறக்குறைய பத்தில் ஒரு பங்கைத் (10.05 சதவீதம்) தாண்டுவதில்லை. மீதி 89.95 சதவீதம் வழக்குகளில் குற்றவாளிகள் விடுதலை ஆகியிருப்பதைக் காணமுடிகிறது.

60 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு 1991ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ஆம் நாள் அப்போதைய இந்திய குடியரசுத் தலைவருக்கு கொடுத்த மனுவில், இடம் பெற்றிருந்த வாசகங்கள் இன்றும் பொருள் பொதிந்தவையாகவே உள்ளன. “குற்றம் புரிவோரைத் தண்டிக்கவோ, பாதிக்கப்பட்டவருக்கு நீதி வழக்குவோ அரசுக்கும், அரசு இயந்திரங்களுக்கும் போதுமான வழிமுறைகள் இல்லாமல் இல்லை. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் ஜனநாயக உரிமைகளையும், அவர்களது மாண்பையும் பாதுகாக்க அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 17 வகை செய்கிறது. தீண்டாமையை ஒரு குற்றமாக அரசியல் சாசனமே அறிவிக்கிறது. சாதிய ரீதியான குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கும் அளவுக்கு 1989ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தில் இடம் உள்ளது. இருப்பினும் இவை அனைத்தும் ஏட்டளவில்தான் இருக்கின்றன. இந்த சட்டத் தீர்வுகளை நடைமுறைப்படுத்தத் தேவையான அரசியல் உறுதிப்பாடு தேவையாக இருக்கிறது.

ஆகவே சட்டத்தில் இன்னும் கூடுதலான விசயங்களை கொண்டு வர வேண்டும் என்பது பலரின் கோரிக்கை. குறிப்பாக இடதுசாரிகள், அம்பேத்கரிஸ்டு கள், பெரியாரிஸ்டுகள், **NGO-**க்கள் அமைப்பாகவும், தனிநபர் செயல்பாட்டாளர்களாகவும் இயங்கிய மற்றும் போராடிய தொடர் முயற்சியின் காரணமாக வன்கொடுமை தடுப்பு சட்டம் 2015 கொண்டுவரப்பட்டது.

இந்த காலத்தில் மத்தியில் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி அதன் செயல்பாடுகள் தலித் மக்களின் வாழ்வுரிமையை நிலை குலைய செய்துள்ளது என்பது பல சம்பவங்களில் நாம் கண்டு வருகிறோம். அதில் குறிப்பிடத்தக்கது. வன்கொடுமை தடுப்பு சட்டம் 2015 மீதான தாக்குதல்.

சொந்த நாட்டின் மக்கள் மீதே நடத்தப்பட்ட அறிவிக்கப்படாத திட்டமிட்ட போர் என்றுத்தான் இக்கொடும் சம்பவத்தை சொல்ல முடியும். 20.03.2018 உச்சநீதிமன்றத்தில் அமர்வு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பு.

மானிட மாண்புக்கு கீழாக அறிவுக்கு புறம்பான முறையில் உள்ள இந்திய சமுகத்தை சீர்படுத்திட சாதிய வன்கொடுமைக்கு ஆளாகும் SC/ST மக்களை பாதுகாத்திட உருவாக்கப்பட்ட 1. SC/ST வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989 மற்றும் 2. வன்கொடுமை தடுப்பு சட்டம் 2015 ஆகியவைகளை வலுவிழக்க செய்யும் தீர்ப்பு தான் மேற்சொன்ன அறிவிக்கப்படாத போர். மேற்கண்ட தீர்ப்பு வழங்கிய அறநெறிக்கு எதிரான நீதிபதிகள் 1.ஏ.கே.கோயல் மற்றும் 2.யு.யு.லலித் அவர்கள் தீர்ப்புக்குறிய சம்பவம்.

பாஸ்கர் கர்பாரி கெயிட்வாட் என்பவர் தலித் சமூகத்தை சேர்ந்தவர். மராட்டிய மாநில அரசின் மருந்தக கல்லூரியில் பணிபுரிந்து வந்தார். அவர் சம்பந்தமான ரகசிய அறிக்கையில் அவருக்கு எதிரான குறிப்பை SC/ST அமர்வு இரு அதிகாரிகள் எழுதினார்கள். ஒவ்வொரு அரசு ஊழியர் சம்பந்தமாகவும் ஒரு ரகசிய அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்படும் அது வழக்கம்.

இந்தபணியில் SC/ST ஊழியருக்கு எதிரான குறிப்பை எழுதியது மேற்கண்ட சட்டத்தின் படி. வன்கொடுமை செயல் என காவல் துறைக்கு புகார் அளித்தார். “பாஸ்கர் கர்பாரி கெயிட்வாட்”, புகாரின் பேரில் குற்றவியல் நடவடிக்கை எடுப்பதற்காக துறைத்தலைவர் திரு. சுபாஷ் காசிநாத் மகாஜன் அவர்களின் அனுமதி கோரப்பட்டது. அவர் அனுமதி மறுத்து உத்திரவு போட்டார்.

அவர் அனுமதி மறுத்து உத்தரவு போட்ட செயல் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் சாதிய வன்கொடுமை என காவல் துறைக்கு புகார் அளித்து குற்றவியல் நடவடிக்கை எடுக்க கோரினார். "பாஸ்கர் கர்பாரி கெயிட்வாட்" அந்த புகார் முதல் தகவல் அறிக்கையாக காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

சுபாஷ் காசிநாத் மகாஜன், உடனே மும்பை உயர்நீதி மன்றத்தில் முன் ஜாமின் பெற்றார். பின்னர் காவல்துறையால் பதிவு செய்யப்பட்டுள்ள புகாரை ரத்து செய்ய வேண்டி, ஒரு வழக்கை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார். உயர்நீதி மன்றம் அந்த வழக்கை தள்ளுபடி செய்தது. அந்த உயர் நீதிமன்ற உத்தரவினை எதிர்த்து, உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தார். அந்த மேல் முறையீட்டில் உச்ச நீதிமன்றம் 20.03.2018-இல் வழங்கிய 89 பக்க தீர்பே SC/ST மக்கள் மீது அறிவிக்கப்படாத தீட்டமிட்ட போராகும்.

அது ஒரு விதி விதிவிலக்கான வழக்கு. உச்சநீதி மன்றம் நடைமுறையில் SC/ST மக்களின் வாழ்க்கை நிலை கணக்கில் எடுத்து கொள்ளவில்லை. காவி கண்ணை மறைத்து விட்டது.

**தீர்ப்பின் சாரம்சம்:-**

1. மேற்கண்ட சட்டத்தில் குற்றம் சட்டப்பட்ட நபர் முன் ஜாமின் பெறுவதற்கு தடை இருந்தாலும் அவ்வித தடையை பாராளுமன்றம் மேற்சொன்ன சட்டத்தில் ஏற்படுத்தி இருப்பது சரியல்ல. என்று எழுப்பட்ட வாதத்தை நிராகரித்து இதற்கு முன்னர் உச்சநீதி மன்றம் இரண்டு தீர்ப்புகளில், தீர்ப்பு அளித்திருந்தாலும், முன் ஜாமின் வழங்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.
2. வன்கொடுமை செய்ததாக குற்றம் சாட்டப்படுவர் அரசு ஊழியராக இருந்தால், சம்பந்தப்பட்ட துறை தலைவரின் அனுமதி பெற்றே கைது செய்ய வேண்டும். அனுமதி அளிப்பதற்கான காரணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

குற்றம் சட்டப்படுபவர் அரசு ஊழியர் அல்லாதவராக இருந்தால், காவல் துறை கண்காணிப்பாளரின் அனுமதியுடன் மட்டுமே கைது செய்யப்பட வேண்டும். அனுமதி அளிப்பதற்கான காரணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். அந்த காரணங்கள் சரியானது தானா என்பதை, மாஜீஸ்திரேட் பார்த்த பின்னரே கைது செய்யப்பட்டவர் சிறைக்கு அனுப்பட வேண்டும். என்று கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டத்தை தவறாக பயன்படுத்தி

மற்ற சமூகத்தினர் கைது செய்யப்படுவதால் இந்த கடுமையான நிபந்தனை விதிப்பதாக கூறப்பட்டுள்ளது.

3. வன் கொடுமை குற்றச்சாட்டு பற்றிய புகாரின் மேல் காவல் துறை துணை கண்காணிப்பாளர் முன் விசாரணை செய்து குற்றச்சாட்டுக்கு அடிப்படை இருப்பதாக கருதினால் மட்டுமே புகாரை முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. நிரபராதியின் பேரில் பொய்யான குற்றசாட்டுகள் பதிவு செய்யப் படுவதைத் தடுப்பதற்குத்தான் இந்த கடுமையான நிபந்தனை விதிப்பதாக கூறப்பட்டுள்ளது.

4. மேலே 2 மற்றும் 3 இல் உச்ச நீதிமன்ற பிறப்பித்த கட்டளைகளை மீறுபவர் துறை நடவடிக்கையையும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையையும் சந்திக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது வன்கொடுமை குற்றம் இழைத்தவர், என்று ஒருவர் மேல் தலித் - பழங்குடி மக்கள் காவல் நிலையத்தில் கொடுக்கப்படும் புகாரை குற்றவியல் வழக்கிற்கான முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்வதற்கு முன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கடுமையான யாதார்த்திர்க்கும் அறிவுக்கும் புறம்பான நிபந்தனையை உச்சநீதிமன்றம் விதித்திருக்கிறது.

புகார் பதிவு செய்யப்பட்டால் வன் கொடுமை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவரைகைது செய்ய முடியாதபடி செய்து விட்டது இத்தீர்ப்பு. காவல்துறை கைது செய்தாலும் அவரை மாஜிஸ்திரேட் சிறை காவலுக்கு அனுப்புவதில் கடும் நிபந்தனையை விதித்தது. புகார் பதிவு செய்யப்பட்டாலும் குற்றம் சாட்டப்பட்டவர் முன் ஜாமின் பெறுவதற்கும் விதி செய்கிறது தீர்ப்பு.

**அநீதி என்னவென்றால்**

மத்திய அரசின் கூடுதல் சொலிட்டர் ஜெனரல் வன் கொடுமை தடுப்பு சட்டத்தில் முன் ஜாமின் கொடுக்க தடை இருந்தாலும், முன் ஜாமின் கொடுக்கலாம் என உச்ச நீதி மன்றத்தில் வாதிட்டதும் இங்கு சுட்டிக் காட்டப்படுவது அவசியம்.

**இந்த கொடூரமான சூழலில் தான்**

02.04.2018 அன்று இந்தியா முழுவதும் குறிப்பாக வட இந்தியாவில், குறிப்பாக பா.ஜா.க. ஆட்சி புரியும் மாநிலங்களில் தலித் மக்களும் பழங்குடியினரும் வெகுண்டு எழுந்தனர் பாரத்

பந்த் நடத்தினர். எந்த அரசியல் கட்சியினர் முன்னெடுப்பாலும் அந்த ஏழுச்சி நடைபெற வில்லை.

அந்த எழுச்சி போர் 11 SC/ST க்கள் உயிரை பறித்தது. கிட்ட தட்ட அது SC/ST மக்கள் மீது அரசு நிகழ்த்திய திட்டமிட்ட படுகொலை என சொல்லலாம்.

கொடுமை என்ன வென்றால்

அ. ராஜஸ்தான் மாநிலத்தை ஆளும் **BJP** அரசின் சட்டமன்ற உறுப்பினர்.

ஆ. முந்தைய காங்கிரஸ் அரசின் தலித் சமூகத்தை சேர்ந்த அமைச்சர் ஆகியோரின் வீடுகள் கூட 02.04.2018 அன்று தீயிக்கு இறையாக்கப்பட்டன.

தென் இந்தியாவில் ஏப்ரல் 10 அன்று அதே போல தலித் - பழங்குடி மக்களால் கேரளத்தில் பந்த் நடத்தப்பட்டது.

காவேரி பிரச்சனையில் மூழ்கி கிடந்த தமிழகத்தில் ஏப்ரல் 10 அன்று இடதுசாரிகள், தலித் அமைப்புகள், ஜனநாயக சக்திகள் மறியல் போராட்டம் நடத்தியது.

25.04.2018 அன்று சென்னையில் தலித் அமைப்புகள் ஒரு மிகப்பெரிய பேரணியை நடத்தினர்.

02.04.2018இல் நடந்த தலித் - பழங்குடி மக்களின் பேரெழுச்சி போன்று அம்மக்களின் எழுச்சியை இந்தியா இதுவரை கண்டது இல்லை. இத்தகைய போராட்டத்தின் எழுச்சியால் அதை கண்டு கலங்கிய மத்திய அரசு உடனே உச்ச நீதிமன்றத்தில் மார்ச் 20ல் தீர்ப்பை மறு பரிசீலனை செய்யுமாற சீராய்வு மனு தாக்கல் செய்தது. அந்த எழுச்சி பல மாநில அரசுகளையும் சீராய்வு மனு தாக்கல் செய்ய நிற்பந்தம் செய்தது.

சீராய்வு மனுவை விசாரணைக்கு ஏற்ற உச்ச நீதி மன்றம், சீராய்வு மனுவில் இறுதி உத்தரவு போடப்படும் வரை (மார்ச் 20 தீர்ப்பிற்கு தடை விதிக்க மறுத்து விட்டது)

தலித் - பழங்குடி மக்கள் தீர்ப்பை சரியாக புரிந்து கொள்ள வில்லை என்றது உச்ச நீதிமன்றம். வன் கொடுமை தடுப்பு சட்டத்தை உச்சநீதிமன்ற தீர்ப்பு நீர்த்து போகும்படி செய்ய வில்லை என்றது. உச்ச நீதிமன்றம் காலம் காலமாக இதுவரையில் நடந்துள்ள வன்கொடுமைகளை, இவைகள் வன்கொடுமைகள் இல்லை என்று உயர்நீதி மன்றம் சொல்லினால் ஆச்சிரியம் படுவதற்கில்லை.

மார்ச் 20ல் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு, 60 ஆண்டுகாலமாக தீண்டாமை வன் கொடுமை ஒழிப்புக்கான சட்டங்களில்

ஏற்பட்ட முன்னேற்றத்தை ஒரே நாளில் கேள்வி குறியாக மாற்றியிருந்தது.

SC/ST மக்களின் போராட்டங்களில் உயிர்தியாகத்தின் பின்புலத்தில் ஆகஸ்ட் 6 2018 அன்று நாடாளுமன்றத்தில் புதிய சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. இது மார்ச் 20 உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பாதகமான விளைவுகளை சரிசெய்வதாக இருந்தது.

1.1989 சட்டத்தின் புதிய பிரிவு ஒன்று 18 அ(1)(அ) இணைக்கப்பட்டது. அதன்படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வதற்கு எந்த ஒரு துவக்க நிலை விசாரணையும் தேவையில்லை என்பதாகும். மார்ச் 20 அன்று உச்சநீதிமன்ற தீர்ப்பை துவக்க நிலை விசாரணையின்றி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய கூடாது என்ற தடையை விதித்திருந்தது.

2. இன்னொரு பிரவு 18 அ(1) இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி விசாரணை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவரை கைது செய்வதற்கு வேறு எந்த முன் அனுமதியும் தேவையில்லை. அவர் கைது தேவை என கருதும் பட்சத்தில் இச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தால் வேறு எந்தவொரு வழிமுறையையம் இச்சட்டம் மற்றும் விதிகளுக்கு அப்பாற்பட்டு கடைபிடிக்க வேண்டியதில்லை.

இச்சட்டத்தின் நோக்கங்கள் காரணங்கள் குறித்து, முன்னுரையில் குற்றவியல் நடைமுறைகளின்படி குற்றம் சாட்டப்பட்டவரை கைது செய்ய முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற அவசியம் விசாரணை அதிகாரிக்கு தேவையில்லை என குறிப்பிடபட்டுள்ளது.

3.இச்சட்டம் மூலச் சட்டத்தில் இருந்தது போன்று முன் ஜாமின் கிடையாது என்ற நிலையை கொண்டுவந்தது. மார்ச் 20 உச்சநீதிமன்றத் தீர்ப்பு முன் ஜாமின் வழங்குவதற்கு வழிவகுத்திருந்தது.

4.இச்சட்டம் கூறுவது என்னவெனில் குற்றவியல் தண்டனை சட்டம் பிரிவு 438 இச்சட்டத்துக்கு பொருந்தாது. அது குறித்த எந்தவொரு நீதிமன்றத்தின் தீர்ப்போ / ஆணையோ வழிகாட்டலோ கட்டுப்படுத்தாது என்பதே இது பிரிவு 18 அ (இ)ல் தெளிவாக தற்போது இடம் பெற்றுள்ளது.

5.மார்ச் 20 தீர்ப்பின்படி SC/ST வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989 பற்றி சட்டம் முன் ஜாமீனை மறுத்து இருந்தாலும் அது வழங்கப்படலாம். துவக்கநிலை விசாரணை இல்லாமல்

நடவடிக்கை கூடாது. கைது என வரும் போது, பொது ஊழியர் எனில் அவரின் பணி நியமன அதிகாரியோ, பொது ஊழியர் அல்லாதவர் எனில் சிறப்பு காவல் கண்காணிப்பாளர் முன் அனுமதி தந்த பின்னர் தான் கைது செய்ய முடியும் என குறிப்பிடபட்டிருந்தது.

தற்போதைய சட்டத்திருத்தங்கள் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு உருவாக்கிய ஓட்டைகளை அடைத்துள்ளது. அனைத்திற்கும் இங்கு போராட்டமாகி விட்டது. அதுவும் தலித் மக்களுக்கு வாழ்க்கையே போராட்டமாக உள்ளது. இந்த பின்னணியில் தான் வன்கொடுமை தடுப்பு திருத்த சட்டம் 2015 வந்தது.

சட்டத்தை நடைமுறைபடுத்துவர்களின் சிந்தனை செயல்பாட்டில் பிரச்சனையா? அல்லது பாதிப்புக்கு உள்ளாகும் தலித் மக்களின் சட்ட புரிதல் இல்லாத பிரச்சனையா? எப்படியானாலும் சாதியத்திற்க்கு சவுக்கடி கொடுத்து விரட்ட சட்ட போராட்டமும் தேவை. ஆகவே சட்டம் தெரிந்து கொள்ள வேண்டியதும், பிறருக்கு தெரியப்படுத்தவும் சட்டத்தையும் பயில வேண்டியதும் அவசிய தேவையாகும்.

இந்திய அரசியல் சாசனத்தில் சமத்துவம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு பற்றி பேசும் அடிப்படை உரிமை பிரிவுகள்.

1. பிரிவு 14- சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டங்களின் மூலம் அனைவருகும் சம பாதுகாப்பு
2. பிரிவு 15- சமயம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றை காரணமாக கொண்டு அரசு பாகுபாடு காட்ட கூடாது.
3. பிரிவு 16- அரசு துறை வேலை வாய்ப்புகளில் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
4. பிரிவு 17- தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது. எந்த வடிவத்தில் தீண்டாமை கடைபிடிக்கப் பட்டாலும் குற்றம் என்கிறது.

ஆனால் யதார்தத்தில் என்ன நிலைமை நாடு சுதந்திரம் அடைத்து 71 ஆண்டுகளும் சட்டம் இயற்றி 70 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் மேற்படி சட்டங்களின் அமுலாக்கம் காகிதத்தில் சர்க்கரை என்று எழுதியது போன்றுதான் உள்ளது என்பதை நாட்டில் நடக்கும் சாதிய வன் கொடுமைகளின் எண்ணிக்கை தெரிவிக்கிறது.

# வன்கொடுமை தடுப்பு திருத்த சட்டம் 2015

*இந்தியர்கள் ஒவ்வொருவரும் சட்டத்தின் முன் சமமானவர்களே என்றாலும், எவ்வித பாகுபாடுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்பைப் பெற உரிமை உள்ளவர்களே என்றாலும், வன்கொடுமைகளைச் சந்திக்கிற தலித், ஆதிவாசி குடிமக்களின் உண்மை நிலை என்னவென்றால், அவர்களுக்கான நீதி தாமதப்படுத்தப் பட்ட நீதியாகவே இருக்கிறது என்பதுதான். தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமை வழக்குகளை கண்காணிப் பதிலும், அவற்றில் தலையிடுவதிலும் பலஆண்டு கால அனுபவத்தின் அடிப்படையில், பாதிக்கப்பட்டோர், சாட்சிகள், சமூகச் செயல்பாட்டாளர்கள், தலித் அமைப்புகளுக்கும் இடதுசாரிகளுக்கும் தலித்துகளுக்கும் கிடைத்த பாடம் என்னவெனில், வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டோரும் தப்பிப்பிழைத்தவர்களும் சட்டப்பூர்வமாக எதிர்பார்க்கிற நீதிக்கான நடைமுறைகளில் ஏராளமான முட்டுக்கட்டைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதே ஆகும்.*

*வழக்கைப் பதிவு செய்ய, புலன்விசாரணை, குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வது நீமன்றத்தில் நடைபெறும் விசாரணை என ஒவ்வொரு கட்டத்திலும் அந்த முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போதாமை, போதிய பாதுகாப்பின்மை, கண்காணிப்புக் குழுக்களின் செயல்பாட்டில் போதாமை, முறையின்மை, நிவாரணம் அளிப்பதிலும் மறுவாழ்வு வழங்குவதிலும் போதாமை, தாமதம் ஆகியவை உள்ளிட்ட முட்டுக்கட்டைகளும் உள்ளன. ஆனால் தொடர் செயல்பாடுகளும் மக்கள் போராட்டங்களும் அடக்குமுறைகளை தவிடு பொடியாக்கி உள்ளது என்பதை கவணத்தில் எடுத்துக் கொண்டு நம் செயல்பாட்டை தொடர்வோம்.*

## சாதிய வன்கொடுமைக் குற்றம் நிகழ்ந்தால் உடனடியாக செய்ய வேண்டியவை.

### 1.1 புகார் கொடுப்பது:-

*அன்றாடம் ஆயிரக்கணக்கான வன்கொடுமைக் குற்றங்கள் இந்நாட்டில் நிகழ்த்தப்பட்டாலும், வெகு சில குற்றங்களே காவல்நிலையத்தில் பதிவாகின்றன. காரணம், பலருக்கும் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்பது தெரிவதில்லை. அப்படித் தெரிந்திருந்தாலும், பலருக்கு காவல்நிலையம் செல்வதற்கே பயமாக இருக்கிறது. பலருக்கு ஆதிக்கச்சாதியினரை எதிர்த்துப் புகார் கொடுத்தால் தங்களை உயிருடன் விடமாட்டார்கள் என்று அச்சம்! அப்படிப்பட்டவர்கள் தங்களுக்குத் துணை நிற்பவர்கள் யாரையாவது அழைத்துக்கொண்டு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேயாக வேண்டும்.* **காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போதுதான் இச்சட்டம் நடைமுறையாக்கம் பெற ஆரம்பிக்கிறது.** *காவல் நிலையத்தில் புகாரே கொடுக்கப்படாததனால் பல ஆயிரக்கணக்கான குற்றங்கள் வெளிச்சத்திற்கு வருவதில்லை. அவையாவும் அதிகாரப்பூர்வமாகப் பதியப்படுவதேயில்லை. கொடுக்கப் படும் புகாரைப் பதிவு செய்ய மறுக்கும் காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுத்து அத்தகையோரை தண்டிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது.*

### 1.2 யார் புகார் கொடுப்பது.

*வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒரு பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்தான் இந்தச் சட்டத்தின் கீழ் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க முடியும். அப்படிப்பாதிக்கப்பட்டவர் காவல் நிலையத்திற்குச் செல்வதற்கு முடியாத காரணமிருந்தால், அவர் சார்பாக எவரொருவரும் அவருக்காக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம். பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்கள் இருவருக்கிடையே நடக்கும் தகராறுகளை / பிரச்சினைகளை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்ய முடியாது. பிறப்பால் பட்டியல் சாதியைச் சார்ந்த ஒருவர் வேறொரு சமூகத்தைச் சார்ந்தவரைத் திருமணம் செய்திருந்தாலும், அவர் இச்சட்டத்தின் பலன்களை அடைய முடியும்.*

*ஆகவே, ஒரு வன்கொடுமை குற்றம் நிகழ்ந்தால், உடனடியாக பாதிக்கப்பட்டவரோ அல்லது அவர் சார்பாக எவரொருவரும், தனியாகவோ அல்லது வேறு சிலர் துணையுடனோ அருகிலுள்ள*

காவல்நிலையத்தில் அக்குற்றம் பற்றிய புகாரை கொடுக்க வேண்டும். புகார் இல்லாதபோது காவல்துறையினர் செயல்பட மறுத்துவிடுவார்கள். சட்டம் வெறும் காகிதப்புலியாகவே இருக்கும்.

### 1.3. பழங்குடியினர் எந்த மத்தைச் சார்ந்தவராயினும் இச்சட்டம் பொருந்தும்.

ஒரு பட்டியல் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர் கிறிஸ்தவராக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர் இச்சட்டத்தின் முழுப்பலன்களையும் அடைய எந்தத் தடையுமில்லை. தலித் கிறிஸ்தவர்களைப் போல, கிறிஸ்தவப் பழங்குடியினர் பிற்படுத்தப்பட்டச் சாதியைச் சார்ந்தவராகக் கருதப்படமாட்டார். அவர் எந்த சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர் பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவராகவே கருதப்படுவார். தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களில் பட்டியல் பழங்குடியினர் கிறித்தவராகவோ அல்லது இசுலாமியராகவோ மதம் மாறியிருந்தால், அதையேக் காரணம் காட்டி மாவட்ட நிர்வாகம் மதமாறிய பட்டியல் பழங்குடியினருக்கு, பட்டியல் பழங்குடியினர் என சாதி சான்றிதழ் அளிக்க மறுக்கின்றது. இது சட்டத்திற்குபுறம்பான செயலாகும். இப்படிப்பட்ட அதிகாரிகள் பட்டியல் சாதியினரையும், பட்டியல் பழங்குடியினரையும் பிரித்துப் பார்க்க மறுக்கிறார்கள். இது குறித்து பல மாநிலங்களில் உயர்நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் தெளிவான விவரமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் கேரள உயர்நீதிமன்றத்தில் இரண்டு பேர் கொண்ட அமர்வால் அப்படி ஒரு தீர்ப்பும் வழங்கப்ட்டுள்ளது. (Rosamma Thomas and another Vs Circle inspector of Police and .... on 9, February, 1999) 2000 (1) ALT Cri 79, 1999 Cril. J 1666.

### 1.5 புகார் கொடுப்பது எப்படி:-

புகார் எழுத்துப்பூர்வமாக இருக்கலாம். எழுதத் தெரியாத நிலையில், வாய்மொழிப்புகாராகவும் இருக்கலாம். புகாரினைக் கொடுத்தவுடன் அங்குள்ள காவல்நிலையப் பொறுப்பாளர் அது வாய்மொழிப் புகாராக இருப்பின், அதை உடனடியாக அவரே எழுதி, அவர் சரியாகத்தான் எழுதியிருக்கிற் என்பதை புகார்தாரரிடம் உறுதிசெய்து கொண்டும், அது எழுத்துப்பூர்வமாக கொடுக்கப்பட்டால், அதைப் பெற்றுக்கொண்டு தாமதமின்றி முதல் தகவல் அறிக்கையாகப் பதிவு செய்து, முதல் தகவல்

அறிக்கையின் நகல் ஒன்றினைப் புகார்தரருக்கு இலவசமாக வழங்கவேண்டும்.

### 1.6 புகாரில் சொல்ல வேண்டியவை என்ன:-

புகாரில் நடந்த சம்பவத்தைத் தெளிவாக அது நடந்தவாறே எழுத வேண்டும். குற்றத்தை நிகழ்த்திய வர்களின் பெயர், முகவரி, தகப்பனார் பெயர், சாதிப்பெயர், இடம், நேரம், சாட்சிகள், பயன்படுத்திய வாகனங்கள், ஆயுதங்கள், குற்றத்தால் பாதிப்புக் குள்ளானவர்கள் பற்றிய விவரம், ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகள் போன்றவற்றைத் தெளிவாக எழுதி நடவடிக்கை எடுக்குமாறு அருகாமையிலுள்ள காவல்நிலைய ஆய்வாளருக்கு பெறுநர் முகவரி இட்டு, புகார்தாரரின் முழு முகவரியையும் எழுதி கையொப்பம் இட்டு, தேதியிட்டு அதைச் சில நகல்கள் எடுத்து வைத்துக்கொண்டு, காவல்நிலைய பொறுப்பிலுள்ள அதிகாரியிடம் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கப்பட்ட புகாரினை முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்யுமாறு அதிகாரியைக் கேட்டுக் கொள்ள வேண்டும். அதைப் பெற்றுக்கொண்டு முதல் தகவல் அறிக்கையாக அதைப் பதிவுசெய்து அதன் நகல் ஒன்றினை இலவசமாகப் புகார்தாரருக்குக் கொடுப்பது காவல்நிலையப் பொறுப்பில் இருக்கின்ற அதிகாரியின் சட்டப்படியான கடமையாகும்.

### 1.7 காவல் நிலைய சிரமங்களை சரிசெய்ய வழிமுறைகள்:-

வழக்கமாகப் புகார் கொடுக்கச் செல்லும் காவல் நிலையத்தில்தான் சிரமங்கள் ஆரம்பமாகிறது. காவல்நிலையப் பொறுப்பில் இருப்பவர் புகார்தாரரைக் காக்க வைக்கின்றார் அல்லது புகாரைப் பெற்றுத் தனது கடமையை ஆற்ற மறுக்கின்றார். அச்சமயத்தில் தாமதம் செய்யாமல், எழுதத் தெரிந்தவர் துணையோடு புகாரை எழுதிக்கொண்டு, அதைச் சில பிரதிகள் நகல் எடுத்துக் கொண்டு, காவல்நிலையப் பொறுப்பில் இருப்பவரிடம் கொடுத்துவிட்டு, அவரிடம் இரசீது கேட்க வேண்டும். அவர் இரசீது கொடுக்க மறுத்தால், ஏற்கனவே எடுத்துக்கொண்ட பிரதியை உடனடியாக தாமதமின்றி மாவட்ட ஆட்சியருக்க ஒன்றும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு ஒன்றுமாக விரைவு தபால், அல்லது அஞ்சல் அட்டையுடன் கூடிய பதிவுத்தபாலில் அனுப்பி அஞ்சல் நிலையத்தில் இரசீது பெற்று வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி அனுப்புவதற்கு முன் அந்தப் புகாரின் மீது “இந்தப் புகாரை இத்தனை மணிக்கு இந்தக் காவல்நிலையத்தில் உள்ள இந்த அதிகாரியிடம் கொடுத்தற்கு அதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

எனவே இதைத் தங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன். தயவுகூர்ந்து நடவடிக்கைக்கு உத்தரவிடக் கேட்டுக்கொள்கிறேன்" என்று எழுதி அதையும் இணைத்து நகல் எடுத்து வைத்துக்கொண்டு அனுப்ப வேண்டும். விரைவுத்தபாலில் அனுப்பியவர்கள் சில நாட்கள் கழித்து இணையதளத்தில், அந்த விரைவுத் தபாலானது, உரிய முகவரியில் சேர்ந்தடைந்ததற்கான அத்தாட்சியைப் பிரதி எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். அஞ்சல் அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பியவர்களுக்கு அஞ்சல் அட்டை வந்தவுடன் அதை பத்திரமாக வைத்துக் கொள்ளுதல் அவசியம். ஏனெனில் பிறகு நீதிமன்றத்தில் இந்தச் சான்றுகள் அனைத்தும் ஒருவருடைய வழக்கை நிரூபிக்க பெரிதும் துணைநிற்கும்.

### 1.8 புலன் விசாரனையில் கவனமாக இருக்க வேண்டியவை.

புலன் விசாரணை அதிகாரியாக மாவட்ட காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் அல்லது அவருக்கு மேற்பட்ட அதிகாரம் உள்ள அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும். அப்படி நியமிக்கப்படுபவர்கள் தொடர்புடைய வழக்கை விசாரிப்பதற்கென்று குறிப்பிட்டு நியமிக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். தொடர்புடைய, வழக்கை புலன் விசாரணை செய்வதற்காக தகுதியுள்ள ஒரு அதிகாரி நியமிக்கப்படாதபோது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்து தகுதியுள்ள அதிகாரியை புலன் விசாரணை அதிகாரியாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வழக்கம்போல மற்ற வழக்குகளை விசாரிக்கும் காவல்துறை ஆய்வாளர், சார்பு ஆய்வாளர், சிறப்பு சார்பு ஆய்வாளர் போன்ற அதிகாரிகள் வன்கொடுமை வழக்குகளை விசாரித்தால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு வீணாகிவிடும்.

### 1.9. நிவாரணமும், இழப்பீடும் பெற்றுத் தருவது.

பாதிக்கப்பட்டவருக்கும், அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கும், இச்சட்டத்தில் சொல்லப்பட்டவாறு நிவாரணமும், இழப்பீடும் உடனடியான வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும், அவர்களின் பாதுகாப்பையும், சாட்சிகளின் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் வகையில் சட்டத்தில் சொல்லப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். இப்புத்தகத்தின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் சொல்லப்பட்டவாறு பாதிக்கப்பட்ட வர்களும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களும் நிவாரணமும், இழப்பீடும் பெறுவதை

உறுதி செய்ய வேண்டும். அந்த அட்டவணையில் எப்படிப்பட்ட வன்கொடுமைக்கு என்ன நிவாரணம், எப்போது வழங்கப்பட வேண்டும் என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி நிவாரணம் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும், அந்த நிவாரணங்களையும், இழப்பீடுகளையும் வழங்குவதற்கு பொறுப்புடைய அதிகாரிகள் யார்? அவர்கள் அவற்றை எப்படி ஏற்பாடு செய்து வழங்க வேண்டும் என்பது பற்றிய விவரங்களை இச்சட்டத்தின் விதிகள் 11 மற்றும் 12 தெளிவுபடுத்துகின்றன.

***

## 2.வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பாக முக்கியமாக தெரிந்திருக்க வேண்டியவை

### 2.1 காவல் நிலையப் பொறுப்பில் இருக்கும் அதிகாரியின் கடமை:-

தான் பொறுப்பிலிருக்கும் காவல்நிலையத்திற்கு வன்கொடுமை குற்றங்கள் தொடர்பான புகார் கொடுக்கப்பட்டால், அதை எழுத்துப்பூர்வமாக மாற்றி அதில் புகார்தாரரின் கையெப்பம் பெற்றுக் காலதாமதமின்றி அதை முதல் தகவல் அறிக்கையாகப் பதிவுசெய்து ஒருபிரதியை புகார்தாரருக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டும். புகார் கொடுக்க வருபவரை அவசியமின்றி காக்கவைப்பதோ அல்லது பிறகு வரச்சொல்வதோ அல்லது புகாரைப் பெற்றுக் கொண்டு பதிவு செய்ய மறுப்பதோ இச்சட்டப்படி வன்கொடுமைக் குற்றமாகும். புகார்தாரர் காவல்நிலையப் பொறுப்பு அதிகாரி மீது புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்க முடியும். இக்குற்றத்திற்கு அந்த அதிகாரிக்கு 6 மாதம் முதல் ஒரு ஆண்டுவரை சிறைத்தண்டனை வழங்க சட்டத்தில் இடமுண்டு.

வன்கொடுமை வழக்குகளை மாவட்டக் காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் தகுதிக்குக் குறையாத அதிகாரமுள்ள அதிகாரிதான் விசாரிக்க வேண்டும். அவர் பாதிக்கப்பட்டவரிடமும், உரிய சாட்சிகளிடமும் சரியான வாக்குமூலங்களைக் கால தாமதமின்றிப் பதிவு செய்ய வேண்டும். புலன் விசாரணை செய்து குற்றப்பத்திரிகையை 60 நாட்களுக்குள் உரிய சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். 60 நாட்களுக்ககுள் தாக்கல் செய்ய இயலாதபோது அதற்கான காரணத்தை எழுத்துப்பூர்வமாகக் கொடுக்க வேண்டும். சட்டத்திலும் விதிகளிலும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ள மற்ற செயல்களைத் தளர்வின்றிச் செய்து முடிக்க வேண்டும்.

கடமைகளிலிருந்து ஓர் அதிகாரி, கவனமின்றித் தவறிழைத்திருப்பது சிறப்பு நீதிமன்றம் அல்லது அந்த வழக்கை விசாரிக்கும் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அந்த நீதிமன்றம், அது குறித்த வழக்கைக் கோப்புக்கு எடுத்து அந்த அதிகாரியைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடலாம்.

## 2.2 சிறப்பு அரசு தரப்புக் குற்றவியல் வழக்கறிஞரின் கடமை.

வன்கொடுமை வழக்குகளை நடத்துவதற்காக நியமிக்கப்படும் அரசு தரப்புக் குற்றவியல் வழக்கறிஞர்கள் இந்த வழக்குகளை நடத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பல வழக்குகளில், அரசு தரப்புக் குற்றவியல் வழக்கறிஞர்கள் கையூட்டுப் பெற்றுக்கொண்டோ அல்லது வேறு காரணங்களுக்கோ குற்றம் சுமத்தப்பட்டவர் களுக்குச் சாதகமாக நடந்து கொண்டு வழக்கில் சமரசம் செய்துகொள்ளப் பாதிக்கப்பட்டவர்களைக் கட்டாயப் படுத்துகின்றனர். பல சமயங்களில் வழக்கைச் சட்டப்படி நடத்தாமல் வீணடித்து விடுகின்றனர். 80 சதவிகிதத்திற்கு மேற்பட்ட வன்கொடுமை வழக்குகளில் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் அவ்வழக்குகளைக் கவனமுடன் நடத்தத் தவறிவிடுகின்றனர். எனவே, அவ்வாறு நியமிக்கப்படும் அரசு தரப்பு வழக்கறிஞர்களைக் கண்காணிக்க வேண்டியது அவசியம். பல வழக்குகளில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்ந்து குற்றம் சுமத்தப்பட்ட வர்களுக்குச் சாதகமாக நடந்துகொள்ளும் வழக்கறிஞர்களை கண்காணித்து அவர்களை உடனடியாக அந்தப் பதவிகளிலிருந்து நீக்க மாவட்ட ஆட்சியரிடமும், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியிடமும் புகார் தெரிவித்து ஏற்பாடு செய்தல் அவசியம்.

## 2.3 சிறப்பு நீதிமன்றங்கள் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள்.

இந்தத் திருத்தச்சட்டத்தின்படி, மாநில அரசு அந்தந்த உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுடன் கலந்து ஆலோசித்து இந்த வழக்குகளைச் சட்டத்தில் சொல்லப்பட்டவாறு கவனமுடன் விரைந்து முடிப்பதற்கு ஏற்றவகையில், மாவட்டத்திற்கு ஒன்றோ அல்லது சில மாவட்டங்களுக்கு ஒன்றோ எனத் தேவைக்கேற்றவாறு தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தப்படும் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங் களில் வன்கொடுமை வழக்ககள் மட்டுமே நடத்தப்படும். இவைதவிர, ஏற்கனவே நடைமுறையிலிருந்தவாறு அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு

இணையான ஒரு நீதிமன்றத்தை வன்கொடுமை வழக்குகளை நடத்துவதக்கென்று சிறப்பு நீதிமன்றமாக அறிவிக்க வேண்டும். இந்த நீதிமன்றங்களில் வன்கொடுமை வழக்குகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் சட்டத்தில் சொல்லியுள்ளவாறு விரைந்து நீதி வழங்கப்படும்.

### 2.4 சிறப்பு நீதிமன்றம் மற்றும் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களில் நேரடியாக வன்கொடுமை வழக்குகளைத் தொடுக்கலாம்.

2015-ஆம் ஆண்டைய திருத்தச் சட்டத்தின்படி வன்கொடுமைக் குற்ற வழக்குகளை நேரடியாக சிறப்பு நீதிமன்றம் மற்றும் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களில் தொடுக்கலாம். அந்த நீதிமன்றங்கள் அப்படித் தொடுக்கப்படும் வழக்குகளைக் கோப்புக்கு எடுத்துக் கொண்டு மற்ற வன்கொடுமை வழக்குகளைப்போலவே விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளன. முந்தையச் சட்டத்தில் சிறப்பு நீதிமன்றங்களில் வன்கொடுமை வழக்குகளை நேரடியாகத் தாக்கல் செய்ய முடியாது. ஆனால், திருத்தச் சட்டம் அந்த அதிகாரத்தை சிறப்பு தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களுக்கு வழங்கியிருக்கிறது.

***

## 1989 ஆம் ஆண்டு சட்டத்தின் சில முக்கிய விபரங்கள்

### 3.1 இந்தச் சிறப்புச் சட்டத்தின் தேவை என்ன?

மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி சுஜாதா மனோகர், அவர்களின் கூற்றுப்படி.

“பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் தனிப்பட்ட மற்றும் பொதுவான அடிப்படை குடிமையியல் உரிமைகள் தொடர்ந்து ஆதிக்கச் சாதியினரால் மறுக்கப்படுகின்றன. இம்மக்கள் பல்வேறு வன்கொடுமைக் குற்றங்களுக்கும், அவமரியாதைகளுக்கும், இழிவுகளுக்கும், தொல்லைகளுக்கும் தொடர்ந்து ஆளாக்கப்படுகின்றனர். மிகக் கொடூரமான முறையில் அன்றாடம் அவர்களுடைய உயிர்களும் உடைமைகளும் பறிக்கப்படுகின்றன. ஒவ்வொருநாளும், அவர்களின் மாண்பு சிதைக்கப்படுகிறது. தங்கள் உரிமைகளைக் காத்துக்கொள்ள வேண்டி, தங்களுக்கெதிரான தீண்டாமைப் பழக்கங்களை எதிர்க்கும்போது ஆதிக்க வெறிகொண்ட கும்பல் அவர்களை அடக்கி ஒடுக்கி அச்சுறுத்துகின்றது.

*சில சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் வழியாக அரசு ஒதுக்கிக் கொடுத்திருக்கும் குறைந்தபட்ச நிலங்களைக் கூட ஆதி திராவிடர்களும் பழங்குடியினரும் உடைமையாகக் கொள்ள முடியவில்லை. அவர்கள் அந்த நிலங்களில் பயிரிடுவதை ஆதிக்கச் சாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.*

*அண்மைக் காலங்களில், மனித மலத்தைக் கட்டாயப்படுத்தி உண்ண வைப்பது போன்ற மாபாதகச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. ஆதரவற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் மீது தாக்குதல் நடத்துவதும் அவர்களைக் கொல்வதும், அதுதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்களை வண்புணர்ச்சி செய்வதும், உடைமைகளை அழிப்பதும், வீடுகளுக்குத் தீவைப்பதும், நிலங்களை அபகரிப்பதும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஆகையால், ஆதிக்கச் சாதியினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மீது தொடுக்கும் வன்கொடுமைக் குற்றங்களைத் தடுத்து நிறுத்திட இது போன்றதொரு சிறப்புச் சட்டம் அவசியம் தேவைப்படுகிறது." என்று இச்சட்டத்தின் அவசியத்தேவையைச் சுட்டிக்காட்டினார்.*

## 3.2. 27 ஆண்டுகளுக்குப் பிறகு:-

*1989ஆம் ஆண்டைய சட்டம் நடைமுறைக்கு வந்து 27 ஆண்டுகள் கடந்த பிறகும் அது உண்மையிலேயே பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியின மக்களுக்கு எதிர்பார்த்த பலன்களை அளித்திருக்கிறதா? என்று ஆய்வுசெய்யும்போது, எதிர்மறையான விடைதான் கிடைக்கிறது. எனவே பல்வேறு குழுக்கள் மற்றும் செய்பாடுகளின் தொடர் முயற்சி காரணமாக இந்தச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் தடுப்புத் திருத்த அவசரச்சட்டம், 2014 என்று அவசரச்சட்டமாகவும், அந்த அவசரச்சட்டமானது மேலும் கூர்மைப்படுத்தப்பட்டு இப்போது பாராளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலைப்பெற்று நிரந்தரமான சட்டமாக, பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் தடுப்புத் திருத்தச்சட்டம், 2015 என்று கடந்து 26.01.2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தச் திருத்தச்சட்டமானது ஏற்கனவே நடைமுறையிலிருந்த சட்டத்திலுள்ள குறைபாடுகளைக் களைந்து இன்னும் வலுவான சட்டமாக இந்தச் சட்டத்தை மாற்றியுள்ளது. அதனுடைய பலன் எப்படியிருக்கிறது என்பது போகப்போகத்தான் தெரியவரும்.*

*என்னதான் சட்டங்கள் திருத்தியமைக்கப் பட்டாலும், இன்னும் கூர்மைப்படுத்தப்பட்டாலும், இதுபோன்ற சட்டங்களின் நடைமுறையாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கும் காவல்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை போன்ற அமைப்புகளின் நேர்மையான தலையீடு இல்லாமல் இவை துளியும் பயனளிக்காது என்பது உறுதி. கெடுவாய்ப்பாக, நமது நாட்டில் உள்ள இந்த அமைப்புகள் யாவும், இன்னும் சாதிய மனநிலையில் ஊறித்திளைக்கின்ற அமைப்புகளாகவே இருப்பதால், எந்த அளவிற்கு இந்தச் சட்டத்தை இந்த அமைப்புக்கள் சுணக்கமின்றி நடைமுறைப்படுத்த முன்வரும் என்பது கேள்விக்குறிதான். எனவே, சட்டங்கள் இயற்றுவது, அதை திருத்தியமைப்பது போன்றவற்றைவிட சமூக அமைப்புகளிலும், மக்களின் சிந்தனைப்போக்கிலும், மனநிலையிலும் மாற்றங்களைக் கொண்டுவருவது இன்றியமையாததாகிறது. அதுவே இன்றைய நம்நாட்டின் தேவையாக இருக்கிறது. இதைச் செய்வதற்கு மக்கள் இயக்கங்களின் தொடர் செயல்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டும்.*

### 3.3. வன்கொடுமைகள் குறித்து:-

*இச்சட்டம் முதன்முறையாக 'வன்கொடுமை' என்பதைச் சட்டரீதியாக வரையறுத்துள்ளது. வன்கொடுமை என்றால், 'கொடுமையிலும் கொடுமை' என்று பொருள்படுகின்றது. எனவே, இச்சட்டத்தின்படி, ஆதிக்க சாதியைச் சார்ந்த எவரொருவரும், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிராக நிகழ்த்தும் குற்றங்கள் அனைத்தும் 'வன்கொடுமைக் குற்றங்கள்' என்று விளக்கமளிக்கின்றது. இம்மக்களுக்கு எதிரான 22 வகையான குற்றங்களை வன்கொடுமைக் குற்றங்களாக 1989 ஆம் ஆண்டையச் சட்டம் பட்டியலிட்டு அதற்கான தண்டனையாகக் குறைந்தபட்சம் 6 மாதம் முதல் ஆயுள் தண்டனை வரை நிர்ணயித்தது.*

### 3.4. கடமை தவறும் அரசு அதிகாரிக்கும் தண்டனை.

*எந்தவொரு அரசு அதிகாரியாவது இச்சட்டத்தில் சொல்லப்பட்ட கடமைகளைச் செய்யத் தவறினால் அவருக்கு 6 மாதத்தில் இருந்து ஒரு வருடம் வரை மெய்க்காவல் தண்டனை என்று நிர்ணயம் செய்தது.*

### 3.5. சிறப்பு நீதிமன்றம், சிறப்பு அரசுதரப்பு வழக்கறிஞர், சிறப்பு புலனாய்வு அதிகாரி.

*இக்குற்றங்களை விரைந்து விசாரித்து நீதி வழங்குவதற்காக சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கவும், அந்த நீதிமன்றங்களில் இந்த*

*வன்கொடுமை குற்ற வழக்குகளைத் தொய்வின்றி நடத்த சிறப்பு அரசுத்துறை வழக்கறிஞர்களை நியமிக்கவும் வகை செய்கிறது. இச்சட்டம் தொடர்பான வன்கொடுமை குற்றங்களை மாவட்ட காவல்துறை துணைக்கண்காணிப்பாளருக்கு குறையாத தகுதிபெற்ற அதிகாரி மட்டுமே புலன் விசாரணை செய்ய முடியும் என்றும் இச்சட்டம் செய்கிறது.*

### 3.6. சொத்துப் பறிமுதல், கூட்டு அபராதம் மற்றும் ஆயுத உரிமம்:

*வன்கொடுமைகள் இழைப்போரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது பற்றியும், வன்கொடுமையில் கும்பலாக ஈடுபடுவோர் மீது கூட்டு அபராதம் விதிப்பது பற்றியும், அவர்களை இருப்பிடம் கடத்துவது பற்றியும் இச்சட்டம் விளக்கமாகக் கூறுகிறது. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு அவர்களின் தற்காப்புக்காக ஆயுத உரிமமம் வழங்குவது பற்றியும், வன்கொடுமைத் தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் தெளிவாகக் கூறுகிறது.*

### 3.7. நிவாரணமும், இழப்பீடும்:

*இச்சட்டத்தின் கீழ் 1995-ல் இயற்றப்பட்ட விதிகள் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றிக் கூறுகிறது. வருவாய் ஈட்டும் குடும்ப உறுப்பினரை வன்கொடுமை நிகழ்வில் இழக்க நேரிட்டால், அவர்தம் குடும்பத்திற்குக் குறைந்தபட்சம் 7.5 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட வேண்டும். கூடுதலாக, அவரைச் சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொரு வருக்கும், மூன்று மாதங்களுக்குள் ரூ. 4500 வீதம் மாத உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் அல்லது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். அதே போல் குடியிருப்புகள் சேதப்படுத்தப்பட்டால், அரசு செலவில் செங்கல்ளால் மற்றும் கருங்கல் வீடுகளை கட்டித் தரப்பட வேண்டும். இதுபோன்ற இன்றும் பல நிவாரணங்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு உறுதி செய்கிறது.*

### 3.8. முன் ஜாமீன் கிடையாது:-

*இச்சட்டத்தின் கீழ் குற்றங்கள் புரிந்தோருக்கு மற்ற பிற சட்டங்களுக்குப் பொருந்தக் கூடிய குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 438 பொருந்தாது. எனவே மற்ற குற்றங்களுக்கு 'முன் ஜாமீன்' வழங்குவதைப் போல வன்கொடுமை குற்றம் இழைத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு 'முன்ஜாமீன்' வழங்குவதை இச்சிறப்புச் சட்டம் அனுமதிப்பதில்லை.*

## 3.9. 1989 ஆம் ஆண்டு சிறப்புச் சட்டத்தின் நோக்கங்கள்.

1. பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்தி அவர்களின் உயிரையும், உடைமைகளையும், மாண்பையும் பாதுகாப்பது.
2. வன்கொடுமைகள் புரிவோரைக் கடுமையாகத் தண்டிப்பது, அதற்கான சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தி, சிறப்பு அரசு குற்றவியல் வழக்கறிஞர்களை நியமித்து விரைவாக நீதி வழங்குவது.
3. வன்கொடுமைகளுக்கு உள்ளானோருக்கு இழப்பீடு, நிவாரணம், அரசு வேலை போன்றவற்றை உறுதிசெய்து வழங்குவதோடு அவர்கள் அச்சமின்றி வாழ வழிவகை செய்வது.

## 4. 1989 ஆம் சட்ட செயல்பாட்டில் ஏற்பட்ட தோய்வு

இந்தச் சட்டம் முழுமையான அளவிற்கு நடைமுறையாக்கம் பெறாததற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான காரணம் காவல்துறையும், நிர்வாகத்துறையும், நீதித்துறையும் இச்சட்டத்தைப் பொறுப்புடன் அணுகாத நிலையே, சட்ட அமலாக்கத்தில் நெருங்கிய தொடர்புடைய இந்த மூன்று முக்கியத் துறைகளிலும், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்புடைய உயர் அதிகாரிகளிலிருந்து கடைநிலை ஊழியர்கள் வரை இந்தச் சட்டத்தை பெரும்பாலும் சாதீய மனநிலையோடு அணுகுவதே முக்கிய காரணமாக இருக்கிறது. அவற்றிலும் முக்கியமான பங்கு நீதித்துறையுடையது என்று சொல்லலாம். இந்திய நீதிமன்றங்கள் கடந்த 27 ஆண்டுகளாகப் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமை வழக்குகளைக் கையாண்ட விதத்தைப் பார்க்கும்போது, கடைநிலை நீதிமன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை இன்றளவும் சாதீய மனநிலையோடுதான் இந்த வழக்குகளை அணுகுகின்றன என்பது நன்கு புலப்படுகின்றது. இதனாலேயே பல்லாயிரக்கணக்கான வன்கொடுமை வழங்குகளில் நியாயமான தீர்ப்புகள் கிடைக்காமல் போகிறது.

## 4.1. வழக்குகளை நீர்த்து போக செய்யும் காவல் துறை:-

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும், அன்றாடம் ஆயிரக்கணக்கான வன்கொடுமை நிகழ்வுகள் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படுகின்றன. வன்கொடுமை நிகழ்வுகளுக்குப், பின் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையங்களுக்குச்

*சென்று புகார் கொடுக்கக்கூட பயப்படுகிறார்கள். வெகு சில நிகழ்வுகளே காவல்நிலையத்திற்கு புகாராகக் கொண்டுவரப் படுகின்றன. ஆனால், அப்படி வருகின்ற ஒரு சில புகார்களையும் பெரும்பாலும் காவல்துறையினர் பதிவுசெய்ய வெளிப்படையாகவே மறுக்கின்றனர். நாட்டில் நடைபெறுகின்ற 80 சதவீதம் வன்கொடுமை வழக்குகள் காவல்நிலையங்களுக்கே வருவதில்லை. ஒருவேளை காவல்துறையினர் அந்தப் புகார்களைப் பதிவு செய்தாலும், அவற்றை சரியான சட்டப்பிரிவுகளில் பதிவு செய்யதில்லை. பல நேரங்களில் புகார்களை உடனடியாகப் பதிவு செய்யாமல் காலதாமதம் செய்து வழக்கை வீணடிக்கின்றனர். பெரும்பாலும், குற்றம் சுமத்தப்படுவோரிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டோ, சாதிப்பாசத்தாலோ அல்லது அறியாமையினாலோ குற்றவாளிகளைத் தப்புவிக்கின்ற வகையிலேயே புகாரானது மிகவும் மென்மையாகப் பதிவு செய்யப்படுகிறது. காவல்துறையினரை எட்டுகின்ற புகார்கள் மிக மிகச் சொற்பமானவையே. புகார்களைப் பதிவுசெய்ய மறுக்கும் காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க இச்சட்டம் வழிவகுத்துள்ள போதிலும், இதுவரை எந்த அதிகாரி மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.*

## 4.2. புலன் விசாரணை:-

*பதிவுசெய்யப்பட்ட வன்கொடுமை வழக்கு விசாரணையை மாவட்டக் காவல்துறைத் துணைக்கண் காணிப்பாளருக்குக் குறையாத தகுதியுள்ள காவல்துறை அதிகாரிதான் விசாரிக்க வேண்டும் என்பது சட்டத்தின் விதி 7(1)இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆனால், பெரும்பாலும், காவல்துறை துணைக்கண்காணிப் பாளர்கள் இந்த வழக்குகளை நேரடியாக விசாரிப்பது கிடையாது. இந்தக் காரணத்திற்காகவே பல ஆயிரம் வன்கொடுமை வழக்குகள் விசாரணை நீதிமன்றங் களாலும், உயர்நீதிமன்றங்களாலும், "சட்ட நடைமுறை சரியாகப் பின்பற்றப்படவில்லை" என்று சொல்லித் தள்ளுபடி செய்யப்படுகின்றன. இப்படி சட்டநடை முறையைச் சரியாகப் பின்பற்றாத அதிகாரிகள் யாரும் இதுவரை எந்த நீதிமன்றத்தாலும் தண்டிக்கப்படவில்லை. எனவே இத்தகைய தவறுகள் மிகவும் தாராளமான நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.*

*ஒருவேளை அவற்றைக் காவல்துறை துணைக்காணிப் பாளரே விசாரித்தாலும், இந்தச் சட்டத்தின் அடிப்படையில் பின்பற்ற வேண்டிய மற்றபிற நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி வழக்குகளை விசாரிப்பது கிடையாது.*

### 4.3. விரைந்து விசாரித்து நீதி வழங்குவது என்பது வெறும் ஏட்டளவில்தான்.

*சட்டத்தின் விதி 7(2)-இன் படி, வன்கொடுமை வழக்குகளை விசாரிக்க வேண்டி நியமிக்கப்படும் மாவட்டக் காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் வன்கொடுமை வழக்குக்கு முன்னுரிமை கொடுத்து 30 நாட்களில் வழக்கு விசாரணையை முடித்து அறிக்கை அளிக்க வேண்டும். ஆனால், பெரும்பாலும், விசாரணை அதிகாரிகள் அப்படிச்செய்வதில்லை. பல ஆண்டுகளாக விசாரணை முடியாமல் நிலுவையில் இருக்கும் வழக்குகள் பல ஆயிரம் உண்டு. இவ்வாறு காவல் துறையினர் வன்கொடுமை வழக்குகளைப் பொறுத்தவரை இச்சட்டத்தில் சொல்லப்பட்ட முக்கியமான கூறுகளைப் பின்பற்றாமல் வழக்கை வீணடிக்கின்றார்கள்.*

*புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வன்கொடுமை வழக்குகளில், இந்தியாவைப் பொறுத்தவரை 28 சதவீத வழக்குகளும், தமிழகத்தில் 30 சதவீத வழக்குகளும் புலன் விசாரணையில், 'உண்மைக்குப் புறம்பான வழக்குகள்' என்று நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்படுகின்றது. புலன் விசாரணை நடைபெற்று வரும்போதே ஏராளமான வன்கொடுமை வழக்குகளில், சமரசம் செய்து கொள்ள வற்புறுத்துதல், மிரட்டிப் பணிய வைத்தல், சாட்சிகளை விலைக்கு வாங்குதல் போன்றவற்றால் பல வழக்குகள் நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் முடிக்கப்படுகின்றன. இத்தகைய நடைமுறைகள் இந்தச் சிறப்புச் சட்டத்திற்கு முற்றிலும் புறம்பானவைகளாகும்.*

### 4.4. சிறப்பு நீதிமன்றங்களும், உயர்நீதிமன்றங்களும்.

*இந்தச் சிறப்புச் சட்டம் வன்கொடுமை வழக்குகளை நடத்துவதற்கென்று சிறப்பு நீதிமன்றங்களை அந்தந்த மாநில அரசுகள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுடன் கலந்துபேசி ஏற்படுத்த வகை செய்திருந்தது. ஆனால், ஒட்டுமொத்த இந்தியாவில் இரண்டு மாநிலங்களைத் தவிர வேறு எந்த மாநிலமும் வன்கொடுமை வழக்குகளை நடதததுவதற்கென்று சிறப்பு நீதிமன்றங்களை அமைக்கவில்லை. இந்தச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்படும் வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள் மற்ற சாதியைச் சார்ந்தவர்களாக இருக்கும்போது அவர்களின் அணுகுமுறை ஒருவிதமாகவும், பட்டியல் சாதியைச் சார்ந்தவர்களாக இருக்கும்போது வேறுவிதமாகவும் இருக்கிறது. இரண்டு நிலையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு*

நீதி கிடைப்பதில்லை. இவ்வழக்குகளை விசாரிக்கும் ஆதிக்கச்சாதியைச் சார்ந்த நீதிபதிகள் பெரும்பாலும், இந்தச் சட்டத்தின் உன்னதமான நோக்கத்தைப் புரிந்துகொள்ளவும், இச்சட்டம் முன்னிறுத்தும் பல சிறப்பு ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை. சாதீய சமூகத்தில் சாதீய மனநிலையோடு வளர்ந்திருக்கும் நீதிபதிகளுக்கு இச்சட்டத்தை ஏற்றுக்கொள்வது மிகவும் கடினமாக இருக்கிறது.

இவ்வழக்குகளை விசாரிக்கும் பட்டியல் சாதிகளைச் சார்ந்த நீதிபதிகளோ தங்களை மற்றவர்கள் அந்த வழக்குகளோடு அடையாளப்படுத்தி விடுவார்களோ என்ற மனநிலையில் சட்டத்தின் அடிப்படையில் கொடுக்க வேண்டிய எல்லாப் பரிகாரங்களையும் உள்ளடக்கி துணிச்சலுடன் நீதி வழங்கப் பெரிதும் தயங்குகிறார்கள். அல்லது 'இது யாருடை வழக்கோ நமக்கென்ன' என்று பொறுப்பின்றி ஏனோதானோ வென்று வழக்குகளை நடத்தி வீணடிக்கிறார்கள்.

அண்மையில், சென்னை உயர்நீதிமன்றம் உள்பட பல மாநில உயர்நீதிமன்றங்கள், வன்கொடுமை வழக்குகளைப் புலனாய்வு செய்யும் விசாராணை அதிகாரிகள், மாவட்ட காவல்துறை துணைக்கண்காணிப் பாளர்களாக இருந்தபோதிலும், அவர்கள் இச்சட்டத்தின் விதி 7(1)-இல் சொல்லப்பட்டுள்ளவாறு மாநில அரசாலோ, மாநில காவல்துறைத் தலைவராலோ அல்லது மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளராலோ, "குறிப்பிட்டுச் சொல்லி நியமிக்கப்படவில்லை" என்று சொல்லிப் பல வழக்குகளில் குற்றவாளிகளை விடுவித்துள்ளன. இஃது இந்த சட்டத்தையே நிர்மூலமாக்குகின்ற செயலே அன்றி வேறல்ல. கூடுதலாக, இந்தப்போக்கு நீதிபதிகளின் சாதீய மனநிலையை அப்படியே பிரதிபலிப்பதாக இருக்கிறது. அவர்களும், இச்சமூகத்தின் சாதீய மனநிலையோடு ஒத்துக்போகிறவர்களாகவே இருந்து இப்படிபட்ட முடிவை எடுத்துள்ளனர். இப்படிப்பட்ட வழக்குகளில், நீதிபதிகளில் மேலோங்கியிருக்கின்ற எண்ணம் எந்த வழியிலாவது குற்றம் சுமத்தப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்பதுதானே ஒழிய பாதிக்கப்பட்டவர் களுக்கு நீதி கிடைக்கச் செய்யவேண்டும் என்பதல்ல. இத்தகைய வழக்குகளில் ஒரு நீதிபதி கொடுக்கின்ற தீர்ப்பை ஏனைய நீதிபதிகளும் கண்களை மூடிக்கொண்டு அப்படியே பின்பற்றுகிறார்களேயன்றி சட்ட நடைமுறையிலிருக்கும் அந்தத் தவறைத் திருத்துவதற்கு எவ்வித உத்தரவையும் அவர்கள் பிறப்பிக்காதது அவர்களின் சாதீய மனநிலையையே உறுதிப்படுத்துவதாகப் பலரும் கருதுகிறார்கள்.

## 4.5. அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள்:-

*அதேபோல்தான் வன்கொடுமைக் குற்றங்களை நிருபிக்க வேண்டி நியமிக்கப்பட்ட சிறப்பு அரசுத்தரப்பு வழக்கறிஞர்களும் இருக்கிறார்கள். தமிழகத்தில் பெரும்பாலும் சிறப்பு நீதிமன்றங்களில் இந்த வழக்குகளை ஏற்று நடத்துவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும், அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் பட்டியல் இனத்தைச் சார்ந்தவர் களாகவே இருக்கின்றார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டவர் களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்குத் துரோகம் இழைக்காமல், நேர்மையாகவும், சிறப்புடனும் வழக்கை நடத்தி நீதியைப் பெற்றுத் தருவார்கள் என்ற புரிதலில் அவ்வாறு அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான சிறப்பு நீதிமன்றங்களில் இந்தத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த அரசு தரப்பு வழக்கறிஞர்கள் நடத்திய வன்கொடுமை வழக்குகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமான வழக்குகளில் பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. 90 சதவீத வழக்குகளில் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியர் இந்த வழக்கறிஞர்களின் செயல் பாடுகளை ஆண்டுக்கு 2 முறை, ஆய்வுசெய்து, சரியாகச் செயல்படாத அரசுத்தரப்பு வழக்கறிஞர்களை நீக்கிவிட்டு சிறப்பாக செயல்படும் வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டும். ஆனால், இந்த நடைமுறை எந்த மாவட்டத்திலும் பின்பற்றப்படுவதில்லை.*

## 4.6.நிர்வாகத்துறையில் சொரனையின்மையும், பெருகிவரும் வன்கொடுமைகளும்.

*வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் மற்றும் அதன் விதிகளின்படி பாதிக்கப்பட்ட பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த மக்களுக்கு முழுப்பாதுகாப்பு அளிப்பதற்கும், தொடர்ந்து வன்கொடுமை புரிவோரை இனங்கண்டு அப்பகுதிகளிலிருந்து வெளியேற்றுவதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுத்திட மாவட்ட நிர்வாகத்திற்கும், மாவட்ட காவல்துறைக்கும் அதிகாரம் உள்ளது. ஆனால், இதுவரை நடைமுறையில் அதுபோன்ற நடவடிக்கைகள் எதையும் மாவட்ட நிர்வாகங்களோ, காவல்துறையோ உளப்பூர்வமாக நாட்டின் எந்தப் பகுதியிலும், எடுத்ததாகத் தெரியவில்லை.*

*ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வன்கொடுமைகள் நிகழக்கூடும் என்று சந்தேகம் இருக்கும் பகுதிகளில் கண்காணிப்பைக் கூடுதலாக்கி வன்கொடுமைகள் நிகழாமல் தடுக்க இந்தச் சட்டம் மாவட்ட*

நிர்வாகத்திற்கு மிகப்பெரும் பொறுப்பைக் கொடுத்துள்ளது. ஆனால், இதை மாநில அரசுகளும், மாவட்ட நிர்வாகமும் கடைப்பிடிக்கவில்லை. பல நேரங்களில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடும் என்று கருதுவோர் பலரும் மாவட்ட நிர்வாகத்திடம் புகார் அளித்திருந்தும் கூட, மாவட்ட நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுவே பல ஆயிரம் வன்கொடுமை நிகழ்வுகளுக்கு காரணமாயுள்ளது. இந்தச் சட்டத்தின்படி, எந்தவொரு வன்கொடுமை நிகழ்வுக்கும் மாவட்ட நிர்வாகம்தான் முழுப்பொறுப்பாகும். அண்மையில், சாதிமறுப்பு திருணம் செய்துகொண்ட பல தம்பதிகள் மாவட்ட நிர்வாகத்தை அணுகிப் பாதுகாப்பு கோரும்போது, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்குப் பதிலாக, அதிகாரிகள் பலரும் சாதித்துவேசத்துடன் தங்களை மிரட்டுவதாகப் பல தம்பதிகள் வெளிப்படுத்தி யுள்ளனர். அதேபோல், ஆதிக்கச்சாதியினர் தங்களைத் தாக்கக்கூடும் என்று மாவட்ட நிர்வாகத்தைத் பாதிக்கப் பட்டோர் அணுகியபோதும் மாவட்ட நிர்வாகம் அதுபற்றி அக்கறையில்லாமல் இருந்ததால், பல கும்பல் வன்கொடுமைகளுக்கு பட்டியல் இன மக்கள் நாட்டின் பல பகுதிகளில் ஆளாகியிருக்கிறனர். இந்நிலையில் இடதுசாரிகள், தலித் அமைப்புகள் **NGO**க்கள் எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக்கூட மாவட்ட நிர்வாகம் எடுப்பதில்லை.

### 4.7.ஆணவக்கொலை:-

அரியானா மாவட்டத்தில் பெருகிவரும் ஆணவக் கொலைகள் மிகவும் கவலையளிபப்தாக இருந்து வருகின்றன. இந்தச்சூழலில் (Civil Writ Petition No. 26734 of 2014) Manmeet Singh vs State of Haryana) என்ற வழக்கில் கடந்த 23.02.2015 அன்று பஞ் சாப் அரியானா உயர்நீதிமன்றம் ஆணவக்கொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டி மாநில அரசுக்கும் காவல்துறைக்கும் பல வழிகாட்டும் நெறிமுறைகளை வகுத்திருந்தது. அதையே அடிப்படையாகக் கொண்டு சென்னை உயர்நீதிமன்றமும் தமிழக அரசுக்கும் தமிழகக் காவல்துறைக்கும் கடந்த 13.04.2016 அன்று ஆணவக்கொலை தொடர்பான ஒரு வழக்கில் மிக முக்கியமான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. ஆணவக் கொலை ஒன்றைத் தடுக்கத் தவறிய பல்வேறு காவல்நிலையங்களைச் சார்ந்த 2 காவல்துறை ஆய்வாளர்கள் மற்றும் 2 காவல்துறை சார்பு ஆய்வாளர்கள் மீது கிரிமினல் மற்றும் துறைரீதியான நடவடிக்கை எடுக்க தமிழக காவல்துறைத் தலைவருக்கு உத்தரவிட்டுள்ளது. அந்த வழக்கில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் பின்வருமாறு.

**i)** *தமிழக முழுவதும் சாதி மறுப்பு திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளைப் பாதிகாப்பதற்கு எல்லா மாவட்டங்களிலும், சிறப்பு பிரிவு ஒன்றை அரசு 3 மாதங்களுக்குள் ஏற்படுத்த வேண்டும்.*

**ii)** *அந்த சிறப்புப் பிரிவில் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர், சமூகநலத்துறை மற்றும் ஆதிதிராவிட நலத்துறை அதிகாரிகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.*

**iii)** *இந்த சிறப்புப் பிரிவு 24 மணி நேரமும் இயங்கும் வகையில் தனி அவசர உதவி எண் ஏற்படுத்தி புகார்களை உடனுக்குடன் பதவு செய்ய வேண்டும். தேவைப்படும் தம்பதிகளுக்கு உடனடி உதவிகளையும் ஆலோசனைகளையும் வழக்க வேண்டும்.*

**iv)** *அவசர உதவி எண் வழியாகப் பெறப்படும் புகார்கள் அனைத்தும் உடனடியாக பதிவு செய்வதை தொடர்புடைய காவல்நிலையங்கள் உறுதிசெய்ய வேண்டும்.*

**v)** *இந்த சிறப்புப் பிரிவு அனைத்துக் காவல்நிலையங் களுடனும் இணைக்கின்ற வகையில் "சிசிடிஎன்எஸ் - நெட்வொர்க்கிங் சிஸ்டம்" ஏற்படுத்த வேண்டும்.*

**vi)** *இந்த சிறப்புப் பிரிவு சரியாக இயங்குகிறதா என்பதை கண்காணித்து சரிவர செயல்படாத காவல்துறையினர் மீது உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

**vii)** *இந்த சிறப்புப் பிரிவு சிறப்பாக செயல்பட தமிழக அரசு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்த நிதி ஒதுக்கீடு சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு தற்காலிக இருப்பிடம், அவர்களின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஏறபடுத்திக் கொடுப்பதற்கு செலவிடப்பட வேண்டும்.*

**viii)** *சாதி மறுப்பு திருணம் செய்து கொள்ளும் தம்பதிகளை பாதுகாக்கின்ற முழுப் பொறுப்பும் அவர்கள் பாதுகாப்புக்காக எந்தக் காவல்நிலையத்திற்கு வருகிறார்களோ அந்தக் காவல்துறை அதிகாரிகளைச் சாரும். எனவே காவல்துறை அதிகாரிகள் ஒருபோதும் சாதி மறுப்பு திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளைப் பிரித்து பெற்றோருடன் செல்லச்சொல்லி நேரடியாகவோ, மறைமுகமாகவோ கட்டாயப்படுத்தக்கூடாது.*

**ix)** *அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதினால், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தற்காலிக குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.*

**x)** *தேவையேற்பட்டால் தம்பதிகளின் பெற்றோர்களை வரவழைத்து தேவையான ஆலோசனைகள் வழங்கி அவர்கள் இந்தத் தம்பதிகளை ஏற்றுக் கொள்வதற்கு துணை நிற்கலாம்.* (The Hindu, 14.04.2016, *பக்-1)*

***

## 5. 2015-ஆம் ஆண்டையத் திருத்தச்சட்டத்தின் சிறப்பம்சங்கள்

*மேற்சொன்ன 1989-ஆம் ஆண்டைய சட்டத்தின் சிறப்பம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதோடு, அவற்றை இன்னும் இந்தத் திருத்தச் சட்டம் கூர்மைப்படுத்தியிருக்கிறது. குறிப்பாக,*

1. *முந்தைய சட்டத்தின் தெளிவில்லாமல் இருந்த சொல்லாடல்கள் பலவற்றை வரையறை செய்துள்ளது.*
2. *ஏற்கனவே முந்தைய சட்டத்தின் இருந்த சிறப்பு நீதிமன்றங்களோடு தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தி, அவை வன்கொடுமை வழக்குகளை மட்டுமே எடுத்து விரைந்து நடத்துவதற்கு வகை செய்கிறது.*
3. *சிறப்பு நீதிமன்றங்களுக்கும், தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களுக்கும் வன்கொடுமை தொடர்பான குற்றங்களை நேரடியாக நீதிமன்றத்தில் ஏற்று வழக்காக்கி நடத்துவதற்கு அதிகாரம் வழங்குகிறது. முடிந்தவரை இந்த நீதிமன்றங்கள் வன்கொடுமை வழக்குகளை அன்றாடம் நடத்தி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 2 மாதத்திற்குள் நீதி வழங்கியிருக்க வேண்டும்.*
4. *பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் பற்றி மிக விரிவாக இந்தத் திருத்தச்சட்டம் விளக்குகிறது. அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்வதோடு அவர்கள் எவ்வித்திலும் பாதிக்கப் படாமல் இருப்பதற்குத் தேவையான பாதுகாப்பையும், நிவாரணத்தையும் வழங்க வகை செய்கிறது.*
5. *ஒருவரைக் கையால் மலம் அள்ளும் பணி போன்ற இன்னும் பிற அருவருப்பான பணிகளைச் செய்ய நிர்ப்பந்தம் செய்வது. சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளாக்குதல், பொருளாதாரப் புறக்கணிப்புக்கு உள்ளாக்குதல் போன்ற இன்னும் பல நடைமுறைக் குற்றங்கள் அவற்றிற்கெல்லாம் தண்டனை வழங்க வகை செய்துள்ளது.*

6. *உடல்ரீதியான வன்கொடுமைக் குற்றங்கள், உளரீதியான வன்கொடுமைக் குற்றங்கள், நிலம் தொடர்பான வன்கொடுமைக் குற்றங்கள், தொழில் ரீதியான வன்கொடுமைக் குற்றங்கள், சமயம் தொடர்பான வன்கொடுமைக் குற்றங்கள், தேர்தல் தொடர்பான வன்கொடுமைக் குற்றங்கள், பாலியல்ரீதியான வன்கொடுமைக் குற்றங்கள், மாண்புக்கு எதிரான வன்கொடுமைக் குற்றங்கள், சமூகரீதியான வன்கொடுமைக் குற்றங்கள், கல்வி தொடர்பான வன்கொடுமைக் குற்றங்கள், சொத்துக்கள் தொடர்பான வன்கொடுமைக் குற்றங்கள் என்று எல்லாவகையான வன்கொடுமைக் குற்றங்களையும் அடையாளங்கண்டு, வன்கொடுமைக் குற்றங்கள் பட்டியலை விரிவாக்கி அனைத்து வகை வன்கொடுமைக் குற்றங்களுக்கும் தண்டனை வழங்க வகை செய்கிறது.*
7. *பொது அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறும்போதும், கவனக்குறைவின்றி விடும்போதும் அவர்களுக்குத் தண்டனை வழங்க ஏற்பாடு செய்து, எவையெல்லாம் கடமை தவறிய செயல்கள் என்ற விரிவான விளக்கத்தையும் இந்தத் திருத்தச்சட்டம் தெளிவுபடுத்தியுள்ளது.*
8. *காயம் விளைவித்தல், கொடுங்காயம் விளைவித்தல், பயமுறுத்துதல், ஆள் கடத்துதல் போன்ற இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பலவகைக் குற்றங்கள் பட்டியல் சாதியினர் அல்லது பட்டியல் பழங்குடியினருக்கு எதிராக நிகழ்த்தப்படும்போது, இந்தியத் தண்டனைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள தண்டனை என்னவாகயிருந்தாலும், அக்குற்றங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு குறையாத தண்டனை வழங்க வகை செய்கிறது.*

***

## 6. எஸ்.சி,எஸ்.டி மக்களுக்கு எதிரான (வன்கொடுமைகள் தடுப்பு) திருத்தச் சட்டம், 2015.

### அத்தியாயம் 1 தொடக்கமாக

**பிரிவு 1(1)** *இந்தச் சட்டம் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கெதிரான வன்கொடுமைகள் தடுப்புத் திருத்தச் சட்டம் 2015 என்று அறியப்படும்.*

*(2) இந்தச் சட்டம் 26.01.2016-ஆம் தேதியிலிருந்து நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ளது.*

**முக்கியமான திருத்தங்கள்:-**

*முதன்மைச் சட்டத்தில் உள்ள "சிறப்பு நீதிமன்றங்கள்" என்பதற்குப் பதிலாக இனிமேல் "சிறப்பு நீதிமன்றங்கள்" மற்றும் "தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள்" என்பது பயன்படுத்தப்படும். இனிமேல் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள் வன்கொடுமை வழக்குகளை மட்டுமே விசாரிக்கும் நீதிமன்றங்களாக அமைக்கப் படுகின்றன. எனவே இந்தத் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களில் வேறு வழக்குகள் நடத்தப்பட்டமாட்டாது.*

*முதன்மைச் சட்டத்தின் பிரிவு 2(1)-இல் வரையறை செய்யப்பட்ட முக்கியமான சொல்லாடல்களோடு இந்தத் திருத்தச்சட்டத்தில் கூடுதலாகச் சில சொல்லாடல்கள் புரிந்துகொள்வதற்கு எளிமையான முறையில் சட்டரீதியாக வரையறை செய்யப்பட்டுள்ளன. முதன்மைச் சட்டத்தில், அதன் பிரிவு 2(1)-இல் வரையறுக்கப்பட்டவற்றோடு திருத்தச்சட்டத்தில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும் இங்கு இணைத்து கொடுக்கப்படுகின்றன.*

*பிரிவு 2(1)* (a) *'வன்கொடுமை' என்பது வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ்த் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களைக் குறிப்பதாகும்.*

(b) 'Code' *என்பது குற்றவியல் நடைமுறைச்சட்டம், 1973 யைக் குறிப்பதாகும்.*

(bb) *'சார்ந்திருப்பவர்' : சார்ந்திருப்பவர் என்ற சொல் உண்மையில் யாரைக் குறிக்கும் என்பது இந்தத் திருத்தச்சட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடை கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள், சகோதர - சகோதரிகள் போன்றவர்களில் யாரெல்லாம் அப்படி பாதிக்கப்பட்டவரைத் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காகச் சார்ந்திருக்கிறார்களோ அவர்கள் அனைவரையும் குறிக்கும்.*

(bc) **பொருளாதார ரீதியாகப் புறக்கணிப்பு:-**

**i)** *தொழில் உறவு கொள்வதற்கும், வாடகைக்கு வேலை செய்வதற்கும் அல்லது சேர்ந்து தொழில் செய்வதற்கும் மறுப்பதும் அல்லது.*

**ii)** *சேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்புக் களையும், நல்ல பலனுக்காக சேவை செய்வதற்கு ஒப்பந்தங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்களையும் பெறுவதற்கு மறுப்பதும் அல்லது.*

iii) *பொதுவாகத் தொழில் உறவுகளில் எல்லோருக்கும் உரியவற்றை செய்வதற்கு மறுப்பதும் அல்லது*

iv) *ஒருவர் மற்றவர்களோடு தொழில்ரீதியாகக் கொள்ளும் உறவுகளிலும், தொழிலிலும் பங்கேற்காமல் புறக்கணிப்பது போன்றவையாவும், பொருளாதாரரீதியாகப் புறக்கணிக்கின்ற செயல்களாகும்.*

(bd) *தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள்: வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ்ப் பதியப்படும் வழக்குகளை மட்டுமே ஏற்று நடத்துவதற்காக இச்சட்டத்தின் பிரிவு 14(1)-இன் அடிப்படையில் நிறுவப்படும் நீதிமன்றங்கள் ஆகும்.*

(be) *வன உரிமைகள்: 2006-ஆம் ஆண்டைய பழங்குடியினர் மற்றும் இதர வனவாசிகள் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டத்தின் பிரிவு 3(1)-இன் அடிப்படையில் வனவாசிகளின் உரிமைகளைக் குறிக்கும்.*

(bf) *கையால் மலம் அள்ளுபவர்: கையால் மலம் அள்ளும் தொழிலுக்குத் தடை மற்றும் மறுவாழ்வுச் சட்டம், 2013-இன் பிரிவு 2(1)-இல் சொல்லப்பட்டுள்ள வரையறையைக் குறிக்கும்.*

(bg) *பொது அதிகாரி : இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 21-இல் சொல்லப்பட்டுள்ள அரசு அதிகாரிகளைக் குறிக்கும், மேலும், மத்திய மாநில அரசுகள் அப்போதைக்கப்போது அரசாணை வழியாக நியமிக்கும் அதிகாரிகளையும், அவர்கள் சார்பாகச் செயல்படும் ஏனைய அதிகாரிகளையும் குறிக்கும்.*

(c) *'பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்': என்பதன் பொருள், அரசியலமைப்புச் சட்டத்தின் 366 ஆவது உறுபில், அதன் பகுதிகள் 24 மற்றும் 25-இல் விளக்கப்பட்டுள்ள பொருளையே இங்கும் குறிக்கும்.*

(d) *"சிறப்பு நீதிமன்றம்": என்பது இச்சட்டத்தின் பிரிவு 14-இல் சுட்டிக்காட்டப்பட்டதன் அடிப்படையில் குறிக்கப்படும் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தைக் குறிக்கும்.*

(e) *"சிறப்பு அரசுத் தரப்புக் குற்றவியல் வழக்கறிஞர்" என்பது இச்சட்டத்தின் பிரிவு 15-இல் சுட்டிக்காட்டப் பட்டதன் அடிப்படையில் அரசால் நியமிக்கப்படும் அரசுக் குற்றவியல் வழக்கறிஞர் அல்லது அரசால் தனிப்பட்ட விதத்தில் நியமிக்கப்படும் வழக்கறிஞர் ஒருவரை குறிக்கும்.*

(ea) *பட்டியல் : என்பது இந்தச் சட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ள பட்டியலைக் குறிக்கும்.*

**(eb)** *சமூகப் புறக்கணிப்பு: சமூகத்தில் அனைவருக்கும் உள்ள பொதுவான சேவைகளைப் பெறுகின்ற உரிமைகளைக் குறிப்பிட்ட தரப்பினருக்கு மறுப்பதும், அதைச் செய்ய வருவோரைத் தடுப்பதும், சமூகத்தில் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய பொதுவான நன்மைகளை அடைவதற்குக் குறிப்பிட்ட இனத்தவருக்கு தடைகளை ஏற்படுத்துவதும் சமூகப் புறக்கணிப்பாகும்.*

**(ec)** *பாதிக்கப்பட்டவர் : இச்சட்டம் பிரிவு* **2(1)(c)** *-இல் சொல்லப்பட்டவாறு பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவருக்கு உடல்ரீதியான அல்லது மனரீதியான அல்லது உளவியல்ரீதியான அல்லது உணர்ச்சிப்பூர்வமான அல்லது அவருடைய பணத்திற்கோ அல்லது சொத்திற்கோ வன்கொடுமையின் காரணமாகப் பாதிப்பு ஏற்பட்டிருப்பின் அந்தப் பாதிப்பு ஏற்பட்டிருப்பவரையும், அவரைச் சார்ந்திருக்கின்ற அனைவரையும் குறிக்கும்.*

**(ed)** *சாட்சி: ஒரு வன்கொடுமை குற்ற நிகழ்வு தொடர்பான விவரங்கள், தரவுகள் போன்றவற்றை அறிந்திருப்பவரும், அல்லது வேறு ஏதாவது தகவல்களை அது தொடர்பாக வைத்திருப்பவரும், அல்லது புலன் விசாரணை, விசாரிப்பு, வாக்கு விசாரணை போன்ற வற்றிற்கு உதவக்கூடிய எந்தவொரு விஷயத்தையும் அறிந்திருப்பவரும் சாட்சியாகக் கருதப்படுவார். மேலும், இச்சட்டத்தின்படி, யாரெல்லாம் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்கவோ, ஆவணங்கள் தாக்கல் செய்து சான்றளிக்கும் நிலையிலுள்ளவர்களோ அவர்கள் அனைவரும் சாட்சிகள் என்று கருதப்படுவர்.*

**(f)** *இன்னபிற வார்த்தைகள் மற்றும் வெளிப்பாடுகள், இந்தச் சட்டத்தில் வரையறை செய்யப்படாமல், ஏற்கனவே உள்ள இந்திய தண்டனைச் சட்டம், அல்லது இந்தியச் சாட்சியச் சட்டம் 1872 மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 போன்றவற்றால் வரையறை செய்யப்பட்டிருப்பின் அந்த வரையறைகளே இன்னபிற வார்த்தைகள் மற்றும் வெளிப்பாடுகளுக்கும் பொருந்துவதாகும்.*

## அத்தியாயம் - II

### வன்கொடுமைக் குற்றங்கள்:-

*பிரிவு 3(1) முதன்மைச் சட்டத்தின் பிரிவு 3(1) லும் அவற்றின் உட்பிரிவுகளிலும் பட்டியலிடப்பட்டுள்ள 22 வன்கொடுமைக் குற்றங்களுக்குப் பதிலாகக் கீழ்வருவன திருத்தப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. (ஏற்கனவே பட்டியலிடப்பட்ட 22 வன்கொடுமைக் குற்றங்கள் மறுபார்வை செய்யப்பட்டுக் கூர்மைப்படுத்தப்பட்டிருப் பதோடு, அவற்றில் விடுபட்ட இன்னும் பல வன்கொடுமைக் குற்றங்களை உள்ளடக்கியதாக இந்தச் சட்டம் திருத்தியமைப்பட்டுள்ளது) அவை பின்வருமாறு.*

*பிரிவு 3(1) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தை சாராத ஒருவர்.*

(a) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரை உண்ணத்தகாத அல்லது அருவருப்பான, துர்நாற்றம் வீசும் எந்தவொரு பொருளையும் உண்ணுமாறோ அல்லது குடிக்குமாறோ கட்டாயப்படுத்துவது.*

(b) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரை ஒருவரின் இடத்திலோ அல்லது அவர் பயன்பாட்டில் உள்ள இடத்திலோ அல்லது அந்த இடத்தின் நுழைவாயிலிலோ மனித மலம் அல்லது கழிவுப்பொருட்கள் அல்லது செத்த விலங்குகளின் உடல் அல்லது அருவருப்பான எந்தவொரு பொருளையும் கொட்டுவது.*

(c) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரின் பயன்பாட்டில் உள்ள இடத்திற்கு அருகாமையில் அவரை இழிவுபடுத்தும் நோக்கிலோ அல்லது அவரை வெறுப்புறச் செய்யும் எண்ணத்திலோ மனித மலம் அல்லது கழிவுப்பொருட்கள் அல்லது செத்த விலங்குகளின் உடல் அல்லது அருவருப்பான எந்தவொரு பொருளையும் கொட்டுவது.*

(d) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவருக்குச் செருப்பு மாலை அணிவித்தல் அல்லது அவருடைய உடம்பிலிருந்து உடைகளை முழுமையாகவோ அல்லது அரைகுறையாகவோ கழற்றிவிட்டு ஊர்வலமாக இழுத்துச் செல்வது.*

(e) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரை அவருடைய மாண்புக்கு இழுக்கு*

உண்டாக்கும் எண்ணத்தில், கட்டாயப்படுத்தி உடைகளைக் களையச் செய்வது, அல்லது மொட்டையடிப்பது, மீசையை மழிப்பது, முகத்திலோ உடம்பிலோ சாயங்களைப் பூசுவது.

(f) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவருக்குச் சொந்தமான அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்டதாகத் தருதிறமுடைய அதிகார அமைப்பால் அறிவிக்கப்பட்ட அல்லது அவருடைய பயன்பாட்டில் உள்ள நிலத்தை சட்ட முரணாக கையுடமை ஆக்குவது அல்லது பயிரிடுவது.

(g) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவருக்குச் சொந்தமான நிலத்திலிருந்து அவரை வெளியேற்றினாலோ, அவருடைய அனுபவ உரிமையில் அது வன உரிமையாக இருந்தாலும் தலையீடு செய்தாலோ, அதில் உள்ள நீர் ஆதாரங்களை சேதப்படுத்தினாலோ, பாசன வசதிகளை அழித்தாலோ பயிர்களை அழித்தாலோ அல்லது பயிர்களை அபகரித்தாலோ.

பிரிவு **(f)**-இல் சொல்லப்பட்ட தவறான முறையில் என்பதன் விளக்கம்.

(A) அந்த நபரின் விருப்பத்திற்கு மாறாக.

(B) அந்த நபரின் ஒப்புதல் இன்றி

(C) அந்த நபரின் ஒப்புதலை, அவரைக் கொன்றுவிடுவதாக மிரட்டியோ, காயப்படுத்து வதாக அச்சுறுத்தியோ சட்டப்புறம்பான முறையில் கையுடமை கொள்வது.

(d) ஆவணங்களைப் பொய்யாகத் தயார் செய்து தனக்கு மாற்றம் செய்து கொள்வது என்பதாகப் பொருள்படும்.

(h) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரை கட்டாயப்படுத்தி வேலை செய்ய வைப்பது அல்லது கொத்தடிமையாக நடத்துவது அல்லது கவர்ந்திழுத்துப் பிச்சையெடுக்க வைப்பது, அரசாங்கம் பொது நோக்கங்களுக்காகச் சில கட்டாயப் பணிகளுக்கு ஈடுபடுத்தும்போது இந்த வரையறை பொருந்தாது.

(i) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரைக் கட்டாயப் படுத்தி இறந்த மனித உடல், செத்த விலங்குகளின் உடல் போன்றவற்றை அகற்றச் செய்தல், குழிதோண்டச் செய்தல், பிணம் எரிக்கச் சொல்லி கட்டாயப்படுத்துவது.

(j) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரைக் கையால் மலம் அள்ளுதல் தொடர்பான வேலையைச்செய்ய வைத்தல் அல்லது அதற்காக வேலைக்கு அமர்த்துதல் அல்லது அப்படி வேலைக்கு அமர்த்துவரை அனுமதிப்பது.

(k) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை ஒரு தெய்வத்துக்கோ, சிலைக்கோ, வழிபடுவதற்குரிய ஒன்றுக்கோ, ஆலயத்திற்கோ அல்லது மதம் சார்ந்த எந்தவொரு நிறுவனத்திற்கோ ஒரு தேவதாசியாக அல்லது அது போன்ற நடைமுறைகளுக்கு அர்ப்பணிப்பதும் அதற்கு அனுமதி வழங்குவதும்.

(l) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரை,

(A) வாக்களிக்க தடுப்பது அல்லது ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்குத்தான் வாக்களிக் வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது.

(B) வேட்பாளராக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்வதைத் தடுப்பது அல்லது வேட்புமனுவை திருப்பிப் பெறச் செய்வது.

(C) அவர் பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவர் என்பதால், எந்தவொரு தேர்தலிலும் அவரை போட்டியிடுவதிலிருந்து தவிர்க்கும் பொருட்டு அவரை முன்மொழியாமலும், வழிமொழியாமலும் விட்டுவிடுவது.

(m) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவர் பஞ்சாயத்துத் தலைவர் அல்லது பிரதிநிதியாகவோ அல்லது நகராட்சி உட்பட்ட உள்ளாட்சியமைப்புகளில் ஒன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி வகிப்பாராயின், அந்தப்பதவியை வகிப்பதிலிருந்தும் தமது கடமைகளைச் செய்வதிலிருந்தும் அவரைத் தடுப்பது.

(n) அப்படிப்பட்ட தேர்தலுக்குப் பிறகு அவருக்குக் காயம் ஏற்படுத்துதல், அல்லது கொடுங்காயம் விளைவித்தல், அல்லது சமூகப் புறக்கணிப்பு அல்லது பொருளாதாரரீதியான புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்போவதாகப் பயமுறுத்துதல் அல்லது அவருக்குரிய பொதுப் பயன்களை அவர் அடைவதிலிருந்து தடுப்பது.

(o) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடி யினத்தைச் சார்ந்த ஒருவர் தனது வாக்கைத் தான் விரும்பியவருக்கு அளித்தற்காகவோ அல்லது சுட்டிக்காட்டப்பட்டவருக்கு அன்றி வேறு நபருக்கு வாக்களித்ததற்காகவோ அல்லது சனநாயக முறைப்படி சட்டம் சொல்லியவாறு வாக்களித்ததற் காகவோ அவருக்கு எதிராக இச்சட்டத்தில் சொல்லப்பட்ட வன்கொடுமைககள் இழைக்கப்படுவது.*

(p) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவருக்கு எதிராகப் பொய்யான, ஆபத்தான, தேவையற்ற வீணான வழக்கு அல்லது பொய்க்குற்றம் சுமத்தித் தேவையற்ற வழக்கைச் சந்திக்க வைப்பது.*

(q) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவருக்கு எதிராக ஓர் அரசு ஊழியரிடம் பொய்யான அல்லது அற்பமான தகவல்களைக் கொடுத்து அதன்பேரில் அவருக்கு ஊறு அல்லது தொல்லை கொடுக்கும் வகையில், அந்த அரசு ஊழியர் தம் சட்ட முறையான அதிகாரத்தைப் பயன்படுத்தி அவருக்கு பாதிப்பை ஏற்படுத்தச் செய்வது.*

(r) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு, அல்லது வேண்டுமென்றே அவரை அவமானப்படுத்துவது அல்லது அச்சுறுத்திப் பொது இடத்தில் வைத்து இழிவுபடுத்தும் செயல்களைச் செய்வது.*

(s) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரைப் பொது இடத்தில் வைத்து அவருடைய சாதிப்பெயரைச் சொல்லிக் கேவலப்படுத்துவது.*

(t) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்கள் புனிதமாக, மேன்மையானதாக, மிகவும் மதிக்கக்கூடிய ஒரு பொருளை அழிப்பதும், சேதப்படுத்துவதும், அவமரியாதைக்கு உட்படுத்துவதும்.*

*மேற்சொன்னதில் ‘பொருள்’ என்பது ஒரு சிலையையோ, புகைப்படத்தையோ அல்லது படத்தையோ குறிக்கும்.*

(u) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவருக்கு எதிரான எழுத்து மூலமோ, வாய்மொழி வழியாகவோ அல்லது வேறு அடையாளத்தின் மூலமோ அல்லது எளிதில் எல்லோரும் பார்க்கக்கூடிய வேறு வகையிலோ வன்மத்தை, வெறுப்பை அல்லது பகைமையை*

ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்த முயலுகின்ற நடவடிக்கைகள்.

(v) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்கள் புனிதமாக, மேன்மையானதாக, மிகவும் மதிக்கக்கூடிய இறந்துபோன ஒருவரைப் பற்றி எழுத்து மூலமோ, வாய்மொழி வழியாகவோ அல்லது வேறு அடையாளத்தின் மூலமோ அவமரியாதை செய்வது.

(w)(i) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை, அவர் பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த பெண் என்று நன்கு அறிந்திருந்து உள்நோக்கத்துடன் தொடும்போது, அப்படித் தொடுகின்ற செயல் பாலியல் ரீதியானதாக இருக்கும்போதும், அந்தப்பெண்ணின் ஒப்புதல் இல்லாமல் இருக்கும்போதும்,

(w)(ii) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை, அவர் பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த பெண் என்று நன்கு அறிந்திருந்து, பாலியல் இச்சைக்கு அவரை வார்த்தைகளாலோ, செயல்களாலோ அல்லது சைகைகள் வழியாகவோ தூண்டுவது.

மேற்சொன்ன பிரிவு (i)-இல் சொல்லப்பட்ட ‘ஒப்புதல்’ என்பது தானாக எவ்வித வற்புறுத்தலுமின்றி மனமுவந்து கொடுக்கப்படும் ஒப்புதல் என்று பொருள்படும்.

ஒருவேளை அந்தப்பெண் அப்படிப்பட்ட பாலியல்ரீதியான வல்லுறவுக்கு, உடல்ரீதியான எதிர்ப்பைக் காட்டவில்லை என்பதால் மட்டும், அவர் ஒப்புதல் அளித்துவிட்டார் என்று பொருள் கொள்ள முடியாது.

மேலும், அந்தப்பெண்ணின் தனிப்பட்ட பாலியல் தொடர்பான முந்தைய நிகழ்வுகள், மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவருடன் ஏற்கனவே ஒப்புதலுடன் உறவு கொண்டுள்ளவர் என்ற நிலை போன்றவை, தற்போதைய பாலியல் வன்கொடுமைச் செயலுக்கு ஒப்புதல் அளித்துவிட்டதாகப் பொருள் கொள்ள முடியாது.

(x) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்கள் குடிநீருக்காகப் பயன்படுத்தும் நீர் ஆதாரங்களை, நீர் வளங்களை, நீர் ஊற்றுக்களை, நீர் தேக்கங்களை அவை குடிக்கப் பயன்படுத்த முடியாது அளவிற்குச் சேதப்படுத்துவதும் மாசுபடுத்துவதும்.

(y) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவருக்குப் பாரம்பரிய உரிமைகளை மறுப்பதும், ஒரு பொது இடத்திற்குச் செல்ல அனைவரும் பயன்படுத்தும் பொதுப் பாதையைப் பயன்படுத்தத் தடைவிதிப்பதும், பொது இடத்திற்கு அனுமதி மறுப்பதும்,*

**(z)** *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரைக் கட்டாயமாக அவருடைய வீட்டிலிருந்தோ, கிராமத்திலிருந்தோ அல்லது அவர் குடியிருப்பிலிருந்தோ வெளியேற்றுவது.*

*(ஓர் அரசு ஊழியர் தமது கடமையைச் செய்வதற்காக இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கும்போது அந்த நடவடிக்கை இந்தச் சட்டத்தின் கீழ் வன்கொடுமைக் குற்றமாகாது)*

(za) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரைக் கீழ்வருவன வற்றிலிருந்து தடுப்பதும், தடையேற்படுத்துவதும்,*

(A) *பொதுச் சொத்து, பொது மயானம், பொதுக் கல்லறை, ஆறு, ஊற்று, ஓடை, கிணறு, குளம், ஏரி, பொதுக்குழாய், அல்லது மற்ற பொதுவான நீர் வளங்கள், பொதுவாகக் குளிக்கும் இடம், பொதுப்பாதை, பொதுச்சாலை, பொது வழித்தடம் இவற்றைப் பயன்படுத்துவதிலிருந்து.*

(B) *மிதிவண்டி, மோட்டார் வாகனம் போன்றவற்றைப் பயன்படுத்துதல், காலணிகளை அணிதல், பொது இடங்களில் புத்தாடைகளை உடுத்துதல், திருமண ஊர்வலங்களை நடத்துதல், திருமண ஊர்வலங்களில் குதிரைகள், வாகனங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதிலிருந்து.*

(C) *பொதுவான பயன்பாட்டுக்குரிய தம் சமயம் சார்ந்த பொது வழிபாட்டுத் தலங்களுக்குள் நுழைவதிலிருந்து, அப்படிப்பட்ட சமய நிறுவனங்கள் ஆலயங்கள் நடத்தும் சமூக கலாச்சாரச் சடங்குகள் மற்றும் ஊர்வலங்களில் பங்கு கொள்வதிலிருந்து.*

(D) *எந்தவொரு கல்வி நிறுவனம், மருத்துவமனை, மருந்தகம், ஆரம்பச் சுகாதார நிலையம், கடை, பொது கேளிக்கை வளாகங்கள் அல்லது எந்தவொரு பொது இடத்திலும் நுழைவதற்கும், அவற்றைப் பயன்படுத்துவதிலிருந்தும்,*

(E) *பொதுவான எந்தவொரு தொழிலையும், மேற்கொள்வதில் இருந்தும், அவற்றைத் தானே செய்வதிலிருந்தும், வணிகம், வியாபாரம், சுயதொழில் போன்றவற்றில்*

ஈடுபடுவதிலிருந்தும், பொதுவாக அனைவருக்கும் உள்ள எந்த வேலையையும் செய்யும் உரிமையிலிருந்தும்,

(zb) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரை பேய்பிடித்திருப்பதாகக் கூறியோ அல்லது சூன்யம் செய்பவர் என்று கூறியோ அவருக்கு உடல்ரீதியாகவோ, மனரீதியாகவோ கொடுமை விளைவித்தால்,

(zc) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரையோ, ஒரு குடும்பத்தையோ அல்லது ஒரு குழுவையோ சமூக மற்றும்பொருளாதார புறக்கணிப்புக்கு ஆளாக்குதல் போன்றவற்றிற்கு....?

**தண்டனை:-**

மேற்சொன்ன அனைத்து வகை வன்கொடுமை களில் ஏதாவது ஒன்றைப் புரிந்த குற்றவாளிகளுக்குக் குறைந்தது 6 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்க இந்தத் திருத்தச் சட்டம் வகை செய்கிறது.

அபராதம் இவ்வளவுதான் என்று சட்டம் குறிப்பிட்டுச் சொல்லிவில்லை. எனவே வன்கொடுமைக் குற்றத்தின் தன்மைக்கேற்ப அபராதம் விதிக்கும் அதிகாரம் அந்த வன்கொடுமை வழக்கை நடத்தும் சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றத்துக்கு உண்டு. மேலும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர் களுக்கு வன்கொடுமையின் தன்மைக்கேற்ப விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு நிவாரணத்தொகையும், அரசு வழங்க வேண்டும்.

பிரிவு 3(2) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினர் அல்லாத எவரொருவரும், பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த நபர்.

(i) எவரையும் நிகழுறு காலத்தில் செயலாற்றலிலுள்ள ஏதாவது ஒரு நடப்புச்சட்டத்தின்படி, மரண தண்டனைக்குரிய குற்றச் செயலுக்காகக் குற்றத் தீர்ப்புக்குள்ளாக்கும் கருத்துடனோ, அவர் அத்தகைய குற்றத் தீர்ப்புக்கு உள்ளாகக் கூடும் எனத் தெரிந்தோ, பொய்ச்சாட்சி சொல்வது அல்லது பொய்ச்சாட்சி சொல்ல முனைவாராயின், அவர் ஆயுள் தண்டனையும், அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார். பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவர், குற்றமற்றவராயிருந்து, அத்தகைய பொய்ச் சான்றோ, புனை சான்றோ அளிக்கப் பட்டதன் விளைவாகக் குற்றத்தீர்ப்புக்கு ஆளாக்கப்பட்டு, தூக்கிலிடப்படுவராயின்,

அவ்வாறு பொய்ச்சான்று அளிக்கிற அல்லது புனைகிற நபர் மரணதண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.

(ii) எவரையும் மரணதண்டனையல்லாத, ஆனால் ஓராண்டுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவதற்குரிய குற்றச் செயல் ஒன்றை இழைத்ததாகக் குற்றத்தீர்ப்புக்கு உள்ளாக்கும் கருத்துடனோ, அவர் அத்தகைய குற்றத் தீர்புக்கு உள்ளாகக்கூடும் எனத் தெரிந்தோ, பொய்சாட்சி சொல்வது அல்லது சொல்ல முனைவாராயின், அவர் ஆறுமாதத்திற்குக் குறையாததாய், ஏழாண்டுவரை அல்லது அதற்கு மேற்பட்டு நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

(iii) ஒருவருக்குச் சொந்தமான சொத்து எதற்கும், தீயினால் அல்லது வெடிபொருள் எதனாலும் சேதம் விளைவிக்கும் கருத்துடன், சொத்தை அழிப்பவருக்கு ஆறு மாதத்திற்குக் குறையாததாய் ஓராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

(iv) ஒருவரால் வழிபாட்டிடம், வாழுமிடம் அல்லது சொத்தினை வைப்பதற்கான இடம் எதற்கும் தீயினால் அல்லது வெடிபொருள் எதனாலும் அழிவு ஏற்படுத்தும் கருத்துடன் அல்லது அழிவு ஏற்படக்கூடும் எனத் தெரிந்தே சொத்தழிப்புச் செய்வாராயின், அவருக்கு ஆயுள் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

(v) பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவருக்கு அல்லது அவருடைய சொத்திற்கு, அவர் பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச்சார்ந்தவர் என்றும், அந்தச் சொத்து அவருடைய சொத்து என்றும் நன்கு தெரிந்திருந்து, இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி பத்தாண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படதக்கக் குற்றச்செயல் எதனையும் இழைப்பாராயின், அவர், ஆயுள் தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார். (திருத்தப்பட்ட சட்டத்தின்படி)

(va) எந்தவொரு நபருக்கும் அல்லது அவருடைய சொத்திற்கும் எதிராக இந்தச் சட்டத்தின் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள குற்றங்கள், அந்த நபர் பட்டியல்

*சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவர் என்பதை அறிந்திருந்தும், அந்தச் சொத்து பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவருக்கு உரியது அல்லது பயன்பாட்டில் உள்ளது என்பதை அறிந்திருந்தும் நிகழ்த்தப்பட்டால், அப்படி குற்றமிழைத்த நபருக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் அத்தகைய குற்றங்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படுமோ அதே தண்டனை வழங்கப்படுவதோட கூடுதலாக அபராதமும் விதிக்கப்படும். (திருத்தப்பட்ட சட்டத்தின்படி)*

(vi) *இந்த அத்தியாயத்தின்படி வரும் குற்றச் செயல் ஒன்று இழைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்தோ, அவ்வாறு இழைக்கபட்டபட்டுள்ளது என நம்புவதற்குக் காரணம் கொண்டிருக்கும் நிலையிலோ, சட்டப்படியான தண்டனையிலிருந்து குற்றவாளியைக் காப்பதற்கான கருத்துடன், அந்தக் குற்றச் செயல் இழைக்கப்பட்டதற்கான சான்றை மறைவுறச் செய்வாராயின், அல்லது அத்தகைய கருத்துடன், அந்தக் குற்றச் செயல் பொறுத்த தகவல் பொய்யானது என்பதைத் தெரிந்தோ, பொய்யானது என்பதை நம்பியோ அத்தகவலைக் கொடுப்பாராயின் அவர் அந்தக் குற்றச் செயலுக்கான தண்டனை விதித்துக் தண்டிக்கப்படுவார்.*

**(vii)** *பொது ஊழியராயிருந்து கொண்டு இந்தப்பிரிவின்படி வரும் குற்றச் செயல் ஒன்றை இழைப்பாராயின், அவர் ஓராண்டிற்குக் குறையாததாய், அந்தக் குற்றச்செயலுக்கான தண்டனையின் அளவிற்கு நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.*

## பிரிவு 4 முந்தைய சட்டத்தின் பிரிவு 4 திருத்தியமைக்கப்பட்டுள்ளபடி

(1) *பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சாராத ஓர் அரசு ஊழியர், இந்தச் சட்டத்தின் பிரிவுகள் மற்றும் விதிகள்படி அவர் ஆற்ற வேண்டிய கடமைகளை கவனக்குறைவாகவோ அல்லது ேண்டுமென்றோ புறக்கணித்தால், அவர் 6 மாதத்திற்குக் குறையாததாய், ஓராண்டு வரை நீடிக்கலாகும் கால அளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.*

(2) உட்பரிவு (1)-இல் சொல்லப்பட்டுள்ளவாறு அரசு ஊழியரின் கடமைகள் என்பவை கீழ் வருபனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

(a) வாய்மொழியாகப் புகார் அல்லது தகவல் தருபவரிடம் அந்தத் தகவலைப் பெற்ற காவல்துறை அதிகாரி அதை எழுதித் தகவல் தந்தவரிடம் வாசித்துக் காட்டிச் சரியாக இருக்கிறதா என்பதைக் கேட்டறிந்த பிறகு தகவல் தந்தவரின் கையொப்பம் பெற வேண்டும்.

(b) பெற்ற தகவலை முதல் தகவல் அறிக்கையாக இந்தச் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் சரியான பிரிவுகளில் பதிவு செய்ய வேண்டும்.

(c) அப்படிப் பதிவுசெய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கையின் நகல் ஒன்றினைத் தகவல் கொடுத்தவருக்கு இலவசமான வழங்கியிருக்க வேண்டும்.

(d) பாதிக்கப்பட்டவரிடமும், உரிய சாட்சிகளிடமும் சரியான வாக்குமூலங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

(e) புலன் விசாரணை செய்து குற்றப்பத்திரிகையை 60 நாட்களுக்குள் உரிய சிறப்பு நீதுமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். 60 நாட்களுக்களு தாக்கல்செய்ய இயலாதபோது அதற்கான காரணத்தை எழுத்துப் பூர்வமாகக் கொடுக்க வேண்டும்.

(f) தேவையான ஆவணங்களையும், மின் ஆவணங்களையும், தேவைப்பட்டால் மொழிபெயர்ப்பு செய்து சரியான முறையில் தயாரிக்க வேண்டும்.

(g) சட்டத்திலும் விதிகளிலும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ள மற்ற செயல்களைத் தளர்வின்றிச் செய்து முடிக்க வேண்டும்.

மேற்சொன்ன கடமைகளைச் செய்ய ஓர் அரசு ஊழியர் தவறும்பட்சத்தில் நிர்வாகரீதியான விசாரணைக்குப் பிறகுதான் அவர்மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டும்.

(3) பிரிவு 4(2)-இல் சொல்லப்பட்டுள்ள கடமைகளிலிருந்து ஓர் அதிகாரி தவறும்பட்சத்தில் சிறப்பு நீதிமன்றமோ அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றமோ அது குறித்த வழக்கைக் கோப்புக்கு எடுத்து அந்த அதிகாரியைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடலாம்.

பிரிவு 5 முதல்முறை வன்கொடுமை புரிந்து தண்டனை பெற்ற எவரொருவரும் இரண்டாம் முறையாக வன்கொடுமைக் குற்றம்

புரிந்தால் அவருக்கு ஓர் ஆண்டுக்கு குறையாத தண்டனை வழங்க வேண்டும். அந்த குறிப்பிட்ட குற்றத்திற்குரியத் தண்டனையோடு அது நீட்டித்து வழங்கப்படும்.

பிரிவு 6 இந்தச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள கூறுகளுக்குட்பட்டு, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 34, அத்தியாயம் III, அத்தியாயம் IV, அத்தியாயம் V, அத்தியாயம் V-A, பிரிவு 149 மற்றும் அத்தியாயம் XXIII போன்றவையும் அவற்றிற்குப் பொருந்துவது போலவே இந்தச் சட்டத்திற்கும் பொருந்தும்.

பிரிவு 7(1) இந்த அத்தியாயத்தில் உள்ள குற்றத்திற்காகத் தண்டிக்கப்படும் ஒரு குற்றவாளிக்கு வழக்கை நடத்தும் சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம், தண்டனையோடு எழுத்துப்பூர்வமான உத்தரவைப் பிறப்பித்து அந்தக் குற்றத்தைப் புரிவதற்குப் பயன்படுத்தியதாகக் கருதப்படும், குற்றவாளிக்குச் சொந்தமான எந்தவொரு அசையும், அசையாச் சொத்துக்களையும், கைப்பற்றி அரசிடம் ஒப்படைவு செய்ய உத்தரவிடலாம்.

(2) இந்த அத்தியாயத்தில் உள்ள குற்றத்திற்காக ஒரு வழக்கை விசாரித்துவரும் சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம், வழக்கு விசாரணையின் போது, அந்த குற்றம் சுமத்தப்பட்டவர் அந்தக் குற்றத்தைப் புரிவதற்கு பயன்படுத்தியதாக கருதப்படும் அந்தக் குற்றவாளிக்குச் சொந்தமான எந்தவொரு அசையும், அசையாச் சொத்துக்களை வழக்கு விசாரணையின்போது பறிமுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம். ஒரு வேளை குற்றம் நிரூபிக்கப்பட்டால், அந்தக் குற்றத்திற்காக நிர்ணயிக்கப்படும் அபராதத்தொகைக்குச் சமமான சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

பிரிவு 8 (a) வன்கொடுமைக் குற்றம் புரிந்தவருக்கு அந்தக் குற்றம் தொடர்பான எவ்வகையான நிதியுதவியையும் அளித்த நபர் எவரும், தான் அவ்வாறு வன்கொடுமைக் குற்றம் புரிவதற்காக அந்த நபருக்கு நிதியுதவி அளிக்கவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்காதபோது. அவரும் வன்கொடுமைக் குற்றத்திற்கு உடந்தையாக செயல்பட்டதாகவே கருதப்படுவார்.

8 (b) குழுவாகச் சேர்ந்து ஒரு வன்கொடுமைக் குற்றத்தையோ அல்லது குற்றங்களையோ

*புரிந்தவர்கள் ஏற்கனவே நிலம் அல்லது வேறு சம்பவம் தொடர்பாக நிகழ்ந்த ஒரு வன்கொடுமையின் தொடர்ச்சியாகத்தான் அத்தகைய குற்றத்தைச் செய்ததாக நிரூபிக்கப்பட்டால், அந்தக் குழு கூட்டாக இணைந்து குற்றம் புரியும் நோக்கத் தோடுதான் அந்த வன்கொடுமையை நிகழ்ந்தியுள்ளதாக அனுமானிக்கப்படும்.*

*8* (c) *பாதிக்கப்பட்டர் பற்றியோ அவரது குடும்பத்தினர் பற்றியோ குற்றம் சுமத்தப்பட்டவர் தனிப்பட்ட விதத்தில் அறிந்திருக்கும்போது, பாதிக்கப்பட்டவரின் சாதி அல்லது இன அடையாளம் தனக்குத் தெரியாது என்று குற்றம் சுமத்தப்பட்டவர் நிரூபித்தாலன்றி, அவர் பாதிக்கப் பட்டவரின் சாதி அல்லது இன அடையாளத்தைத் தெரிந்தே அந்தக் குற்றத்தை அவருக்கு எதிராக இழைத்ததாக அனுமானிக்கப்படும். (திருத்தப்பட்ட சட்டத்தின்படி)*

*பிரிவு 9(1) குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் சொல்லப்பட்டவற்றையும், இந்தச் சிறப்புச்சட்டத்தில் சொல்லப்பட்ட நடைமுறைகள் எதுவாகயிருப்பினும், அவற்றையெல்லாம் கடந்து கீழ்வருவனவற்றை உடனடியாக நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என ஒரு மாநில அரசு கருதினால்,*

(a) *இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள வன்கொடுமைக் குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்கோ அல்லது*

(b) *இந்தச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு வழக்கு அல்லது பல வழக்குகளுக்காகவோ, மாநில அரசு குறிப்பிட்ட மாவட்டத்திலோ அல்லது மாவட்டத்தின் சில பகுதிகளிலோ வன்கொடுமைகள் நிகழும் சூழல் இருக்குமாயின், ஒரு சிறப்பு அதிகாரியை இந்தச் சிறப்பு சட்டத்தை முழுமையாக அமல்படுத்தும் நோக்கில் அவருக்கு எல்லா அதிகாரங்களையும் (கைது செய்வதற்கு, புலன் விசாரணை நடத்துவதற்கு, வழக்கு விசாரணை சிறப்பு நீதிமன்றத்தில் ஏற்பாடு செய்வதற்கு) வழங்கி உடனடியாக நியமித்து உத்தரவு பிறப்பிக்கலாம்.*

*(2) அவ்வாறு உட்பிரிவு (1)-இன் படி நியமிக்கப்பட்ட அதிகாரியின் நடவடிக்கைகள் அனைத்திற்கும் அந்த மாவட்டத்திலும், தொடர்புடைய மாவட்டங்களிலும் இருக்கின்ற காவல்துறை மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுத்து உதவ வேண்டும்.*

*(3) அந்த அதிகாரி எடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கூறுகள் அடிப்படையில் அமையும்.*

## அத்தியாயம் - III
## வன்கொடுமை புரியக்கூடிய நபர்களை அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவது

*பிரிவு 10 (1) ஒரு நபர் இச்சட்டத்தின் இரண்டாவது பகுதியில் சொல்லப்பட்டுள்ள வன்கொடுமைக் குற்றச் செயல்களை இழைக்கக்கூடும் என்று கருதினால், ஒரு புகாரின் பேரிலோ அல்லது காவல்துறை தரும் அறிக்கையின் அடிப்படையிலோ சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம் ஒரு உத்தரவைப் பிறப்பித்து, அந்த நபரை அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 244ல் குறித்துக் காட்டப்பட்டுள்ள "பட்டியலிடப்பட்ட பகுதி" அல்லது "பழங்குடியினரின் பகுதி" அல்லது இச்சட்டத்தின் பிரிவு 21(2)***(viii)***-இல் அடையாளங் காணப்பட்டுள்ள எந்தவொரு பகுதிக்குள்ளும், அதிகபட்சம் 3 ஆண்டுகளுக்கு நுழையக்கூடாது என்று உத்தரவிட முடியும்.*

*(2) எதன் அடிப்படையில் அத்தகைய உத்தரவை அந்த நீதிமன்றம் பிற்பபித்திருக்கிறது என்ற தகவலை அந்த நபருக்கு நேரடியாகத் தெரிவிக்க வேண்டும்.*

*(3) தான் பிறப்பித்த அத்தகைய உத்தரவை, அந்தச் சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம், தொடர்புடைய நபர் விண்ணப்பிக்கும்போது, தகுந்த காரணங்கள் இருப்பின் அந்தக் காரணத்தை எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்துவிட்டு மாற்றிய மைக்கவோ அல்லது திருப்பிப்பெறவோ செய்யலாம்.*

*பிரிவு 11 வெளியேற உத்தரவிடப்பட்ட நபர் வெளியேற மறுக்கும்போதும், வெளியேறிய பிறகு மீண்டும் அனுமதியின்றிக் குறிக்கப்பட்ட பகுதிக்குள் நுழையும் போதும் அதன்மீது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்.*

*(1) எந்தவொரு நபருக்கு எதிராக ஒரு குறிக்கப்பட்ட பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் என்று பிரிவு 10-இல் சொல்லப்பட்டவாறு ஒரு சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததற்குப் பிறகும் அந்த நபர் அந்தப் பகுதியிலிருந்து வெளியேற மறுத்தாலோ, அல்லது குறிப்பிட்ட காலக்கெடு முடிவதற்குள் அந்தப் பகுதிக்குள் நுழைந்தாலோ அந்த நபரைக் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்ப அந்த நீதிமன்றம் உத்தரவிட முடியும்.*

*பிரிவு 12 (1) பிரிவு 10-இல் சொல்லப்பட்வாறு உத்தரவை யாருக்கு எதிராக சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்டச் சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்திருக்கின்றதோ, அந்த நீதிமன்றம் அந்த நபரின் புகைப்படம் மற்றும் உடல் அளவை எடுக்க உத்தரவிடலாம்.*

*(2) அப்படி உத்தரவிட்ட பிறகு புகைப்படம் எடுக்கவோ, உடல் அளவீடு எடுக்கவோ ஒத்துழைக்க வில்லையென்றால், தேவையான பலத்தை பிரயோகம் செய்து எடுக்கலாம்.*

*(3) நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும், உடல் அளவை எடுப்பதற்கும், புகைப்படம் எடுப்பதற்கும் ஒத்துழைப்புக் கொடுக்காமல் இருந்தால் அஃது இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 186-இன் கீழ் குற்றமாகும்.*

*(4) பிரிவு 10-இல் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைச் சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம் திரும்பப்பெற்றுக் கொள்ளும்போது, அந்த நபருடைய உடல் அளவுகள், புகைப்படம் (அதன் மூலப்படம்) உள்பட அனைத்தும் அழிக்கப்பட வேண்டும் அல்லது அந்த நபரிடம் ஒப்படைவு செய்யப்பட வேண்டும்.*

*பிரிவு 13 பிரிவு 10-இல் சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் உத்தரவை மீறினால், அதற்கு ஓர் ஆண்டு வரை சிறைத்தண்டனை வழங்கலாம்.*

## பகுதி IV

*பிரிவு 14 சிறப்பு நீதிமன்றங்களும், தனிப்பட்டச் சிறப்பு நீதிமன்றங்களும் வன்கொடுமை வழக்குகளை விரைவாக நடத்தி முடித்து நீதி வழங்க ஏற்றவகையில், ஒவ்வொரு மாநில அரசும், அந்தந்த மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியுடன் கலந்து பேசி ஒரு மாவட்டத்திலோ அல்லது இன்னும் கூடுதலான மாவட்டங்களிலுமோ வன்கொடுமைகள் தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்கென்று தனிப்பட்டச் சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும்.*

*எந்தெந்த மாவட்டங்களிலெல்லாம் குறைவான வன்கொடுமை வழக்குகள் பதிவாகின்றனவோ அந்த மாவட்டங்களிலெல்லாம், மாநில அரசு, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒப்புதலோடு, அந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றத்தை வன்கொடுமைகள் வழக்கை ஏற்று நடத்தக்கூடிய சிறப்பு நீதிமன்றமாக அறிவிப்புச் செய்து அரசிதழில் வெளியிட வேண்டும். அந்த மாவட்டங்களைப் பொறுத்தவரை அவ்வாறு அரசிதழில் வெளியிடப்பட்ட மாவட்ட அமர்வு நீதிமன்றங்கள் வன்கொடுமை வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களாக அறியப்படும்.*

*அப்படி அரசிதழில் அறிவிப்பு செய்யப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள், வன்கொடுமைக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை நேரடியாக ஏற்று விசாரிக்கும் அதிகாரம் பெற்றவையாகும்.*

*(2) வன்கொடுமை வழக்குகளை 2 மாத காலத்திற்குள் விரைவாக விசாரித்து தீர்ப்பு வழங்க ஏற்றவிதத்தில், அந்தந்த மாநில அரசுகள் முடிந்தவரை தேவைக் கேற்றவாறு இப்படிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தி அரசிதழில் வெளியிட வேண்டும்.*

*(3) வன்கொடுமைக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களும், தனிப்பட்டச் சிறப்பு நீதிமன்றங்களும், அந்த வழக்குகளை எல்லாச் சாட்சிகளும் விசாரித்து முடியும்வரை அன்றாட விசாரணை நடத்த வேண்டும். தொடர்ந்து அன்றாடம் விசாரணையை நடத்த முடியாதபோது, அதற்கான காரணத்தைப் பதிவு செய்து வைத்துவிட்டு மறுநாள் விசாரணை நடத்தலாம்.*

*எப்படியிருந்தாலும், ஒரு வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் (60 நாட்களுக்குள்) அந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்.*

*பிரிவு* 14A (1) *நடைமுறையிலிருக்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-இல் சொல்லப்பட்டவைகளைக் கடந்து, சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புக்கள், தண்டனைகள், உத்தரவுகள், அவை இடைக்கால உத்தரவுகளாக இல்லாதபட்டசத்தில், அவற்றை எதிர்த்து மேல்முறையீட்டை நேரடியாக உயர்நீதிமன்றத்தில் தொடுக்கலாம்.*

*(2) குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-இன் பிரிவு 378 (3)-இல் சொல்லப்பட்டவைகளைக் கடந்து, சிறப்பு நீதிமன்றம்*

மற்றும் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள் ஜாமீன் வழங்கியோ, அல்லது மறுத்தோ வழங்கும் உத்தரவுகளின் மேல் நேரடியாக மேல்முறையீட்டை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கலாம்.

(3) தற்போது நடைமுறையிலிருக்கும் எல்லாச் சட்டங்களையும் கடந்து, மேல்முறையீடானது, தீர்ப்புகள், தண்டனைகள், உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட வேண்டும்.

அப்படி 90 நாட்கள் கடந்து தொடுக்கப்படும் மேல்முறையீடுகளை, அந்த மேல்முறையீட்டைத் தொடுப்பவர் கூறும் காரணங்கள் ஏற்றுக்கெள்ளக் கூடியதாக இருந்தால், அவற்றை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் உண்டு.

ஆனால் 180 நாட்களுக்குள் பிறகு செய்யப்படும் மேல்முறையீடு களை உயர்நீதிமன்றங்கள் ஏற்க முடியாது.

(4) இச்சட்டப்படி உயர்நீதிமன்றத்தால் ஏற்றுக்கெள்ளப் படும் மேல்முறையீட்டு மனுக்கள் யாவும், மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் (90 நாட்களுக்கள்) முடிக்கப்பட வேண்டும்.

பிரிவு 15 (1) மேற்சொன்னவாறு அமைக்கப்படும் எல்லாச் சிறப்பு நீதிமன்றங்களுக்கும், அந்தந்த மாநில அரசு அரசாணை பிறப்பித்து அவற்றை அரசிதழில் வெளியிட்டு சிறப்பு அரசுக் குற்றவியல் வழக்கறிஞர்களை அல்லது சிறப்பு வழக்கறிஞர்களை அரசு வழக்கறிஞர்களாக நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படும் வழக்கறிஞர்கள் குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படும் அரசுக் குற்றவியல் வழக்கறிஞர்கள் அந்தந்தச் சிறப்பு நீதிமன்றங்களில் வன்கொடுமை வழக்குகளை அரசு சார்பாக நடத்துவார்கள்.

(2) மேற்சொன்னவாறு அமைக்கப்படும் எல்லாத் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களுக்கும், அந்தந்த மாநில அரசு அரசாணை பிறப்பித்து அவற்றை அரசிதழில் வெளியிட்டுச் சிறப்பு அரசுக் குற்றவியல் வழக்கறிஞர்களை அரசு வழக்கறிஞர்களாக ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படும் வழக்கறிஞர்கள் குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் குற்றவியல் வழக்கறிஞராகப் பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படும் அரசு குற்றவியல் வழக்கறிஞர்கள் அந்தந்தக் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களில் வன்கொடுமை வழக்குகளை அரசு சார்பாக நடத்துவார்கள்.

## பகுதி - IV-A

## பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள்:

*பிரிவு 15***A***(1) வன்கொடுமை குற்றங்களால், பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரைச் சார்ந்திருப்பவர்கள், சாட்சிகள் ஆகியோரை எல்லாவகையான பயமுறுத்துதல் அல்லது மிரட்டிப் பணிய வைத்தல் அல்லது தூண்டுதல் அல்லது வன்முறை அல்லது வன்முறை விளைவிப்பதாக அச்சுறுத்தல்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பது அரசின் முழுமையான கடமையும் பொறுப்புமாகும்.*

*(2) வன்கொடுமை குற்றங்களால், பாதிக்கப்பட்ட ஒருவரை எவ்விதப் பாகுபாடுமின்றி, மரியாதையுடனும், மாண்புடனும் அவருடைய வயது, பாலினம், கல்வி கற்காத நிலை மற்றும் ஏழ்மை நிலை போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு அவருடைய தேவைகளைப் புரிந்துகொண்டு நடத்த வேண்டும்.*

*(3) வன்கொடுமைக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரைச் சார்ந்திருப்போர் அனைவரும் நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் ஜாமீன் குறித்த அறிவிப்புக்களைச் சரியான தருணத்தில், முழுமையான தகவல்களுடன் தெரிந்துகொள்ள உரிமையுடையவர்கள், மாநில அரசு நிர்வாகமும், சிறப்பு அரசு தரப்பு குற்றவியல் வழக்கறிஞரும் இச்சட்டத்தின்படி அனைத்து நடைமுறைகளையும், பாதிக்கப்பட்டவருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் விளக்கமாகத் தெரியப்படுத்த வேண்டும்.*

*(4) வன்கொடுமைக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவரோ, அவரைச் சார்ந்திருப்போரோ, எந்தவொரு அதிகாரப்பூர்வ ஆவணத்தையோ, பொருளையோ சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல்செய்ய வேண்டி யாரையும் வரவழைக்கவோ, சாட்சிகளையோ அல்லது குற்ற நிகழ்வின்போது அங்கிருந்த எவரையுமோ சம்மன் அனுப்பி வரவழைக்கவோ நீதிமன்றத்திடம் முறையிடலாம்.*

*(5) வன்கொடுமைக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவரோ, அவரைச் சார்ந்திருப்போரோ, நீதிமன்றம், குற்றம் சுமத்தப்படவரை ஜாமீனில் விடுவதற்கு முன்போ, வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு முன்போ, பரோலில் விடுவதற்கு முன்போ, தண்டனை வழங்குவதற்கு முன்போ, குற்றவாளியாக அறிவிப்பதற்கு முன்போ, விடுதலை செய்வதற்கு முன்போ இவை தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் தமது தரப்பு வாதத்தைச் செய்வதற்கோ, எழுத்துப்பூர்வமாகத் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கவோ உரிமையுண்டு.*

*(6) குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-இல் சொல்லப்பட்டவைகளைக் கடந்து, சிறப்பு நீதிமன்றம் மற்றும்தனிப்பட்டச் சிறப்பு நீதிமன்றம் இச்சட்டப்படி வன்கொடுமை வழக்கு விசாரணையை நடத்தும்போது, பாதிக்கப்பட்டவருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும், புகார் தாரருக்கும், சாட்சிகளுக்கும்,*

(a) *நீதியை அச்சமின்றி நிலைநாட்ட முழுமையான பாதுகாப்பை அவர்களுக்கு உறுதிசெய்ய வேண்டும்.*

(b) *புலன் விசாரணை, வழக்கு விசாரணை, பொதுவான விசாரணைகளின் போது அவர்களுக்குப் பயணப்படி மற்றும் பராமரிப்புச் செலவுகளை வழங்க வேண்டும்.*

(c) *புலன் விசாரணை, வழக்கு விசாரணை, பொதுவான விசாரணையின் போது அவர்களுக்குச் சமூகப் பொருளாதார மறுவாழ்வை உறுதி செய்ய வேண்டும்.*

(d) *அவர்கள் அச்சமின்றித் தங்கள் பகுதியில் மீள் குடியேறுவதை உறுதி செய்ய வேண்டும்.*

*(7) அரசு நிர்வாகம் பாதிக்கப்பட்டவர், அவரைச் சார்ந்தவர்கள், புகார்தாரர் மற்றும் சாட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிச் சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்டச் சிறப்பு நீதிமன்றத்திடம் அறிவிக்க வேண்டும். தொடர்புடைய நீதிமன்றம் அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமானவையா என்பதைப் பரிசீலனை செய்து தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கும்.*

*(8) உட்பிரிவு (6)-இல் பொதுவாகச் சொல்லப்பட்டுள்ள வைகளுக்கு ஊறுவிளையாமல், பாதிக்கப்பட்டவரோ, அவரைச் சார்ந்தவரோ, புகார் தாரரோ, சாட்சிகளோ அல்லது அவர்கள் சார்பாகச் சிறப்பு அரசுத் தரப்பு குற்றவியல் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டால், நீதிமன்றம்,*

(a) *நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் இதர பொது ஆவணங்களில் சாட்சிகளின் பெயர்களும், அவர்களின் முகவரி உள்ளிட்ட இதர விவரங்களும் இடம்பெறாமல் செய்யலாம்.*

(b) *சாட்சிகளின் அடையாளம், பெயர் மற்றும் இதர விவரங்களை வெளியிடக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கலாம்.*

(c) *பாதிக்கப்பட்டவரையோ, அவரைச் சார்ந்தவரையோ, புகார்தாரரையோ, சாட்சியையோ, தொந்தரவு*

செய்வதாகப் புகார் வரப்பெற்றால், உடனே நீதிமன்றம் தலையீடு செய்து, அன்றைய நாளிலேயே அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்டச் சிறப்பு நீதிமன்றத்திற்கு மேற்சொன்ன உட்பிரிவு (C) -இன் அடிப்படையில் வரப்பெறுகின்ற புகாரானது தனி வழக்காகக் கருதப்பட்டு நடைபெற்று வரும் வன்கொடுமை வழக்கிலிருந்து தனியாகப் பிரித்து நடத்தப்பட்டு, புகார் வரப்பெற்ற நாளிலிருந்து 2 மாதத்திற்குள் அந்த வழக்கை விசாரித்து முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

ஒருவேளை உட்பிரிவு (C) -இன் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்தவர் அல்லது புகார்தாரர் அல்லது சாட்சியிடமிருந்து வரப்பெறுகின்ற புகாரானது ஒரு பொது அதிகாரிக்கு எதிரானதாக இருக்கும்பட்சத்தில், நீதிமன்றம், அந்த அதிகாரியை நடைபெற்று வரும் வழக்கிலோ, அந்த பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான வேறு வழக்கிலோ தலையீடு செய்வதிலிருந்து தடை செய்யலாம். நீதிமன்ற அனுமதியின்றி அவர் தலையீடு செய்வதை மேலும் தடுக்கலாம்.

(9) விசாரணை அதிகாரி மற்றும் காவல்நிலையப் பொறுப்பு அதிகாரி வன்கொடுமை குற்றம் தொடர்பாக, பாதிக்கப்பட்டவரோ, புகார்தாரரோ அல்லது சாட்சிகளோ அவர்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் எல்லாவகையான பயமுறுத்தல் அல்லது கட்டாயப்படுத்துதல் அல்லது தூண்டுதல் அல்லது வன்முறை விளைவித்தல் அல்லது வன்முறை விளைவிப்பதாக அச்சுறுத்தல் போன்றவை தொடர்பாக வாய்மொழியாகவோா, எழுத்துப்பூர்வமாகவோ கொடுக்கும் புகாரைப் பெற்று உடனடியாக அதைப்பதிவு செய்து புகார்தாரருக்கு ஒரு நகல் இலவசமாகக் கொடுக்க வேண்டியது கடமையாகும்.

(10) இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள வன்கொடுமைக் குற்றங்கள் தொடர்பான எல்லா சட்ட நடிவடிக்கைகளும் வீடியோவில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(11) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பின்வரும் உரிமைகளையும் அவர்களுக்கு உரியவைகளையும் (entitlements) உறுதிசெய்யும்பொருட்டு, குறிப்பிட்ட தகுதியான திட்டங்களை அமலாக்கம் செய்வது அரசின் கடமையாகும்.

(a) பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை இலவசமாகப் பாதிக்கப்பட்டவருக்கு அல்லது புகார்தாரருக்குக் கொடுப்பது,

(b) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்ட வருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் உடனடி நிவாரணத்தைப் பணமாகவோ வேறு வகையிலோ வழங்குவது.

(c) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்ட வருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும், சாட்சிகளுக்கும் தேவையான பாதுகாப்பை வழங்குவது.

(d) வன்கொடுமைக் குற்றத்தால் ஏற்பட்ட சாவு அல்லது காயம் அல்லது சொத்து சேதம் போன்றவற்றிற்கு நிவாரணம் வழங்குவது.

(e) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்குத் தேவையான உணவு, குடிநீர், உடை, தங்குமிடம், மருத்துவ உதவி, போக்குவரத்து மற்றும் தினப்படி போன்றவற்றை ஏற்பாடு செய்து தருவது.

(f) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்ட வருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் பராமரிப்புச் செலவுகளை வழங்குவது.

(g) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு அவர் புகார் கொடுக்கும் சமயத்திலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் சமயத்திலும் இச்சட்டப்படி வன்கொடுமை குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு உரிய உரிமைகள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

(h) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்ட வருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும், சாட்சிகளுக்கும் எல்லாவித அச்சுறுத்தல்கள் மற்றும் தொல்லைகளிலிருந்தும் பாதுகாப்பு வழங்குவது.

(i) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் அல்லது அவருக்குத் துணைநிற்கும் அமைப்பு அல்லது துணைநிற்கும் தனிநபரிடம் புலன் விசாரணை, குற்றப் பத்திரிக்கை குறித்து அவற்றின் தற்போதைய நிலவரத்தைத் தெரிவிப்பதுடன், குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் அதன் முழு நகலையும் இலவசமாக வழங்குவது.

(j) மருத்துவப் பரிசோதனையின்போது தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.

(k) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் அல்லது அவருக்குத் துணைநிற்கும் அமைப்பு அல்லது துணைநிற்கும் தனிநபரிடம் சட்டப்படி பாதிக்கப்பட்டவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் கிடைக்க வேண்டிய நிவாரணம் பற்றிய தகவலைத் தருவது.

(l) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் அல்லது அவருக்குத் துணைநிற்கும் அமைப்பு அல்லது துணைநிற்கும் தனிநபருக்கும் புலன் விசாரணையும், வழக்கு விசாரணையும் நடத்தப்படும் இடம், நாள் பற்றிய தகவல்களை முன்கூட்டியே தெரிவிப்பது.

(m) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் அல்லது அவருக்குத் துணைநிற்கும் அமைப்பு அல்லது துணைநிற்கும் தனிநபரை வழக்கு விசாரணைக்குத் தயாரிக்கும் பொருட்டு அவர்களிடம் வழக்கு பற்றிய விவரங்களை எடுத்துரைத்துச் சட்ட உதவிகளை இலவசமாக வழங்குவது.

(n) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் அல்லது அவருக்குத் துணைநிற்கும் அமைப்பு அல்லது துணைநிற்கும் தனிநபர் ஆகியோருக்கு வழக்கு விசாரணையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்குச் சட்டம் குறித்துச் சொல்லுகின்ற உரிமைகள் அனைத்தையும் அவர்கள் அடையும்படி தேவையான உதவிகளைச் செய்வது.

(12) வன்கொடுமைக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரும் அவரைச் சார்ந்தவர்களும், தன்னார்வக் குழுக்கள், சமூக சேவகர்கள் அல்லது வழக்கறிஞர்கள் ஆகியோரின் உதவிகளைப் பெறுவது அவர்களின் உரிமையாகும்.

பிரிவு 16 இச்சட்டத்தின்படி கூட்டாக வன்கொடுமைக் குற்றங்கள் புரிந்தவர்களுக்குக் கூட்டு அபராதம் விதிக்க மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக வாழ்வியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955-இன் பிரிவு 10 **-A-**ன் கீழ்க் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழிமுறைகள் பொருந்தும்.

பிரிவு 17(1) வன்கொடுமைத் தடுப்பு நடவடிக்கைகள் : இச்சட்டத்தின்படி, வன்கொடுமைக் குற்றங்களை ஒரு நபரோ, சில நபர்களோ, பலரோ சேர்ந்து நிகழ்த்தலாம் என்ற தகவல்

*கிடைத்தால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் அல்லது குற்றவியல் நடுவர் அல்லது மாவட்டக் காவல்துறைத் துணைக்கண்காளிப்பாளர் ஆகிய எவரும் அந்தப்பகுதியை வன்கொடுமைகள் நிகழும் பகுதியாக பிரகடனப்படுத்த வேண்டும். வன்கொடுமைக் குற்றங்கள் நிகழாமல் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துத் தடுக்க வேண்டும்.*

*(2) குற்றவியல் நடைமுறைசட்டசத்தின்* **VIII, X** *மற்றும்* **XI** *ஆவது பகுதிகள் வழிநின்று உட்பிரிவு (1)-இல் சொல்லப்பட்டுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*(3) உட்பிரிவு (1)-இல் சொல்லப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுத்து பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த அந்தந்த மாநில அரசுகள் அதற்கான சில குறிப்பிட்ட தகுதியான திட்டங்களை அறிவித்து, அதை அரசிதழில் வெளியிட்டு உதவலாம்.*

*பிரிவு 18 குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 438 வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ்ப் பதியப்படும் வழக்குகளுக்குப் பொருந்தாது. எனவே வன்கொடுமைக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் நீதிமன்றங்கள் முன் ஜாமீன் வழங்கக்கூடாது.*

*பிரிவு 19 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 360-இன்படி மற்ற குற்றங்கள் இழைத்தவர்களுக்குப் பொருந்தக்கூடிய குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958-இன் கூறுகள் வன்கொடுமைக் குற்ற வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டவருக்கும், குற்றம் நிரூபிக்கப்பட்டவர் களுக்கும் பொருந்தாது.*

*பிரிவு 20 வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் ஒரு சிறப்புச் சட்டம் என்பதால், இது மற்ற பிற சட்டங்களைவிட மேலோங்கி நிற்கும். இச்சட்டத்தில் சொல்லப்பட்டவற்றிற்கு முரணான கூறுகள் வேறு சட்டங்களில் சொல்லப்பட்டிருந்தால் இந்தச் சட்டத்தில் உள்ளவையே சரியானதாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

**பிரிவு 21 இச்சட்டத்தை ஆற்றலுடன் அமலாக்கம் செய்வதில் அரசாங்கத்திற்குள்ள கடமை:**

*(1) மத்திய அரசு இயற்றும் விதிகளுக்கு உட்பட்டு அந்தந்த மாநில அரசுகள் இந்தச் சட்டத்தைத் தங்கள் மாநிலங்களில் வலுவாக அமல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.*

*(2) அப்படிப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள் பின்வருனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.*

(i) வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சட்ட உதவி புரிந்தும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தும் நீதி வழங்கப்படுவதை உறுதிசெய்வதாகவும்.

(ii) சாட்சிகளுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் விசாரணையின்போதும், புலன் விசாரணையின் போதும், பயணப்படியும், இதர பராமரிப்புச் செலவுகளையும் கொடுப்பதாகவும்.

(iii) வன்கொடுமையின் பாதிப்புகளுக்குள்ளான வர்களுக்குச் சமூக, பொருளாதார மறுவாழ்வை உறுதி செய்து கொடுப்பதாகவும்.

(iv) சிறப்பு அலுவலர்களை நியமித்து வழக்கு சரியான திசையில் செல்லுவதை உறுதிப்படுத்துவதாகவும்.

(v) மாநில அரசு சரியானதென கருதும்போது தேவையான குழுக்களைப் பல தளங்களில் உருவாக்கி வன்கொடுமை குற்ற நிகழ்வுகள் நிகழாமல் தடுப்பதற்கான வழிமுறைகளைச் செய்ய அந்தக் குழுக்கள் அரசுக்கு துணை நிற்குமாறு செய்யவும்.

(vi) இந்தச் சட்டத்தை முழுமையாக அமலாக்கம் செய்வதற்கு ஏற்றவகையில், அடிக்கடி இந்தச் சட்டத்தின் கூறுகள் செயலாக்கம் பெறுவது பற்றிக் கணக்கெடுப்பு செய்து பரிந்துரைகளை வழங்கவும்.

(vii) அடிக்கடி வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வாழும் பகுதிகளை அடையாளம் கண்டு சிறப்புக்கவனம் செலுத்தி தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு அம்மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதாகவும்.

(3) உட்பிரிவு (1)-இல் சொல்லப்பட்டவாறு மாநில அரசு மேற்கொள்ளும் சட்ட அமலாக்க நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து சரியான முறையில் அவை அமலாக்கம் செய்ய மத்திய அரசு துணை நிற்கலாம்.

(4) மேற்சொன்னவாறு சட்ட அமலாக்கத்திற்கு மத்திய அரசும், மாநில அரசுகளும் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகள் ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

*பிரிவு 22 நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பு: நல்ல எண்ணத்தின் அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்காக மத்திய மாநில அரசுகளின் அதிகாரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. (மத்திய, மாநில அரசுகளுக்கும், மாவட்ட நிர்வாகம் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவருக்கும் இந்தப் பாதுகாப்புப் பொருந்தும்)*

*பிரிவு 23 (1) இந்தச் சிறப்புச் சட்டத்தின் கூறுகள் சரியான முறையில் நடைமுறையாக்கம் பெறுவதற்குத் தேவையான விதிகளை மத்திய அரசு முறையான அறிவிப்பினைத் தன் அரசிதழில் அச்சிட்டு வெளியிட்டு உருவாக்கலாம்.*

*(2) அப்படி உருவாக்கப்படும் விதிகள் பாராளுமன்றம் நடவடிக்கைகளில் இருக்கும்போது அதன் இரு அவைகளிலும் வைக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அவை அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வரும்.*

# குற்றமும் தண்டனையும்

## 7. அட்டவணை போர்வை : பிரிவு 3 (2) (va))

| IPC<br>சட்ட பிரிவு | குற்றமும் தண்டனையும் |
|---|---|
| 120 A | குற்றமுறு சதிக்கான வரையறை |
| 120 B | குற்றமுறு சதிக்கான தண்டனை |
| 141 | சட்ட விரோதமாகக் கூடுதல் |
| 142 | சட்ட விரோதமாகக் கூடியவர்களில் ஒருவராக இருப்பது |
| 143 | சட்டவிரோதமாக கூடிதற்கான தண்டனை. |
| 144 | சட்ட விரோதமானகூட்டத்தில் பயங்கரமான அல்லது மரணத்தை விளைவிக்கத்தக்க ஆயுதங்களுடன் சேர்ந்திருத்தல். |
| 145 | சட்ட விரோதுமாகக் கூடியுள்ள கூட்டத்தை கலைந்து செல்லுமாறு உத்தரவிட்டபிறகும் கலையாமல் தொடர்ந்து சேர்ந்திருத்ல். |
| 146 | கலகம் செய்தல் |
| 147 | கலகம் செய்வதற்குத் தண்டனை |
| 148 | பயங்கரமான, மரணம் விளைவிக்கும் ஆயுதங்களுடன் கலகம் செய்தல். |
| 217 | பொது ஊழியர் பிறரைச் சட்டப்பூர்வமான தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டும் அல்லது சட்டப்படி கைப்பற்ற வேண்டிய சொத்தைக் கைப்பற்றாமல் விட வேண்டும் என்ற உள்நோகத்ததுடன் தாம் சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதை செய்யாமல் மீறுவது. |
| 319 | காயப்படுத்துதல். |
| 320 | கொடுங்காயம் விளைவித்தல். |
| 323 | தன்னிச்சையாகக் காயப்படுத்தும் செயலுக்குத் தண்டனை. |
| 324 | அபாயகரமான மரணம் விளைவிக்கும் கருவிகளைக் கொண்டு தன்னிச்சையாகக் காயப்படுத்துதல். |
| 325 | தன்னிச்சையாகக் கொடுங்காயம் விளைவித்தலுக்கான தண்டனை. |
| 326 B | தன்னிச்சையாக அமிலம் வீசுதல் அல்லது அமிலம் வீச முயற்சித்தல். |

| | |
|---|---|
| 332 | ஒரு பொது ஊழியரைத் தம் கடமையைச் செய்யாமல் தடுக்க வேண்டியத் தன்னிச்சையாகக் காயப்படுத்துதல். |
| 341 | எந்தவொரு நபரையும் முறையற்ற வகையில் தடுப்பதற்கான தண்டனை. |
| 354 | ஒரு பெண்ணை மானபங்கம் செய்யும் நோக்கத்துடன் தாக்குவது அல்லது குற்றமுறு பலத்தைப் பிரயோகிப்பது. |
| 354 A | பாலியல் தொந்தரவும், அதற்கான தண்டனையும். |
| 354 B | ஒரு பெண்ணின் உடைகளை பலவந்தமாகத் தாக்குதல் புரிந்து குற்றமுறு பலத்தைப் பிரயோகித்தும் களைதல். |
| 354 C | ஒரு பெண்ணை இரகசியமாக கண்காணித்தல் வாயிலாக இன்பம் காணுதல். |
| 354 D | ஒரு பெண்ணுக்கு எரிச்சலூட்டுகின்ற விதத்தில் அல்லது பயமுறுத்துகின்ற விதத்தில் நீண்ட காலமாகப் பின்பற்றிக் கண்காணிக்கின்ற செயல். |
| 359 | ஆளைக் கடத்துதல். |
| 363 | ஆளைக் கடத்துவதற்கான தண்டனை. |
| 365 | ஒருவரை இரகசியமாகச் சிறை வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவரைக் கவர்ந்து செல்வது அல்லது கடத்திச் செல்வது. |
| 376 B | சட்டரீதியாகப் பிரிந்திருக்கும் போது தனது மனைவியை ஒருவர் பாலியல்ரீதியாகத் தாக்குதல். |
| 376 C | தனது அதிகாரத்திற்குட்பட்ட ஒருவரைப் பாலியல் ரீதியாக தாக்குதல். |
| 447 | அத்துமீறி நுழையும் குற்றத்திற்குத் தண்டனை |
| 506 | குற்றங் கருதி மிரட்டும் குற்றத்திற்குத் தண்டனை. |
| 509 | ஒரு பெண் காணும்படி அல்லது கேட்கும்படி யாரேனும் ஒரு சொல்லைக் கூறுவதும், ஒலியெழுப்புவதும், சைகை காட்டுவது, அல்லது அந்தப் பெண்ணின் அந்தரங்கத்தில் குறுக்கிடுவதும், பெண்ணுக்கு நாணக்குளைவை ஏற்படுத்தும் கருத்துடனும் செயல்படுவதுமான குற்றம். |

# 9. பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான (வன்கொடுமைகள் தடுப்பு) திருத்தப்பட்ட விதிகள்-2016.

*மேற்சொன்ன சட்டம் நடைமுறையாக்கப்படு வதற்கான வழிமுறைகளைத் தெள்ளத்தெளிவாக விவரிப்பதுதான் விதிகள். எனவே சட்டத்தை அமல்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது இந்த விதிகள்தான். மேற்சொன்ன திருத்தச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் நடைமுறைப் படுத்துவது யார்? அவை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும்? பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் இழப்பீடு மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கு பொறுப்புடையவர்கள் யார்? அவற்றை எப்படி எப்போது வழங்க வேண்டும்? தொடர் வன்கொடுமைகள் நடக்கும்போது பொறுப்புள்ள அதிகாரிகள் எப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டும்? போன்ற சட்டத்தின் பிரிவுகள் அனைத்தையும் நடைமுறையாக்கம் செய்வதற்கான எல்லா வழிமுறைகளையும் விவரமாக எடுத்துவைப்பது விதிகளே. எனவே சட்டம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு இந்த விதிகளும் மிகவும் அவசியமானவை. விதிகள் இல்லாத சட்டத்தினால் எப்பயனும் விளையாது. முந்தைய சட்டமானது 1989-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டு அதற்கான விதிகள் 1995-ஆம் ஆண்டில்தான் வகுக்கப்பட்டன. அதன் காரணமாக, அச்சட்டத்தை உடனடியாக நடைமுறைப் படுத்த பல சிரமங்கள் இருந்தன. ஆனால், இப்போது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த 80 நாட்களுக்குள் அதற்கான விதிகள் வகுக்கப்பட்டு கடந்த 14.04.2016 புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் 125-ஆவது பிறந்தநாளில் நடைமுறைக்கு வந்துள்ளது சிறப்புமிக்கது. இந்த விதிகள் மேற்சொன்ன நாளில் முந்தைய சட்டப்பிரிவு 23(1)-இன் அடிப்படையில், ஏற்கனவே நடைமுறையில் இருந்த பட்டியல் சாதியினர்*

*மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள். 1995-ஆனது திருத்தியமைக்கப்பட்டு கீழ்வரும் வகையில், மத்திய அரசால் வகுத்தளிக்கப்பட்டுள்ளது. இச்சட்ட நடைமுறையாக்கத்தில் ஈடுபடும் வழக்கறிஞர்களும், களப்பணியாளர்களும் இந்த விதிகளை முழுமையாக அறிந்திருப்பது அவசியம்.*

*விதி 1(1) இந்த விதிகள் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான (வன்கொடுமைகள் தடுப்பு) திருத்தப்பட்ட விதிகள், 2016 என்று அறியப்படும்.*

*(2) இந்த விதிகள் அரசிதழில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.*

*விதி 2 வரையறைகள்: இந்த விதிகளில், உரிய சூழல் வேறுவிதமாக பொருள்கொள்ள வேண்டிய தேவையில்லாதபோது,*

(a) *'சட்டம்' என்பது பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்க எதிரான (வன்கொடுமைகள்) தடுப்புச் சட்டத்தைக் குறிக்கும்.*

(b) *'சார்ந்திருப்பவர்' என்பது கணவன் அல்லது மனைவி, குழந்தைகள், பெற்றோர், உடன்பிறந்த வர்கள் இவர்களில் யாரெல்லாம் அவர்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும், ஆதரவாகவும், பாதிக்கப்பட்டவரைச் சார்ந்து வாழ்ந்து வந்தார்களோ அவர்கள் அனைவரையும் குறிக்கும்.*

(c) *'அடையாளங்காணப்பட்ட பகுதி' என்பது எந்தப் பகுதிகளிலெல்லம் வன்கொடுமை நிகழ்வுகள் நிகழக்கூடும் என்று மாநில அரசு நம்புவதற்கு காரணமுள்ளதோ அல்லது எங்கெல்லாம் மீண்டும் வன்கொடுமைகள் நடக்கலாம் என்று மாநில அரசு கருதுகின்றதோ அந்தப் பகுதிகளெல்லாம் அடையாளங்காணப்பட்ட பகுதியாகும்.*

(d) *'அரசு சாரா அமைப்பு' என்பது பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் நலனில் அக்கறையுடன் செயல்படுவதற்கு ஏற்ற வகையில் சங்கப் பதிவுகள் சட்டம் 1860-இன் கீழோ அல்லது ஆவணங்கள் பதிவு தொடர்பான வேறு சட்டங்களில் கீழோ அல்லது வேறு வகையிலோ இயங்கும் தன்னார்வத் தொண்டு அமைப்பைக் குறிப்பதாகும்.*

(e) *'அட்டவணை' என்பது இந்த விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையைக் குறிப்பதாகும்.*

(f) ‘பிரிவு’ என்பது இச்சட்டத்தின் பிரிவுகளைக் குறிக்கும்.

(g) ‘மாநில அரசு’ என்பது மாநில அரசுகளையும், யூனியன் பிரதேசங்களைப் பொறுத்தவரையில், அதை நிர்வகிப்பதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் உறுபு 239-இன் கீழ் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் நிர்வாகியைக் குறிக்கும்.

(h) இந்த விதிகளில் காணப்படும் இன்னபிற வார்த்தைகள் மற்றும் வெளிப்பாடுகள், இந்த விதிகளில் வரையறை செய்யப்படாமல், இந்தச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டிருப்பின் அந்த வரையறைகளே இவற்றிற்கும் பொருந்துவதாகும்.

விதி 3-இன் படி ஒரு மாநில அரசு பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு.

(i) இச்சட்டம்படி விளக்கப்பட்டுள்ள வன்கொடுமைக் குற்றங்கள் நிகழக்கூடும் எனச் சந்தேகிக்கும் இடங்களை அடையாளம் காணுதல், அத்தகைய பகுதிகளை வன்கொடுமைகள் நிகழக்கூடிய பகுதி என்று அறிவித்தல்.

(ii) மாவட்ட ஆட்சியர், காவல்துறைக் கண்காணிப்பாளர் அல்லது யாதொரு சிறப்பு அலுவலரையும் மேற்சொன்ன பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிடவும் சட்ட ஒழுங்கு நிலைமையை ஆய்வு செய்யவும் பணித்தல் வேண்டும்.

(iii) தேவையெனில் குறிப்பிட்ட இடத்தில் பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்தவர், அவர்தம் நெருங்கிய உறவினர், சேவகர், பணியாளர், குடும்ப நண்பர், ஆகியோரின் ஆயுத உரிமங்களை ஆய்வு செய்து, அவ்வாயுதங்களை அரசுப் படைக்கலப் பெட்டியில் சேர்க்க வேண்டும்.

(iv) சட்டமுரணான சுடுகருவிகள் அனைத்தையும் கைப்பற்றி சட்ட முரணாக அவை உற்பத்தி செய்யப்படுதலையும் தடை செய்ய வேண்டும்.

(v) தேவையெனில், உயிர் மற்றும் உடமையின் பாதுகாப்பை முன்னிட்டு பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு ஆயுத உரிமங்கள் வழங்குதல் வேண்டும்.

(vi) *இச்சட்டத்தின் கூறுகளை நிறைவேற்ற அரசுக்கு உறுதுணையாக மாநில உயர் மட்டக் குழு, மாவட்ட மற்றும் கோட்டக் குழுக்கள், அல்லது வேண்டுமளவு தக்க பிற குழுக்களை அமைத்தல் வேண்டும்.*

(vii) *இச்சட்டத்தின் கூறுகளை நிறைவேற்ற உறுதியான நடவடிக்கைகளை அறிவுறுத்த விழிகண் (விஜிலென்ஸ்) கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல் வேண்டும்.*

(viii) *மாநிலச் சட்டங்கள், விதிகள், ஒழுங்குகள் மற்றும் இவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட திட்டங்கள் ஆகியன பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு அளிக்கும் உரிமைகள், பாதுகாப்புகள் பற்றி இவர்களுக்கு எடுத்துரைக்க குறிப்பிட்ட இடங்களிலோ வேறிடங்களிலோ விழிப்புணர்வுக் கூட்டங்களையும், கருத்துப் பட்டறைகளையும் நடத்துதல் வேண்டும்.*

(ix) *விழிப்புணர்வுக் கூட்டங்களையும், கருத்துப் பட்டறைகளையும் நடத்த தொண்டு நிறுவனங் களுக்கு நிதியளித்தும் பிற வகையாலும் உதவி செய்தல் வேண்டும்.*

(x) *குறிப்பிட்ட இடங்களில் சிறப்புக் காவல் படையணிகளை அமர்த்த வேண்டும்.*

(xi) *ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் சட்ட ஒழுங்கு, பல்வேறு குழுமங்களின் பணி, சிறப்புக் குற்றவியல் வழக்குரைஞர்கள், புலனாய்வு அதிகாரிகள், இச்சட்டத்திற்குப் பொறுப்பான பிற அலுவலர் களின் செயற்பாடுகள் இச்சட்டத்தின் கீழ்ப் பதியப்பட்ட வழக்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டும்.*

*முதல் முறையாக இந்தச்சட்டம் தலித் மற்றும் பழங்குடியின மக்களின் உயிரையும், உணர்வுகளையும், மாண்பையும், உடைமைகளையும் பாதுகாப்பதாகவும், மதிப்பதாகவும் அமைந்துள்ளது.*

**விதி 4 அரசுத் தரப்பை மேற்பார்வை செய்து அறிக்கைச் சமர்பித்தல்:**

*1. சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களில் வன்கொடுமை வழக்குகளை நடத்து வதற்கான மாவட்ட அளவில் குறைந்தது ஏழாண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றிய அனுபவமிக்க திறமையான வழக்கறிஞர் குழு அடங்கியப் பட்டியல் ஒன்றை மாவட்ட ஆட்சியரின்*

பரிந்துரையின் அடிப்படையில் மாநில அரச தயாரிக்க வேண்டும்.

(1A) அதேபோல், மாநில அரசு குற்ற வழக்கு இயக்குனரோடு அல்லது அரசுத்தரப்பு குற்றவியல் வழக்கறிஞர்களுக்கு பொறுப்பானவருடன் கலந்து ஆலோசித்து வன்கொடுமை வழக்குகளை சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களிலும் நடத்துவதற்கு சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர்கள் மற்றும் தனிப்பட்ட அரசுக் குற்றத்துறை வழக்கறிஞர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும்.

(1B) மேற்சொன்னபடி உட்பிரிவு (1) மற்றும் **(1A)** ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ளபடி அமைக்கப்படும் வழக்கறிஞர்கள் குழுக்களில் இடம்பெற்றிருப்பவர் களை மாநில அரசு அறிவிப்பு செய்து தனது அரசிதழில் வெளியிட வேண்டும். அந்தப்பட்டியலில் 3 ஆண்டுகள் வரை அவர்கள் பெயர்கள் இடம் பெற்றிருக்கும்.

2. மாவட்ட ஆட்சியரும், குற்ற வழக்கு இயக்குநரும் ஆண்டுக்கு இரண்டு முறை ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெற்று வரும் வன்கொடுமை வழக்குகளை, நியமிக்கப்பட்டிருக்கும் சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர்கள் மற்றும் தனிப்பட்ட சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர்கள் எப்படி நடத்துகிறார்கள் என்பது குறித்து ஆய்வு செய்து அது குறித்த அறிக்கையை மாநில அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. அப்படி அனுப்பப்படும் அறிக்கையில், வழக்குகளை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர்கள் மற்றும் தனிப்பட்ட சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர்களின் செயல்பாடுகள் திறமையானதாகவும், நிறைவளிப்பதாகவும் இல்லா திருந்தால், அதற்கான காரணத்தை குறிப்பிட்டு அப்படி கவனமின்றி அசட்டையாக வழக்குகளை நடத்தும் குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர்களை மாநில அரசு பட்டியலிலிருந்து நீக்கி அறிவிப்பு செய்ய வேண்டும்.

4. மாவட்ட ஆட்சியரும், மாவட்ட அளவில் குற்ற வழக்குகளுக்கு பொறுப்புடைய குற்ற வழக்கு அலுவலரும் கீழ்வருவனவற்றை ஆய்வு செய்வார்கள்.

(a) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தற்போதைய நிலை குறித்தும்,

(b) இச்சட்டத்தின் பகுதி IV-இல் குறிப்பிட்டுள்ளவாறு பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் நடைமுறையாக்கம் பெற்றிருக்கிறதா என்பது குறித்தும், ஆய்வு செய்து ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்கு முன்பே மாநில அரசுக்கும், குற்ற வழக்கு இயக்குநருக்கும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கையில், புலன் விசாரணை தொடர்பாகவும், வழக்கு விசாரணையின்போதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் குறிப்பிட வேண்டும்.

5. மேற்சொன்ன விதிகளின் உள்விதி (1)-இல் சொல்லப்பட்டவைகளைத் கடந்து, வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் விருப்பத்தின்படியும், அரசால் நியமிக்கப்பட்ட சிறப்பு வழக்கறிஞர் சரியான முறையில் சிறப்பு நீதிமன்றங்களிலும், தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களிலும், தனது வழக்கை நடத்தி நியாயம் பெற்றுத்தரமாட்டார் என்றும் சுட்டிக்காட்டும்போது, பாதிக்கப்பட்டவர் விருப்பப்படி அவர் விரும்புகின்ற வழக்கறிஞரை அரசு செலவில் நியமித்து அவரது வழக்கை நடத்த வேண்டும்.

6. அரசிதழில் அறிவிக்கப்பட்ட வழக்கறிஞர் குழுவுக்கு வன்கொடுமை வழக்குகளை நடத்துவதற்கு வழங்கப்படும் கட்டணத்தைவிட அரசுக் குற்றத்துறைச் சிறப்பு வழக்கறிஞர்களுக்கு அதிகமாக வழக்க வேண்டும்.

**விதி 5 காவல்நிலையப் பொறுப்பு அதிகாரிக்குக் கொடுக்கப்பட வேண்டிய தகவல்:**

இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள வன்கொடுமை குற்றம் தொடர்பாக வருகின்ற ஒவ்வொரு தகவலையும், அது வாய்மொழியாகத் தரப்பட்டால், காவல்நிலையப் பொறுப்பதிகாரியோ அல்லது அவரால் குறித்துச் சொல்லப்படும் அதிகாரியோ அந்தத் தகவலைப் பெற்று உடனடியாகப் புகாராக எழுதி, அதை புகார்தாரருக்கு சரியாக உள்ளதா என்றறிய வாசித்துக்காட்டி அதில் அவருடைய கையொப்பம் பெற்றும், ஒருவேளை எழுத்துப்பூர்வமான தகவலாக இருந்தால், அதில் அவருடைய கையொப்பம் பெற்றும் காவல்நிலையத்தில் பராமரிக்கப்படும் புத்தகத்தில் அதைப் பதிவு செய்ய வேண்டும்.

2. அப்படிப் பதிவு செய்யப்பட்ட தகவலின் பிரதி

*ஒன்றைப் புகார்தாரருக்கு உடனடியாக இனாமாகக் கொடுக்க வேண்டும்.*

*3. ஒருவேளை மேற்சொன்னவாறு 5(1)-இல் சொல்லப்பட்டபடி, காவல்நிலையப் பொறுப்பு அதிகாரி செய்யத் தவறும்போது, பாதிக்கப்பட்ட நபர் அந்தக் தகவல் பற்றிய விவரத்தை மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு எழுத்துப்பூர்வமாகத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அப்படி தபாலில் அனுப்பப்டும் தகவலைப் பெற்றவுடன் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் தானே நேரடியாகவோ அல்லது மாவட்டக் காவல்துறை துணைக்கண் காணிப்பாளர் வழியாகவோ தொடர்புடைய காவல்நிலையத்திற்கு எழுத்துப்பூர்வமான உத்தரவைப் பிறப்பித்து அந்தத் தகவலை முறைப்படி காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் புத்தகத்தில் பதிவு செய்து புகார்தாரருக்கு அதன் நகலை வழங்க உத்தரவிட வேண்டும்.*

**விதி 6 அதிகாரி குற்ற நிகழ்வு நடந்த இடத்தை நேரடியாகப் பார்வையிடுதல்:**

*1. எப்போதெல்லாம் மாவட்ட ஆட்சியரோ, உட்கோட்ட நடுவரோ அல்லது நிர்வாகத்துறை நடுவரோ அல்லது மாவட்டக் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளருக்கு குறையாத அதிகாரம் உள்ள காவல்துறை அதிகாரியோ தங்களது பணி எல்லைக்குள் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிராக ஏதாவது வன்கொடுமை நிகழ்வு நடைபெற்றுள்ளதாக எவரொருவர் மூலம் தகவல் பெற்றாலும், அல்லது வேறு எதன் மூலமும் அறிய வந்தாலும், உடனடியாக அவரே நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு வன்கொடுமையின் தன்மை, உயிர்ச்சேதம், சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் மற்றும் பாதிப்புக்கள் போன்றவற்றை மதிப்பீடு செய்து உடனடியாக மாநில அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்க வேண்டும்.*

*2. வன்கொடுமை நிகழ்ந்த இடத்தை நேரடியாகப் பார்வையிடும் மாவட்ட ஆட்சியரோ, உட்கோட்ட நடுவரோ அல்லது நிர்வாகத்துறை நடுவரோ அல்லது மாவடடக் காவல்துறைத் துணைக்கண்காணிப் பாளருக்கும் குறையாத அதிகாரம் உள்ள காவல்துறை அதிகாரியோ*

(i) *பாதிக்கப்பட்டோர், அவருடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் என்று நிவாரணத்திற்கு உரியவர்கள் பற்றிய பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.*

(ii) பாதிக்கப்பட்டருக்கு இழைக்கப்பட்ட வன் கொடுமைகளின் தன்மை, அவர் சொத்துக் களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் மற்றும் பாதிப்புகள் போன்றவற்றை பற்றிய விவரமான அறிக்கையைத் தயார் செய்ய வேண்டும்.

(iii) அந்தப் பகுதியில் காவல்துறையின் தீவிர கண்காணிப்புக்கு உத்தரவிட வேண்டும்.

(iv) சாட்சிகளையும், பாதிக்கப்படடவர்களுக்குத் துணைநிற்போரையும் பாதுகாப்பதற்கான வலுவான தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும்.

(v) உடனடி நிவாரணங்களைப் பாதிக்கப்பட்டவர் களுக்கு ஏற்பாடு செய்து வழங்க வேணடும்.

**விதி 7 புலனாய்வு அதிகாரி:-**

*1. இச்சட்டத்தின்படி வன்கொடுமைக் குற்றங்களைக் காவல்துறை துணைக்கண்காணிப்பாளருக்கு குறையாத அதிகாரம் பெற்ற ஒருவர்தான் புலன் விசாரணை செய்ய வேண்டும். புலன் விசாரணை அதிகாரியை நியமிக்கும் மாநில காவல்துறைத் தலைவர் / மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அப்படி ஒருவரை நியமிப்பதற்கு முன்னதாக, அவருடைய கடந்தகால அனுபவம், வன்கொடுமை வழக்கின் தன்மைகளைக் கண்டுணர்ந்து நீதியோடு செயல்படக்கூடிய கடமை உணர்வு, வழக்கின் விளைவுகளைப் புரிந்துகொள்ளும் திறன், ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.*

*2. அப்படி மேற்சொன்ன உட்பிரிவு (1)-இல் சொல்லப்பட்டவாறு நியமிக்கப்படும் புலன் விசாரணை அதிகாரி அந்த வழக்குக்கு முன்னுரிமை கொடுத்து வழக்கை 30 நாட்களுக்குள் புலனாய்வு செய்து அறிக்கையை மாவட்ட காவல் துறை கண்காணிப் பாளருக்கு அனுப்ப வேண்டும். அந்த மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் உடனடியாக அந்த அறிக்கையை மாநில காவல்துறை தலைவர் அல்லது மாநில காவல்துறை ஆணையாளருக்கும், மாநில அரசுக்கும் அனுப்ப வேண்டும். மேலும் தொடர்புடைய காவல்நிலையத்திற்கு பொறுப்புள்ள காவல்துறை அதிகாரி அவ்வழக்கின் குற்றப்பத்திரிக்கையை தொடர்புடைய சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் 60 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். (அந்த 60 நாட்கள் என்பது புலன் விசாரணை செய்தல் மற்றும் தாக்கல் செய்யும் நாளையும் உள்ளடக்கும்)*

2(A) மேற்சொன்ன உட்பிரிவு *(2)*-இன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வது *60* நாட்களுக்கு மேல் காலதாமத மானால், புலன் விசாரணை அதிகாரி அதற்குரிய காரணத்தை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய வேண்டும்.

*3.* மாநில அரசின் உள்துறைச் செயலர், ஆதி திராவிட நல மேம்பாட்டுத் துறைச் செயலர் (இந்தப் பெயர்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருக்கும்) அல்லது யூனியன் பிரதேசத்தின் நிர்வாகி, குற்றத்துறை இயக்குநர், குற்ற வழக்குகளுக்குப் பொறுப்புள்ள அதிகாரி மற்றும் மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச காவல்துறைத் தலைவர் அல்லது காவல்துறை ஆணையாளர் ஆகியோர் ஒவ்வொரு காலாண்டிலும் ஒன்றாக அமர்ந்து புலன் விசாரணை செய்யப்படும் அனைத்து வன்கொடுமை வழக்குகளின் நிலவரம் குறித்து ஆய்வு செய்வார்கள்.

**விதி 8 பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் பாதுகாப்புப் பாசறை ஏற்படுத்துதல்:**

அந்தந்த மாநில அரசுகள் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியின மக்களை வன்கொடுமைகளிலிருந்து பாதுகாப்பதற்காக, மாநில காவல்துறை தலைவர் அல்லது மண்டல காவல்துறைத் தலைவர் பொறுப்பில் அந்தந்த மாநிலத் தலைநகரங்களில் பாதுகாப்புப் பாசறை ஏற்படுத்த வேண்டும். அந்தப் பாசறை, பின்வருவனவற்றிற்குப் பொறுப்புடையதாகும்.

(i) வன்கொடுமை நிகழ்வதாக அடையாளங்காணப் பட்டப் பகுதிகளைப் பற்றிய கணக்கெடுப்பு நடத்துதல்.

(ii) அடையாளங்காணப்பட்டப் பகுதிகளில் பொது ஒழுங்கையும், அமைதியையும், பராமரித்தல்.

(iii) அடையாளங்காணப்பட்டப் பகுதிகளில், சிறப்புக் காவல்படை அல்லது சிறப்புக் காவல் சாவடியை அமைக்க மாநில அரசுக்குப் பரிந்துரை செய்தல்.

(iv) வன்கொடுமைக் குற்றங்கள் நிகழ்வதற்கான சரியான காரணங்கள் குறித்துப் புலன் விசாரணை செய்ய வேண்டும்.

(v) பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியின மக்கள் மத்தியில் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தச் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(vi) அடையாளங்காணப்பட்டப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கு

நிலவரம் குறித்து மைய அதிகாரி அல்லது சிறப்பு அதிகாரிக்குத் தகவல் தர வேண்டும்.

(vi a) இச்சட்டத்தின் பகுதி **IV A-**இல் சொல்லப்பட்டவாறு பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் தொடர்பான அனைத்து நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்ற விவரங்களை பொறுப்புடைய அதிகாரிக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் தெரிவிக்க வேண்டும்.

(vii) நேரடியாக கலவரம் நடந்த பகுதிகளைப் பார்வையிட்டுப் பல்வேறு அதிகாரிகளிடம் விசாரணை செய்ய வேண்டும்.

(viii) காவல் நிலையத்தில் உள்ள புத்தகத்தில் வன்கொடுமைப் புகார்களை காவல் நிலைய அதிகாரி பதிவு செய்ய மறுத்தால், அவ்வழக்குகள் மீது காவல்துறைக் கண்காணிப்பாளர் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய வேண்டும்.

(ix) இவ்வழக்குகளில் அலட்சியமாக இருக்கும் அரசு ஊழியர்களை விசாரணை செய்ய வேண்டும்.

(x) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலவரம் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும்.

(xi) வழக்கு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விவரத்தினை ஒவ்வொரு மாதமும் 20-ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக மாநில அரசுக்கு அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

விதி 9 மாநில அளவில் அரசுக் செயலருக்கு நிகரான பதவியில் உள்ள பட்டியல் சாதி அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த அதிகாரியை இச்சட்டத்தை முழுவீச்சில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாகப் பொறுப்பு அதிகாரியாக மாநில அரசு நியமிக்க வேண்டும். அந்த அதிகாரி அந்த மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் இச்சட்டத்தை நடைமுறையாக்கம் செய்வதில் பொறுப்புள்ள அதிகாரிகள் அனைவரின் பணிகளையும் ஒருங்கிணைப்புச் செய்வார். ஒவ்வொரு காலாண்டிலும், அந்தச் சிறப்பு அதிகாரி கீழ்வருவனவற்றைப் பரிசீலனை செய்வார்.

(i) விதி 4-இன் உட்பிரிவுகள் (2) மற்றம் (4) விதி 8-இன் பிரிவு **(xi)** போன்றவற்றின் அடிப்படையில் பெறப்பட்ட

அறிக்கைகள்.

(ii) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவான வழக்குகளின் நிலவரம் குறித்தும்.

(iii) அடையாளங்காணப்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்தும்,

(iv) பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் இழப்பீடு, நிவாரணம் போன்றவை பணமாகவோ வேறுவிதமாகவோ உறுதிசெய்யப்பட்டதா என்றும்,

(v) பொது விநியோகப் பொருட்கள், உடை, தங்கும் வசதி, சட்ட உதவி, பயணப்படி, தினப்படி, வாகன வசதிகள் போன்றவை போதிய அளவிற்கு வன்கொடுமைப் பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டதாக என்றும்,

(vi) கூடுதலாக எல்லா மாவட்டங்களிலும் பாதுகாப்புப் பாசறைகள் சரியான முறையில் செயல்படு கின்றனவா என்றும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவுகின்றனவா என்றும், பல்வேறு குழுக்களும், அரசு ஊழியர்களும் பொறுப்புடன் தங்கள் பணிகளை ஆற்றுகின்றார்களா என்றும் பரிசீலனை செய்வார்.

(vii) இச்சட்டத்தின் பகுதி **IV A-**இல் சொல்லப்பட்டவாறு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் தொடர்பான அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுதல்.

**விதி 10 சிறப்பு அதிகாரி நியமிக்கப்படுதல்:-**

வன்கொடுமை குற்றங்கள் நிகழ்வதாக அடையாளங் காணப்பட்டப் பகுதிகளில் மாவட்ட அளவில் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் பதவிக்குக் குறையாத ஒருவரைச் சிறப்பு அதிகாரியாக அந்தந்த மாநில அரசு நியமிக்க வேண்டும், அவர் மாவட்ட அளவில் இச்சட்டம் குறித்தச் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர், இச்சட்ட நடைமுறையாக்கத்திற்குப் பொறுப்புள்ள மற்ற அதிகாரிகள், பல்வேறு குழுக்கள் மற்றும் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான பாதுகாப்புப் பாசறை போன்றவைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுவார். அந்த அதிகாரி, கீழ்வருவனவற்றிற்குப் பொறுப்பாவார்.

(i) வன்காடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் இதர வசதிகளை வழங்குவதோடு

வன்கொடுமைகள் மீண்டும் நிகழாவண்ணம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

(ii) மத்திய, மாநில அரசுகளின் சட்டங்கள், திட்டங்களின் மூலம் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான பாதுகாப்பு உரிமைகள் மற்றும் இதர உதவிகள் குறித்து அவர்களுக்கு கருத்தரங்குகள் மூலம் விளக்கவும், அடையாளம் காணப்பட்ட பகுதியில் அல்லது மாவட்டத் தலைமையகங்களில் விழிப்புணர்வை மையங்களை அமைக்கவும் எற்பாடு செய்ய வேண்டும்.

(iii) இம்மையங்களை நிர்வகிக்கவும், கருத்தரங்குகளை நடத்தவும், அரசு சாரா அமைப்புகளுக்குத் தேவையான நிதி மற்றும் உதவிகளை அளித்து, அவ்வமைப்புகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டும்.

(iv) இச்சட்டத்தின் பகுதி **IV A-**இல் சொல்லப்பட்டவாறு பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் தொடர்பான அனைத்தும் அடையாளங் காணப்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப் படுதல்.

விதி 11 வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கும், அவர்களைச் சார்ந்திருப்போருக்கும், சாட்சிகளுக்கும், பயணப்படி, தினப்படி, பராமரிப்புச் செலவுகள் மற்றும் வாகன வசதிகளை ஏற்பாடு செய்வது குறித்து:

(1) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோர், அவரைச் சார்ந்தவர்கள் மற்றும் சாட்சிகளும் வன்கொடுமை வழக்குகள் தொடர்பாக விசாரணை அல்லது புலனாய்வு நடைபெறும் இடத்திற்கு, அவர்கள் தங்கியிருக்கும் இடத்திலிருந்து வந்துபோக செலவாகும் எக்ஸ்பிரஸ் / மெயில் / பாசஞ்சர் ரயில் இரண்டாம் வகுப்புக் கட்டணத்தை அல்லது பஸ் கட்டணத்தை அல்லது வாடகைக் கார் கட்டணத்தை அரசே அளிக்க வேண்டும்.

(2) புலனாய்வு அதிகாரிகள், காவல்துறைக் கண்காணிப்பாளர், காவல்துறைத் துணைக்கண் காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர் ஆகியோரை வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவரைச் சார்ந்தவர்களும் சாட்சிகளும் சென்று பார்க்கத் தேவையான போக்குவரத்து வசதிகளை அரசே ஏற்பாடு செய்ய வேண்டும்.

(3) பெண் சாட்சிகள், வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள் அல்லது அவரைச் சார்ந்திருக்கும் பெண் அல்லது சிறுவர், 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் அல்லது 40 சதவீதம்

அல்லது அதற்கு மேலும் உடல் ஊனமுற்றோர் தாங்கள் விரும்பும் ஓர் உதவியாளரைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு வன்கொடுமை வழக்குகள் தொடர்பான விசாரணை, புலனாய்வு விசாரணை அல்லது நீதிமன்ற வழக்கு விசாரணைக்குச் செல்ல அனுமதி உண்டு. பாதிக்கப்பட்டோருக்கும், சாட்சிகளுக்கும் வழங்கப்படும் பயணப்படி மற்றும் பராமரிப்புச் செலவு உதவியாளர்களுக்கும் வழங்கப்படும்.

(4) வன்கொடுமை குறித்த வழக்கு விசாரணை, புலன் விசாரணை ஆகியவற்றுக்கு வரும் சாட்சிகள் பாதிக்கபட்டோர், அவரைச் சார்ந்திருப்போர் மற்றும் அவர்களது உதவியாளர்கள் ஆகியோருக்கு வழக்குத் தொடர்பாக அவர்கள் வீட்டை விட்டு வெளியே இருக்கும் நாட்களுக்கு தினசரி பராமரிப்புச் செலவு அளிக்கப்படவேண்டும். அத்தொகையானது, வேளாண் கூலியாட்களுக்கு மாநில அரசால் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சக் கூலிக்குக் குறையாத தொகையாக இருக்க வேண்டும்.

(5) சாட்சிகள், பாதிக்கப்பட்டோர், அவரைச் சார்ந்தவரக்ள் மற்றும் உதவியாளர்களுக்கு மேலே குறிப்பிட்ட தினசரி பராமரிப்புச் செலவுத் தொகையுடன், உணவுக்காக மாறிவரும் நிலைமைக்கு ஏற்ப மாநில அரசு நிர்ணயித்துள்ள தொகையை வழங்க வேண்டும்.

(6) மேற்குறிப்பிட்ட தொகையை மாவட்ட ஆட்சித் தலைவரோ, கோட்டாட்சியரோ அல்லது வட்டாட்சியரோ வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தொகை மூன்று நாட்களுக்குள் கிடைப்பதற்கு இவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(7) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவச் செலவு, சிறப்பு மருத்துவ ஆலோசனை, ரத்தத்தைச் செலுத்துதல், அவசியமான உடைகளை மாற்றுதல், உணவு மற்றும் பழங்கள் ஆகியவற்றுக்கான செலவுத் தொகையை அரசே ஈடு செய்ய வேண்டும். மருத்துவமனை அதிகாரிகளைப் பார்க்கச் சென்றதற்கும் போக்குவரத்துப்படி, தினப்படி, பராமரிப்புச் செலவுகள் ஆகியவை வழங்கப்பட வேண்டம்.

**விதி 12 மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்:**

(1) மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் வன்கொடுமை நிகழ்ந்த பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு உயிர்ச்

*சேதம், சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகள், பாதிக்கப்பட்டவர்கள், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் யாரெல்லாம் நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களோ அவர்களின் பட்டியலை எடுக்க வேண்டும்.*

*(2) மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் சரியான சட்டப் பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கை அந்த சரகத்தின் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படு வதையும், குற்றம் செய்தவர்களை உடனடியாகக் கைது செய்யப்படுவதையும் உறதிசெய்ய வேண்டும்.*

*(3) மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் நேரடியாக பார்வையிட்ட பிறகு, உடனடியாக அந்தக் குற்றத்தைப் புலனாய்வு செய்வதற்குத் தகுதியுள்ள ஓர் அதிகாரியை நியமித்துவிட்டு, தேவையான காவல்படையைப் பாதுகாப்புக்கு அந்தப்பகுதியில் அமர்த்தி வன்கொடுமைக் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.*

*(4) மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது கோட்டாட்சியர் அல்லது வேறு எந்த நிர்வாக நடுவரும் இந்தச் சட்டத்தின் விதிகளில் இணைக்கப்பட்டுள்ள 1 மற்றும் 2வது அட்டவணைகளில் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளபடி உடனடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிவாரணங்களை நிதியாகவும், வேறுவகையாகவும் ஏழு நாட்களுக்குள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நிவாரணங்கள் உணவு, குடிநீர், உடை, தங்குமிடம், மருத்துவ உதவி, போக்குவரத்து வசதிகள் மற்றும் இதர அத்தியாவசியமான மனித வாழ்வுக்குத் தேவையானவை களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.*

(4A) *மேற்கண்ட உட்பிரிவு (4)-இல் சொல்லப் பட்டுள்ளவாறு நிவாரணங்களை வழங்குவதற்கு ஏற்றவகையில் உடனடியாக அரசு கருவூலத்திலிருந்து தேவையான பணத்தை எடுக்க உரிய மாநில அரசோ அல்லது யூனியன் பிரதேச நிர்வாகியோ தொடர்புடைய மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.*

(4B) *இச்சட்டத்தின் பிரிவு* **15A** *-ன் உட்பரிவு 6-இன் உட்பிரிவு* **C***-இல் சொல்லப்பட்டுள்ளவாறு வன்கொடுமை வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம், புலன் விசாரணை, பொது விசாரணை மற்றும் வழக்கு விசாரணைகளின் போது பாதிக்கப் பட்டவரின்*

*சமூக பொருளாதார மறுவாழ்வுக்கு ஏற்பாடு செய்யலாம்.*

*(5) மேற்சொன்ன உட்பிரிவு (4)-இல் சொல்லப்பட்ட நிதி மற்றும் நிவாரணம் மனித உயிரிழப்பு அல்லது சொத்தழிப்பு அல்லது சேதத்திற்கு வழங்கப்படும்போது, அது அவற்றிற்காக வேறு சட்டங்களில் இழப்பீடு பெறுவதைப் பாதிக்காது. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி மற்றும் நிவாரணங்கள் பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரைச் சார்ந்திருப்போர் ஏனைய சட்டங்களின் அடிப்படையில் இழப்பீடு கோருவதை எவ்வகையிலும் பாதிக்காது.*

*(6) மேற்சொன்ன உட்பிரிவு (4)-இல் சொல்லப்பட்ட நிதி மற்றும் வேறுவகையான நிவாரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவரோ அல்லது கோட்டாட்சியரோ அல்லது நிர்வாக நடுவரோ இச்சட்டத்தின் விதிகளில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளின் அடிப்படையில் வழங்க வேண்டும்.*

*(7) மேற்சொன்ன வகையில் நிவாரணங்களை வழங்கிய பிறகு அவ்வாறு நிவாரணம் வழங்கியவர் அது குறித்த அறிக்கையை சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம் வழங்கப்பட்ட நிவாரணம் குறித்து நிறைவடையா விட்டால், தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்து சட்ட ரீதியான நிவாரணங்களை நிதியாகவோ, வேறு வகையிலோ கூடுதலாக வழங்குவதற்கு உத்தரவிடலாம்.*

**விதி 13 வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பான பணிகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஆதிகாரிகளையும், பிற ஊழியர்களையும் தெரிவு செய்தல் தொடர்பானது.**

*(1) வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பான பணிகளை நிறைவேற்றுவதற்காக வன்கொடுமை நிகழும் பகுதிகளில் நியமிக்கப்படும் நிர்வாக அதிகாரிகளும், மற்ற அரசு ஊழியர்களும் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருடைய பிரச்சினைகள் குறித்த அறிவும் அக்கறையும் உள்ளவர்களாக இருப்பதை அந்தந்த மாநில அரசுகள் உறுதிசெய்ய வேண்டும்.*

*(2) மேற்சொன்னவாறு நியமிக்கப்படும் அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்களில் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தச் சார்ந்தவர்கள் தேவையான அளவிற்கு இடம்பெற்றிருப்பதையும் அந்தந்த மாநில அரசுகள் உறுதிசெய்ய வேண்டும், குறிப்பாக, காவல் நிலையங்கள் மற்றும்*

காவல் சாவடிகளை அமைக்கும்போது இதை உறுதிசெய்ய வேண்டும்.

**விதி 14 மாநில அரசின் குறிக்கப்பட்ட கடமைகள் ; (நிதி ஒதுக்குதல், ஆய்வு செய்தல்)**

*(1) அந்தந்த மாநில அரசுகள் தங்களின் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வன்கொடுமையால் பாதிக்கப்படுபவர் களுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வை உறுதிசெய்வதற்காக தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். கூடுதலாக, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் நிதியை முழுமையாகப் பெறும்பொருட்டு, சட்டத்தின் பிரிவு* 15A- *இன் உட்பிரிவு (11) மற்றும் சட்டத்தின் பகுதி* IVA-*இன் சொல்லப்பட்டுள்ளவாறு அவர்களின் உரிமைகளையும், அவர்களுக்கு உரியவற்றையும் பெறுவதற்கு உரிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.*

*(2) அந்தந்த மாநில அரசுகள் ஆண்டுக்கு இரண்டு முறை ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் இச்சட்டம் தொடர்பான வழக்குகளில் சட்டப்பிரிவு 15-இன் கீழ் நியமிக்கப்பட்ட சிறப்பு குற்றத்துறை அரசு வழக்கறிஞர்கள் மற்றும் தனிப்பட்ட சிறப்பு குற்றத்துறை அரசு வழக்கறிஞர்களின் திறன், பெறப்பட்ட பல்வேறு அறிக்கைகள், புலன் விசாரணை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சியர், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட வன்கொடுமை தடுப்பு நடவடிக்கைகள், வழங்கப்பட்ட நிவாரணம் மற்றும் மறுவாழ்வு ஏற்பாடுகள் போன்றவற்றையும், அதிகாரிகள் கடமையாற்றாமல் விட்ட நிகழ்வுகள் பற்றியும் மறு ஆய்வு செய்ய வேண்டும்.*

**விதி 15 மாநில அரசு வகுக்கும் மாதிரி எதிர்பார் திட்டம்:**

*(1) இந்தச் சட்டத்தின் கூறுகளைச் சிறப்பான விதத்தில் அமலாக்கம் செய்யவேண்டி அந்தந்த மாநில அரசு ஒரு திட்டத்தை வகுத்து அதை அறிவிப்பு செய்து தனது அரசிதழில் வெளியிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். அதில் இச்சட்டம் குறித்து ஒவ்வொரு துறையிலும் வெவ்வேறு அதிகாரத்தில் இருக்கின்ற அதிகாரிகள், அரசு ஊழியர்கள், ஊரக மற்றும் நகர்ப்புறத்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்களில் பணியாற்றுபவர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவை ஆற்ற வேண்டிய கடமைகளையும், பொறுப்புக்களையும் தெளிவாக வரையறுத்துக் காட்ட வேண்டும். அந்த மாதிரி எதிர்பார்*

திட்டம் பின்வருகின்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

(a) உடனடி நிவாரணத்தைப் பணமாகவோ அல்லது வேறுவகையிலோ அல்லது இரண்டும் கலந்தோ வழங்குவதற்கான தெளிவான திட்டம்.

(aa) பாதிக்கப்பட்டர்கள் மற்றும் சாட்சிகள் நீதியை முழுமையாகப் பெறும்பொருட்டு, சட்டத்தின் பிரிவு **15A-**இன் உட்பிரிவு (11) மற்றும் சட்டத்தின் பகுதி **IV A-**இல் சொல்லப்பட்டுள்ளவாறு அவர்களின் உரிமைகளையும், அவர்களுக்கு உரியவற்றையும் பெறுவதற்கு உரிய திட்டம்.

(b) விவசாய நிலம் மற்றும் வீட்டுமனைகளை ஒதுக்குவதற்கான திட்டம்.

(c) மறுவாழ்வு குறித்த திட்ட வரைவு.

(d) பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தில் அவரைச் சார்ந்திருக்கின்ற குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு அரசு நிர்வாகத்தில் அல்லது அரசு சார்ந்த அமைப்பில் வேலை வழங்குவதற்கான திட்டம்.

(e) பாதிக்கப்பட்டவரின் விதவை மனைவி, அவருடைய குழந்தைகள், அவரைச் சார்ந்திருக் கின்ற முதியோர், ஊனமுற்றோர் ஆகியோருக்கு உதவித்தொகை வழங்குவதற்கான திட்டம்.

(f) சட்டப்படியாகக் கண்டிப்பாகப் பாதிக்கப்பட்ட வருக்குக் கொடுக்க வேண்டிய இழப்பீடு.

(g) பாதிக்கப்பட்டவரின் சமூகப்பொருளாதார நிலையை மேம் படுத்துவதற்கான திட்டம்.

(h) பாதிக்கப்பட்டவரின் குடும்பத்திற்குச் செங்கல் / கருங்கல் வீடு கட்டிக்கொடுப்பதற்கான திட்டம்.

(i) மேற்சொன்னவற்றோடு பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தார் வாழ்விடங்களில் மருத்துவ வசதிகள், அத்தியாவசிப் பண்டங்கள் கிடைக்கச் செய்தல், குடிநீர், மயானம், அணுகுசாலைகள் போன்றவற்றை ஏற்படுத்தித் தருவதற்கான திட்டங்கள்.

(2) மாநில அரசு எதிர்பார் திட்டத்தை உருவாக்கியவுடன் அதன் ஒரு பிரதியை மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறைக்கும், சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல்

*அமைச்சகத்திற்கும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், கோட்டாட் சியர்களுக்கும், மண்டலக் காவல்துறைக்தலைவர் களுக்கும், எல்லா மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.*

**விதி 16 மாநில அளவிலான விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழுவினை அமைத்தல்:**

*(1) அந்தந்த மாநில அரசு 25-க்கும் மிகாத கீழ்க்கண்ட நபர்களைக் கொண்டு ஓர் உயர்நிலை விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழுவை உருவாக்கும்.*

(i) *முதலமைச்சர் அல்லது நிர்வாகி தலைவர் (ஒருவேளை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறையிலிருக்கும் மாநிலமாக இருந்தால் மாநில ஆளுநர் தலைவராக இருப்பார்)*

(ii) *உள்துறை அமைச்சர், நிதி அமைச்சர் மற்றும் ஆதிதிராவிடர் நலன் மற்றும் மேம்பாட்டுக்கு பொறுப்புள்ள அமைச்சர்(கள்) - உறுப்பினர்கள் (ஒருவேளை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறையிலிருக்கும் மாநிலமாக இருந்தால் மாநில ஆளுநரின் ஆலோசகர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்)*

(iii) *ஒரு மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடி இனத்தைச் சார்ந்த எல்லா பாராளுமன்ற / சட்டமன்ற / சட்டமன்ற மேலவை உறுப்பின்களும் - உறுப்பினர்கள்.*

(iv) *தலைமைச் செயலர், உள்துறைச்செயலர், காவல் துறைத் தலைவர், தேசிய பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான ஆணையத்தின் இயக்குநர் / இணை இயக்குநர் - உறுப்பினர்கள்.*

(v) *பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடி இனத்திற்கான நலன் மற்றும் மேம்பாட்டுத் துறையின் செயலர் அமைப்பாளர்.*

*(2) இந்த உயர்மட்ட விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழுவானது குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரண்டு முறையாவது, பொதுவாக சனவரி மற்றும் ஜுலை மாதங்களில் கூடும். அப்போது இச்சட்டத்தின் நடைமுறை குறித்த அனைத்து அம்சங்களையும் ஆய்வு செய்யும். குறிப்பாக நிவாரணம், மறுவாழ்வு வசதிகள் உரியவர்களுக்குச் சென்றடைந்ததா என்பது பற்றியும், பாதிக்கப்பட்டவர்கள் உரியவர்களுக்குச்*

*சென்றடைந்ததா என்பது பற்றியும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு சட்டத்தின் பிரிவு 15***A***-இன் உட்பிரிவு (11) மற்றும் சட்டத்தின் பகுதி* **IVA***-இல் சொல்லப் பட்டுள்ளவாறு அவர்களின் உரிமகளையும், அவர்களுக்கு உரியவைகளும் வழங்கப்பட்டதா என்பது பற்றியும், வன்கொடுமை வழக்கு விசாரணைகள் சரியான விதத்தில் செல்கிறதா என்றும், மற்ற பிற தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் அமைப்புக்கள் இச்சட்டம் தொடர்பான தத்தமது கடமைகளயும், பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்றுகின்றனவா என்பது பற்றியும் ஆய்வு செய்யும்.*

## விதி 17 மாவட்ட அளவிலான விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழுவினை அமைத்தல்.

*(1) மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாவட்ட அளவிலான விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழுவினை அதைத்து இச்சட்டத்தின் நடைமுறையாக்கம் பற்றியும், பாதிக்கப்பட்வர்கள் மற்றும் சாட்சிகள் சட்டத்தின் பிரிவு* 15A*-இன் உட்பிரிவு (11) மற்றும் சட்டத்தின் பகுதி* IVA*-இல் சொல்லப்பட்டுள்ளவாறு அவர்களின் உரிமகளையும், அவர்களுக்கு உரியவைகள் பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்ய வேண்டும். குறிப்பாக நிவாரணம், மறுவாழ்வு வசதிகள் உரியவர்களுக்கு சென்றடைந்ததா என்பது பற்றியும், வன்கொடுமை வழக்கு விசாரணைகள் சரியான விதத்தில் செல்கின்றதா என்றும், மற்ற பிற தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் அமைப்புக்கள் இச்சட்டம் தொடர்பான தத்தமது கடமைகளையும், பொறுப்பு களையும் சரிவர நிறைவேற்றுகின்றார்களா என்பது பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும்.*

*(2) மாவட்ட அளவிலான விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழுவில் அந்த மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற / சட்டமன்ற / சட்ட மேலவை உறுப்பினர்கள், மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடி இனத்தைச் சார்ந்த மூன்று குரூப்* A *அதிகாரிகள்/மாநில அரசின் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகள், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடி இனத்தைச் சார்ந்த அதிகாரப்பூர்வமில்லாத ஐந்து உறுப்பினர்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடி இனத்தைச் சாராத தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு தொடர்புடைய மூன்று நபர்கள் ஆகியோர் இடம் பெற்றிருப்பர்.*

மாவட்ட ஆட்சித்தலைவர் அதன் தலைவராகவும், சமூக நல அலுவலர் அதன் செயல் உறுப்பினராகவும் இருப்பார்கள்.

(3) மாவட்ட அளவிலான விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது மேற்சொன்ன அலுவல் நிமித்தமாகக் கூடி விவாதிக்கும்.

## 17A கோட்ட அளவிலான விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழுவினை அமைத்தல்.

(1) மாவட்டத்தில் உள்ள எல்லா கோட்டங்களிலும், அந்தந்த கோட்டாட்சியர் கோட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழுவினை அமைத்து இச்சட்டத்தின் நடைமுறையாக்கம் பற்றியும், பாதிக்கப்பட்டர்கள் மற்றும் சாட்சிகள் சட்டத்தின் பிரிவு 15A-இன் உட்பிரிவு (11) மற்றும் சட்டத்தின் பகுதி IVA-இல் சொல்லப்பட்டுள்ளவாறு அவர்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு உரியவைகள் பற்றியும் கோட்ட அளவில் ஆய்வு செய்ய வேண்டும். குறிப்பாக நிவாரணம், மறுவாழ்வு வசதிகள் உரியவர்களுக்கு சென்றடைந்ததா என்பது பற்றியும், வன்கொடுமை வழக்கு விசாரணைகள் சரியான விதத்தில் செல்கிறதா என்றும், மற்ற பிற தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் அமைப்புக்கள் இச்சட்டம் தொடர்பான, தத்தமது கடமைகளையும், பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்றுகின்றார்களா என்பது பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும்.

(2) கோட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழுவில் அந்த கோட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த சட்டமன்ற / சட்ட மேலவை உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் இனத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், மாவட்டக் காவல்துறை துணைக்கண்காணிப்பாளர், தாசில்தார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடி இனத்தைச் சார்ந்த அதிகாரப்பூர்வமில்லாத இரண்டுக்கு குறையாத உறுப்பினர்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் இனத்தைச் சாராத தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு தொடர்புடைய இரண்டுக்குக் குறையாத நபர்கள் ஆகியோர் இடம் பெற்றிருப்பர்.

(3) கோட்டாட்சியர் அதன் தலைவராகவும், வட்டார

*வளர்ச்சி அலுவலர் அதன் செயல் உறுப்பினராகவும் இருப்பார்கள்.*

*(4) கோட்ட அளவிலான விழிகண் (விஜிலென்ஸ்) மற்றும் கண்காணிப்புக் குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது மேற்சொன்ன அலுவல் நிமிர்த்தமாகக் கூடி விவாதிக்கும்.*

**விதி 18 ஆண்டறிக்கைக்கான பொருட்பாடுகள்:**

*மாநில அரசு ஒவ்வொரு ஆண்டும் சூலை 1-ஆம் தேதிக்கு முன்னர் இச்சட்டத்தின் நடைமுறையாக்கத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பல்வேறு திட்டங்கள், கடந்த ஆண்டு திட்டமிடப்பட்ட எதிர்காலத் திட்டங்கள் போன்றவை குறித்த அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.*

## 10. அட்டவணை இணைப்பு I
## வன்கொடுமைக் குற்றங்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்த நடைமுறை விதிகள் (விதி 12(4) நடைமுறைக்கு வந்துள்ளது)

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 1. | அருவருப்பான அல்லது உண்ணத்தகாத எதையும் வாயில் வைப்பது (பிரிவு 3(1) (a) | பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 1,00,000 கீழ் வருமாறு வழங்கப்பட வேண்டும். |
| 2. | மனித மலம், கழிவுப் பொருட்கள், செத்த விலங்கு, அருவருப்பான எந்தவொரு பொருளையும் கொட்டுவதற்கு பிரிவு 3(1) (b) | (i) 2 மற்றும் 3-ஆம் வகைக் குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் 10% - 1,4,5ஆம் வகைக் குற்றங்களுக்கு 25% வழங்கப்பட வேண்டும். |
| 3. | இழிவுபடுத்தும் நோக்கிலோ அல்லது வெறுப்படையச் செய்யும் எண்ணத்திலோ மனித மலம், கழிவுப் பொருட்கள், செத்த விலங்குகளையோ கொட்டுவது பிரிவு 3(1)(c) | (ii) நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது 50% |
| 4. | செருப்பு மாலை அணிவித்தல் அல்லது உடம்பிலிருந்து உடைகளை முற்றிலுமாகவோ அல்லது அரைகுறையாகவோ களைந்துவிட்டு ஊர்வலமாக நடத்திச் செல்லுதல் பிரிவு 3(1)(d) | (iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கும்போது 2 மற்றும் 3-ஆம் வகைத் குற்றங்களுக்கு 40%மும் 1,4, மற்றும் 5ஆம் வகைக் குற்றங்களுக்கு 25%மும் வழங்கப்பட வேண்டும். |
| 5. | கட்டாயப்படுத்தி உடைகளைக் களைச் செய்வது, அல்லது மொட்டையடித்தல், மீசையை மழித்தல், முகத்திலோ, உடம்பிலோ சாயம் பூசுதல் பிரிவு 3(1)(e) | |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 6. | சட்ட முரணாக நிலத்தைக் கையகப்படுத்துதல் அல்லது பயிரிடுதல் (பிரிவு 3(1)(f) | நிலம் சொத்து, நீர்வழி, வேளாண்மை போன்ற வற்றிக்கு ஏற்பட்ட பாதிப்புகள் அரசு செவில் சரி செய்து கொடுக்கப்பட வேண்டும் மேலும் பாதிக்கப்படவரக்கு ரூ. 1,00,000/- கீழ்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 7. | தவறான முறையில் நிலம் / சொத்திலிருந்து வெளியேற்றுதல் அல்லது அனுபவ உரிமை மற்றும் வன உரிமையில் தலையிடவது பிரிவு 3(1)(g) | |
| 8. | கட்டாயப்படுத்தி வேலை செய்ய வைப்பது அல்லது கொத்தடிமையாக நடத்துவது அல்லது பிச்சையெடுக்க வைப்பது பிரிவு 3(1)(h) | |
| 9. | கட்டாயப்படுத்தி மனித உடலையோ அல்லது செத்த விலங்கையோ அகற்றச் செய்வது அல்லது பிணத்திற்கு குழி தோண்டச் செய்தல் பிரிவு 3(1)(i) | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.1,00,000/- கீழ்க்கண்டவாறு வழங்கப்பட வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 10. | கையால் மலம் அள்ள வைத்தல் அல்லது அந்தப் பணியில் நியமித்தல் பிரிவு 3(1)(j) | |
| 11. | பட்டியல் இனத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை ஒரு தேவதாசியாக அல்லது அதுபோன்ற நடைமுறைகளுக்கு உட்படுத்துவது பிரிவு 3(1)(k) | |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 12 | சட்ட முரணாக நிலத்தைக் கையகப்படுத்துதல் அல்லது பயிரிடுதல் (பிரிவு 3(1)(f)(1) | பாதிக்கப்படவர்களுக்கு ரூ. 85,000/- கீழ்வருமாறு வழங்கப்பட வேண்டும். (i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25% (ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50% (iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 13. | உள்ளாட்சி அமைப்பில் பதவி வகிப்பவரை அச்சுறுத்துதல், அல்லது அவர் தம் கடமையைச் செய்வதற்கு தடைகளை ஏற்படுத்துதல் பிரிவு 3(1) (m) | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.85,000/- அல்லது வழக்குச் செலவு மற்றும் வழக்கால் ஏற்பட்ட பாதிப்பு இதில் எது குறைவானதோ அதை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட வேண்டும். (i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25% (ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50% (iii)கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 14. | தேர்தல் வன்முறைக்குப் பிறகு சமூக-பொருளாதார புறக்கணிப்பு செய்வது பிரிவு 3(1)(n) | |
| 15. | வாக்களித்தற்கோ குறிப்பிட்டுச் சொன்னவருக்கு வாக்களிக்காமல் விட்டதற்கோ அவருக்கெதிராக வன்கொடுமை நிகழ்த்துவதற்கு பிரிவு 3(1) (o) | |
| 16. | பொய்யாக, ஆபத்தான, வீணாண வழக்கு அல்லது பொய்க்குற்றம் சுமத்தி தேவையற்ற வழக்கைத் தொடுப்பதற்கு பிரிவு 3(1) (p) | |

<table>
<tr><th>வ. எண்</th><th>வன்கொடுமை</th><th>குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும்</th></tr>
<tr><td>17</td><td>அரசு ஊழியரிடம் பொய்யான மற்றும் அற்பமான தகவல்களைக் கொடுப்பது (பிரிவு 3(1)(q)</td><td>பாதிக்கப்படவர்களுக்கு ரூ. 1,00,000/- அல்லது வழக்குச் செலவு மற்றும் வழக்கால் ஏற்பட்ட பாதிப்பு இவற்றில் எது குறைவானதோ அந்தத் தொகையைக் கீழ்கண்டவாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட உடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட உடன் 50%</td></tr>
<tr><td>18.</td><td>இழிவுபடுத்தும் நோக்கத்தோடு அல்லது அவமானமுறச் செய்வதற்காக அல்லுது அச்சுறுத்திப் பொது இடத்தில் வைத்து அவமரியாதை செய்வதற்கு பிரிவு 3(1)(r)</td><td rowspan="2">(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% பாதிக்கப்பட்ட வர்களுக்கு ரூ.1,00,000/- கீழ்க்கண்டவாறு வழங்கப்பட வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட உடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட உடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25%</td></tr>
<tr><td>19.</td><td>பொது இடத்தில் வைத்து சாதிப் பெயரை சொல்லிக் கேவலப்படுத்துவது (பிரிவு 3(1)(s)</td></tr>
</table>

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 20. | மேன்மையானதாக மிகவும் மதித்துப் போற்றக்கூடிய ஒன்றை அழிப்பது அல்லது சேதப்படுத்துவது அல்லது அவமரியாதை செய்வது பிரிவு 3(1)(t) | |
| 21. | பகை, வெறுப்பு அல்லது கெட்ட எண்ணத்தை வளர்த்தெடுப்பதற்கு (பிரிவு 3(1)(u) | |
| 22. | பட்டியல் சாதியினர் மதித்துப் போற்றும் உயிர்நீத்தவர்களை வார்த்தைகளால் அவமதித்தல் (பிரிவு 3(1)(v) | |
| 23. | பட்டியல் இனத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை குற்றமுறு உள்நோகத்தத்துடன் அப்பெண்ணின் சம்மதமின்றி பாலியல் இச்சையுடன் தொடுதல் மற்றும் பிற சைகைகளைக் காட்டுதல் (பிரிவு 3(1)(w) | பாதிக்கப்படவர்களுக்கு ரூ. 2,00,000/- கீழ்கண்டவாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 24. | இந்தியத் தண்டனைச் சட்டம் (45/1860)—இன் பிரிவு 326B —இன்படி அமிலம் வீசுதல் அல்லது அமிலம் வீச முயற்சித்தல் (பிரிவு 3(2) (va) | (a) 2 சதவிகிதத்திற்கு மேல் தீக்காயம் முகத்தில் ஏற் பட்டாலும், அல்லது கண், காது, மூக்கு, வாய் போன்ற வற்றின் செயல்திறன் குறைவு ஏற்பட்டாலும், அல்லது 30 சதவீகிதத்திற்கு மேல் உடலில் தீக்காயம் ஏற்பட்டிருந்தாலும் ரூ. 8,25,000/—யும்<br>(b) 10 முதல்30 சதவிகிதத்திற்கு காயம் உடலில் ஏற்பட்டி ருப்பின் ரூ. 4,50,000/—ம்<br>(c) முகத்தில் இல்லாத உடலில் 10 சதவிகித்திற்கு குறைவான தீக்காயம் ஏற்பட்டிருந் தால் ரூ. 85,000/—ம்<br>இவற்றோடு மாநில அரசு பாதிக்கப்பட்டவரின் சிகிச்சை செலவு முழுவதையும் ஏற்க வேண்டும். மேற் சொன்ன நஷ்டஈடு கீழ்கண்ட வாறு வழங்கப்பட வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுன் 50%.<br>(ii) மருத்துவரின் மருத்துவ அறிக்கை பெற்றவுடன் 50% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 25. | இந்தியத் தண்டனைச் சட்டம் 354-இன்படி பெண்ணை மானபங்கம் செய்யும் குற்றமுறு எண்ணத்துடன் தாக்குதல் (பிரிவு 3(2) (va) உடன் சேர்த்து. | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2,00,000/-கீழ்வறுமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 26. | இந்தியத் தண்டனைச் சட்டம் 354-A இன்படி பாலியல் தொந்தரவு மற்றும் அதற்குரிய தண்டனை (பிரிவு 3(2) (va) உடன் சேர்த்து. | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2,00,000/-கீழ்வறுமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 27. | இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 354Bஒரு பெண்ணின் ஆடையைக் களைவதற்காக தாக்கி குற்றமுறு பலத்தை உபயோ கித்தல் (பிரிவு 3(2)(va) உடன் சேர்த்து. | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2,00,000/-கீழ்வறுமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 10%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 28. | இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 354C ஒரு பெண்ணை மறைத்திருந்து கண்காணித்தல் (பிரிவு 3(2)(va) உடன் சேர்த்து வாசித்து. | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2,00,000/-கீழ்வறுமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 10%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க் கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 40% |
| 29. | இந்தியத் தண்டனைச் சட்டம் 354D பெண்ணை அவருக்குத் தெரியாமல் பின் தொடருதல் (பிரிவு 3(2)(va) உடன் சேர்த்து வாசித்து. | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2,00,000/-கீழ்வறுமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 10%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க் கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 40% |
| 30. | இந்தியத் தண்டனைச் சட்டம் 354B பிரிந்திருக் கும்போது மனைவியை பலவந்தம் செய்து வன்புணர்ச்சி செய்தல் (பிரிவு 3(2)(va) உடன் சேர்த்து வாசித்து. | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2,00,000/-கீழ்வறுமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 50%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 25%<br>(iii) கீழ்க் கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 31. | இந்தியத் தண்டனைச் சட்டம் 376C தனது அதிகாரத் திற்குட்பட்ட பெண்ணுடன் பலவந்தமான வன்புணர்வு கொள்ளுதல் (பிரிவு 3(2)(va) உடன் சேர்த்து வாசித்து. | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.4,00,000/-கீழ்வறுமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 50%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 25%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 32. | இந்தியத் தண்டனைச் சட்டம் 509 இன்படி பெண்ணுக்கு நாணக் குலைவு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வார்த்தை கள் மூலம்அல்லது சைகைகள் மூலம் (பிரிவு 3(2)(va) உடன் சேர்த்து வாசித்து. | பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2,00,000/-கீழ்வறுமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 33. | நீர்நிலைகளை சேதப்படுத்துதல் அல்லது மாசுபடுத்துதல் (பிரிவு 3(1) (x) | முழுமையாக நீர் ஆதாரங்கள் அரசு செலவில் சரி செய்து கொடுக்கப்பட வேண்டும்.<br>ரூ. 85,000/— மாவட்ட ஆட்சியர் கணக்கில் செலுத்தப்பட்டு பட்டியலினத்தாரின் நலனுக்கான நிதியோடு சேர்த்துக் கொள்ளப்படலாம். |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 34. | பாரம்பரிய பாதை உரிமையை பொது இடங்களில் மறுத்தல் (பிரிவு 3(1)(y) | பாதையுரிமை அரசு செலவில் மீட்டுக் கொடுக்கப்படுவதோடு, ரூ. 4,25,000/- பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடாக கீழ்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 35. | வீடு, கிராமம், குடியிருப்பிலிருந்து வெளியேற்றுதல் (பிரிவு 3(1)(z) | பாதிப்புகள் அனைத்தும் முழுமையாக அரசு செலவில் சீரமைக்கப்பட்டு, கீழ்வருமாறு பாதிக்கப் பட்டவருக்கு ரூ.1,00,000/- வழங்கப்பட வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 36. | பட்டியலினத்தைச் சார்ந்தவருக்கு பின்வரும் தடைகளை ஏற்படுத்தும் போது பொது (A) பொதுச் சொத்துக்கள் / வளங்களைப் பயன்படுத்த தடை (பிரிவு 3(1)(za)(A)) | (A) பொதுச் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான முழு உரிமைகளையும் மீட்டுக் கொடுத்தல், மேலும் பாதிக்கப்பட்டவருக்கு ரூ.1,00,000/-கீழ்கண்டவாறு வழங்குதல்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| | (B) மோட்டார் வாகனம், சைக்கிளில் செல்ல, அல்லது செருப்பணிந்து செல்ல, திருமண ஊர்வலம் நடத்த மற்றும் வேறு வாகனங்களில் திருமண ஊர்வலத்தில் செல்லத் தடையேற்படுத்துதல் (பிரிவு 3(1)(za)(B))<br>(C) வழிபாட்டு உரிமைகள் மற்றும் வழிபாட்டிட உரிமை களுக்கு தடை ஏற்படுத்துதல் (பிரிவு 3(1)(za)(C)) | (B) அனைத்து உரிமை களையும் மீட்டுக்கொடுப் பதோடு ரூ.1,00,000/- நஷ்டஈடாக பின்வருமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25%<br>(C) அனைத்து உரிமை களையும் மீட்டுக்கொடுப் பதோடு ரூ.1,00,000/- நஷ்டஈடாக பின்வருமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| | (D) கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், கடை அல்லது பொது பொழுது போக்கு தளங்கள் அல்லது வேறு பொது இடங்கள் அல்லது பொதுஇடங்களில் பொது இடங்களில் பொதுப்பயன் பாட்டுக்காக வைக்கப் பட்டுள்ளவற்றை பயன்படுத்த தடை ஏற்படுத்துதல் (பிரிவு 3(1) (ca)(D) | (D) அனைத்து உரிமைகளையும் மீட்டுக்கொடுப்பதோடு ரூ.1,00,000/-நஷ்டஈடாக பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| | (E) பொதுமக்கள் அனைவரும் சட்டப்படி செய்யும் எந்தத் தொழிலையும், எந்தப் பணியையும் அல்லது வணிகம் அல்லது வியாபாரம் அல்லது வேலை போன்றவற்றை செய்வதற்கு தடை ஏற்படுத்துதல் (பிரிவு 3(1) (za)E) | (E) அனைத்து உரிமைகளையும் மீட்டுக்கொடுப்பதோடு ரூ.1,00,000/- நஷ்டஈடாக பின்வருமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 37 | பேய் பிடித்திருக்கிறது அல்லது சூன்யம் செய்பவர் என்று சொல்லி உடல்ரீதியாகவோ, மனரீதியாகவோ கொடுமை விளைவித்தல் (பிரிவு 3(1)(zb) | அவருக்கு ஏற்பட்டிருக்கும் மாண்பை மீட்டுக் கொடுப்பதோடு ரூ.1,00,000/- பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 38 | சமூக — பொருளாதார புறக்கணிப்புக்கு ஆளாக்குதல் அல்லது ஆளாக்கப்போவதாக அச்சுறுத்துதல். (பிரிவு 3(1) (zc) | மற்றவர்களுக்குக் கிடைக்கும் அனைத்து சமூக — பொருளாதார உரிமைகளையும் சம அளவில் மீட்டுக்கொடுத்து ரூ.1,00,000/-யை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தவுடன் முழுமையாக வழங்க வேண்டும். |
| 39 | பொய்ச்சான்று கொடுத்தல் அல்லது புனைதல் (பிரிவு 3(2)(i) & (ii) | பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 4,15,000/— பின்வருமாறு வழங்க வேண்டும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 40 | இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 10 வருடங்களும் அதற்கு மேலும் தண்டனை வழங்கக்கூடிய குற்றங்களை புரிகின்ற போது (பிரிவு 3(2) | பாதிக்கப்பட்டவருக்கு அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கும் ரூ. 4,00,000/- (அட்டவணையில் குறிப்பிட்டுச் சொல்லப்படும் விதத்தில் இந்தத் தொகை மாறுபடலாம்) பின்வருமாறு வழங்கப்படும்<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 41 | இச்சட்டத்தின் அட்டவணையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள குற்றங்களை புரிகின்றபோது (பிரிவு 3(2) (va) அட்டவணையில் தொடர்புடைய குற்றத்திற்கான இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுடன் இணைத்து வாசித்து. | பாதிக்கப்பட்டவருக்கு அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கும் ரூ. 2,00,000/— (அட்டவணையில் குறிப்பிட்டுச் சொல்லப்படும் விதத்தில் இந்தத் தொகை மாறுபடலாம்) பின்வருமாறு வழங்கப்படும்.<br>(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| 42 | அரசு ஊழியரால் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு (பிரிவு 3(2) (vii) | பாதிக்கப்பட்டவருக்கு அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கும் ரூ. 2,00,000/- பின்வருமாறு வழங்கப்படும் (i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் 25% (ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் 50% (iii)கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 43 | 2001-ஆம் அண்டு ஜுன் 1ஆம் தேதி அன்று மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண். 16-18/97-NI. நாள் : 01.06.2005இன் படி உடல் ஊனத்தின் அளவை மதிப்பீடு செய்வதற்காக. (a) 100% இயலாமை. | பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 8,25,000/- பின்வருமாறு வழங்கப்படும். (i) மருத்துவப் பரிசோதனைக்குப்பிறகு மருத்துவ அறிக்கையில் உறுதி செய்யப்பட்ட உடன் 50% (ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது 50% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| | (b) 50% க்கு மேல் 100% க்கு குறைவாக இயலாமை | பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 4,50,000/- பின்வருமாறு வழங்கப்படும்.<br>(i) மருத்துவப் பரிசோதனைக் குப்பிறகுப் பிறகு உறுதியான மருத்துவ அறிக்கை பெற்றவுடன் 50%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது 50% |
| | (c) 50% க்கு குறைவாக இயலாமை | பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 2,50,000/- பின்வருமாறு வழங்கப்படும்.<br>(i) மருத்துவப் பரிசோதனைக் குப்பிறகு உறுதியான மருத்துவ அறிக்கை பெற்றவுடன் 50%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது 50%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 44 | பாலியல் பலாத்காரம் அல்லது கூட்டுப் பாலியல் பலாத்காரம் (i) பாலியல் பலாத்காரம் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 375 ஆவது பிரிவு படி | பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 5,00,000/- பின்வருமாறு வழங்கப்படும்.<br>(i) மருத்துவப் பரிசோதனைக் குப்பிறகுப்பிறகு உறுதியான மருத்துவ அறிக்கை பெற்றவுடன் 50%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது 25%<br>(iii) கீழ்க்கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| | (ii) கூட்டுபாலியல் பலாத்காரம் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 376 (D)- இன்படி | பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 8,25,000/- பின்வருமாறு வழங்கப்படும்.<br>(i) மருத்துவப் பரிசோதனைக் குப்பிறகுப் பிறகு உறுதியான மருத்துவ அறிக்கை பெற்றவுடன் 50%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது 50%<br>(iii)கீழ்க் கோர்ட்டில் தண்டனை வழங்கப் பட்டவுடன் 25% |
| 45 | கொலை அல்லது மரணம் | பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 8,25,000/- பின்வருமாறு வழங்கப்படும்.<br>(i) பிணக்கூராய்வு முடிந்து அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் 50%<br>(ii) குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது 50% |
| 46 | கொலை செய்யப்பட்டவர் மரணம் விளைவிக்கப் பட்டவர், படுகொலை செய்யப்பட்டவர், பாலியல் மற்றும் கூட்டுப்பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளானவர்கள், நிரந் தரமாக ஊனமுற்றவர்கள் மற்றும் கொள்ளையடிக் கப்பட்டவர்கள் ஆகியோரு க்கு வழங்கப்படும் கூடுதல் நிவாரணம் | ஒவ்வொரு பாதிப்புக்கும் வழக்கமாக இந்த அட்டவணைப்படி வழங் கப்படும் நிவாரணத்தோடு பின்வரும் நிவாரணங் களையும் கூடுதலாக வன் கொடுமை நிகழ்ந்த மூன்று மாதங்களுக்குள் ஏற்பாடு செய்து வழங்க வேண்டும். |

| வ. எண் | வன்கொடுமை | குறைந்தபட்ச நிவாரணத் தொகையும் அது வழங்கப்படும் வழிமுறையும் |
|---|---|---|
| | | (i) கணவரை இழந்த விதவைக்கும் ஏனைய சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் அடிப்படை ஓய்வூதியம் மாதம் ரூ. 5,000/— வழங்கவும் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்கவும், விவசாய நிலம், உடனடியாக ஒரு வீட்டையும் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| | | (ii) இறந்தவரின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான செலவும், அவர்கள் கல்லூரி படிப்பை முடிக்கும்வரை படிப்புச் செலவு அனைத்தையும் வழங்க ஏற்பாடு செய்தல். குழந்தைகளை தங்கிப்படிக்கும் பள்ளிகளிலோ அல்லது ஆசிரமப்பள்ளிகளிலோ சேர்த்து முழு செலவையும் அரசே ஏற்க வேண்டும்.<br><br>(iii) வன்கொடுமை நிகழ்ந்த முதல் மூன்று மாதங்களுக்கு அந்தக் குடும்பத்திற்குத் தேவையான பாத்திரங்கள், அரிசி, கோதுமை, பருப்பு, தானியங்கள் போன்றவை அனைத்தும் வழங்கப்பட வேண்டும். |
| 47 | முழுமையாக வீடு சேதமடைதல் அல்லது எரிக்கப்படுதல். | முழுமையாக எரிக்கப் பட்டிருந்தால் அல்லது சேதப்பட்டிருந்தால் அரசு செலவில் செங்கல் அல்லது கருங்கல்லில் கட்டிக் கொடுக்கப்பட ஏற்பாடு செய்ய வேண்டும். |

## கல்வி

### 1. கல்வி தொடர்பான செயல் திட்டங்கள்:-

*பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான பள்ளி இறுதி படிப்புக்கு பிறகான கல்வி உதவி தொகை / செயல் திட்டம்.*

பள்ளிபடிப்புக்கு பிறகான கல்வி உதவிதொகை செயல்திட்டம் எல்லையற்ற மிக பழைமையான தேசிய செயல்திட்டம் இது வைஸ்ராயின் நிர்வாக குழு உறுப்பினராக இருந்த டாக்டர் அம்பேத்கரால் வடிவமைக்கப்பட்டு முன்முயற்சி எடுக்கப்பட்ட திட்டம். இந்த செயல் திட்டம் 1943ல் துவங்கியது. இது நமது நாட்டில் சமூக நீதிக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை களில் ஒன்று இன்றும் தடையின்றி தொடர்கிற ஒன்று.

இது அந்த புரட்சிகர சீர்திருத்தவாதியால் அறிமுகப்படுத்தப் பட்ட மூன்று செயல் திட்டங்களில் ஒன்று மற்ற இரண்டு திட்டங்கள் ஒன்று வெளிநாட்டு கல்வி உதவிதொகை திட்டம் மற்றொன்று அரசு சேவைகள் மற்றும் பதவிகளில் இடஒதுக்கீடு. இந்த மூன்று செயல் திட்டங்களின் விளைவாகதான் பட்டியல் சாதியினர் அரசு சேவைகள் மற்றும் பதவிகளில் பூஜ்ஜியத்திலிருந்து இன்றிக்கும் நிலையை எட்டமுடிந்தது. இந்த செயல் திட்டங்கள் விடுதலைக்குபின் தானாகவே பழங்குடியினருக்கு விரிவாக்கப்பட்டன.

இருப்பினும் பல சேவைகளில் பட்டியல் சாதியினர் அளவு அவர்களது மக்கள் தொகை அளவுடன் ஒப்பிட்டால் ஒருவர் எதிபார்ப்பதைவிட குறைவாகவே இருக்கும்.

உயர்மட்ட சேவைகளில் இந்த அளவு இடைவெளி மேலும் அதிகரிக்கிறது. தற்போது இந்திய அரசின் செயலாளர்களாக ஒரு பட்டியல் சாதியினர் அல்லது பழங்குடியினர்கூட இல்லை. உச்சநீதிமன்ற நீதிபதிகளில் ஒரு பட்டியல் சாதியினர் அல்லது பழங்குடியினர்கூட இல்லை இந்த இடைவெளி ஏற்றத்தாழ்வுகள் பள்ளிபடிப்புக்கு அடுத்து கல்வி உதவிதொகை செயல்திட்டங்ள் தொடரவேண்டியதன் அவசியத்தையும் தடைகளை நீக்கி அவற்றை மேலும் செழுமைப்படுத்த

வேண்டியதின் அவசியத்தையும் இவை பொருந்தாத இதர உயர்தர பள்ளிகல்வி மட்ட நிறுவனங்களுக்கும் பொருத்தவேண்டியதன் அவசியத்தையும் உணர்த்துகின்றன.

பட்டியல் சாதி கல்வியாளர் எண்ணிக்கை குறைவாக இருக்கும் வரை மேல் - தட்டு தாவி குதித்துக் கொண்டிருந்தது. ஆனால் இந்த எண்ணிக்கை வளர வளர அதன் விளைவாய் சேவைகளில் பட்டியல் சாதியினர் எண்ணிக்கை வளர வளர இக்கட்டாக உணர்ந்து செயல் திட்டங்களை நீத்துபோக செய்யும் முயற்சிகள் தொடர்ந்தன. தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளும் அவர்களது பிரதிநிதிகள் மற்றும் நண்பர்களும் விழிப்புணர்வுடனான. தேசபக்த உணர்வுடனான, பொதுசமூகத்தின் தனிநபர்களும் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான நல்ல செயல் திட்டங்கள் வெட்டப்படுவதையொட்டி நிலையான கண்காணிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

செயல் திட்டங்கள் நல்ல பலனை உருவாக்குவதில் உள்ள தடைகளில் ஒன்று கட்டணங்கள் விதிப்பதற்கும் கல்வி உதவிதொகைகளுக்கும் தகுதியாக குடும்ப வருமான உச்சவரம்பு வைத்திருப்பது உச்சவரம்பு முன்பு ஆண்டுக்கு ஒரு லட்சமாக இருந்தது. தற்போது ஆண்டுக்கு இரண்டு லட்சமாக உயர்த்தப்பட்டது.

உயர் கல்வியில் சேர்க்கையின் இந்திய அளவுகள் சர்வதேச அளவுகளுக்கு மிகவும் கீழாக உள்ளன இதனை சர்வதேச அளவிற்கு உயர்த்துவது இந்திய அரசின் அறிவிக்கப்பட்ட கொள்கை என்பதனை நாம் நினைவில் வைக்கவேண்டும். உயர்கல்வியில் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் சேருதல் சதவிகிதம் இந்திய சராசரி அளவு மற்றும் SACs / NSCTBCs யைவிட மிக குறைவாக இருக்கிறது.

தேசிய இலக்கை அடைய உயர் கல்வியில் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் சேரும் சதவிகிதத்தை விரைவாகவும் கூர்மையாகவும் உயர்த்துவது மிகவும் அவசியமாகிறது. இது பட்டியல்சாதியினர் மற்றும் பழங்குடியினர் பார்வையிலிருந்து மட்டுமின்றி தேசம் மொத்ததின் பார்வையிலிருந்தும் அவசியமானது. இந்தியா பிறநாடுகளுடன் ஒப்பிடுகையில் ஆப்பிரிக்கா நாடுகளை தவிர மற்ற நாடுகளைவிட நோய் தடுப்பு சாதகத்தைக் கொண்டிருக்கிறது. உற்பத்தி வயது இளைஞர்களின் ஒப்பளவு மேற்கத்திய நாடுகளைவிட வளர்ந்த நாடுகளைவிட ஏன் சீனாவைவிட அதிகமாக இருக்கிறது. இந்த சாதகாம்சம் சாதகமான பலன்களை வழங்கவேண்டுமானால்

கல்வி மற்றும் திறன்களின் அளவையும் தரத்தையும் உயர்த்தவேண்டும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஆரோக்கியத்தை பேறுகாலத்திற்கு முன்பிலிருந்தே உயரத்தவேண்டும். இந்த விஷயங்களில் கீழ்நிலையில் இருக்கும் இவர்களை **SACs / NSCTBCS** அளவுக்கு சமமாக உயர்த்தவேண்டும் பட்டியல் சாதியினரை பழங்குடியினரை மற்றும் பிற்படுத்தப் பட்டோரை முற்படுத்தப்பட்ட சாதியினருக்கு சமமாக கொண்டு வந்து அதன் பிறகு முன்னேறிய நாடுகள் அளவுக்கு உயர்த்தவேண்டும். இது நடந்தால் இந்திய பொருளாதாரம் ஓங்கிவளரும். ஆனால் குறுகிய பார்வை கொண்ட இந்திய மேல்தட்டு சாதிய பாகுபாடு அடிப்படையில் பட்டியல் சாதியினர் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோரை தாழ்த்தி வைக்க முயற்சிப்பதன்மூலம் இந்தியா சக்திவாய்ந்த தனது சாதகமான பலன்களை பெறுவது தடுக்கப்படுகிறது. கல்வி மற்றும் திறன்கள் வளர்ச்சி செயல் திட்டங்களை பொறுத்தவரை பொருளாதார வளர்ச்சி செயல்திட்டங் களுக்கும் பொருளாதார வளர்ச்சி செயல்திட்டங் களுக்கும் பொருந்தக்கூடியதே மற்றும் பேறுகால குழந்தைபருவ சிறுவர் மற்றும் பிரசவகால மரணங்கள் சத்துகுறைவு வளர்ச்சி குன்றுதல் ஆகியவைகளுடன் நேரடி தொடர்புடையது. இது இவை அனைத்தையும் இணைத்தாக இருப்பதால் இந்திய பொருளாதார வளர்ச்சியின் அதிகளவு தீங்குகளை தடுத்து அதிகளவு நிலையான நீடித்த பொருளாதார வளர்ச்சி எனும் பலனை பெற தேவையாகிறது.

ஆகவே திட்ட கமிஷன் மற்றும் சமூகநீதி அமைச்சகத்தின் துணைக்குழு பரிந்துரைத்தபடி,

1. பட்டியல் சாதி மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு குடும்ப வருமானம் எதுவானாலும் ஆரம்ப பள்ளி முதல் பட்டமேற்படிப்புவரை கட்டணம் எதுவும் இருக்க கூடாது.

   (அ) அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள்

   (ஆ) உதவிபெறாத தனியார் பள்ளிகள்.

2. தனியார் நிறுவனங்கள் நிர்ணயிக்கிற கட்டணம் சம்பந்தப்பட்ட பள்ளிகள் நிறுவனங்களுக்கு அரசாங்கம் காலத்தே செலுத்தவேண்டும் அந்த வகையில் மாணவர் கட்டணம் செலுத்திய பிறகு அதனை அரசாங்கத்திடமிருந்து திரும்ப பெறுவது அதனை காரணம் காட்டி பட்டியல்சாதி மற்றும் பழங்குடி மாணவர்களின்பால் இந்த நிறுவனங்கள் தமது கடமையை தட்டிகழிக்கும் வாய்ப்பை தவிர்கவேண்டும்.

3. தனியார் நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கும் அதிகபட்ச கட்டணம் ஒரே அளவில் இருக்க வாய்பில்லை. தனியார் நிறுவனங்களின் வசதிகள் உள்கட்டுமானம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் வித்தியாசப்படுவதால் வேறுபடும் தரத்திற்கேற்ப வேறுபடும் அதிகப்பட்ச கட்டண விகிதங்கள் இருக்கலாம். அவ்வாறான கட்டணம் அந்தந்த நிறுவனங்களுக்கு அரசாங்கம் முழுமையாக செலுத்தவேண்டும். பட்டியல்சாதி மற்றும் பழங்குடி மாணவர்களிடமிருந்து நிறுவணங்கள் எந்த கட்டணத்தையும் வசூலிக்க கூடாது. எந்த வகையான கூடுதல் கட்டணங்களும் பட்டியல்சாதி மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு விதிப்பதை தவிற்கவேண்டும் . அது தண்டிக்கப்படவேண்டும்.

4. கீழ்காணும் வகைப்பட்ட அனைத்து பட்டியல்சாதி மற்றும் பழங்குடி மாணவர்கள் தமது குடும்ப வருமானங்களுடன் தொடர்பின்றி அனைத்து மட்டங்களிலும் கல்வி உதவிதொகை பெற தகுதியானவர்கள்.

   அ) பட்டியல்சாதி மற்றும் பழங்குடி பெண் மாணவர்கள்.

   ஆ) பட்டியல் சாதி மற்றும் பழங்குடி உடல் ஊனமுற்ற மாணர்கள் (உடல் ஊணம் 1995 சட்டம் வரையறுத்த உடல் ஊனங்களின்படி சமவாய்ப்புகள் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுமையான பங்கேற்பு.

   இ) கொலை பாலியல்பலாத்காரம் சூரையாடுதல் உடல் உறுப்புகள் இழக்கும் வகையிலும் மற்றும் ஊணப்படுத்தும் வகையிலும் காயப்படுத்துதல் ஆகிய கொடுஞ்செயலுக்கு ஆளான பட்டியல்சாதி மற்றும் பழங்குடி மாணவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களை ஆதாரப்பட்டிருப்பவர்கள்.

   ஈ) இயற்கை பேரிடர்கள் மற்றும் விபத்துக்களால் பாதிக்கப்பட்ட பட்டியல்சாதி மற்றும் பழங்குடி சார்ந்திருக்கும் மாணவர்கள்.

   உ) பட்டியல் சாதி மற்றும் பழங்குடி விதவைகள் அல்லது விவாகரத்தான தனிதாய்களின் குழந்தைகள்.

5. கல்வி உதவித்தொகைப் பெற பட்டியல் சாதி மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு ஆண்டு குடும்ப வருமான வரம்பு ரூ. 6 லட்சமாக உயர்த்தப்பட வேண்டும்.

6. கல்வி உதவிதொகை அரசு ஊழியர்களின் பஞ்சப் படியைபோல் பணவீக்கத்தை கணக்கில் கொண்டு அவ்வப்போது புதுப்பிக்கவேண்டும். (இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை) இந்த புதுப்பித்தல் நிதி அமைச்சகத்தின் ஒப்புதல் தேவையின்றி தானாகவே நடைபெறவேண்டும்.
7. கல்வி உதவிதொகைகள் ஒவ்வொரு மாதம் / காலாண்டு / ஆண்டு துவக்கத்தில் வழங்கப்பட வேண்டும். மாணவர் மற்றும் கல்விநிறுவனத்தின்கூட்டு கணக்கில் செலுத்தப்படவேண்டும். இதனை சாத்தியப்படுத்தும் வகையில் மத்திய அரசாங்கம் நிதிகளை முன்கூட்டியே வழங்கவேண்டும். மாநில அரசாங்களும் கல்வி உதவிதொகைகளின் திட்டம்சாராத பகுதிகளுக்கான நிதிகளை மாதம் / காலாண்டு / ஆண்டு முற்பகுதியிலேயே வழங்கவேண்டும்.

இதே பரிந்துரைகள் பட்டியல்சாதிகளின் கல்வி வளர்ச்சிக்கான சிறப்பு அமைப்பினால் டிசம்பர் 2012ல் பரிந்துரைக்கப்பட்டன.

## 2. வெளிநாட்டு கல்வி உதவிதொகைகளுக்கான செயல்திட்டம்

பள்ளி படிப்புக்கு அடுத்த கல்வி உதவிதொகைகள் செயல்திட்டத்தில் குறிப்பிட்டதைபோல் இது அம்பேத்கராலேயே வடிவமைக்கப்பட்ட மற்றொரு பழமையான செயல்திட்டம் வைஸ்ராய் இன் நிர்வாக குழுவின் மேல்சாதி உறுப்பினர்கள் வைஸ்ராய் லைன்லித்கோ விடம் இந்த செயல் திட்டத்திற்கான

தமது எதிர்ப்பை தெரிவித்தனர். ஒரு வெளிநாட்டு ஆராய்ச்சியாளருக்கு ஆகும் செலவில் நூறு பட்டியல்சாதி மாணவர்களுக்கு ஆரம்பகல்வியை வழங்கலாம் எனும் அடிப்படையிலிருந்து அவர்களது எதிர்ப்பு அமைந்தது. அப்போது அம்பேத்கார் கேட்டார் அவர் தன்னை (அம்பேத்காரை) ஒரு ஆரம்ப கல்வி பெற்ற பட்டியல்சாதிக்காரருக்கு சமப்படுத்தி கருதுகிறாரா என டாக்டர் அம்பேத்கர் வைஸ்ராயிடம் கேட்டார். லைன்வித்கோ அம்பேத்கரின் அறிவு சிறப்பு மற்றும் அவரது கல்வி சாதனைகளைப் பற்றி உயரிய மதிப்பைகொண்டிருந்தார். ஆரம்ப பள்ளி மாணவர் களுடன் அம்பேத்கரை சமப்படுத்தி ஒப்பிடமுடியாது என்றார். அப்போது அம்பேத்கர் நான் பல அம்பேத்கர்களை உருவாக்க

*விரும்புகிறேன் அதற்கு இந்த செயல்திட்டம் அவசியமானது என தன் அழுத்தமான வார்த்தைகளை முன்வைத்தார். லைன்வித்கோ விஷயத்தை உணர்ந்து செயல்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கினார். இது சுதந்திரத்திற்கு பின் உடனடியாக பழங்குடியினருக்கு விரிவாக்கப்பட்டது. அன்று வைஸ்ராய் நிர்வாக குழுவில் மேல்சாதி உறுப்பினர்கள் எழுப்பிய அதே விஷயம் வேதனைக்குரிய முறையில் 1996—97ல் இந்த செயல் திட்டத்திற்கு எதிராக மீண்டும் எழுப்பப்பட்டது. பல ஆண்டுகளாக 30 என்றிருந்துவந்த எண்ணிக்கை 4 என குறைக்கப்பட்டு அதுவும் இந்தியாவில் இல்லாத படிப்புகளுக்கு மட்டும் என்றாக்கப்பட்டது. இது 1996ல் சமூக நீதிக்கான தேசிய முன்னணி அரசில் குறைந்த பட்சத்திட்டத்தால் முழுமையாக ஏற்கப்பட்ட ஒன்றில் வெளிநாட்டு கல்வி உதவிதொகைகள் ஆண்டுக்கு மேலும் பல மடங்கு அதிகரிக்கவேண்டுமென அதில் பரிந்துரைத்த நிலையில் இவ்வாறு நிகழ்கிறது.*

*முன்னேறிய நாடுகளில் பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி மாணவர்கள் சிறந்த வாய்ப்புகளைபெற உதவுகிறது. வளரும் நாடுகளிலிருந்து வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் உயர் கல்விக்கு செல்பவர்களில் இந்திய மாணவர்கள் அதிகளவில் உள்ளனர். ஆனால் அவர்களில் பட்டியல்சாதி மற்றும் பழங்குடி மாணவர்கள் மிக குறைந்தளவிலேயே உள்ளனர்.*

*இதற்கு முக்கிய காரணம் இவ்வாறான கல்விக்கு தேவையான அளவுகடந்த செலவு மற்றும் நாட்டில் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் பலகீனமான பொருளாதார நிலைமை பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் பலகீனமான பொருளாதார நிலைமைக்கான காரணங்கள் அவர்களின் கட்டுபாட்டை மீறியவை நூற்றாண்டுகள் பழமையான சாதி அமைப்புமுறை செயல்பாடுகளுடன் தொடர்புடையவை “தீண்டாமை” முழுமையாக அகற்றப்படாத நிலையில் சுதந்திரத்திற்குபின் கனிசமாகவாவது பின்னுக்கு தள்ளப்படாத நிலையில் வெளிநாட்டு படிப்புக்கு செல்கிற பொது பிரிவினருடன் ஒப்பிடுகையில் சமமான நிலையில் வெளிநாட்டு நிறுவனங்களில் பட்டியல்சாதியினர் மற்றும் பழங்குடியினர் இடம்பெறும் வகையில் செயல்படுவது அரசின் கடமையாகிறது. வெளிநாட்டுகளில் தேர்ச்சி பெறுபவர்கள் நம் நாட்டில் பெறும் வேளைவாய்ப்புகள் அடிப்படையிலும் இது அவசியமாகிறது. பட்டியல்சாதி மற்றும் பழங்குடி பிரிவினர் இந்த வாய்ப்புகளை பெறும் நடவடிக்கைளை மேற்கொள்வது நிகழ்காலம் மற்றும்*

எதிர்காலத்தில் அவர்களின் கல்விபெற்ற பிரிவினர் மூலம் அவர்களை உரிமைப்பெற்றவர்களாக்கவேண்டிய ஒரு முக்கியம்சமாகிறது.

எப்போதையும்போல் இந்த செயலூக்கமிக்க செயல்திட்டம் பலவகை தடைகளால் வெட்டி முடமாக்கப்படுகிறது. இன்று இந்த கல்வி உதவிதொகை ஆண்டுக்கு பட்டியல்சாதியினர்க்கு 30 பழங்குடியினருக்கு 15 என அற்பமாக இருக்கிறது. பழங்குடியினர் அதிகாரமடைய செய்ய செயல்பாட்டு குழு பரிந்துரைகளை மனதில்கொண்டு துணைக்குழு பரிந்துரைத்தப்படி தடைகளை அகற்ற கீழ்காணும் நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

அ) கல்வி உதவிதொகை வழங்குவது தொடர்பாக படிப்பு துறை தடைகள் எதுவும் இருக்கக் கூடாது.

ஆ) ஆண்டு வருமான வரம்பு நிபந்தனை எதுவும் இருக்கக் கூடாது. தற்போது மிக குறைவான யதார்த்ததிற்கு பொருந்தாத ரூ. 3,00,000 வரம்பு இருக்கிறது.

இ) குறைந்த பட்ச மதிப்பெண் தகுதியை தற்போதைய 60 சதத்திலிருந்து 50 சதமாக குறைக்க வேண்டும்.

ஈ) கல்வி உதவிதொகைகளின் அளவு கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் புதுப்பிக்கவேண்டும்.

உ) கல்வி உதவி எண்ணிக்கை உயர்த்தப்படவேண்டும் துவக்கத்தில் பட்டியல்சாதியினருக்கு 500 பழங்குடியினருக்கு 250 என உயர்த்த வேண்டும்.

தொடர்ந்து தலித் அறிக்கையில் குறிப்பிட்டதற்கேற்ப வெளிநாடுகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையுடன் பொருந்தும் வகையில் உயர்த்தப் படவேண்டும். அம்பேத்கரைத் தொடர்ந்து பல கல்வி தொடர்பான செயல்திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

**ராஜிவ் காந்தி தேசிய பட்டதாரி ஆதாரவூதியம் (RGNF)**

கடந்த பத்தாண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு அல்லது மூன்று செயல்திட்டங்களில் இதுவும் ஒன்று. இந்த செயல் திட்டம் எம்.பில் மற்றும் பி.எச்டி படிக்கும் பட்டியல்சாதி மற்றும் பழங்குடி ஆராய்ச்சி மாணவர்களுக்கு உதவி வழங்கும். இது பல்கலைக்கழக மானியக்குழு மூலம் அமலாக்கப்படும். இந்த ஆதரவூதிய எண்ணிக்கை ஆண்டுக்கு 2000மாக இருக்கிறது. ஆனால் இந்த நல்லதிட்டமும் குடும்ப வருமான வரம்பு நிபந்தனையால் முடக்கப்படுகிறது. தற்போது இந்த வரம்பு

*ஆண்டுக்கு 3 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிபந்தனை தகுதியான வேட்பாளர்களின் எண்ணிக்கையை கூர்மையாக குறைக்கிறது. இந்த செயல்திட்டத்திற்கு குடும்பவருமான வரம்பு எதுவும் இருக்கக்கூடாது. ஆதரவூதிய எண்ணிக்கையை 5000மாக உயர்த்தவேண்டும் படிப்படியாக இட ஒதுக்கீடு நிறப்பப்படாத எம்.பில், பி.எச்டி. தகுதிகள் தேவையான வேளைகளின் எண்ணிக்கைகேற்ப உயர்த்தப்படவேண்டும். இந்த பொருத்தமான நடவடிக்கை அவ்வப்போது மேற்கொள்ளப்படவேண்டும் அப்போதுதான் ஆசியர் மற்றும் அறிவியல் பதவிகளுக்கு இடங்களை நிறப்ப தகுதியான ஆட்கள் இல்லை எனும் சாக்குபோக்குக்கு முடிவுகட்டமுடியும்.*

**திறமையை மேம்படுத்துதல்:-**

*இந்த செயல்திட்டத்தின் கீழ் 9ம் வகுப்பிலிருந்து 12ம் வகுப்பு வரையிலான பட்டியல்சாதி மாணவர்களுக்கு அவர்கள் திறமையை மேம்படுத்த சிறப்பு பயிற்ச்சியளிக்க நிதிகள் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

*இது பயிற்சி மற்றும் இணைந்த செயல்திட்டத்தின் பகுதியாக துவங்கப்பட்டது. தடைகளை அகற்ற பயிற்சி மற்றும் இணைந்த செயல்திட்டத்திற்கு பொறுந்தும் அனைத்தும் வேண்டிய மாற்றங்களுடன் இதற்கும் பொறுத்தப்படவேண்டும்.*

**உயர் வகைக் கல்வி:-**

*இது ஒரு சமீபத்திய செயல்திட்டம் இந்த திட்டத்தின்படி திறமையான பட்டியல்சாதி மற்றும் பழங்குடி மாணவர்கள் அடையாளம் காணப்பட்ட 165 மேன்மையான நிறுவனங்களில் தொழிற்படிப்பு மற்றும் சிறப்புவகை படிப்பை மேற்கொள்ள உதவி வழங்கப்படும் இந்த கல்வி உதவி தொகை எண்ணிக்கை ஆண்டுக்கு 1250 ஆனால் இந்த செயல்திட்டமும் தற்போது ரூ.2 லட்சம் குடும்ப ஆண்டு வருமான வரம்பால் முடக்கப்படுகிறது. வருமான வரம்பை நீக்கவேண்டும் அதேபோல் உதவிதொகை எல்லையையும் நீக்கவேண்டும்.*

*தேசிய பட்டில்சாதி நிதி மற்றும் வளர்ச்சி ஆணையத்தால் வழங்கப்படுகிற பட்டியல்சாதி மற்றும் பழங்குடி மாணவர்களின் முழு நேர தொழிற் மற்றும் தொழிற்நுட்ப படிப்புகான கல்விகடன்கள்.*

*இது ஆணையத்தின் செயல்பாடுகளில் ஒன்று, ஆணையத்தின் பாத்திரம் முக்கியமாக பொருளாதார செயல் திட்டங்களை கொண்டதாக இருக்கிறது. பொருளாதார செயல் திட்டங்கள்*

கடன்களுக்கான குடும்ப வருமான தகுதி குரிய வகையில் ஆண்டுக்கு கிராமப்புறத்தில் 40,000 எனவும் நகர புறத்தில் 55,000 எனவும் நிர்ணயிக்கப்பட்டது.

கல்வியின் இன்றைய நிலையில் குடும்ப வருமான வரம்பு நிபந்தனை அகற்றப்பட வேண்டும். குடும்ப வருமான வரம்பு போன்ற நடவடிக்கைகள் இன்றைய கேளிக்குரிய அளவில் இருக்கக் கூடாது.

ஒவ்வொரு தலித் பழங்குடி மக்கள் வசிப்பிடங்களிலும் ஒரு அங்கன் வாடி மையம் அவசியம் அதில் பயிற்சி பெற்ற தரமான ஆசிரியரும் இருக்க வேண்டும். அந்த ஆசிரியர் மாண்டிசோரி கல்வி முறை உள்ளிட்ட கல்வி முறைகளில் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக பள்ளி முன்பருவ கல்வியில் பயிற்சி பெற்ற சில லட்சக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்குவதற்காக ஏராளமான எண்ணிக்கையில் பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட வேண்டும். பள்ளி முன்பருவ கல்வி அளிக்கிற நல்ல கல்வி நிறுவனங்களில் தரப்படுவதை போல இந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் திறமையானவர்கள் எல்லாம் இந்த பொறுப்புக்கு வருவதற்கு ஆசைப்படுவார்கள்.

தனியார் பள்ளிகளில் தொடக்க கல்வியில் நலிந்த மக்களின் குழந்தைகளுக்காக 25 சதவீத இடஒதுக்கீடு இருக்கிறது. இலவசமான கட்டாயமான கல்வியை கற்பதற்கான குழந்தையின் உரிமைக்கான சட்டம் 2009ன் பிரிவு 3 தலைப்பு 13(1)ல் விளக்கி இருப்பது போல அந்த 25 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு உள்ளே எட்டு சதவீதம் தலித் குழந்தைகளுக்கும் நான்கு சதவீதம் பழங்குடி குழந்தைகளுக்கும் பத்து சதவீதம் பிற்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கும் மீதமுள்ள மூன்று சதவீதம் இதர நலிவடைந்த பகுதி மக்களை சார்ந்த குழந்தைகளுக்கும் ஒதுக்கப்பட வேண்டும்.

பழங்குடி குழந்தைகளுக்காக பழங்குடி மக்கள் விவகார அமைச்சகம் உருவாக்கி இருப்பதை போல ஒரு மெட்ரிக் வகுப்புகளுக்கு முந்திய வகுப்புகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டத்தை உடனடியாக அறிவிக்க வேண்டும்.

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையான கல்வி காலகட்டத்துக்காக நாட்டின் ஒவ்வொரு வட்டாரத்திலும், தலித்சிறுவர் சிறுமியர் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொன்றும் பழங்குடி சிறுவர் சிறுமியர் ஒவ்வொருவருவருக்கும் ஒவ்வொன்றும் ஆக உயர்தரமான முறையில் இருக்கும் உண்டு

*உறைவிட பள்ளிகள் துவக்கப்பட்டாக வேண்டும். தலித் உண்டு உறைவிடப்பள்ளியில் 5 சதவீதம் பேர் தலித்துகளாக இருப்பார்கள், பழங்குடி குழந்தைகளுக்கான உண்டு உறைவிடப் பள்ளியில் 75 சதவீதம் பேர் பழங்குடியகளாக இருப்பார்கள். மிச்சம் உள்ள 25 சதவீதத்தில் இதர பிரிவுகளை சார்ந்த குழந்தைகள் இருப்பார்கள். இந்த படிப்புக்கால கட்டத்தில் உள்ள எல்லா தலித் பழங்குடி குழந்தைகள் இருப்பார்கள். இந்த படிப்புக்கால கட்டத்தில் உள்ள எல்லா தலித் பழங்குடி குழந்தைகள் எல்லாரும் படிக்க போதுமான அளவு எண்ணிக்கையில் இந்த உண்டு உறைவிடப்பள்ளிகள் இருக்க வேண்டும்.*

*ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் குறைந்தபட்ச பொதுத்திட்டத்தின் பகுதியாக தலித் அறிக்கையின் பகுதிகளும் இருந்தன. 1996ல் அப்போதைய மத்திய நல்வாழ்வு அமைச்சர் திரு. பல்வந்த் சிங் ரமோலியா, ஐந்தாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரைக்குமான உயர் தரமான உண்டு உறைவிடப்பள்ளிகளை தலித் பழங்குடி பிற்படுத்தப்பட்ட பெண் குழந்தைகளுக்காக ஏற்படுத்த மிகவும் அக்கறையோடு பல முயற்சிகளை எடுத்தார். அதற்காக பிரதம மந்திரியிடமிருந்து 250 கோடி ருபாய்களை பெற உழைத்தார். பெண் குழந்தைகல்வி மிக குறைவாக உள்ள மாவட்டங்களில் இதனை ஏற்படுத்த முயன்றார். ஒதுக்கப்படுகிற நிதி சமமாக பிரிக்கப்பட வேண்டும். உதாரணமாக மூன்றில் ஒரு பங்காக தலித் பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட பெண்குழந்தைகளுக்கு 75 இடங்களும் மற்ற 25 சதவித இடங்கள் இதர சமூகங்களை சேர்ந்த நலிவடைந்த குழந்தைகளுக்கும் கிடைக்கிற வகையிலும் அத்தகைய வகையில் நிதி செலவழியுமாறும் ஏற்பாடுகள் வேண்டும்.*

*இதை செயல்படுத்துவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்கு கஸ்தூரிபாய் சுதந்திர வித்தியாலயா என பெயரிடப்பட்டது. ஆனால் அந்த திட்டம் தொடர்ந்து நடைபெற அனுமதிக்கப்பட வில்லை.*

*இதற்கிடையே ஒதுக்கப்பட்ட நிதிகள் குவிந்து கொண்டே இருந்தன. 2003ல் 400 கோடிகளாகின. இந்த நிதி சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது.*

*ஆதிதிராவிடர் நலம் - சுயநிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் நிறுவனங்கள் உட்பட) அனைத்து விதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கையில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணங்கள் மற்றும் அரசு நிர்ணயிக்கும் கல்வி கட்டணங்கள் போன்றவற்றை வழங்குதல் - வழிகாட்டு நெறிமுறைகள் - வெளியிடப்படுகிறது.*

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-3) துறை**

**அரசாணை (நிலை) எண். 92**
**நாள் : 11.09.2012**
**ஆவணி 26, திருவள்ளுவராண்டு 2043**

**படிக்க:-**

1. *அரசாணை (நிலை) எண். 1485, சமூகநலத்துறை, நாள்: 23.07.1985*
2. *அரசாணை (நிலை) எண். 265, உயர்கல்விதுறை, நாள்: 12.05.1997.*
3. *அரசாணை (நிலை) எண். 85, உயர்கல்வித்துறை, நாள்: 16.04.2010.*
4. *அரசாணை (நிலை) எண். 6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 09.01.2012*
5. *அரசாணை (நிலை) எண். 63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 25.06.2012.*

**ஆணை:-**

*மேலே 4ல் காணும் அரசாணையில் 2011-2012 ஆம் ஆண்டு முதல் சுயநிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் நிறுவனங்கள் உட்பட) அனைத்து விதமான படிப்புகளிலும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவ / மாணவியர்கள் கல்வி நிறுவனங்களுக்கு*

*செலுத்த வேண்டிய கட்டணங்களில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணங்களை மட்டும் அவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் அக்கட்டணங்களை மைய அரசின் உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்களுக்கு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது. மேலே 5ல் காணும் அரசாணையில் 2012-13ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ், மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவ / மாணவியர்களுக்கும் மேற்கண்ட திட்டத்தை விரிவுபடுத்தி அரசு ஆணையிட்டது.*

*மேற்கண்ட அரசாணைகளை திறம்பட செயல்படுத்த முடிவு செய்த அரசு கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கி ஆணையிடுகிறது.*

1. *சுயநிதி தொழில்கல்லூரிகளில் உள்ள அரசால் அங்கீகரிக்கப் பட்ட படிப்புகளுக்கு, தனியார் சுயநிதி தொழில் கல்லூரிகளின் கட்டண நிர்ணயித்திற்காக அமைக்கப்பட்ட ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு நிர்ணயிக்கும் கட்டணங்கள் வழங்கப்படும். (கட்டண விவரங்கள் இணைப்பு 1ல் இணைக்கப்பட்டுள்ளது)*
2. *சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்ட கல்லூரிகள், பாலி டெக்னிக் கல்லூரிகள் மற்றும் இதர சுயநிதி கல்லூரிகளில் உள்ள அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் வழங்கப்படும். (கட்டண விவரஙக்ள் இணைப்பு 2ல் இணைக்கப்பட்டுள்ளது)*
3. *இனிவரும் கல்வி ஆண்டுகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு சுயநிதிக் கல்லூரிகளில் படிக்கும் பொறியில் / மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகள் / கல்வியியல் மாணவ / மாணவியர்களுக்கு தொழில் நுட்ப இயக்கம் / மருத்துவ கல்வி இயக்கம் / கல்லூரி கல்வி இயக்கம் மூலம் சுயநிதி கல்லூரிகளுக்கான கல்வி கட்டணக் நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் வழங்கப்படும். தொழில் நுட்ப இயக்கம் / மருத்துவ கல்வி இயக்கம் / கல்லூரி கல்வி இயக்ககம் தனது நிர்வாகத்திற்குட்பட்ட அனைத்து சுயநிதிக் கல்லூரிகளிலிருந்தும் மாணவ / மாணவியர்களின்*

*எண்ணிக்கை மற்றும் கட்டண விவரங்களை சேகரித்து, தொகுத்து, தேவைப்படும் தொகையினை நேரடியாக ஆதி திராவிடர் நல ஆணையிரிடமிருந்து பெற்று உரிய கல்லூரிக்கு பிரித்து வழங்க வேண்டும். கலந்தாய்வின் போது சாதிச்சான்று மற்றும் வருமானச் சான்றிதழ்களை சரிபார்த்து தகுதியுள்ள மாணவ / மாணவியர்களை தெரிவு செய்ய ஒற்றைச் சாளர கலந்தாய்வு நடத்தும் துறை அலுவலர்களுக்கு, ஆதிதிராவிடர் நல துறையைச் சார்ந்த அலுவலர்கள் உதவிபுரிவர்.*

4. *சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் ஏனைய கல்லூரிகளில் படிக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு கல்லூரி கல்வி இயக்கம் / தொழில்நுட்ப கல்வி இயக்கம் மூலம் அரசு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் வழங்கப்படும் (கட்டண விவரங்கள் இணைப்பு 2ல் இணைக்கப்பட்டுள்ளது) கல்லூரி கல்வி இயக்ககம் / தொழில்நுட்ப கல்வி இயக்கம் அனைத்து சுயநிதிக் கல்லூரிகளிலிருந்தும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை மற்றும் கட்டண விவரங்களை சேகரித்து, தொகுத்து, தேவைப்படும் தொகையினை நேரடியாக ஆதி திராவிடர் நலத்துறை ஆணையிரிடமிருந்து பெற்று உரிய கல்லூரிக்கு பிரித்து வழங்க வேண்டும். கல்லூரிசேர்க்கையின் போது* (Admission) *சாதிச்சான்று மற்றும் வருமானச் சான்றிதழ்களை சரிபார்த்து தகுதியுள்ள மாணவ / மாணவியர்களை தெரிவு செய்ய கல்லூரி நிர்வாகத்திற்கு தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் உதவிபுரிவர்.*

5. *அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயிலும் தகுதியுள்ள ஆதிதிராவிடர்/ பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரி களுக்கான கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் மட்டும் வழங்கப்படும். அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும்* Self supporting **Courses** *பயிலும் தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் கிறுத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் மட்டும் வழங்கப்படும்.*

6. ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்கள், ஒவ்வொரு கல்வி ஆண்டும் இத்திட்டத்திற்கு தேவையான முழு தொகையினையும் ஆண்டின் தொடக்கத்திலேயே தொடர்புடைய இயக்கத்திற்கு பிரித்து வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்துப் படுகிறார்.

7. ஒவ்வொர் ஆண்டும் அரசினால் கல்வி உதவித் தொகை திட்டங்களுக்காக வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை 32 மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களின் பெயரில் தன்பெயர் வைப்புக் கணக்கு துவக்கி அவற்றில் பற்று வைத்து செலவிட அனுமதிப்பது போல, இனி வரும் ஆண்டுகளில் அவற்றோடு ஆணையர், தொழில்நுட்ப கல்வி / இயக்குநர் கல்லூரி கல்வி / இயக்குநர் சட்டக் கல்வி போன்ற அலுவலர்களின் பெயரில் தன்பெயர் வைப்புக் கணக்கு துவக்கி அற்றில் பற்று வைத்து மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். பின்னர் வருட இறுதியில் அனைத்து துறைகளிடமிருந்து பயனீட்டுச் சான்றிதழினை பெற்று அரசுக்கு சமர்பித்த ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. சுயநிதி கல்வி நிறுவனங்கள் ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த கட்டணங்களை மாணவ / மாணவியர் சேர்க்கையின் போது அவர்களிடமிருந்து வசூலிக்கக் கூடாது. மாறாக மாணவ / மாணவியர்கள் செலுத்த வேண்டிய மேற்கண்ட கட்டணங்களை தொழில்நுட்ப கல்வி இயக்கம் / மருத்துவ கல்வி இயக்கம் / கல்லூரி கல்வி இயக்கம் தேவையின் அடிப்படையில் ஆதிதிராவிடர் நல ஆணையரிடமிருந்து கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே தொகையினை பெற்று, தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து சுயநிதிக் கல்லூரிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. இத்திட்டத்தின்படி பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களிடமிருந்து எந்தவித கல்வி கட்டணங்களையும் தொடர்புடைய

சுயநிதி கல்வி நிறுவனங்கள் வசூலிக்ககூடாது என்பதை சம்மந்தபட்ட கல்வி நிலைய இயக்கங்கள் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

10. ஏற்கெனவே பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வழங்கப்பட்டு வரும் கல்வித் உதவித் தொகையானது (Scholarship) அதே முறையிலேயே தொடர்ந்து வழங்கப்படும்.

11. ஒன்றைச் சாளர கலந்தாய்வில் கலந்துகொண்டு தனியார் சுயநிதி கல்லூரிகளில் சேர்க்கைப் பெற்ற, பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம்மாறிய கிருததுவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களிடமிருந்து அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு (Presently Justice N.V. Balasubramanian Commission) நிர்ணயித்த கல்வி கட்டணத்தை வசூலிக்க கூடாது என சம்பந்தப்பட்ட தனியார் சுயநிதி கல்வி நிறுவனங்கள் அறிவுறுத்தப்படு கிறார்கள் ஒன்றைச் சாளர முறையில் சுயநிதி கல்லூரிகளில் சேரும் மாணவ / மாணவியர்களுக்கு முதல் தலைமுறை மாணவர்களுக்கு கல்வி கட்டணம் வழங்கும் திட்டத்தினை போன்று, இத்திட்டத்திலும் கலந்தாய்வின் போது கட்டணக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணத்தை விலக்களித்து தொடர்புடைய சுயநிதி கல்லூரியில் சேர்க்கை செய்ய வேண்டும். கலந்தாய்வின் போது மாணவரின் சாதிச்சான்று மற்றும் வருமானச் சான்றிதழ்களை சரிபார்த்து மேற்காணும் சலுகை வழங்க வேண்டும். பிற முறைகளை பின்பற்றி சுயநிதி கல்லூரிகளில் சேர்க்கை நடைபெறும் தருணங்களிலும் அரசு நிர்ணயித்த கல்வி கட்டணங்களைக் தகுதியுள்ள மாணவ / மாணவியர்களிடமிருந்து கல்வி நிறுவனங்கள் வசூலிக்கக்கூடாது.

12. சான்றிதழ்களை சரிபார்ப்பது, தவறான சான்றிதழ்கள் அளிக்கும் மாணவர் மற்றும் பெற்றோர் மீது நடவடிக்கை எடுப்பது, மாணவர் எந்த வகையான கல்வி பயில அனுமதிக்கப்பட்டாரோ அதனை அனுமதித்த அலுவலர் / அமைப்புதான் நடவடிக்கை தொடர வேண்டும்.

13. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை தொடர்பான பொது விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் படி, அரசு வழங்கும் கல்வி சலுகைகளில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே பயன்படுத்த இயலும், உதாரணமாக தொழிற்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி கட்டணத்தை **(Tution Fees)** அரசே ஏற்றுக் கொள்ளும் திட்டம் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும்கல்வி கட்டணச் சலுகை திட்டம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே தகுதிக்கேற்ப மாணவர்கள் பயனடைய இயலும், மேலும் இந்தக் கல்வி ஆண்டினைக் கொருத்தவரை மட்டும் (2012 - 2013) பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள், தொழிற்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்குக்கான திட்டத்தின்கீழ் ஏற்கெனவே பயனடைந்திருந்தால் மீதமுள்ள தொகையினை (உதாரணமாக ரூ. 40000/- ரூ. 20000 = ரூ. 20000/-) இத்துறையின் புதிய கல்வி கட்டணச் சலுகை திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

14. மேலும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் கல்வி உதவித் தொகை பெறுபவர்கள் மற்றும் விவசாயிகளின் குழந்தைகள் / இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுகள் / இராணுவ வீரர்களின் குழந்தைகள் / முன்னாள் இராணுவ வீரர்களின் குழந்தைகள் போன்றோருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை போன்றவற்றை பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள், ஆதிதிராவிடர் நலத்துறையின் கல்வி கட்டணங்களை பெறும் திட்டத்தின் கீழ் பயன்பெற இயலாது.

15. 2012-2013ஆம் கல்வியாண்டில் மேற்கண்ட திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள் ஏற்கெனவே கட்டணங்களை தொடர்புடைய சுயநிதி

கல்லூரிகளுக்கு செலுத்தி இருப்பின் அக்கட்டணங்கள் ( அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த கட்டணம் மட்டும்) கல்வி நிறுவனங்களால் அம்மாணவர்களுக்கு திரும்ப வழங்கப்படும். 2012-2013ஆம் கல்வி ஆண்டினை பொருத்தவரை கல்வி உதவித் தொகை பெறும் முறையினை போலவே அந்தந்த சுயநிதி கல்வி நிறுவனங்கள் தகுதியுள்ள மாணவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு அளிக்க வேண்டிய கல்வி கட்டணங்களை இணையதளம் மூலம் தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களுக்கு விண்ணப்பித்து, கல்விக் கட்டணங்களை பெற்று மாணவ / மாணவியர்களுக்கு அளிக்க வேண்டும்.

16. பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு அதிகமாக உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைய இயலாது. அத்தகைய மாணவர்கள் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு உயர்கல்வித் துறையால் அளிக்கப்படும் கல்வி கட்டணச் சலுகையை பெற்றுக் கொள்ளலாம்.

17. இத்திட்டமானது சுயநிதி கல்வி நிறுவனங்களில் உள்ள அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் பயிலும் (Management Quota) ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த தொகையானது வழங்கப்படும். பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர் களுக்கும் இது பொருந்தும்.

18. மேலும் இத்திட்டத்தினை கண்காணிக்க இரண்டாம் நிலை அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழுவினை நியமித்து தொடர்ச்சியான கண்காணிப்பில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. இவ்வாணை உயர்கல்வித் துறையின் அ.சா.எண். 1698 1/j 1/2012 நாள் : 6.9.2012 / மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அ.சா.எண். 31865/MCA 1/2012 நாள்: 3.9.2012

*ஆகியவற்றின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.*

*// ஆளுநரின் ஆணைப்படி//*

**ஆ.சு.ஜீவரத்தினம்,**
**அரசு செயலாளர்,**

*பெறுநர்*

» *ஆணையர், தொழில்நுட்ப கல்வி, சென்னை - 25.*
» *இயக்குநர், மருத்துவக் கல்வி, சென்னை - 10.*
» *இயக்குநர், சட்ட சல்வி, சென்னை - 35.*
» *இயக்குநர், கல்லூரிக்கல்வி சென்னை - 6.*
» *முதன்மைச் செயலாளர், உயர்கல்வித்துறை / மற்றும் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை/ சட்டத்துறை தலைமைச் செயலகம், சென்னை - 9.*
» *ஆணையர் ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை - 5.*
» *அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.*
» **நகல்**
» *செயலாளர், பொறியியல் மாணவர் சேர்க்கை,*
» *அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 25.*
» *தேர்வுக்குழு, மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை - 10.*
» *அனைத்து சுயநிதி பொறியியல் கல்லூரிகள்,*
» *(தொழிற்நுட்ப கல்வி ஆணையர், சென்னை - 25, வழியாக)*
» *அனைத்து சுயநிதி மருத்துவ கல்லூரிகள் (மருத்துவ கல்வி இயக்குநர், சென்னை 10 வழகியாக)*
» *அனைத்து சுயநிதி சட்டக்கல்லூரிகள் (சட்டகல்வி இயக்குநர், சென்னை - 35 வழியாக)*
» *அனைத்து சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் (கல்லூரி கல்விக் இயக்குநர், சென்னை - 6 வழியாக) சென்னை - 6.*

*// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//*

---

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்து கல்வி கட்டணங்களை வழங்கும் திட்டம் - திருத்தம் வெளியிடப்படுகிறது.*

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-3) துறை**

**அரசாணை (நிலை) எண். 16**
**நாள் : 24.02.2014**
**விஜய கார்த்திகை 26, திருவள்ளுவராண்டு 2044**

*படிக்கப்பட்டது*

1. *அரசாணை (நிலை) எண். 6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 09.01.2012.*
2. *அரசாணை (நிலை) எண். 63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 25.06.2012.*
3. *அரசாணை (நிலை) எண். 106, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 09.12.2013.*
4. *அரசாணை (நிலை) எண். 107, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 09.12.2013.*

**ஆணை:-**

*பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்துவிதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாயக் கட்டணங்களையும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு “அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரி களுக்கான கட்டணக் குழு” நிர்ணயித்த கட்டணம் அனைத்தையும் போஸ்ட், மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் 2011-2012 ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.*

*2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு, "அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் 2012 - 2013 ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.*

*3. சில சுயநிதி பொறியில் கல்வி நிறுவனங்கள் ஒற்றைச் சாளர முறையில் அரசு ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மற்றும் பிற இனங்களுக்குரிய, நிரப்பப்படாத இடங்களை மீண்டும் கல்வி நிறுவனங்களுக்கே திருப்பியளிக்கப்படுவதன் காரணமாக பெறப்படும் இடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இன மாணவ மாணவிகளுக்கான கல்வி உதவித் தொகையை பெறும் நோக்குடன் ஆதிதிராவிடர் இன மாணவர்களைக் கொண்டே தனது கல்லூரியிலுள்ள நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் சேர்க்கை அனுமதித்திருப்பது அரசால் அறியப்பட்டது.*

*4. இதனை சீரமைக்கும் முயற்சியாக, அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் "தனியார் கல்லூரிகளுக்கான அனுமதிக்கப்படும் இலவச இருக்கைகளுக்கான கட்டணத் தொகைக்கு மிகாமல் வழங்கப்படுமென பார்வை 3 மற்றும் 4ல் காணும் அரசாணைகளில் அரசு ஆணையிட்டது.*

*5. பார்வை 3 மற்றும் 4 ல் காணும் அரசாணை களினால், ஏற்கனவே கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ள மாணாக்கர்களுக்கு பாதகமாக அமையும் என்று மாணாக்கர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், அதில் எண்ணிக்கையிலான ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இன மாணவ மாணவியர்கள் அவர்கள் விரும்பும் பாடப்பிரிவில் சேர்ந்து பயின்று தொழில்நுட்ப வல்லுநர்களாக உருவாக வேண்டும் என்ற நோக்கத்துடனும், முறைகேடுகளில் ஈடுபடும் நிறுவனங்கள் மீது தனியே நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் அடிப்படையிலும், இவ்வரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.*

*1. சுயநிதிக் கல்வி நிறுவனங்கல் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்துவிதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின, மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட இன மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாயக் கட்டணங்களையும் பயன்பெறும் வகையில் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாயக் கட்டணங்களையும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த கட்டணம் அனைத்தையும் மைய / மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் 2013-14 கல்வியாண்டு முதல் அரசே வழங்கும்.*

*6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 10750-ஆதி(ம) பந/2014 நாள். 24.02.2014 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.*

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**கண்ணகி பாக்கியநாதன்,**
**அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

» *இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை — 5.*
» *இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை — 5.*
» *ஆணையர், தொழில்நுட்ப கல்வி, சென்னை — 25.*
» *இயக்குநர், மருத்துவக் கல்வி, சென்னை — 10.*
» *இயக்குநர், சட்ட கல்வி, சென்னை — 35.*
» *இயக்குநர், கல்லூரிக்கல்வி, சென்னை — 6.*
» *முதன்மைச் செயலாளர், உயர்கல்வித்துறை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சட்டத்துறை தலைமைச் செயலகம், சென்னை — 9.*
» *அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்,*
» *மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை — 6,18,35.*
» *சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை — 8,35,6.*
» *அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.*

» **நகல்:-**

» *நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது — 11) துறை, சென்னை — 9.*

» *முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை — 9.*

» *மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.*

» *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை — 9.*

» *செயலாளர், பொறியியல் மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை— 25.*

» *தேர்வுக்குழு, மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை—10.*

» *அனைத்து சுயநிதி பொறியில் கல்லூரிகள்,*

» *(தொழிற்நுட்ப கல்வி ஆணையர், சென்னை — 25, வழியாக)*

» *அனைத்து சுயநிதி மருத்துவ கல்லூரிகள் (மருத்துவ கல்வி இயக்குநர், சென்னை— 10 வழகியாக)*

» *அனைத்து சுயநிதி சட்டக்கல்லூரிகள் (சட்டகல்வி இயக்குநர், சென்னை—35 வழியாக)*

» *அனைத்து சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்*

» *(கல்லூரி கல்விக் இயக்குநர், சென்னை—6 வழியாக)*

» *அனைத்து கல்வியியல் கல்லூரிகள் (கல்லூரி கல்விக் இயக்குநர், சென்னை—5 வழியாக)*

» *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை—9.*

*இருப்புக் கோப்பு / உதிரி.*

*// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//*

*பிரிவு அலுவலர்*

***

# சாதி ஆணவக் கொலைகள்
# உசிலம்பட்டி திலீப்குமார் வழக்கில் உயர்நீதிமன்ற தீர்ப்பு
## ரிட் மனு எண். 26991 / 2014

*அரியானா மாவட்டம்* (Civil Write Petition No. 26734 of 2014) Manmeet sing Vs State Haryana) *என்ற வழக்கில் கடந்த 23.02.2015 அன்று பஞ்சாப் அரியானா உயர்நீதி மன்றம் ஆணவ கொலைகளை தடுத்து நிறுத்த வேண்டி மாநில அரசுக்கு காவல்துறைக்கும் பல வழிகாட்டும் நெறிமுறைகளை வகுத்திருந்தது. அதையே அடிப்படையாக கொண்டு சென்னை உயர்நீதி மன்றமும் தமிழக அரசுக்கும், தமிழக காவல் துறைக்கும் கடந்த 13.04.2016 அன்று ஆணவக்கொலை தொடர்பான ஒரு வழக்கில் மிக முக்கிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.*

**நீதியரசர்.வி.இராமசுப்ரமணியன்**

### ஆணை

*உயர் சாதியைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு அதனால் இருவரும் துரத்தப்பட்டு அதன் விளைவாக அப்பெண் கொலையுண்ட பின்னணியில் ஒரு பட்டியல் சாதியைச் சேர்ந்த ஒருவரால் மேற்கூரிய ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த ரிட் மனு 11.11.2014 தேதியிட்ட எனது இறுதி ஆணையின் மூலம் குறிப்பான சில வழிகாட்டல்களோடு முடித்து வைக்கப்பட்டது. அந்த ஆணையின் பத்தி 43ல் இடம் பெற்றுள்ள செயலாக்க பகுதி* (Operative Portion) *கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.*

*பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதிமன்றத்தில் சிவில் ரிட் மனு 26734/2014 மீது 23.02.2015 அன்று நீதிபதி கே.கண்ணன் அளித்த தீர்ப்பையும் மனுதாரரின் வழக்கறிஞர் எனது பார்வைக்கு கொண்டு வந்தார். அத்தீர்ப்பின் பத்தி 10ல் நீதிபதி அளித்துள்ள சில வழிகாட்டல்கள் குறிப்பிடத்தக்கதாகும். எனவே அது கீழே எடுத்துரைக்கப்படுகிறது.*

*"10 பெற்றோர், உறவினர்கள், அதிகாரப்பூர்வமற்ற சமூகப் பஞ் சாயத்துகள் மூலம் தங்களின் உயிருக்கு அபாயம் இருப்பதாக அச்சத்துடன் தம்பதியர் களிடமிருந்து வருகிற புகார்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் தனிப்பிரிவு இருக்க வேண்டும்.*

*தம்பதியரில் எவரொருவர் தங்களுக்கு அபாயம் உள்ளனெக் கருதுப்பட்சத்திலும் வயது வந்த தம்பதியரைப் பெற்றோரிடம் திருப்பி அனுப்ப காவல்துறை எந்த முயற்சியையும் எடுக்கக்கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது கிராமக் குழுமங்களுக்குள்ளும் முற்போக்குச் சிந்தனையுடைய நபர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட "மக்களின் நண்பர்களைக்" கொண்ட படையை காவல்துறை வைத்திருக்க வேண்டும்.*

*எங்கு கௌரவக் கொலைகள் அதிகம் நிகழ்கிறதோ அவற்றைத் தடுக்கிற வகையில் அப்பகுதிகளில் உணர்வுபூர்வமான உதவிகளையும் கலந்தாலோசனை களையும் அவர்கள் வழங்க வேண்டும். புகார்கள் வந்தவுடன் இவர்களுக்கு காவல்துறையால் தகவல் தெரிவக்கப்பட்டு கிராமத்தில் பதட்டத்தைக் குறைக்கிற சமாதானப் பணியை மேற்கொள்ளச் செய்ய வேண்டும்.*

*காவல்துறைக்கும் மக்களுக்குமான இணைப்பு பலவீனமுறுவது அதிகரித்து வருகிறது. மக்களை அச்சுறுத்துவதற்கோ, கைது செய்வதற்கோ மட்டுமல்லாது அமைதியையும், நல்லெண்ணத்தையும் உருவாக்குகிற வகையில் மக்களிடம் நெருக்கம் பேண வேண்டும்.*

*கௌரவக் கொலையென ஐயம் ஏற்படும் ஒவ்வொரு புகாரையும் எஸ்.பி.யின் (முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர்) நேரடிக் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையிலும் டி.எஸ்.பி.க்கு குறைவில்லாத தகுதி நிலையில் உள்ள உயரதிகாரியின் விசாரணைக்கு ஒப்படைக்க வேண்டும்.*

*சிவில் ரிட் மனு 26734/2014*

*அரியானா மாநில உள்துறைச் செயலாளர் உடனடியாக மாநிலத்தின் அனைத்து உயர்நிலைக் காவல் அதிகாரிகளின் கூட்டத்தை நடத்தி கௌரவக் கொலைகளை விசாரிக்கவும், வழக்காக்கிடவும் ஏற்கத்தக்க, தகுதியான அதிகாரப் படிநிலை முறைமையை* **(Protocol)** *உருவாக்க வேண்டும். இத்தகைய நடவடிக்கை முன்மொழியப்பட்டால் கௌரவக் கெலை நிகழும்போது யாருடைய பொறுப்பின்மை? காரணமாக இருந்த அதிகாரிகள் யார் என்பதை நிர்ணயிப்பதற்கான வழிமுறையாக அது அமையும். பழமையான நடைமுறைகள்,*

வயது வந்தவர்களின் திருமண இணையரைத் தேர்ந்தெடுக்கும் தெரிவுச் சுதந்திரத்திற்கு குறுக்கே நிற்குமேயானால் அவை அருவெறுப்பானவை மட்டுமின்றி அரசியல் சாசன நெறிகளுக்கு முற்றிலும் புறம்பானவையுமாகும். தனிநபர்களின் சுதந்திரம் போற்றி வளர்க்கப்பட வேண்டும். அதிகாரப் பூர்வமற்ற சமூகப் பஞ்சாயத்துகள், பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தாலும், நன்கறிந்த வயதுவந்தோரின் பக்குவமான முடிவாகக் கருதி அத்தனிப்பட்ட தெரிவுகளை அவர்கள் தலைவணங்கி ஏற்குமாறு செய்ய வேண்டும். சமூக நலனுக்கான சட்டங்களுக்கு நேர்வினையாற்றுகிற முதல் நபராக சட்டம் அமலாக்குகிற அமைப்புகள் இருக்க வேண்டும்.

பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதிமன்றம் விடுத்த வழிகாட்டல்களை ஒத்த உத்தரவுகள் இங்கேயும் கௌரவக் கொலைகளை ஒழிக்க அவசியமெனக் கருதுகிறேன். எனவே கீழ்க்காணும் உத்தரவுகள் வழங்கப்படுகின்றன.

1. தென்மண்டலக் காவல்துறை ஐ.ஜி.தனது விசாரணை அறிக்கையின் நகலை காவல்துறை தலைவருக்கு (டி.ஜி.பி.) துவக்க நிலை விசாரணையில் கண்டறியப்பட்ட தவறுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது பொருத்தமான துறைவாரி நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பி வைக்க வேண்டும்.

2. பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்ற ஆணை போன்றே, அரசாங்கம் சிறப்புப் பிரிவுகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க வேண்டும். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் ஆகியோரை உள்ளடக்கியதாக அச்சிறப்பு பிரிவு அமைய வேண்டும். இப்பிரிவு கலப்புத் திருமண தம்பதியர்களிடமிருந்து வருகிற துன்புறுத்தல் / மிரட்டல் தொடர்பான மனுக்கள், புகார்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. இச்சிறப்புப் பிரிவுகள் 24 மணி நேர ஹெல்ப் லைன் ஒன்றை உருவாக்கி புகார்களைப் பெற்று பதிவு செய்வதோடு, உரிய உதவிகள், அறிவுரைகளை வழங்கி தம்பதியரைப் பாதுகாக்கவும் வேண்டும்.

4. மாநிலத்தின் அனைத்துக் காவல் நிலையங்களும் மின்னணு இணைய தளம் வாயிலாக (CCTNS - Crime and Criminal Tracking Network Portal and Systems) இணைக்கப் பட்டுள்ளதால் அச்சத்தோடு தம்பதியர்களிடமிருந்து வரும் புகார்களுக்கு ஹெல்ப் லைன் மூலம் வந்தாலும் முதல் தகவல் அறிக்கையைத்

*தானி வெளியீடாக (தானி உருவாக்கத்தில்) தருவதற்கான சாத்தியங்களைத் தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும்.*

5. *ஹெல்ப் லைன் வாயிலாகவோ வேறு வகையிலோ பெறப்பட்ட புகார்கள் பதிவு செய்யப்படுவதையும், நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் ஒவ்வோர் மாவட்டத்திலும் உருவாக்கப்பட்ட இச்சிறப்புப் பிரிவுகள் உரிய கால இடைவெளிகளில் கண்காணிக்க வேண்டும்.*
6. *எந்தக் காவல் நிலையத்திற்குட்பட்டு தம்பதியரின் நகர்வுகள் இருக்கிறதோ அக்காவல் நிலைய இருப்பு அலுவலர்* (Station House Officer) *அவர்களுக்கு பாதுகாப்பு தருவது கடமையாகும். ஹெல்ப் லைன் வாயிலாகவோ அல்லது வேறு வகையிலோ வருகிற புகாரை எந்தக் காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் தங்களுக்கு ஆபத்து இருப்பதாகத் தம்பதியர் புகார் செய்கிறார்களோ அந்த காவல் நிலையத்திற்கு உடனடியாக அனுப்பி வைத்து பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும். அப்புகாரை* CCTNS Portal *வாயிலாக ஆன்லைனில் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு அனுப்ப இயலுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். சிறப்புப் பிரிவால் தம்பதியரின் வேண்டுகோள் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டவுடன், அத்தம்பதியருக்கு பாதுகாப்பு அளிப்பது காவல்நிலைய இருப்பு அலுவலரின் கடமையாகும்.*
7. *பாதிக்கப்படுகிற தம்பதியர்க்கு பாதுகாப்பு தருவது, அவர்களைத் துரத்துகிற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதோடு நின்று விடாமல் சிறப்புப் பிரிவு செயலூக்கத்தோடு தம்பதியரின் பெற்றோருக்கு மனோ ரீதியான ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.*
8. *அரசாங்கம் கௌரவக் கொலைகள் எனும் அநீதியை ஒழிப்பதற்குரிய போதுமான நிதியை ஒதுக்குவதோடு மாவட்ட சிறப்புப் பிரிவின் பயன்பாட்டிற்கும் ஒப்படைக்க வேண்டும். சிறப்புப் பிரிவு இந்நிதியை, தம்பதியர்க்கு தற்காலிகப் புகலிடம் தருதல், அவர்களின் மறுவாழ்வுக்கு உதவுதல் ஆகியவற்றுக்கு தேவையேற்படும்போது பயன்படுத்தலாம். மனோ நல ஆலோசகர்களின் சேவையையும் சிறப்பபுப்பிரிவு பயன்படுத்திக் கொள்வதற்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.*

9. கெடுவாய்ப்பாக சம்பவங்களேதும், நிகழும் பட்சத்தில் தம்பதியரைக் காப்பாற்றத் தவறிய அதிகாரிகள் மீதான பொறுப்புகளை நிர்ணயிக்கிற பணியை சிறப்புப் பிரிவு செய்ய வேண்டும். பாதுகாப்பு தரத் தவறுதல் என்பது மிக மோசமான நடத்தையாகக் கருதப்பட வேண்டும். அரசாங்கம் சிறப்புப் பிரிவுகள் உருவாக்கப் படுவததையும் மேற்கூறிய நடவடிக்கைகளையும் முன்று மாதங்களுக்குள்ளாக மேற்கொள்ள வேண்டும்.

**பெறுநர்:–**

1. அரசு செயலாளர், உள்துறை தமிழக அரசு, சென்னை - 9.

2. தலைவர் **(D.G.P)**, மைலாப்பூர், சென்னை.

3. இணை இயக்குநர், மத்திய புலலனாய்வு அமைப்பு **(C.B.I)**, இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை - 90.

***

# பஞ்சமி நிலங்கள்
# (AD கண்டிசன் DC நிலங்கள்)

**நிலச் சீர்திருத்தம்:-**

*சாதிய கொடுமைகளுக்கு உள்ளாகி உள்ள மக்களை நாம் பரிபூர்ணமாக விடுதலை செய்ய வேண்டியது அத்தியாவசிய பணியாகும். ஏனெனில் கிராமப்புற உழைக்கும் மக்களின் சுமார் 55 சதம் மக்கள் அவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அனைத்து ஜனநாயக உரிமைகளையும் பெறும் போதுதான், இந்த நாடும் ஒரு பண்பட்ட ஜனநாயக நாடாக விளங்க முடியும்.*

*ஆகவே, சாதிய கொடுமைகளுக்கு உள்ளாகிய மக்களுக்கு எப்போது அனைத்து ஜனநாயக உரிமைகளுக் கிடைக்கிறதோ, எப்போது அவர்கள் ஜனநாயக சுவாச காற்றை சுவாசிக்கிறார்களோ அப்போது தான் அவர்கள் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்றவர்கள் ஆவார்கள்.*

*சாதிய கொடுமைகளுக்கு உள்ளாகியுள்ள மக்களை மூன்று முக்கிய தளங்களில் இருந்து விடுதலை செய்திட வேண்டும். பொருளாதார தளத்தில் இருந்தும், சமூக தளத்தில் இருந்தும், அரசியல் தளத்தில் இருந்தும் எல்லா தடைகளையும் உடைத்து விடுதலை செய்திட வேண்டும். இந்த மூன்று தளத்திலிருந்தும் அந்த மக்கள் விடுதலை செய்யப்படவில்லையானால் அவர்களது மேம்பாடு கானல் நீராகவே இருக்கும்.*

*ஆகவே இன்றைய தேவை அவர்கள் வாழ்வில் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றம் காண வேண்டியதாகும்.*

*அந்த வகையில் பொருளாதார தளத்தில் முன்னேற்றம் காண்பதின் அவசியத்தை பார்ப்போம். நிலச்சீர்திருத்தம் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே தான் உலகில் ஏற்பட்டு வரும் சமூக மாற்றமாக நிலச்சீர்தித்தம் உள்ளது.*

*சமுதாய வளர்ச்சிக்கு → தொழில் வளம் உதவுகிறது. தொழில் வளம் பெருக → வேளாண் துறையின் வளர்ச்சி அவசியமாகிறது. வேளாண் வளர்ச்சிக்கு → நிலச்சீர்திருத்தம் எளிதாக்குகிறது. இதன் காரணமாகத்தான் பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாய மாற்றங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது அறிய முடிகிறது.*

*எனவே தான், ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அய்வறிக்கை "நிலச்சீர்திருத்தம் இன்றி வளரும் நாடுகள் பொருளாதார முன்னேற்றம் பெறுவது கடினம்" என கூறுகிறது.*

## நீலச்சீர்திருத்தின் அவசியம்

- *நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் ஆகியோருடை நன்மைக்காக நில உடமையை மறு பகிர்வு* **(Redistribution)** *செய்திட வேண்டும்.*
- *சமுதாய அமைப்பில் மாற்றம், முன்னேற்றம் காண நிலச்சீர்திருத்தம் அவசியமாக உள்ளது.*
- *ஒரு நாட்டு மக்களின் வாழ்வைப் பல வழிகளிலும் பாதிக்க கூடியவை "நில முறைகளாகும்"* **(Land System)** *நில முறைகளுக்கும், சமுதாய நடவடிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.*
- *எனவே வளரும் நாடுகளின் அரசுகள் "சமுதாய சமத்துவத்தை"* **(Social Equality)** *காக்க வேண்டும்.*
- *அதற்கு நில உடமை* **(Land Tennure)** *யில் சீர்திருத்தம் செய்து பொருளாதார முன்னேற்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.*

## நிலச்சீர்திருத்தத்தின் அரசியல் சார்பு

*நிலச்சீர்திருத்தத்தில் உள்ள அரசியல் சார்பு தவிர்க்க முடியாததாகும். ஏனெனில் "வாழ்க்கை வசதிகள் இல்லாதவர்களை* **(Have - Nots)** *வசதிகள் உள்ளவர்களாக* **(Heaves)** *மாற்றுவதற்கு நிலச்சீர்திருத்தம் செய்வது தேவையாகும். மேம்பாடு அடைந்து வரும் நாடுகளிலும், நமது நாட்டில் சில மாநிலங்களிலும் பொருளாதார முன்னேற்திற்கும், நிலச்சீர்திருத்தத்திற்கும் நெருங்கிய தொடர்பை அறிந்து கொள்ள முடியும். வளர்ச்சி அடையாத நாடுகளில் இப்போதும் ஏராளமான ஏழை, எளிய மக்கள் பேராசிரியர் எஸ். சபாநாயகம் கூறியதை போல,*

- *வானமே மக்களுக்கு வீடாகிறது.*
- *காற்றும், மழையும் உணவாகிறது.*

## பஞ்சமர் நிலங்கள் நில ஆவணங்களில் தில்லுமுல்லு.

*தமிழகத்தில் பஞ்சமி நிலங்கள் சுமார் 12 லட்சம் ஏக்கர்கள் இருப்பதாக தெரிகிறது. முழுமையான தஸ்தாவேஜிகள் பெற முடியாத அவல நிலைமை உள்ளது. ஆங்கிலேய ஆட்சிக்காலத்திலேயே தாழ்த்தப்பட்ட மக்களில் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக கொடுக்கப்பட்ட நிலங்களாகும்.*

*இதனை தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் தவிர வேறு சமூக மக்கள் வாங்கவோ, அனுபவிக்கவோ உரிமை வழங்கப்படவில்லை. சட்டம் இப்படி இருந்தாலும் சில ஆயிரம் ஏக்கர்கள் தவிர பெரும்பாலான நிலங்களை ஆதிக்க சாதியினர் கையகப்படுத்தி அனுபவித்து வருகின்றனர்.*

*1968ம் ஆண்டு* **UDR** *சர்வேயில்* **Up Dated Re-Survey)** *பஞ்சமி நிலம் என்பதை எடுத்து விட்டு, பல ஆதிக்க சாதியினர் பட்டா நிலமாக மாற்றியுள்ளனர். இதனை கண்டறிந்து பஞ்சமி நில மீட்சி கூட்டமைப்பு, தமிழ்நாடு நிலநிர்வாக ஆணையர் முறையீடு செய்த காரணத்தால் அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கும் 1986க்கு முந்தைய சர்வேயை ஒப்பீடு செய்து பஞ்சமி நிலங்களை ஆதிக்க சாதியினர் தனியார் பட்டா நிலங்களாக்கப் பட்டிருந்தால், அவைகளை நில ஆவணங்களான அடங்கள், சிட்டா ஆகியவற்றில் சிகப்பு, மையால் அடிகோடிட்டு அதன்பட்டியலை தமிழ்நாடு நிலநிர்வாக ஆணையருக்கும் அனுப்பி வைக்க உத்தரவிட்டனர். ஆனால் எந்த மாவட்ட ஆட்சியரும் அதன்படி பட்டியல் அனுப்பி வைக்கவில்லை.*

*“எனவே பஞ்சமி நிலங்களை பழைய ஆதாரங்களை தேடி கண்டறிந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்களை பெற்றுத்தர வலுமிக்க சட்ட மற்றும் மக்கள் போராட்டங்கள் நடத்திட வேண்டும்”.*

## பஞ்சமி நிலங்களை மீட்க முதல்கட்ட பணி

*பஞ்சமி நிலங்களைப் பற்றிய புள்ளி விவரக் குறிப்புகள் நம் மிடையே இல்லை என்பதால்தான், அந்நிலங்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. தமிழகத்தின் அனைத்துப் பகுதி கிராம நிர்வாக அலுவலகங்களிலும் பஞ் சமி நிலம் குறித்து புள்ளி விவரங்கள் அடங்கிய பதிவேடுகள் ஏராளமான இருக்கின்றன. அவற்றைப் பற்றி அறிந்துகொள்ள தலித் மக்கள் போதுமான கல்வியறிவு பெறாதவர்களாக*

இருப்பதாலும், பஞ்சமி நிலங்களைப் பெருமளவு கைப்பற்றி வைத்திருக்கும் பிற சாதி இந்துக்களிடம் தலித்துக்கள் வேலையாட்களாக இருப்பதாலும், அவர்களால் தைரியமாக பஞ்சமி நிலத்தைப்பற்றிப் பேச இயலவில்லை.

பஞ்சமி நிலம் பற்றிய முழு விபரங்களை வைத்திருக்கும் கிராம நிர்வாக அலுவலகங்கள், முற்றிலும் சாதி இந்துக்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அதற்குக் காரணம், கிராம நிர்வாக அலுவலராகப் பணியாற்றுபவர் பெரும்பாலும் சாதி இந்துவாக இருக்கிறார். எனவே, அவரால் அரசு விதிமுறைகளைப் பின்பற்றி செயலாற்ற முடிவதில்லை. அவரது சாதி உணர்வு, தலித் மக்களுக்கு எதிரானதாக இருப்பதால், பஞ்சமி நிலப் பிரச்சனைகளில், தன்னால் இயன்ற அளவிற்கு தலித் மக்களுக்கு எதிராகச் செயல் படுகிறார்.

இத்தகைய சூழ்ச்சிகளிலிருந்து பஞ்சமி நிலங்களை விடுவிக்க தலித் மக்கள் அரசு அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வரும் பஞ்சமி நிலம் குறித்தான பதிவேடுகளைப் பற்றி அறிந்துகொள்வது, மிகவும் அவிசயம். அதற்கு தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 உதவி செய்கிறது.

## பஞ்சமி நிலங்களை மீட்பதற்கான அரசாணைகள்

பஞ்சமி நிலத்தை பஞ்சமர்களுக்காகவே பாதுகாக்கவும் சட்டத்துக்கு புறம்பாக அதை பிற சாதியினர் ‘சட்டவழி முறையிலான’ கிரயம், அடமானம், தானம், என்று சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஆக்கிரமித்து அனுபவித்து வந்தாலோ,

அவை சட்டப்படி செல்லாது, என வருவாய் துறை நிலை ஆணை எண். 15(9) மற்றும் 15(14) படியும் அரசாணை **GO. M.S. 2217**, தேதி 01.10.1941லும் தெளிவாக ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையின் அசல் கடித நகல்:

நீலநிர்வாகத்துறை

**அனுப்புநர்**

**பெறுநர்**
**சிறப்பு ஆணையர்**
**அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்**
**மற்றும் நில நிர்வாக**
**ஆணையம், சேப்பாக்கம்,**
**சென்னை - 600 005.**

**கடித எண். எப்1/69400/94, நாள் 19.06.94**

**அய்யா,**

*பொருள் : நிலங்கள் - பஞ்சமி - விற்பனை ஆகியவற்றின் மூலம் டி.சி. நிலங்களை உரிமை மாற்றம் செய்தல் - பதிவு மாற்றத்தைச் செயற்படுத்துதல் - அறிவுரைகள் - வழங்கப்படுதல்.*

*“பஞ்சமி நிலங்கள்” என்ற பொதுமக்களின் பேச்சு வழக்கில் சொல்லப்படும் டி.சி. நிலங்களை, ஆதி திராவிட வகுப்பினர் அல்லாத சமுதாயத்தைச் சாரந்த ஒரு நபருக்கு விற்கவோ, தானமாக வழங்கவோ முடியாது. அவை பிற நபர் எவருடைய அனுபோகத்திலாவது இருக்குமாயின், வருவாய் நிலை ஆணை 15(41) இன் வகை முறைகளின்படி முதன் முதல் ஒப்படை பெற்றவருக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுக்கு அவை திரும்ப எடுத்துக் கொள்ளப்படலாம் அல்லது மீட்டளிக்கப்படலாம்.*

*எனினும், ஏதோவொரு காரணத்திற்காக இந்த டி.சி. நிலங்கள் பிற சமுதாயத்தைச் சார்ந்த நபர்களுக்கு விற்கப்பட்டதாக பல நிகழ்ச்சிகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், பட்டாக்களும் கூட, ஆவணங்களின் அடிப்படையில் அவர்கள் பெயர்களில் உரிமைமாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாளடைவில் முதலில் வகைப்படுத்தப்பட்டது. மெல்ல மறந்து போனது. இவ்வாறு நிகழ்தல் கூடாது. ஆதி திராவிட வகுப்பினருக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்காகவே பாதுகாக்கப்பட்டு பேணிவரப்படுதல் வேண்டும்.*

*எனவே, பதிவு - உரிமை மாற்றங்கள் அனைத்தும் டி.சி. நிலம் எதையும் உள்ளடக்கியிருக்கிறதா என்று உறுதியாக, அறிந்து கொள்வதற்காக அவை கவனமாகச் சரிபாக்கப்பட்டு அவ்வாறு இருக்குமானல், அந்தப் பதிவு வருவாய் நிலை ஆணை 15(41) இன் வகை முறைகளை*

*மீறியுள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில் அது மறுக்கப்படுதல் வேண்டும். அந்த நோக்கத்திற்காக, பதிவு உரிமை மாற்றம் எதையும் செய்யுமாறு ஆணையிடம் முன்னே, மண்டலத் துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் ஆகியோரால் முழுமையான விசாரணை செய்யப்படுதல் வேண்டும். மேலும்* **'A'** *பதிவேட்டிலும், அதோடு கூட* **UDR** *பதிவேட்டிலும், 10(1) சிட்டாவிலும் உள்ள பதிவுக் குறிப்புகள் முறையாக பரிசோதிக்கப்பட வேண்டும். ஐயம் எழும் நேர்வில், அல்லது எதிர்கோரிக்கைகள் இருக்கும் நேர்வில், அது சந்தர்ப்பத்திற்கேற்ப, வருவாய்த் துறை கோட்டாட்சியருக்கு / துணையாட்சியருக்கு, சாட்டியனுப்பபட்டு டி.சி. நிலம் மற்றும் நிபந்தனை பட்டா நிலத்தைப் பொறுத்தும் கூட, பதிவு உரிமை மாற்றம் செய்யப்படுமாறு, ஆணையிடப்படுமுன்பு அவருடைய ஆணை பெறப்படுதல் வேண்டும். ஆதி திராவிட வகுப்பினர் அல்லாத மக்களுக்கு, டி.சி. நிலங்களின் பட்டா உரிமை மாற்றத்தைப் பதிவு செய்த அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு உட்படுத்தப்படுவார்கள்.*

*கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவருக்கும் நிலையான* **'A'** *பதிவேட்டிலுள்ள பதிவுக்குறிப்புகளைப் பொறுத்து, டி.சி. நிலத்துடன், ஒரு குறிப்பிட்ட பட்டா தொடர்புடையதாயிருக்கிறது என்று 10(1) சிட்டாவின் தொடர்புடைய பக்கங்களில் துணிச்சலுடன் குறிப்பிடுமாறு அறிவுரை வழங்கப்படலாம்.*

*நிலையா* **'A'** *பதிவேட்டில், டி.சி. நிலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலங்களை, கிராமங்கள், நில அளவை எண்கள், பரப்பளவு முதலானவற்றை அளிக்கிற ஒரு பட்டியல் ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் ஒவ்வொரு கிராம நிர்வாக அலவலர் அலுவலகத்திலும், பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக வைத்துவரப்பட வேண்டும். அத்தகைய நிலம், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்திராத பிற நபர் எவருக்கும் விற்கப்படவோ, உரிமை மாற்றம் செய்யப்படவோ தானமாக வழங்கப்பவோ, கூடாது என்றும் தெரிவிக்கப்பட வேண்டும். இந்த முக்கியமான விஷயங்களைக் குறித்து, உங்கள் மாவட்டத்திலுள்ள கீழ்நிலை அலுவலர்கள் அனைவருக்கும் பொருத்தமான அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

*உங்கள் நம்பிக்கையுள்ள,*

*(கையொப்பம்)*

**நகல்**
**என்.நாராயணன்**
**அரசு செயலர், சிறப்பு ஆணையர் மற்றம்**
**ஆதி திராவிட துறை**
**நில நிர்வாக ஆணையர்**
**புதின ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.**

*சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் அவர்கள் ஜமாபந்தி அலுவலர்களுக்கான அறிவுரைகள் தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் எழுதிய கடிதம்.*

*மற்றும் இது குறித்து சென்னை உயர்நிதி மன்றம் பஞ் சமி நில ஒதுக்கீடுகளுக்கு நிபந்தனைகளை விதித்து பிற இனத்தவர்கள் நிலத்தை வாங்கியது செல்லாது என தீர்பளித்த தீர்ப்பு நகலையும்,*

*இணைத்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அத்தீர்ப்பின் பேரில் பஞ்சமி நிலங்களை மீட்டுத்தர ஆணை பிறப்பித்ததையும் தங்கள் தகவலுக்காக கீழே தருகிறோம்.*

## நில நிர்வாகத்துறை
## ஜமாபந்தி அலுவலர்களுக்கான அறிவுரை

**அனுப்புனர்**

**பெறுநர்**
**சிறப்பு ஆணையர் மற்றும்**
**அனைத்து மாவட்ட நில நிர்வாக**
**ஆணையர் ஆட்சியர்கள்**
**சேப்பாக்கம், சென்னை - 600 005.**

*கடித எண்* F 1/2488/96 *நாள்: 3.06.1996*

*பொருள் : நிலம் - பஞ்சமி நிலம் - நிபந்தனை ஒப்படைப்பு - அடங்களில் பதிவுக் குறிப்புகள் - ஜமாபந்தி அலுவலர் களுக்கு அறிவுரைகள் - தொடர்பானது.*

*சட்டக் கல்வி மற்றும் உதவி நிறுவனம், பஞ்சமி நிலங்கள் தொடர்பாக முறையீடு ஒன்றைக் கொடுத்திருந்தது. அதில் ஜமாபந்தி அலுவலர்களுக்கு, கிராமக் கணக்குகளை*

முடிக்கையில் அறிவுரை வழங்குவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பின்வரும் அறிவுரைகள் மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள் அனைவருக்கும் வழங்கபட்டன.

1405ஆம் பசலி கிராமக் கணக்குகளின் **'A'** பதிவேட்டில் பஞ்சமி நிலங்கள் தொடர்பான முழுவிவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் அதன் தற்போதைய அனுபோகதாரர்கள், அடங்கள் மற்றும் நிபந்தனையின் பேரில் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பதிவேடு (பிரிவு - 1) இல் விவரமாகப் பதிவு செய்தல் வேண்டும். ஜமாபந்தியின் அலுவலர், நிபந்தனையின் பேரில் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை துணை வட்டாட்சியர் நேரில் சென்று சோதனை செய்தரா என்பதை மேலாய்வு செய்யவேண்டும்.

ஜமாபந்தி அலுவலர், முந்தைய ஆண்டுக்கான ஒப்படை பதிவேட்டினை, இந்த பசலியுடன் (வருவாய்த்துறை ஆண்டு) ஒப்பிட்டுப் பார்க்கவும் வேண்டும். மற்றும் ஆதி திராவிடர் அல்லாதோரின் உடைமையாக மாறியுள்ள பஞ்சமி நிலங்களைத் திரும்ப எடுத்துக் கொள்வதற்கான அறிவுரைகளை வழங்கி வழக்கமான சம்பிரதாயங்களைப் பிற்பற்றி பின்பு மேலும் முதன் முதல் ஒப்படை பெற்றவர்களுக்கும், தற்போதைய அனுபோகதார்களுக்கும் (அதாவது ஆதி திராவிடர் அல்லாதவர் அறிவிப்பினை வழங்கிய பின்பு ஜமாபந்தி நடக்கையிலேயே உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.)

மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும், ஜமாபந்தி அலுவலர்களுக்கு நிபந்தனையினை பேரில் ஒப்படை உரிமைகள் குறித்தும், பஞ்சமி நிலங்கள் ஆதிதிராவிடர் வகுப்பினரல்லாதாரின் கைப்பற்றில் இருக்குமானால் அவற்றிற்காக மீண்டும் உரிமை கோருவது குறித்தும், பஞ் சமி நிலங்கள் ஆதி திராவிடர் வகுப்பினரல்லாத தோரின் கைப்பற்றில் இருக்ககுமானால் அவற்றிற்காக மீண்டும் உரிமை கோருவது குறித்தும் தாங்களே கவனம் செலுத்துமாறு கண்டிப்பான அறிவுரைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுகொள்ளவுப்படுகின்றனர்.

இந்த சுற்றறிக்கையை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையை, அடுத்த அஞ்சலிலேயே அனுப்படவேண்டும்.

உங்கள் நம்பிக்கையுள்ள

(கையொப்பம்)

**ஆர்.ரங்கநாதன்**
**சிறப்பு ஆணையர் மற்றும்**
**நில நிர்வாக ஆணையருக்கா.**

## உயர்நீதிமன்றம் திர்ப்பின் பேரில் பஞ்சமி நில மீட்பு தொடர்பான தொடர் நடவடிக்கை எடுகக்கூறி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பப்பட்ட அரசாணை

*அனுப்புனர் : நில நிர்வாக சிறப்பு ஆணையர்*

*பெறுநர் : அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,*

*எண்.ஜி.1/4868/90- ன் நகல் நாள் : 15.07.91*

*அய்யா:*

*பொருள் : தாழ்த்தப்பட்டோருக்கான நிபந்தனை நிலங்கள் ஆதிதிராவிட வகுப்பினர் / பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப் பட்டது நிலை ஆணை 15-41 இன் வகை முறைகள்* **WA** *எண் 624 / 88 -ல் உள்ள சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பின் நகல் - நாள்: 22.01.1991 தகவல் அளிக்கப்படுதல்.*

*பார்வை: எண். 624/88 உயர்நீதி மன்றம், சென்னை, நாள் : 22.01.91.*

**B.S.O. 15-41** *இன்படி வகுத்தமைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான நிபந்தனை நிலங்களைப் பொருத்து, சென்னை உயர்நிதி மன்றம், 22.01.91 தேதியிட்டப்பட்ட, தன்னுடைய* **WA** *எண் 624/88 இல் ஒரு தீர்ப்பினை வழங்கியுள்ளது.*

*மேற்சொன்ன தீர்ப்பின் நகல் ஒன்று, மாவட்ட வருவாய் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும், அவர்கள் தங்களுடைய மாவட்டங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான நிபந்தனை நிலங்களைப் பொறுத்து தொடர் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளனர். மேற்சொன்ன தீர்ப்பினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை விரைவில் அனுப்படவேண்டும்.*

*உங்கள் நம்பிக்கையுள்ள*

*(கையொப்பம்)*

*// உண்மைநகல் //*

***

# அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் உரியதே

**(அகில உலக மனித உரிமைப் பிரகடனம் - 1948)**

### முகப்புரை

*1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10—ம் நாள், மனித உரிமை பற்றிய உலகப் பிரகடனம் உருவாயிற்று. இப்பிரகடத்தின் உள்ளடக்கம் மனித மாண்பு, சுதந்திரம,சமத்துவம், அமைதி என்பனவையே, இவை வெறும் சொற்களல்ல வாழ்விற்கான மதிப்பீடுகள், சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதனும், சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் இம்மதிப்பீடுகளை ஒரு பொது நியதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில், ஐக்கிய நாட்டவையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும், தம் மக்களிடம் கல்வி மற்றும் ஊடகங்கள் மூலமும் பரப்புரை செய்ய வேண்டுவது காலக் கட்டாயமாகிறது. தளராமல் தொடர்ந்து செய்யப்படும் இம்முயற்சியில், மனித உரிமைகளும், மானுட மாண்பும் சுதந்திரங்களும் வளர்க்கப்பெறும் என்று நம்பலாம்.*

### சகோதரத்துவம்: பிரிவு-1

*உலகில் பிறக்கும் மனிதர் அனைவரும் சுதந்திரத்தோடும், சுயமரியாதையோடும் உள்ளார்ந்த உரிமைகளோடும் பிறக்கின்றனர். இவர்கள் அனைவருமே பகுத்தறிவும் மனசாட்சியும் இயல்பிலேயே பெற்றவர்கள். எனவே மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவ உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.*

### பாகுபாடு மனித உரிமை மீறலே: பிரிவு-2

*இப்பிரகடனத்தில் தரப்படும் உரிமைகள், சுதந்திரங்கள் அனைத்தும் நிறம், பால், மொழி, சமயம், அரசியல் கோட்பாடு, தேசம், சமுதாயப் பின்னணி, சொத்து, பிறப்பு, தகுநிலை* (Status) *எனும் அடிப்படையில் பாகுபாடின்றி அனைவருக்கும் உரியன.*

*மேலும் ஒருவர் சார்ந்த நாட்டு, இறையாண்மையோடு கூடிய சுதந்திர நாடாக இருந்தாலும் அல்லது சார்புடைய நாடாக இருந்தாலும் இவ்வடிப்படையிலும் பாகுபாடு காட்டக் கூடாது. வேற்றுமைகள் இயல்பானவை என்போம். பாகுபாடுகளை மீறல்கள் என்போம், வேற்றுமையுள்ளும் பண்மையை வளர்த்தல் மூலம் ஒற்றுமை காண்போம்.*

**உயிர்க்கான உரிமை: பிரிவு-3**

*ஒவ்வொருவருக்கும் உயிர்வாழவும் உரிமையுண்டு, இவ்வாழ்வைச் சுதந்திரத்தோடு பாதுகாப்போடும் வாழ்வதற்கும் உரிமையுண்டு.*

**அடிமையென்று யாருமில்லை: பிரிவு-4**

*யாரும் யாரையும் அடிமையாகக் கொள்ளவோ நடத்தவோ உரிமை இல்லை. அடிமை முறைகளின் அத்தனை வடிவங்களும் தடைசெய்யப்பட வேண்டும்.*

**சித்ரவதையற்ற உலகு: பிரிவு-5**

*யாரையும் சித்ரவதை செய்யக்கூடாது. கொடூரமாக, மனிதத் தன்மையற்ற கேவலமாக நடத்தக் கூடாது. கொடூரமான மனிதத் தன்மையற்ற, கேவலமாக தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது.*

**'ஆள்' என்போர்: பிரிவு-6**

*ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன் ஓர் ஆள் என்ற நிலையில் (Person) சமமாக ஏற்றுக் கொல்லப்படுதற்கு உரிமையுடையோர்.*

**சட்டத்தின் முன் சமம்: பிரிவு-7**

*சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள்; சட்டத்தின் சமமான பாதுகாப்புக்குரியவர்கள், இப்பிரகடனத்தை மீறுகின்ற வகையில் மனிதரிடமிருந்து மனிதரைப் பாகுப்படுத்துதல் அல்லது பாகுபடுத்த தூண்டுதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்ற உரிமை அனைவருக்கும் உண்டு.*

**நீதிபெரும் உரிமை: பிரிவு-8**

*ஒரு நாட்டின் அரசியல் சாசனமும், சட்டங்களும் வழங்கும் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற போது, அந்நாட்டின் நீதிமன்றங்களின் மூலம் தக்க பரிகாரம் பெரும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*

**கைது பற்றி: பிரிவு-9**

*சரியான காரணமின்றி சட்டத்திற்குப் புறம்பாகக் கைது செய்யவோ, சிறைப்படுத்தவோ, நாடு கடத்தவோ எவருக்கும் உரிமையில்லை.*

**ஒளிவு மறைவற்ற விசாரனை: பிரிவு-10**

*ஒருவருக்குரிய உரிமைகளையும், கடமைகளையும் தீர்மானிக்கின்ற போதும், ஒருவருக்கு எதிராக ஏற்கனவே குற்றச் சாட்டுகள் இருந்தாலும் சுதந்திரமான நீதிமன்றங்கள் மூலம் வெளிப்படையான விசாரணையைக் கோருவதற்கு ஒவ்வொரு குடி மகனுக்கும் உரிமையுண்டு.*

*நீதி விசாரணைகள் வெளிப்படையாக அமைதல் வேண்டும். விசாரிக்கப்படும் நீதிபதி புற உலக நிர்ப்பந்ததிற்கு ஆளாகிவிடக் கூடாது.*

**குற்றவாளி யார்?: பிரிவு-11**

*தண்டனைக்குரிய குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டாதாலேயே ஒருவர் குற்றவாளியாவாரா? இல்லை! ஒளிவு மறைவற்ற நீதிமன்றங்களால் விசாரிக்கப்பட்டு குற்றவாளி என்று சட்டப்படி நிரூபணமாகும் வரை அவர் குற்றமற்றவரே. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தனது பாதுகாப்பிற்கான உத்தரவாதங்களைக் கோரவும் உரிமையுண்டு. ஒருவர் செய்யாத குற்றத்திற்காக ஒருவரைப் பழிக்கவோ தண்டனை வழங்கவோ யாருக்கும் உரிமை இல்லை.*

**அந்தரங்கமும் உரிமையே; பிரிவு-12**

*ஒருவரின் அந்தரங்கம், குடும்பம், இல்லம், தங்கள் இவற்றில் சட்டத்திற்குப் புறம்பாகக் குறுக்கீடு செய்ய எவருக்கும் உரிமையில்லை. ஒருவரின் மாண்புக்கும், நற்பெயருக்கும் களங்கம் கற்பிக்க எவருக்கும் உரிமை இல்லை. இம்மாதிரியான முறையற்ற குறுக்கீடுகளிளிருந்து பாதுகாப்பு பெற அனைவருக்கும் உரிமை உண்டு.*

**போய்வர,குடியேற: பிரிவு-13**

*சொந்த நாட்டினுள் விரும்பியவாறெல்லாம் போய் வரலாம். சொந்த நாட்டை விட்டு இன்னொரு நாட்டிற்குக் குடி பெயரலாம். ஒருவர் விரும்புகின்ற போது மீண்டும் சொந்த நாட்டிற்குத் திரும்பலாம்.*

### தஞ்சம் புக: பிரிவு-14

*ஒருவர் தம் நாட்டில் தாங்க முடியா கொடுமைகளுக்கு உள்ளவாராயின், இன்னொரு நாட்டில் தஞ்சம் புக உரிமையுண்டு. ஆனால் கொலைக் குற்றம் புரிந்த ஒருவரோ, அய்க்கிய நாட்டுச் சபையின் நோக்கங்களுக்கு புறம்பாக நடக்கும் ஒருவரோ எங்கும் தஞ்சம் புக உரிமை இல்லை.*

### தேசிய இனவுரிமை: பிரிவு-15

*ஒருவருக்கு ஒரு நாட்டைச் சார்ந்தவராக இருப்பதற்கு உரிமையுண்டு, ஒருவரின் தேசிய இன அடையாளத்தைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை. ஒருவர் தான் சார்ந்த தேசிய இன அடையாளத்தை மாற்றிக் கொள்ள விரும்பினால், மாற்றிக் கொள்ளவும் உரிமையுண்டு.*

### திருமணமும் உரிமையே: பிரிவு-16

*உரிய வயதடைந்த ஆண்களும் பெண்களும் மணம் புரிந்து கொள்ளவும் குடும்பம் அமைத்து கொள்ளவும் உரிமையுண்டு. ஒருவர் சார்ந்த இனம், தேசிய இனம், சமயம் ஆகியன இவ்வுரிமைகளுக்குத் தடையாய் இருக்கக். கூடாது. திருமண உறவை ரத்து செய்யவும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை உண்டு, திருமணத்தில் யாருடைய வற்புறுத்தலுக்கும் இடமில்லை. ஒருவர் சார்ந்த நாட்டின் அரசுக்கு குடும்பங்களையும், குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாக்கும் கடமையுண்டு.*

### சொத்துரிமை: பிரிவு-17

*தனித்தோ, பிறரோடு சேர்ந்தோ சொத்து வைத்துக்கொள்ளும் உரிமை அனைவர்க்கும் உண்டு, முறையான காரணமின்றி ஒருவர் சொத்தினைப் பறிக்கும் உரிமை யாருக்குமில்லை.*

### சிந்தனையும் மதங்களும் உரிமைகளே: பிரிவு-18

*ஒவ்வொருவருக்கும் சிந்திக்க, மன சாட்சிப்படி நடக்க, ஒரு மதத்தைத் தேர்வு செய்ய அல்லது தேர்ந்து கொண்ட மதத்தை மாற்றிக் கொள்ள உரிமையுண்டு. மத நம்பிக்கைகளைத் தனியாக அல்லது குழுவாக அந்தரங்கமாக அல்லது வெளிப்படையாகப் போதிக்கவும் கடைபிடிக்கவும் வழிபடவும் உரிமையுண்டு.*

### கருத்துரிமை: பிரிவு-19

*ஒவ்வொருவரும், தங்களுடைய கருத்துக்களைப் பேச்சு மூலமோ, எழுத்து மூலமோ வெளிப்படுத்த உரிமையுண்டு.*

இவ்வாறோ தகவல்களைப் பெறுவதற்கும், பெற்ற தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் பரப்புவதற்கும் உரிமையுண்டு. இந்தகவல்கள் தேச எல்லை தாண்டி சர்வதேச அளவிலும் அமையலாம்.

**‘சங்கம்’ அமைக்கலாம்: பிரிவு-20**

ஒவ்வொருவரும், அமைதியான முறையில் கூட்டாமகக் கூடவும், சங்கமைக்கவும் உரிமையுண்டு. ஆனால் சங்கத்தில் சேரும்படி எவரையும் கட்டாயப்படுத்த முடியாது.

**ஆட்சியிலும் பங்கு: பிரிவு-21**

நாட்டின் அரசதிகாரத்தில் நேரடியாகவோ சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கேற்க உரிமையுண்டு, அரசுகள் மக்களின் நம்பிக்கையை தேர்தல்கள் மூலம் தொடர்ந்து பெற வேண்டும்; இத்தேர்தல்கள் இரகசியமாக இருத்தல் வேண்டும். வாக்குரிமை எல்லோர்க்கும் சமமாக இருத்தல் வேண்டும். தன் நாட்டின் அரசுப் பணியில் சமவாய்ப்பு பெரும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.. மக்களும் அரசும் ஒருவருக்கொருவர் பதில் சொல்லும் கடப்பாடுண்டு என்பதும் மிக்கப் பெரிய கடமையாகும்.

**சமூகப் பாதுகாப்பு: பிரிவு-22**

சமூக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சமூகப் பாதுகாப்பிற்கான உரிமை உண்டு. குடி மகனின் மாண்பிற்கும், வளர்ச்சிக்கும் தேவையான பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமை உண்டு. இப்பாதுகாப்பு நாட்டு வளம், சர்வதேச ஒத்துழைப்பு, அரசுகள் வளர்ச்சிக்காக முன்னெடுக்கும் முனைப்பு ஆகியவைகளை ஒத்து அமையும்.

**வேலை வேண்டும்: பிரிவு-23**

வேலைக்கான உரிமை, தகுதிக்கேற்ப வேலையைத் தேர்வு செய்யும் உரிமை, சாதகமான பணிச்சூழல், வேலையின்மைக்கு எதிரான பாதுகாப்பு பெரும் உரிமை, நியாயமான ஊதியம், சமவேலைக்குச் சம ஊதியம், ஊதியத்தோடு கூடிய சமூகப் பாதுகாப்பு பெறல் போன்ற உரிமைகள் அனைவருக்கும் உரியன, இவ்வுரிமைகளைக் காக்கும் வகையில் தொழிற்சங்கங்களை அமைத்தல், சங்கத்தில் உறுப்பினராகச் சேரல் இவையெல்லாம் மானுட உரிமைகளே.

**ஓய்வும் உரிமையே: பிரிவு-24**

*ஒவ்வொரு நபருக்கும் ஓய்வுக்கும், இளைப்பாரலுக்கும் உரிமையுண்டு, தொழிலாளர்களின் வேலை நேரம் வரையறுக்கப்பட வேண்டும். ஊழியர்கள் ஊதியத்தோடு கூடிய விடுமுறை பெற உரிமையுடையவர்கள்.*

**அடிப்படைத் தேவைகள் அடிப்படை உரிமைகளே: பிரிவு-25**

*ஒவ்வொருவரும் உணவு, வீடு, உடை, மருத்துவம், சமூகப் பணி போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கூடிய உரிமையுடையவர்கள், வேலையின்மை, நோய், இயலாமை, விதவை நிலை, முதுமை, வாழ்வதற்கான அடிப்படை வசதியின்மை போன்ற நிலைகளில் சமூகப் பாதுகாப்பைப் பெறும் உரிமையுண்டு.*

*குழந்தைகளும், கர்ப்பிணிப் பெண்களும் சிறப்புக் கவனம் பெறும் உரிமையுடையவர்கள், மண உறவில் அல்லது மனவுறக்கப்பால் பிறந்த குழந்தையாயினும் சமமான கவனிப்புக்குரியவரே.*

**முழுமைக் 'கல்வி': பிரிவு-26**

*கல்வி பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*

*ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வியாக, இலவசக் கல்வியாக வேண்டும், உயர்கல்வி அனைவரும் பெறும் வகையில் சம வய்புக்குரியதாக்கப் பெற வேண்டும்.*

**கல்வி**

*மானுட ஆளுமையின் முழு வளர்ச்சியை, மனித உரிமைகளை, அடிப்படை சுதந்திரங்களை, பன்மைச் சமூகக் குழுக்களுக்கிடையே நல்லிணக்கத்தை, சகிப்புணர்வை, நட்புணர்வு வளர்த்தலை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*தம் குழந்தைகளுக்கான கல்வியைத் தேர்வு செய்யும் உரிமை பெற்றோருக்கும் உண்டு.*

**கலையும் அறிவியலும்: பிரிவு-27**

*சமுதாய கலாச்சார வாழ்வில் பங்கேற்கவும், கலைகளைத்துய்க்கவும், அறிவியல் வளர்ச்சி தரும் வெற்றிகளில் பங்கேற்வும் அனைவருக்கும் உரிமையுண்டு. ஒருவர் படைக்கும் கலை, இலக்கிய அறிவியலின் பயன்களைப் பாதுகாக்கவும் இப்பயன்களை அனுப்பவிக்கவும் உரிமையுண்டு.*

**ஒழுங்கு வேண்டும்: பிரிவு-28**

உரிமைகளையும், சுதந்திரங்களையும் உள்ளடக்கிய இப்பிரகடனங்கள் தேசிய அளவிலும் உலக அளவிலும் உருவாக்கப்பெறும் ‘ஒழுங்கு’ மூலமே சாத்தியம் என்பதனால் இவ்வொழுங்கைக் கோரும் உரிமை ஒவ்வொருக்கும் உண்டு.

**கடமை’யும் ஆற்றுவோம்: பிரிவு-29**

ஒரு மனிதன் தான் தோன்றிய சமூகத்துக்குரிய கடமைகளை முழுமையாக ஆற்றுகின்ற போதுதான் முழு மனிதனாகிறான்.

ஒரு மனிதன் தான் பிறந்த நாட்டின் சட்டங்களை மதிக்க வேண்டும் சக மனிதர்களின் உரிமைகளை, சுதந்திரங்களை அங்கீகரிக்க வேண்டும். இங்கு பொது அமைதி, பொது நலன் என்பன மட்டுமே முதன்மை பெறல் வேண்டும்.

அமைதி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நேர்மை வாழ்வில் மதிப்பீடுகலாகட்டும்.

**மதிப்போம்! பேணுவோம்!: பிரிவு-30**

இவ்வுரிமைப் பிரகடனங்களுக்கு எதிராகச் செயற்படவோ, அழிக்கவோ யாருக்கும் இந்த நாட்டுக்கும் உரிமை இல்லை.

# ஐக்கிய நாட்டவையின் மனித உரிமைக் காப்பளர்களுக்கான உரிமைப் பிரகடனம் 1988

**பிரிவு-1**

*மனித உரிமைகளை அடிப்படைச் சுதந்திரங்களை தனியாகவோ, கூட்டாகவோ, அறியவும், வளர்த்தெடுக்கவும், பாதுகாக்கவும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.*

**பிரிவு-2**

*அ) நாட்டின் குடிமக்கள் அனைவரும் தனியாகவோ, கூட்டாகவோ, அனைத்து மனித உரிமைகளையும், அடிப்படைச்சுதந்திரங்களையும் சமூக, பொருளாதார அரசியல் மற்றும் பிற தளங்களில் அனுபவிக்கும் வகையில் சட்டரீதியான உத்தரவாதத்துடன் நடைமுறைப்படுத்த வேண்டிய தலையாய பொறுப்பும் கடைமையும் ஒவ்வொரு அரசுக்கும் உண்டு.*

*ஆ) இப்பிரகடனத்திலுள்ள உரிமைகளையும், சுதந்திரங்களையும் உறுதியாக நடைமுறைபடுத்தப்படும் என்பதற்கான சட்டம், நிர்வாகம் மற்றும் தேவையான பிற நடவடிக்கைககளை ஒவ்வொரு அரசும் மேற்கொள்ள வேண்டும்.*

**பிரிவு-3**

*உள்நாட்டுச் சட்டம், ஐ.நா. சாசனம் மற்றும் சர்வேதேசச் சட்டங்களின் படி மனித உரிமைகளையும், அடிப்படைச்சுதந்திரங்களையும், தனது சட்டவரம் பிற்குள் நடைமுறையில் அனுபவிக்கும் வகையில் அனைத்து செயல்பாடுகளும் அமைய வேண்டும், பிரகடனத்திலுள்ளபடி உரிமைகளையும், சுதந்திரங்களையும், அறிந்துணர்ந்து, வளர்த்தெடுத்துப், பாதுகாத்து பயனளிக்குமாறு வழிநடத்தப்பட வேண்டும்.*

**பிரிவு-4**

*தற்போதுள்ள பிரகடனத்திலுள்ள எதுவும், ஐ.நா. சாசனத்தின் நோக்கங்களையோ, கொள்கைகளையோ பலவீனப்படுத்துவதாகவோ அல்லது மறுப்பதாகவோ மேலும் அகில உலக மனித உரிமைப் பிரகடனம் மற்றும் மனித உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கைகள், பிற சர்வேதேச முறையாவணம் மற்றும் பிரயோகிக்கத்தக்க உறுதிமொழிகள் ஆகியவற்றின் சட்ட விதிகளைகட்டுபடுத்துவதற்காகவோ அல்லது குறைப்பதற்க்காகவோ என்று கருதக்கூடாது.*

**பிரிவு-5**

*மனித உரிமைகள், அடிப்படைச்சுதந்திரங்கள் ஆகியவற்றை வளந்த்தெடுத்துப் பாதுகாக்கும் நோக்குடன் தனியாகவோ, கூட்டாகவோ செயல்பட ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.*

*அ) ஒருவரையொருவர் சந்திக்க அல்லது அமைதியாகக் கூட*

*ஆ) அரசு சார்பற்ற அமைப்புகள் சங்கங்கள் குழுக்களை உருவாக்கவும் அவற்றில் உருப்பினராகச் சேரவும், பங்கேற்கவும்.*

*இ) அரசு சார்பற்ற அமைப்புகளோடும் அரசு நிறுவனங்களோடும் தொடர்புகொள்ள*

**பிரிவு-6**

*ஒவ்வொருவருக்கும் தனியாகவோ, பிறருடன் சங்கமாகவோ இணைந்து செயற்பட உரிமையுண்டு*

*அ) மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் பற்றிய அனைத்து தகவல்களையும் அறிய, தேட, பெற்றுக்கொள்ள, ஏற்றுக் கொள்ளவும் மற்றும் உள்நாட்டு சட்ட, நீதி மற்றும் நிர்வாக முறையில் இவ்வுரிமைகளும், சுதந்திரங்களும் இடம்பெற்றுள்ளன என்பதனை அறிவதற்காக உரிமையுண்டு.*

*ஆ) மனித உரிமைகள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மனித உரிமை நடைமுறைப் படுத்தப்படுகின்ற மனித உரிமை ஆவணங்களில் உள்ள மனித உரிமைகள் அடிப்படை சுதந்திரங்கள் பற்றிய பிறரின் கருத்துக்களை, தகவல்களை, விவரங்களை தாராளமாகப் பிரசுரிக்க பரப்ப தெரிவிக்க உரிமையுண்டு.*

இ) அனைத்து மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியவை சட்டரீதியாகவும், நடைமுறையிலும் பின்பற்றப்படுவதை ஆய்வு செய்ய, கலந்தாலோசிக்க, மக்கள் கருத்துக்களை உருவாக்க கடைப்பிடிக்க சரியான வழிமுறைகளில் சமுதாயத்தின் கவனத்தை இக்கருத்துக்களின் பால் ஈர்க்கச் செய்ய உரிமையுண்டு.

**பிரிவு-7**

மனித உரிமைகளை வளர்த்தெடுக்கத்தனியகவோ, கூட்டாகவோ கலந்தாலோசித்து புதிய சிந்தனைகளையும், கொள்கைகளையும் ஏற்கத்தகும் வகையில் அறிவுறுத்த உரிமையுண்டு.

**பிரிவு-8**

அ) தனியாகவோ, கூட்டாகவோ, பாகுபாடு காட்டப்பெறாமல் தான்சார்ந்த நாட்டின் அரசாங்கத்திலும், பொதுநலப்பிரச்சினைகளிலும் பங்கேற்ற உரிமையுண்டு.

ஆ) தனியாகவோ, கூட்டாகவோ, அரசு மற்றும் அரசு நிறுவனங்கள், சிறப்பாகச் செயல்படும் வகையில் ஆக்கப்பூர்வ விமர்சனங்களையும், திட்டங்களையும் சமர்ப்பிக்கவும் மற்றும் மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களை வளர்த்தெடுத்துப் பாதுகாக்கும் பணியில் உருவாகும் தடைகளைக் சுட்டிக்காட்டவும் உரிமையுண்டு.

**பிரிவு-9**

1. தனியாக மனித உரிமைகளையும், அடிப்படிச் சுதந்திரங்களையும் அனுபவிக்கவும் இவ்வுரிமைகளை வளர்த்தெடுத்து பாதுகாக்கவும் அனைவருக்கும் உரிமையுண்டு. உரிமைகள் மீறப்படுகின்றபோது சரியான தீர்வைப் பெறவும், பாதுகாப்புப் பெறவும் உரிமையுண்டு.

2. உரிமைகளும் சுதந்திரங்களும் மீறப்பட்டதாக சொல்லப்படுவதை அவர்கள் நேரிலோ அல்லது சட்டப்படி அவர்களால் அதிகாரம் அளிக்கப்பட பிரதிநிதி மூலமாக ஒரு புகார் கொடுக்கலாம்.

மேலும் அந்த புகாரை ஒரு சுதந்திரமான நடு நிலையான தகுதிவாய்ந்த நீதித்துறையைச் சார்ந்த சட்டப்படி உருவாக்கப்பட்ட அதிகார நிலையிலோ பொது விசாரணையிலோ விசாரிக்க வைத்து அந்த நபரின் உரிமைகள் அல்லது சுதந்திரங்கள் மீறப்பட்டிருக்கிறது. எனில், அந்த நீதி அதிகாரியிடமிருந்து நிவாரணத்தொகை ஏதும் இருப்பின்

அது உள்ளிட்ட குறையை நிவர்த்தி செய்யும் தீர்ப்பு ஒன்றை பெறவும் அந்த இறுதி தீர்ப்பு கால தாமதம் இல்லாமல் செயல்படுத்த ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

3. மேற்கண்டவை போல இதே முடிவைத்தானியாகவோ, கூட்டாகவோ பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

அ) மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்கள் ஆகியன தனி அதிகாரிகளாலோ அரசு எந்திரங்களாலோ கொள்கை அளவில் அல்லது செயல் அளவில் மீறப்பட்டால் அது தொடர்பாக, அந்நாட்டின் தகுதி வாய்ந்த நீதி, நிர்வாக மற்றும் சட்ட மன்றம் போன்ற சட்டபூர்வ அதிகார அமைப்புகளிடமோ அல்லது தகுதி வாய்ந்த அதிகார நிலையில் உள்ளவர்களிடம் அளிக்கப்படும் புகார் மீதான தீர்ப்புகள் காலதாமதமின்றி வழங்கப்பட வேண்டும்.

ஆ) பொது விசாரணையில் வாதப்பிரதிவாதங்களை தேசிய சட்டத்திற்கும், சர்வதேச கோட்ப்பாடுகளுக்கும் உருதிமொழிகளுக்கும் பொருந்துவதாக இருக்கும் படி பார்த்துக்கொள்ளல்.

இ)திறன் வாய்ந்த வழக்குரைஞர் மூலம் சட்ட உதவிகளை வழங்குதல் அல்லது மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் சார்ந்த பொருத்தமான அறிவுரைகள் வழங்கி துணைபுரிதல்.

4. சர்வதேச மனித உரிமை ஆவணங்கள் மற்றும் வழிமுறைகளின்படி தனியாகவோ, கூட்டாகவோ தங்குதடையின்றி சர்வதேச அமைப்புகளை அணுகவும், தகவல் பெறவும் மனித உரிமைகள் அடிப்படைச் சுதந்திரங்கள் பற்றியச் செய்திகளைப் பொதுவாகவோ, சிறப்புக் கவனத்துடனோ பரிசீலிக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

5. அரசின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியன மீறப்படுகின்றன என்று உறுதியாக நம்புவதற்கான சூழல் உருவாகிற போதெல்லாம் ஒரு நடுநிலையான விசாரனை நடைபெறுகிறது என்பதை உறுதி செய்ய நடுநிலையான விசாரணையை காலதாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

**பிரிவு-10**

மனித உரிமைகளை அடிப்படைச் சுதந்திரங்களின் மீறல்களில் எவரும் ஈடுபடக்கூடாது. தேவையின் பொது செயல்பட்டதற்காகவோ அல்லது செயல்படத்தவரியதற்காகவோ அல்லது மருத்ததற்காகவோ எவ்வகையான தண்டனைக்கும்,

*கடுமையான நடவடிக்கைக்கும் எவரும் ஆளாக்கப்படக் கூடாது.*

**பிரிவு-11**

*தனியாகவோ, கூட்டாகவோ அவரவர் வேலையை அல்லது தொழிலைச் சட்டப்பூர்வமாகச் செய்ய ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஒருவரது தொழில் காரணமாக மானுட மாண்பு, மனித உரிமைகள்,அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியவற்றிற்குப் பாதிப்பு ஏற்பட்டால் அவர் அந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக் கொல்லப்பட்ட தொழில், மற்றும் ஒழுக்க தரங்களுக்கு ஏற்ப மதித்து நடக்கவேண்டும்.*

**பிரிவு-12**

*அ) மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களின் மீறல்களுக்கெதிராக அமைதியான நடவடிக்கைகளில் தனியாகவோ, கூட்டாகவோ பங்கேற்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.*

*ஆ) இப்பிரகடனத்தில் உள்ள உரிமைகளை சட்டப்பூர்வமாகப் பாதுகாக்க முயல்வோர் சந்திக்கும் வன்முறைகள், அச்சுறுத்தல், பழிவாங்குதல் பாகுபாடு காட்டல், நெருக்கடி கொடுத்தல் கடுமையான நடவடிக்கைகள் ஆகியவற்றிலிருந்து தனியாகவோ, சட்ட ரீதியாகவோ அரசு பாதுகாப்பு அளிக்கவும்.அதிகாரிகள் மூலம் உத்தரவாத மளிக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். தனி நபர் அல்லது ஒரு கூட்டத்தின் தூண்டுதலால் மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் மீறப்படுகின்ற போதும் இவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு ஊறுவிளைவிக்கின்ற போதும் மனித உரிமைக் காப்பாளர்கள் ஒவ்வொருவரையும் தனியாகவோ, கூட்டாகவோ தேசிய சட்டத்தின் கீழ் பாதுகாப்பது அரசின் கடமையாகும்.*

**பிரிவு-13**

*இப்பிரகடனத்தின் பிரிவு 3—இன் படி மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் வளர்த்தெடுத்துப் பாதுகாக்கும் நோக்கில் மூல ஆதாரங்களைத் தேடவும் பெறவும், தேடிய ஆதாரங்களை அனுபவிக்க தனியாகவோ, கூட்டாகவோ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.*

**பிரிவு-14**

*1) சட்டம், நீதி,நிர்வாக நடவடிக்கை மூலம் தன் ஆளுகைக்குட்பட்ட மக்களிடம் அரசியல், பொருளாதர, சமூக,*

பண்பாட்டு, குடிமையியல் உரிமைகளை வளர்த்தெடுக்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

2) இன்நடைமுறைகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும்.

அ) சர்வதேச மனித உரிமை முறையாவணங்கள், தேசிய சட்டங்கள், ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றைப் பிரசுரித்தல், அனைவர்க்கும் பரவாலகக் கிடைக்கச் செய்தல்,

ஆ)மனித உரிமைகள் பற்றிய சர்வதேச ஆவணங்கள் முழுமையாக மக்களுக்கு கிடைக்கும் வாய்ப்பினை உருவாக்கல், சர்வதேச உடன்படிக்கைகளின்படி உருவாக்கப்பட்ட அமைப்புகளுக்கு அனுப்பப்படும் அரசின் அவ்வப்போதைய அறிக்கைகள், விவாதச் சுருக்கம், இவ்வமைப்புகளின் அதிகாரப்பூர்வ அறிக்கைகள் அனைத்தும் மக்களுக்கு கிடைத்திட வகை செய்யப்படவேண்டும்.

3)மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியவற்றை மென்மேலும் வளர்த்தெடுத்துப் பாதுகாக்க, தேவை ஏற்படுகின்ற போதொல்லாம் சுதந்திரமான தேசிய அமைப்புகளையும், மனித உரிமை ஆணையங்களையும் அல்லது வேறு வடிவிலான தேசிய அமைப்புகளையும், தன ஆளுகைக்குட்பட்டப் பொருத்தமான இடங்களில் புதிதாக உருவாக்கிட அரசு ஆவண செய்ய வேண்டும்.

**பிரிவு-15**

மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் வளர்த்தெடுக்கும் வகையில் கல்வியின் எல்லா மட்டங்களிலும் மற்றும் பயிற்சிக்கு பொறுப்பாயுள்ள வழக்குரைஞர்கள், சட்ட அமலாக்க அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், அரசு அதிகாரிகள் ஆகியோருக்கும் மனித உரிமை பற்றிய அடிப்படைக் கருத்துக்களைப் போதிக்க வேண்டிய பொறுப்பு அரசிற்கு உண்டு..

**பிரிவு-16**

தனி நபர்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் மனித உரிமை தொடர்பான நிறுவனங்கள் மூலம் மக்கள் மத்தியில் மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் பற்றிய அனைத்து தகவல்களை அறியச் செய்தல் மற்றும் கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மூலம் கொண்டு செல்லச் செய்தல், இத்துடன் தேசங்களுக்கிடையே,இனங்களுக்கிடையே, மக்களுக்கிடையே நட்புறவு, சகிப்புத் தன்மை, அமைதி, ஆகியவற்றை சமூக மற்றும் சமுதாயப் பின்புலத்தைக் கவனத்தில் கொண்டு இந்நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பிரிவு-17**

*இப்பிரகடனத்திலுள்ள உரிமைகளையும் சுதந்திரங்களையும் நடைமுறைப்படுத்தும் போது, தனியாகவோ. கூட்டாகவோச் செயல்படும் ஒவ்வொருவரும், சர்வதேச மனித உரிமை ஆவணங்கள், மற்றும் சட்ட ரீதியான பிறரது உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதித்து, சனநாயக சமூகத்தின் ஒழுக்க முறைமை, பொது ஒழுங்கு, அமைதி ஆகியவற்றிற்கு பங்கம் வராமல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சில வரையறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.*

**பிரிவு-18**

*1. சமுதாயத்திற்காகவும், சமுதாயத்தினுள்ளும், ஒவ்வொருவருக்கு முள்ள கடமைகள் மூலம் மட்டுமே அவரவர் தனித்தன்மை சுதந்திரமாக முழுவளர்ச்சியடைய முடியும்.*

*2. சனநாயகத்தைப் பாதுகாத்தல், மனித உரிமைகள் அடிப்படைச் சுதந்திரங்களை வளர்த்தெடுத்தல், சனநாயக சமூக, நிறுவன செயற்பாங்கின் மேம்பாட்டினை வளர்த்தெடுத்தலுக்கான அர்ப்பணிப்பு போன்ற பணிகளில் தனிநபர்கள், குழுக்கள், அரசு சாரா அமைப்புகள் பொறுப்புடன் பங்களிக்க வேண்டும்.*

*3. அகில உலக மனித உரிமைப் பிரகடனத்திலும் ஏனைய சர்வதேச தரவுகளில் கூறப்பட்டுள்ளபடி, இணக்கம் நிறைந்த சமூகத்தையும், ஒழுங்கு நிறை உலகத்தையும் உருவாக்கும் பொறுப்பு அனைவர்க்கும் உண்டு.*

**பிரிவு-19**

*இப்பிரகடனத்திலுள்ள எந்தக்கருத்தும், தனி நபரால், குழுவால், சமூக அமைப்பால் அல்லது அரசால் பிரகடனத்திலுள்ள உரிமைகளையும், சுதந்திரங்களையும் அழிக்கும் நோக்கில் செயல்படவோ அல்லது செயல்படுத்தவோ உரிமை இருப்பதாக அர்த்தம் கொள்ளக்கூடாது.*

**பிரிவு-20**

*ஐ.நா. சாசன விதிகளுக்கு எதிராகத் தனி நபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாட்டை, அரசு ஆதரித்து ஊக்குவிப்பதாக அர்த்தம் கொள்ளக்கூடாது.*

# தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம்.2005 (சட்டம் எண்.22/2005)

THE RIGHT TO INFORMATION ACT,2005

(ACT NO.22 OF 2005) **(2005, ஜூன் 15)**

*பொது அதிகார அமைப்புகள் ஒவ்வொன்றின் இயக்கத்திலும் ஒளிவு மறைவற்ற நிலை மற்றும் பொறுப்புடைமையை மேம்படுத்துவதற்காக தகவல் பெறும் உரிமையின் செயல் நடப்பாட்சியை வகை செய்வதற்கும் பொது அதிகார அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள தகவலை குடிமக்களுக்கு கிடைக்கச் செய்வதற்காக மைய தகவல் ஆணையம் ஒன்றையும் மற்றும் மாநில தகவல் ஆணையங்களையும் அமைப்பதற்கும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அல்லது அவற்றிற்கு உடனிகழ்வான விஷயங்களுக்கும் ஈங்கிதனால் வகை செய்யும் ஓர் சட்டம்.*

*இந்திய அரசமைப்பு மக்களாட்சி சார்ந்த குடியரசை நிறுவியுள்ளதாலும், மக்களாட்சியின் இயக்கத்திற்கு குடிமக்கள் பெறும் தகவலில் ஒளிவுமறைவின்மையும் இன்றியமையானதாகும். ஊழலை ஒழிக்கவும் மற்றும் அரசுகளையும் அவற்றின் துணை அங்கங்களையும் பொறுப்புடையதாக ஆக்கவும் மக்களாட்சி வேண்டுறுத்துவதாலும் உள்ளபடியான நடைமுறையில் தகவலை வெளிப்படுத்துவது அரசுகளின் திறன்மிகு செயற்பாடுகள், வரம்பிற்குட்பட்ட நிதி ஆதாரங்களை பெரிதும் உகந்தவாறு பயன்படுத்தல், உணர்வு பூர்வமான தகவலின் இரகசியத்தை கட்டிக்காத்தல் ஆகியன உள்ளிட்ட பிறபொது நலன்களுக்கு அநேகமாக முரண்படுவதாலும்.*

*மக்களாட்சி கொள்கையின் முக்கியத்தன்மையை பாதுகாக்கும் அதே வேளையில், இத்தகைய முரண்படும் நலன்களையும் இணக்கமுறச் செய்தல் அவசியமானதாக உள்ளது.*

*எனவே, சில தகவலை பெற விரும்பும் குடிமக்களுக்கு அதை அளிக்க வகை செய்வது, தற்போது உகந்ததாக உள்ளது. இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஆறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு இயற்றப்படுவதாகும்.*

*1. இச்சட்டம் நாடாளுமன்ற மக்களவையால் 2005 — ஆம் ஆண்டு மே திங்கள் 11 — ஆம் நாளிலும். மாநிலங்கலவையால் 2005 — ஆம் ஆண்டு மே திங்கள் 12 — ஆம் நாளிலும் நிறைவேற்றபட்டது. இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை 2005 — ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 15 — ஆம் நாளில் பெற்றது.*

## அத்தியாயம் - 1

**முதனிலை** (PRELIMINARY)

**பிரிவு-1, குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்**
Short title, extent and commencement

*(1) இச்சட்டம் தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம், 2005 என அழைக்கப்பெறும்.*

*(2) இது ஜம்மு—காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும்.*

*(3) பிரிவு 4—ன் உட்பிரிவு (1), பிரிவு 5—ன் உட்பிரிவுகள் (1) மற்றும் (2), பிரிவுகள் 12,13,15,16,24,27 மற்றும் 28—இன் வகையங்கள் உடனடியாக செயலுக்கும் வரும், மற்றும் இந்தச் சட்டத்தின் எஞ்சியுள்ள வகையங்கள் இந்தச் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து நூற்று இருபது நாட்களுக்குள் செயலுக்கு வரும்.*

**பிரிவு-2. பொருள் வரையறைகள்** definitions

*(1)* *இச்சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,*

(a) *"உரிய அரசாங்கம்"* (appropriate Government) *என்பது,*

(i) *மைய அரசாங்கம் அல்லது மைய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதி;*

(ii) *மாநில அரசாங்கம் எனப்படும் மாநில அரசாங்கத்தால், நிறுவப்பட்ட கட்டமைக்கப்பட்ட, உடைமையுரிமையான, கட்டுப்படுத்தப்பட்ட அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக அளிக்கப்பட நிதியால் கணிசமாக நிதியுதவி பெறுகிற ஒரு பொது அதிகார அமைப்பு எனும் தொடர்புடையது எனப் பொருள்படும்.*

(b) “மைய தகவல் ஆணையம்” (CENTARAL INFORMATION COMMISION) என்பது பிரிவு 12—இன் உட்பிரிவு (1)—இன் படி கட்டமைக்கப்படும் மைய தகவல் ஆணையம் எனப் பொருள்படும்.

(c) “மைய பொதுத் தகவல் அலுவலர்” (CENTRAL PUBLIC INFORMATION OFFICERER) என்பது, பிரிவு, 5—இன் உட்பிரிவு (1)—இன் படி பதவியமர்த்தப்பட்ட மைய பொதுத் தகவல் அலுவலர் எனப் பொருள்படும் மற்றும் உட்பிரிவு (2)— இன் படி அவ்வாறு பதவியமர்த்தப்பட்ட மைய உதவி பொதுத் தகவல் அலுவலர் (CENTRAL ASSISTANT PUBLIC INFORMATION OFFICER) ஒருவரையும் உள்ளடக்கும்.

(d) “முதன்மை தகவல் ஆணையர்” (CHIEF INFORMATION COMMISSION) மற்றும்: தகவல் ஆணையர்) (INFORMATION OFFICER) என்பது பிரிவு 12—இன் உட்பிரிவு (3)—இன் படி நியமிக்கப்பட்ட முதன்மை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர் எனப் பொருள்படும்.

(e) “தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு” (COMPETENT AUTHORITY) என்பது

(i) மாநிலம் ஒன்றின் அல்லது சட்டமன்றப் பேரவை உடைய ஒன்றிய பிரதேசம் ஒன்றைப் பொருத்த நேரவில் மக்களவை அல்லது அத்தகைய பேரவையின் சபாநாயகர் மற்றும் மாநிலங்களின் சட்டமன்ற மேலவை ஒன்றின் மாநிலங்களவையைப் பொறுத்த நேரவில் அதன் தலைவர்;

(ii) உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்த நேர்வில், இந்திய தலைமை நீதிபதி;

(iii) உயர் நீதிமன்றத்தைப் பொருத்த நேர்வில், உயர் நீதமன்ற தலைமை நீதிபதி;

(iv) அரசமைப்பால் அல்லது அரசமைப்பின்படி நிறுவப்பட்ட அல்லது கட்டமைக்கப்பட்ட பிற அதிகார ஆயங்களைப் பொறுத்த நேர்வில், நேர்விற்கேற்ப, குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர்;

(v) அரசமைப்பின் உறுபு 239—இன் படி நியமிக்கப்பட்ட ஆட்சியர்

(f) “தகவல்” (INFORMATION) என்பது பதிவுருக்கள் ஆவணங்கள் குறிப்பாணைகள், மின்னஞ்சல்கள்,

கருத்துரைகள்,அறிவுரைகள், செய்தி வெளியீடுகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், பயணக் குறிப்பேடுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், தாள்கள், மாதிரிகள், மாதிரிப்படிவங்கள், மின்னணு வடிவம் எதிலும் வைத்திருக்கப்பட்ட தகவல் விபரங்கள் மற்றும் அப்போதைக்கு செல்லாற்றலில் உள்ள வேறு சட்டம் எதன்படியும் பொது அதிகார அமைப்பு ஒன்றால் அணுகிப்பெற முடிகிற தனியார் குழுமம் எதன் தொடர்பான தகவலை உள்ளிட்ட வடிவம் எதிலும் உள்ள பொருள்வகை எதுவும் எனப் பொருள்படும்.

(g) “வகுத்துரைக்கப்பட்டது” (PRESCRIBED) என்பது நேர்விற்கேற்ப உரிய அரசாங்கத்தால் அல்லது தகுதி வாய்ந்த அதிகார அமைப்பால் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கபட்டது எனப் பொருள்படும்;

(h) “பொது அதிகார அமைப்பு” (PUBLIC AUTHORITY) என்பது,

(a) அரசமைப்பால் அல்லது அதன்படி;

(b) நாடாளுமன்றம் இயற்றிய வேறு சட்டம் எதனாலும்;

(c) மாநில சட்டமன்றம் இயற்றிய வேறு சட்டம் எதனாலும்;

(d) உரிய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உத்தரவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையின் மூலம்

(i) உடையுரிமையாக்கப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அல்லது கணிசமாக நிதியுதவி பெறுகிற குழுமம் எதையும்.

(ii) நேரடியாக (அ) மறைமுகமாக உரிய அரசு மூலம் கணிசமாக நிதியுதவி பெறுகிற அரசாங்கம் சாராத சங்கம் எதையும் உள்ளடக்கிய நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட அதிகார அமைப்பு அல்லது குழுமம் அல்லது தன்னாட்சி அமைப்பு எதுவும் எனப் பொருள்படும்;

(j) “பதிவுறு” (RECORD) என்பது.

(i) ஆவணம் கையெழுத்துப் படி மற்றும் கோப்பு எதையும்;

(ii) நுண்படம் (microfilm) நுண்படத்தாள் (microfiche) மற்றும் ஆவணம் ஒன்றின் உருவ நேரப்படி (facsimile copy) எதையும்;

(iii) அத்தகைய நுண் படத்தில் உள்ளடங்கிய உருவம் அல்லது உருவங்களின் (பெரிது அல்லது பெரிதாக்கப்படாத) மறுபடைப்பு எதையும் மற்றும்

(iv) கணினி ஒன்றால் அல்லது வேறு சாதனம் எதனாலும் உருவாக்கப்பட்ட வேறு பொருள்வகை எதையும் உள்ளடக்கும் ;

(j) "தகவல் பெறும் உரிமை" (right to information) என்பது பொது அதிகார அமைப்பு எதனாலும் வைத்திருக்கப்பட்டுள்ளதும் அல்லது அதனின் கட்டுப்பாட்டிலும் உள்ள இந்தச் சட்டத்தின்படி அணுகிப் பெறக் கூடிய தகவலை பெறும் உரிமை எனப் பொருள்படும் மேலும்

(i) வேலை, ஆவணங்கள், பதிவுருக்களை ஆய்வு செய்தல்

(ii) ஆவணங்கள் அல்லது பதிவுருக்களின் குறிப்புகள், சுருக்கம், சான்றிட்ட படிகளை எடுத்தல்;

(iii) பொருட்களின் சான்றிட்ட மாதிரிகளை எடுத்தல்;

(iv) கணினி ஒன்றில் அல்லது வேறு சாதனம் எதிலும் தகவல் இருத்தி வைக்கப்பட்டிருக்குமிடத்து அதனை வட்டுகள், வளையும் வட்டுகள், ஒலிநாடாக்கள், ஒளிப்பதிவு, சிறு பேழைகள் அலல்து மின்னணு வழி வேறு எதிலும் அல்லது

(v) அச்செடுப்புகள் மூலம் எதன் வடிவிலும் தகவலைப் பெறும் உரிமையும் உள்ளடக்கம்;

(k) "மாநில தகவல் ஆணையம்" (State information Commission) என்பது பிரிவு 15—இன் உட்பிரிவு (1)—இன் படி அமைக்கப்பட்ட மாநில தகவல் ஆணையம் எனப் பொருள்படும்.

(l) "மாநில முதன்மை தகவல் ஆணையர்" (STATE CHIEF INFORMATION COMMISSIONER) மற்றும் "மாநில தகவல் ஆணையர் " (STATE INFORMATION COMMISSIONER) என்பது பிரிவு 15—இன் உட்பிரிவு (3)—இன் படி நியமிக்கப்பட்ட மாநில முதன்மை தகவல் ஆணையர் எனப் பொருள்படும்.

(m) "மாநில பொது தகவல் அலுவலர்" (STATE PUBLIC INFORMATION OFFICER) என்பது பிரிவு 5—இன் உட்பிரிவு (1)—இன் படி பதவியமர்த்தப்பட்ட மாநில பொது தகவல் அலுவலர் எனப் பொருள்படும் மற்றும், உட்பிரிவு (2)—இன் படி அவ்வாறு பதவியமர்த்தப்பட்ட மாநில

*உதவி பொது தகவல் அலுவலர்* (STATE ASSISTANT PUBLIC INFORMATION OFFICER) *ஒருவரையும் உள்ளடக்கும்.*

(n) *"மூன்றாம் தரப்பினர்"* (THIRD PARTY) *என்பது தகவலுக்காக வேண்டுகோள் ஒன்றைச் செய்யும் குடிமகன் அல்லாத ஆள் ஒருவர் எனப் பொருள்படும் மற்றும் அது பொது அதிகார ஆயம் ஒன்றையும் உள்ளடக்கும்.*

## அத்தியாயம் - 2

## தகவல் பெறுவதற்கான உரிமையும் பொது அதிகார அமைப்புகளின் கடப்பாடுகளும்

RIGHT TO INFORMATION AND OBLIGATIONS OF PUBLIC AUTHORITIES

### பிரிவு-3. தகவல் பெறுவதற்கான உரிமை

RIGHT TO INFORMATION

*(1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குட்பட்டு, அனைத்து குடிமக்களும் தகவல் பெறும் உரிமை உண்டு.*

### பிரிவு-4. பொது அதிகார அமைப்புகளின் கடப்பாடுகள்

OBLIGATIONS OF PUBLIC AUTHORITIES

*(1) பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும்—*

(a) *அதன் பதிவுருக்கள் எல்லாவற்றையும் இந்தச் சட்டத்தின்படி தகவல் பெறும் உரிமையை எளிதாக்கும் முறையிலும் மற்றும் படிவத்திலும் உரியவாறு பட்டியலிட்டு மற்றும் பொருளடக்க அட்டவணையிட்டு பராமரித்தல் வேண்டும் மற்றும் கணினிமயமாக்கப்படுவதற்கு உரியதாக உள்ள பதிவுருக்கள் எல்லாவற்றையும் வாய்ப்பு வளம் கிடைப்பதற்குட்பட்டு தகுந்த காலத்திற்குள்ளாக கணினி மயமாக்கப்படுதலையும் மற்றும் அவை தகவல் இணைவமைவு ஒன்றின் வாயிலாக நாடு முழுவதிலுமான பல்வேறுபட்ட பொறியமைவில் அத்தகைய பதிவுருக்கள் எளிதில் அணுகப்பெறும் வகையில் இணைக்கப்படுதலையும் உறுதி செய்தல் வேண்டும்.*

(b) *இச்சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து நூற்று இருபது நாட்களுக்குள்,*

(i) *அதன் அமைப்பின் விவரங்கள் செய்கடமைகள் மற்றும் கடமைகள்*

(ii) அதன் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(iii) கண்காணிப்பு மற்றும் பொறுப்புடைமை வழிகளை உள்ளடக்கிய, முடிவெடுக்கும் செய்முறையில் பின்பற்றப்படும் நடைமுறை;

(iv) அதன் செய்கடமைகளை ஆற்றுவதற்காக அதனால் வகுக்கப்பட்ட நெறிகள்;

(v) அதன் வசம் உள்ள அல்லது அதனுடைய கட்டுப்பாட்டில் உள்ள அல்லது அதன் செய்கடமைகளை ஆற்றுவதற்காக அதன் ஊழியர்களால் பயன்படுத்தப்பட்ட விதிகள், ஒழுங்கு முறைவிதிகள் அறிவுறுத்தல்கள் நடைமுறை நூல்கள் மற்றும் பதிவுருக்கள்,

(vi) அதன் வசம் உள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள ஆவண வகைப்பாடுகளின் விவர அறிக்கை

(vii) அதன் கொள்கைகையினை வகுத்தல் அல்லது அதனை செயற்படுத்துதல் தொடர்பாக பொது மக்களிடம் கலந்தாலோசிப்பதற்கென அல்லது அவர்களின் கருத்து பெறப்படுவதற்கென இருக்கிற ஏற்பாடு பற்றிய விபரங்கள்;

(viii) அதனால் அமைக்கப்பட்ட அல்லது அதன் ஆலோசனையைப் பெறும் நோக்கத்திற்காக இரண்டு அல்லது மேற்பட்ட நபர்கள் கொண்ட வாரியங்கள் மன்றங்கள், குழுக்கள் அல்லது வேறு அமைப்புகளின் (அறிக்கை ஒன்று) மற்றும் அத்தகைய வாரியங்கள் மன்றங்கள், குழுக்கள் மற்றும் வேறு அமைப்புகளின் கூட்டங்களை பொது மக்கள் பார்வையிடக் கூடியதா, அல்லது அத்தகைய கூட்டங்களின் கூட்ட நடவடிக்கைகளை பொது மக்கள் அணுகி அறியக் கூடியதா என்பது குறித்த அறிக்கை;

(ix) அதன் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பெயர் விவரத் திரட்டு;

(x) அதன் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஒவ்வொருவராலும் பெறப்படும் மாத ஊதியம் மற்றும் இதில் அதன் ஒழுங்கு முறைவிதிகளில் வகை செய்யப்பட்டவாறான இழப்பீட்டு முறை உள்ளடங்கும்.

(xi) திட்டங்கள், கருத்துரு செலவினங்கள் மற்றும் பிரித்து கொடுக்கப்பட்ட தொகையின் அறிக்கைகள்

எல்லாவற்றின் விபரங்களைச் சுட்டிக்காட்டி அதன் முகமை ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்ட வரவு—செலவு திட்டப்பட்டியல்;

(xii) துணைமை செயல்திட்டங்களை நிறைவேற்றும் முறை. இதில் ஒதுக்கப்பட்ட தொகைகள் மற்றும் அத்தகைய செயல்திட்டங்களின் பயனாளிகளின் விபரங்கள் உள்ளடங்கும்;

(xiii) அதனால் அளிக்கப்பட சலுகைகள், அனுமதிகள் அல்லது அதிகாரவுரிமைகளைப் பெருகின்றவர்களைப் பற்றிய விபரங்கள்;

(xiv) மின்னணு வடிவில் வைக்கப்பட்டதும் அதற்கு கிடைத்திட்ட அதனால் வைத்திருக்கப்பட்டுள்ள தகவல் தொடர்பான விபரங்கள்;

(xv) தகவலைப் பெறுவதற்கு குடிமக்களுக்கு கிடைக்கும் வசதிகளின் விபரங்கள் மற்றும் இதில் நூலகத்தின் வேலை நேரம் அல்லது படிக்கும் அறை உள்பட, அது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படுவதாக இருப்பின்,

(xvi) பொதுத் தகவல் அலுவலர்களின் பெயர்கள், பதவிப்பெயர் மற்றும் இதர விபரங்கள்

(xvii) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற தகவல், மற்றும் அதன் பின்னர் வெளியீடுகளை ஒவ்வொரு ஆண்டும் இன்றைய நிலைக் கேற்ப வெளியிடல்.

(c) பொதுமக்களை பாதிக்கும் முக்கியமான கொள்கைகளை வகுக்கும்போது அல்லது முடிவுகளை அறிவிக்கும்போதும் தொடர்புடைய சங்கதிகள் அனைத்தையும் வெளியிட வேண்டும்;

(d) அதன் ஆட்சி முறை அல்லது போலமை நீதிமுறைப் போல் அமைந்த முடிவுகளால் பாதிக்கப்படும் நபர்களுக்கு அவற்றிற்கான காரணங்களை வழங்க வேண்டும்.

*(2)* தகவல் இணையதளம் உள்ளிட்ட பல்வேறு தகவல் தொடர்புகளின் வாயிலாக முறையான இடைவெளிகளில் பொது மக்களுக்கு தானாக முன்வந்து அவ்வாறு தகவல் கொடுப்பதற்கு உட்பிரிவு *(1)*—இன் கூறு (b)—இன் வேண்டுறுத்தல்களின் படி நடவடிக்கைகள் எடுப்பது பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் தொடர்ந்த முயற்சியாக இருப்பதன் பேரில் தகவல் பெறுவதற்கு இந்தச் சட்டத்தை

பயன்படுத்த குறைந்தபட்ச அளவினை பொதுமக்கள் பெறுகின்றனர்.

(3)உட்பிரிவு (1)—இன் நோக்கத்திற்காக, தகவல் ஒவ்வொன்றையும் பொது மக்கள் எளிதாக அணுகிப் பெறுவதற்கான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அனைத்து இடங்களிலும் பரவச் செய்திட வேண்டும்.

(4) செலவிற்கான விளைபயன், வட்டார மொழி மற்றும் அந்த உள்ளூர் மொழியில் தகவல் தெரிவிக்க மிகவும் திறம்பட வழிமுறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொருள்வகைகள் அனைத்தும் பரவவிடப்படுதல் வேண்டும் மற்றும் நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவலை இலவசமாக அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய ஊடகச் செலவு அல்லது அச்சுக் கட்டண விலையில் கிடைக்கத் தக்கவாறு மின்னணு வடிவில் இயன்ற அளவு எளிதாக அணுகிப் பெற இயலுமாறு இருக்க வேண்டும்.

விளக்கம்;— உட்பிரிவுகள் (3) மற்றும் (4)—இன் நோக்கங்களுக்காக 'பரவவிடுதல்' என்பது அறிவிப்பு பலகைகள், செய்திதாள்கள், பொது அறிவிப்புகள், ஊடக ஒளிபரப்புகள், தகவல் இணையதளம் அல்லது பொது அதிகார அமைப்பு எதனின் அலுவலகங்களை பார்வையிடல் உளிட்ட வேறு எந்த வழிகளிலும் தகவலை பொதுமக்களுக்கு தெரிவிக்க அல்லது அறிவிக்கச் செய்வது எனப் பொருள்படும்.

**பிரிவு-5. பொதுத் தகவல் அலுவலர்களின் பதவிப் பெயர்**

Designation of public information officers

(1)ஒவ்வொரு பொது அதிகார அமைப்பும் இந்தச் சட்டம் இயற்றபட்டதிலிருந்து நூறு நாட்களுக்குள் இந்தச் சட்டத்தின்படி தகவலுக்காக வேண்டுகோள் விடுக்கும் நபர்களுக்கு தகவல் அளிக்க அவசியப்பட எண்ணிக்கையிலான அலுவலர்களை தன் கீழுள்ள நிர்வாகமுறை தொகுதிகளில் அல்லது அலுவலகங்களில் நேர்விற்கேற்ப மைய தகவல் அலுவலர்களாக அல்லது மாநில தகவல் அலுவலர்களாக பதவியமர்த்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)— இன் வகையங்களுக்கு குந்தகமின்றி பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் இந்தச் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து நூறு நாட்களுக்கு இந்தச் சட்டத்தின்படி தகவல்கோரும் விண்ணப்பங்களை அல்லது மேல்முறையீடுகளைப் பெற்று அவற்றை பிரிவு 19—இன்

உட்பிரிவு (1) — இல் குறித்துரைக்கப்பட்ட மைய பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது முதுநிலை அலுவலருக்கு அல்லது நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையத்திற்கு அல்லது மாநில தகவல் ஆணையத்திற்கு உடனடியாக அனுப்பி வைப்பதற்கு அலுவலர் ஒருவரை ஒவ்வொரு உட்—கோட்ட நிலையிலும் அல்லது உள்—மாவட்ட நிலை பிறவற்றிலும் நேர்விற்கேற்ப மைய உதவி பொதுத் தகவல் அலுவலராகவும் அல்லது மாநில உதவி பொதுத் தகவல் அலுவலராகவும் பதவியமர்த்தல் வேண்டும்.

வரம்புரையாக: தகவல் கோரும் விண்ணப்பம் அல்லது மேல்முறையீடு ஒன்று நேர்விற்கேற்ப மைய உதவி பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில உதவி பொதுத் தகவல் அலுவலர் ஒருவரிடம் அளிக்கப்படுமிடத்து பிரிவு பிரிவு 7—இன் உட்பிரிவு (1) — இல் குறித்துரைக்கப்பட்ட பதிலளிக்கும் கால அளவை கணக்கிடுவதில் ஏழு நாட்களுக்கான ஒரு கால அளவு சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3)நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் ஒவ்வொருவரும் தகவல் கோரும் நபர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் மற்றும் அத்தகைய தகவலை கோரும் நபர்களுக்கு தகுந்த உதவியை நல்கிடல் வேண்டும்.

(4) நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் தனது கடமைகளை முறையாக ஆற்றுவதற்கு அவசியமானதென அவர் அல்லது அவள் கருதும் வேறு ஏதேனும் அலுவலர் உதவியையும் கோரலாம்.

(5) உட்பிரிவு (4) — இன் படி உதவி கோரப்பட்ட அலுவலர் எவரும் நேர்விற்கேற்ப அவரது அல்லது அவளது உதவியைக் கோரும் மைய பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலருக்கு வேண்டிய உதவி எல்லாவற்றையும் நல்கிடல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களின் மீறுகை எதனின் நோக்கங்களுக்காக, அத்தகைய வேறு அலுவலர் நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் ஒருவராக கருதப்படுதல் வேண்டும்.

## பிரிவு-6. தகவல் பெறுவதற்கான வேண்டுகோள்

Request for obtaining information

*(1)இந்தச் சட்டத்தின்படி தகவல் எதையும் பெற விழையும் நபர் ஒருவர், ஆங்கிலம் அல்லது இந்தியில் அல்லது விண்ணப்பம் செய்யப்படுகிற பகுதியின் அலுவல் மொழியில், எழுத்துவடிவில் அல்லது மின்னணு வழியில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து,—*

(a) *தொடர்புடைய பொது அதிகார அமைப்பினுடைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது நேர்விற்கேற்ப மாநில பொதுத் தகவல் அலுவலருக்கு;*

(b) *மைய உதவி பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது நேர்விற்கேற்ப மாநில பொதுத் தகவல் அலுவலருக்கு, தன்னால் கோரப்படும் தகவலின் விபரங்களைக் குறிப்பிட்டு வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும்.*

*வம்புரையாக : எழுத்துவடிவில் அத்தகைய வேண்டுகோள் செய்ய முடியாதவிடத்து, வாய்மொழியாக வேண்டுகோள் செயும் நபருக்கு அதனை எழுத்து வடிவில் கொணர்ந்திட தகுந்த உதவி எல்லவாவற்றையும் நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் செய்திட வேண்டும்.*

*(2) தகவலுக்காக வேண்டுகோள் செய்யும் விண்ணப்பதாரர் ஒருவர் தகவலின் வேண்டுகைக்கான காரணங்கள் எவற்றையும் அல்லது அவரைத் தொடர்பு கொள்வதற்கு அவசியமான விபரங்களைத் தவிர வேறு சொந்த விபரங்கள் எதையும் அளிக்குமாறு வேண்டுறுத்தப்படல் ஆகாது.*

*(3)ஒரு தகவலுக்காக பொது அதிகார அமைப்பு ஒன்றிடம் வேண்டுகோள் விடுத்து விண்ணப்பம் செய்யப்படுகிறவிடத்து, அந்தத் தகவல்*

(i) *வேறொரு பொது அதிகார அமைப்பு ஒன்றால் வைத்திருக்கப்பட்டதாக; அல்லது*

(ii) *அதன் கருப்பொருள் வேறொரு பொது அதிகார அமைப்பின் பணிகளுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக இருக்குமிடத்து எந்தப் பொது அதிகார அமைப்பிடம் அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதோ, அந்தப் பொது அதிகார அமைப்பு அந்த விண்ணப்பத்தை அல்லது அதன் உரிய பகுதியை அந்த வேறு பொது*

அதிகார அமைப்பிற்கு மாற்றியனுப்புதல் வேண்டும் மற்றும் அத்தகைய மாற்றல் குறித்து விண்ணப்பதாரருக்கு தெரிவித்தல் வேண்டும்.

**2.தகவல்**

வரம்புரையாக : இந்த உட்பிரிவிற்கு தொடர்ந்த விண்ணப்பம் ஒன்றின் மாற்றல் நடைமுறை இயன்றவரை விரைவாக செய்யப்படுதல் வேண்டும். ஆனால் என்நேர்விலும் விண்ணப்பம் பெற்ற தேதியிலிருந்து ஐந்து நாட்களுக்கு மிகைப்படல் கூடாது.

## பிரிவு - 7. வேண்டுகோளை முடிவு செய்தல்

Disposal of request

1) பிரிவு 5—இன் உட்பிரிவு (2) — இன் அல்லது பிரிவு 6 — இன் உட்பிரிவு (3)— இன் வகையத்திற்கு, உட்பட்டு, பிரிவு 6—இன்படி வேண்டுகோள் ஒன்றைப் பெற்றதன் பேரில், நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர், இயன்ற அளவு விரைவாகவும், மற்றும் நேர்வு ஏதானாலும் அந்த வேண்டுகோள் கிடைக்கப் பெற்ற முப்பது நாட்களுக்குள், வகுத்துரைக்கப்படாலாகும் அத்தகைய கட்டணம் செலுத்தப்படுவதன் பேரில் அந்தத் தகவலை அளிக்க வேண்டும், அல்லது பிரிவுகள் 8 அல்லது 9—இன் குறித்துரைக்கப்பட்ட காரணங்களின் பேரில் அந்த வேண்டுகோளை நிராகரித்தல் வேண்டும்.

வரம்புரையாக : கோரப்பட்ட தகவல் நபர் ஒருவரின் வாழ்வுரிமை மற்றும் சுதந்திரம் தொடர்பாக இருக்குமிடத்து, வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற 48 மணி நேரங்களுக்குள் அத்தகவல் அளிக்கப்பட வேண்டும்.

2) நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரானவர், உட்பிரிவு (1)ல் குறித்துரைக்கப்பட்ட கால அளவுக்குள் தகவல் கோரும் வேண்டுகோளின் பேரில் தனது முடிவைத் தரத் தவறினால், நேர்விற்கேற்ப அந்த மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொது தகவல் அலுவலர் அந்த வேண்டுகோளை நிராகரித்துள்ளதாக கருதப்படல் வேண்டும்.

3) அந்தத் தகவலை அளிப்பதற்கான செலவுத் தொகையுடன் கூடுதல் கட்டணம் எதுவும் செலுத்தப்படுவதன் பேரில் அந்தத் தகவலை அளிப்பதற்கு முடிவு ஒன்று எடுக்கப்படுமிடத்து, நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது

மாநில பொதுத் தகவல் அலுவலர், வேண்டுகோள் செய்யும் நபருக்கும் செய்தி அறிவிப்பு ஒன்றை அனுப்பி அதில் —

a) அந்தத் தகவலை அளிப்பதற்கான செலவுத் தொகையை குறிப்பிட்டும் தன்னால் நிர்ணயம் செய்யப்பட்டவாறானதுமான கூடுதல் கட்டணத்தின் விபரங்களை, உட்பிரிவு (1) — இன்படி குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தின்படியான தொகையை எய்திட செய்யப்பட்ட கணக்கீடுகளுடன் சேர்ந்து கொடுத்தும், அந்தக் கட்டணத்தை வைப்பீடு செய்ய அவரைக் கேட்டுக்கொண்டும் மற்றும் அந்த செய்தி அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கும் கட்டணம் செளுத்தப்பட்டதற்கும் இடையில் வரும் கால அளவானது அந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட முப்பது நாட்கள் கால அளவை கணக்கிடும் நோக்கத்திற்காக விலக்கப்படுதல் வேண்டும்;

b) முடிவின் மறுஆய்விற்கு தொடர்புடைய அவன் அல்லது அவளின் உரிமை மேல்முறையீட்டு அதிகார அமைப்பு, கால வரையறை செயல்முறை மற்றும் வேறு ஏதாவது வடிவமுரைகள் பற்றிய விபரங்களை உள்ளிட்ட மற்றும் விதிக்கப்பட்ட கட்டணத்தொகை அல்லது தகவல் பெற அணுகும் வடிவமுறை குறித்த பற்றிய தகவல்.

4) அந்தச் சட்டத்தின்படி அளிக்கப்பட வேண்டுறுத்தப்பட்ட பதிவுறு அல்லது அதன் பகுதி ஒன்றை அணுகுமிடத்து மற்றும் அணுகிடும் நபர் புலன் கால் ஊனமுடையவராக இருக்குமிடத்து, நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரானவர் தகவலை அணுகியப் பெறுதலை இயல்விக்கச் செய்வதற்கான உதவிகள், பார்வையிடளுக்கு உரியவாறான அத்தகைய உதவி உட்பட அளித்திடல் வேண்டும்.

5) அச்சடிக்கப்பட்டதில் அல்லது மின்னணு வடிவம் எதிலும் தகவலை அணுகிப்பெறல் அளிக்கப்பட வேண்டியிக்ருக்கிறவிடத்து, உட்பிரிவு (6)— இன் வகையங்களுக்கு உட்பட்டு, குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தை விண்ணப்பதாரர் செலுத்துதல் வேண்டும்.

வரம்புரையாக: பிரிவு 6 — இன் உட்பிரிவு (1) மற்றும் பிரிவு 7 — இன் உட்பிரிவுகள் (1) மற்றும் (7) — இன்படி குறித்துரைக்கப்பட்ட கட்டணமானது தகுந்தவாறு இருத்தல் வேண்டும் மற்றும் உரிய அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள நபர்களிடமிருந்து

அத்தகைய கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுதல் ஆகாது.

6) உட்பிரிவு (5) — இல் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், உட்பிரிவு (1) — இல் குறித்துரைக்கப்பட்ட கால வரையறையை பொது அதிகார அமைப்பு ஒன்று பின்பற்றத் தவறுமிடத்து, தகவலுக்காக வேண்டுகோள் செய்யும் நபருக்கு அந்தத் தகவல் செலவுத் தொகையின்றி அளிக்கப்படல் வேண்டும்.

7) உட்பிரிவு (1)— இன்படி முடிவு எதையும் எடுக்கும் முன்னர். நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரானவர், பிரிவு 11—இன்படி மூன்றாம் தரப்பினர் ஒருவரால் செய்யப்பட்ட முறையீட்டைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

8) உட்பிரிவு (1)—இன்படி வேண்டுகோள் ஒன்று நிராகரிக்கப்பட்டிருக்குமிடத்து, நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரானவர், அந்த வேண்டுகோளை விடுக்கும் நபருக்கு:—

(i) அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்கள்;

(ii) அத்தகைய நிராகரிப்பினை எதிர்த்து எந்த கால அளவிற்குள் மேல்முறையீடு மற்றும்

(iii) மேல்முறையீடு அதிகார அமைப்பின் விபரங்களை, தெரிவித்தல் வேண்டும்.

(iv) தகவலானது பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை பொருத்தமில்லாத வகையில் மாற்றிவிடக் கூடியதாக அல்லது வினாவுக்குரிய பதிவுருவின் பாதுகாப்பிற்கு அல்லது பேணுகைக்கு தீங்காகக் கூடியதாக இருந்தாலன்றி,எந்த வடிவில் தகவல் ஒன்று கோரப்பட்டதோ அதே வடிவில் அது சாதாரணமாக அளிக்கப்படுதல் வேண்டும்.

## பிரிவு-8 தகவலை வெளிப்படுத்துவதிலிருந்து விலக்கு

Exemption from disclosure of informathion

1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், குடிமகன் எவருக்கும்

a) தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, நாட்டின் பாதுகாப்பு, இந்தியாவின் படைத்திறன் சார்ந்த, விஞ்ஞான அல்லது பொருளாதார நலன்கள், அயல்நாட்டுடன்

கொண்டுள்ள உறவை குந்தகமாக பாதிக்குமோ அல்லது குற்றமொன்றைத் தூண்டுவதாக அமையும் தகவல்;

b) தகவல் வெளியிடப்படுவதற்கு நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் எதனாலும் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது வெளிப்படுத்துகை நீதிமன்ற அவமதிப்பாக அமையும் தகவல்;

c) தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்ற சிறப்புரிமையின் மீறுகையாக அமையும் தகவல்;

d) அத்தகைய தகவலின் வெளிப்படுத்துகையானது பொது மக்களின் பேரளவு நலனுக்கு அவசியமானது என்று தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு மனநிறைவடைந்தாலன்றி; வணிகத்தின் நம்பகத்தன்மை, வியாபார இரகசியங்கள் அல்லது அறிவுசார் சொத்துடைமை உள்ளிட்ட தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது மூன்றாம் தரப்பினர் ஒருவரின் சந்தையில் போட்டியிடும் நிலைக்கு தீங்காகும் தகவல்;

e) தகவலின் வெளிப்படுத்துகையானது பொது மக்களின் பேரளவு நலனுக்கு உகந்ததாக உள்ளது என்று தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு மனநிறைவடைந்தாலன்றி; நபர் ஒருவருக்கு அறப் பொருப்பினர் உறவில் கிடைக்கும் தகவல்,

f) வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து இரகசியமாகப் பெறப்பட்ட தகவல்;

g) தகவல் வெளிப்படுத்தப்பட்டால், அது நபர் ஒருவரின் வாழ்க்கைக்கு அல்லது உடற்பாதுகாப்பிற்கு அல்லது தகவலின் மூலத்தை அடையாளம் காண்பதற்கு அல்லது சட்ட நிறைவேற்றும் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக இரகசியமாக கொடுக்கப்பட்ட உதவிக்கு அபாயம் விளைவிக்கக் கூடிய, தகவல்;

h) தகவல் வெளிப்படுத்தப்பட்டால், அது புலனாய்வு செயல்முறைக்கு அல்லது குற்றவாளிகளை கைது செய்தலுக்கு அல்லது குற்றவழக்கு தொடருவதற்கு தடைசெய்திடும் தகவல்;

i) அமைச்சர்கள்; குழு, செயலாளர்கள் மற்றும் பிற அலுவலர்களின் கலந்தாய்வுகள் குறித்த பதிவுருக்கள் உள்ளிட்ட அமைச்சரவை ஏடுகள்.

*வரம்புரையாக : அமைச்சரவை குழுவின் முடிவுகள், அவற்றிற்கான காரணங்கள், மற்றும் எந்தப் பொருள்வகையின், அடிப்படையில் அந்த முடிவுகள் எடுக்கப்பட்டனவே, அந்தப் பொருள்வகை,அந்த முடிவு எடுக்கப்பட்ட, மற்றும் அந்த விஷயம் நிறைவடைந்த, அல்லது முடிவடைந்த பின்னர் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.*

*மேலும் வரம்புரையாக : இந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புகளின்படி கீழ் வரும் அத்தகைய விஷயங்கள் வெளிப்படுத்தப்படுதல் கூடாது;*

(i) *தகவலின் வெளிப்படுத்துகையானது பொது மக்களின் பேரளவு நலனுக்கு நியாயமானதாக உள்ளது என்று நேர்விற்கேற்றவாறு மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு மனநிறைவடைந்தாலன்றி; தகவலானது தனிப்பட்ட தகவலுக்கு தொடர்புடையதாக இருந்து, அதன் வெளிப்படுத்துகை பொதுச் செயற்பாடு அல்லது நலனுக்கு உறவுடையதாக இன்றியும் அல்லது தனிநபரின் அந்தரங்கத்தில் நியாயமற்ற தலையீடு செய்திடும் தகவல்,*

*வரம்புரையாக : தகவல் ஒன்று நாடாளுமன்றத்திற்கு அல்லது மாநில சட்டமன்றம் ஒன்றிற்கு மறுக்கப்படுதல் கூடாது;*

*(2) அலுவல் சார் மறையங்கள் சட்டம், 1923 (19/1923) — இல் அல்லது உட்பிரிவு* (1) - *இன்படி அனுமதிக்கத்தக்க விலக்களிப்புகள் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பொது அதிகார அமைப்பு ஒன்று, தகவலை வெளிப்பபடுத்துகையில் பொது நலனானது பாதுகாக்கப்பட்ட நலன்களுக்கான தீங்கை விட மிகுந்திருப்பின் தகவலை அணுகிப் பெறலுக்கு அனுமதிக்கலாம்.*

*(3) உட்பிரிவு (1)—இன் கூறுகள்* (a), (c) *மற்றும்* (i) *—இன் வகையங்களுக்கு உட்பட்டு, எந்தத் தேதியில் பிரிவு (6) —இன்படி ஒரு வேண்டுகோள் செய்யப்பட்ட தேதிக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த, நிகழ்ந்த அல்லது ஏற்பட்ட சம்பவம், நிகழ்வு அல்லது விஷயம் எதுவும் தொடர்பான தகவல் எதுவும், அந்தப் பிரிவின்படி வேண்டுகோள் ஒன்றைச் செய்யும் நபர் எவருக்கும் அளிக்கப்படுதல் வேண்டும்.*

*வரம்புரையாக : மேற்சொல்லப்பட்ட இருபது ஆண்டுகள் கால அளவு எந்தத் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டுமென்பதில் தேதி குறித்து பிரச்சனை எழுமிடத்து இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்ட வழக்கமான மேல்முறையீடுகளுக்கு உட்பட்டு, மைய அரசாங்கத்தின் முடிவே இறுதியானதாகும்.*

**பிரிவு-9. சிலநேர்வுகளில் அணுகிப்பெறுதலை மறுப்பதற்கான அடிப்படைகள்** Grounds for refusal to access in certain cases

*பிரிவு 8—இன் வகையங்களுக்கு குந்தகமின்றி, நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் தகவலுக்கான வேண்டுகோள் ஒன்றை, அணுகிப் பெறுதலை அளிப்பதற்கான அத்தகைய வேண்டுகோள் அரசு அன்றி நபர் ஒருவரிடம் நிலைபெற்றிருக்கும் பதிப்புரிமையின் மீறுகை ஒன்றை உள்ளடக்குவதாக இருக்குமிடத்து, நிராகரிக்கலாம்.*

**பிரிவு-10.பிரித்தெடுத்தல்** Severability

*(1) வெளிப்படுத்தப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவலுடன் தொடர்புடையதாக உள்ளது எனும் அடிப்படையில், தகவலை அணுகிப் பெறுதலுக்கான வேண்டுகோள் ஒன்று நிராகரிக்கப்படுமிடத்து, இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பதிவுருவின் எந்தப்பகுதி இந்தச் சட்டத்தின் படி வெளிப்படுத்தப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவல் எதையும் உள்ளடக்காத பகுதியாக உள்ளதோ பதிவுருவின் எதிலிருந்தும் தகுந்த முறையில் பிரித்தெடுக்கப்பட முடியுமோ அந்தப் பகுதிக்கு அணுகிப்பெறல் அளிக்கப்படலாம்.*

*(2) உட்பிரிவு (1) —ன்படி பதிவுருவின் ஒரு பகுதிக்கு அணுகுதல் அனுமதிக்கப்படுமிடத்து, விண்ணப்பதாரருக்கு,—*

(a) *வெளிப்படுத்தப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவலை உள்ளடக்கிய பதிவேட்டிலிருந்து பிரித்தெடுத்த பிறகு,கோரப்பட்ட பதிவேட்டின் பகுதி மட்டுமே,அளிக்கப்படுகிறது என்பது;*

(b) *பொருண்மை பற்றிய முக்கிய பிரச்சனை எதன் மீதான முடிவுகள் உள்ளடங்கியதும், அந்த முடிவுகளுக்கு அடிப்படையாக அமைந்ததுமான பருப்பொருளை குறிப்பிட்டு அந்த முடிவிற்கான காரணங்கள்;*

(c) *அந்த முடிவை எடுக்கும் நபரின் பெயர் மற்றும் பதவிப் பெயர்;*

(d) *அவரால் அல்லது அவளால் கணக்கிடப்பட்ட கட்டணங்களின் விபரங்கள் மற்றும் விண்ணப்பதாரர் வைப்பீடு செய்ய வேண்டுறுத்தப்பட்ட கட்டணத் தொகை; மற்றும்*

(e) *தகவலின் பகுதியை வெளிப்படுத்தாமை, விதிக்கப்பட்ட கட்டணத் தொகை அல்லது அணுகிப்பெறல் வடிவம் தொடர்புடையதுமான முடிவின் மறு ஆய்வு குறித்த அவரது அல்லது அவளது உரிமைகள், பிரிவு 19—இன் உட்பிரிவு (1)—இல் குறித்துரைக்கப்பட்ட முதுநிலை அலுவலர் அல்லது நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநிலத் தகவல் ஆணையத்தின் விபரங்கள், காலவரம்பு, செயல்முறை மற்றும் அணுகிப்பெறலுக்கான வேறு வடிவம் ஆகியவற்றை தெரிவித்து, நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தல் வேண்டும்.*

**பிரிவு-11. மூன்றாம் தரப்பினர் தகவல்**

Third party informatio

*(1) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட ஒரு வேண்டுகோளின் பேரில், ஏதேனும் தகவல் அல்லது பதிவுரு அல்லது அதன் பகுதி மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு தொடர்புடையதாக, அல்லது அவரால் அளிக்கப்பட்டிருப்பதாக மற்றும் அந்த மூன்றாம் தரப்பினரால் இரகசியமாக கருதப்பட்டு வருவதாக உள்ளதோ அந்தத் தகவலை அல்லது பதிவுரு, அல்லது அதன் பகுதியை வெளிப்படுத்த நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் ஒருவர் விழையுமிடத்து, அந்த வேண்டுகோள் கிடைக்கப் பெற்ற 5 நாட்களுக்குள், நேர்விற்கேற்ப அந்த மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர், வேண்டுகோள் பற்றி அத்தகைய மூன்றாம் தரப்பினருக்கு, நேர்விற்கேற்ப அந்த மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுப் தகவல் அலுவலர் ஒருவர் விழையுமிடத்து, அந்த வேண்டுகோள் கிடைக்கப் பெற்ற 5 நாட்களுக்குள், நேர்விற்கேற்ப அந்த மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர், வேண்டுகோள் பற்றி அத்தகைய மூன்றாம் தரப்பினருக்கு, நேர்விற்கேற்ப அந்த மைய பொதுத் தகவல் அலுவலர் அந்தத் தகவலை அல்லது பதிவுருவினை, அல்லது அதன் பகுதியை வெளிப்படுத்த விழைகிறது எனும் சங்கதி பற்றியும், மற்றும்*

*அந்தத் தகவலை வெளிப்படுத்துவதா வேண்டாமா என்பது குறித்து எழுத்துருவில் அல்லது வாய்மொழியாக முறையீடு ஒன்றைச் செய்வதற்கு அந்த மூன்றாம் தரப்பினருக்கு அழைப்பு விடுத்தும் எழுத்துருவிலான அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தல் வேண்டும், மற்றும் மூன்றாம் தரப்பினரின் அத்தகைய முறையீடானது தகவலின் வெளிப்படுத்துகை பற்றிய முடிவு எடுக்கும் போது கருத்தில் கொல்லப்படுதல் வேண்டும்.*

*வரம்புரையாக : சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வியாபார அல்லது வணிக இரகசியங்கள் குறித்த நேர்வில் தவிர, வெளிப்படுத்துகையில் பொது நலனானது அத்தகைய மூன்றாம் தரப்பினரின் நலன்களுக்கு ஏற்படக்கூடியது தீங்கு அல்லது கேடு எதனின் முக்கியத்துவத்தில் மிகுந்திருப்பின் வெளிப்படுத்துதல் அனுமதிக்கப்படலாம்.*

**தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டங்கள்**

*(2) தகவல் அல்லது பதிவுரு அல்லது அதன் பகுதி எதுவும் குறித்து மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு உட்பிரிவு (1) —இன்படி நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரால் அறிவிப்பு ஒன்று சார்வு செய்யப்படுமிடத்து. அந்த அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் அத்தகவல் வெளிப்படுத்துகைக்கு எதிராக முறையீடு செய்ய அந்த மூன்றாம் தரப்பினருக்கு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.*

*(3)பிரிவு 7 —இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், உட்பிரிவு (2) —ன்படி முறையீட்டிற்கான வாய்ப்பு ஒன்று மூன்றாம் தரப்பினருக்கு அளிக்கப்பட்டிருப்பின், அந்தத் தகவலை அல்லது பதிவுருவினை அல்லது அதன் பகுதியை வெளிப்படுத்துவதா வேண்டாமா என்பது குறித்த முடிவு ஒன்றை, பிரிவு 6 —இன் கீழ் வேண்டுகோள் கிடைக்கப் பெற்ற பிறகு நாற்பது நாட்களுக்குள் நேர்விற்கேற்ப, மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் மேற்கொள்ள வேண்டும் மற்றும் தனது முடிவு குறித்த அறிவிப்பை அந்த மூன்றாம் தரப்பிரனருக்கு எழுத்துருவில் கொடுக்க வேண்டும்.*

*(4) உட்பிரிவு (3) —இன்படி மூன்றாம் தரப்பினருக்கு கொடுக்கப்படும் அறிவிப்பில் அவர் அந்த முடிவை எதிர்த்து*

*உட்பிரிவு 19 —இன் கீழ் மேல்முறையீடு ஒன்றைச் செய்ய உரிமை கொண்டவர் எனும் அறிக்கை அதில் அடங்கியிருக்க வேண்டும்.*

## அத்தியாயம்-3

## மைய தகவல் ஆணையம்

The Central information Commission

### பிரிவு-12.மைய தகவல் ஆணையத்தின் அமைப்பு

Constitution of Central Informathion Commission

*(1)மைய அரசானது, அரசிதழில் அறிக்கை மூலம், மைய தகவல் ஆணையம் என்று வழங்கப் பெற வேண்டியதும் இந்தச் சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை செயலாற்றுவதற்குமான அமைப்பு ஒன்றை அமைத்தல் வேண்டும்.*

*(2) மைய தகவல் ஆணையமானது —*

(a) *தலைமை தகவல் ஆணையரையும், மற்றும்*

(b) *அவசியமெனக் கருதப்படலாகும் பத்துக்கும் மேற்படாத அத்தகைய எண்ணிக்கையிலான தகவல் ஆணையர்களையும், உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.*

*(3)மாநில முதன்மை தகவல் ஆணையரும் மாநில தகவல் ஆணையர்களும் கீழ்க்கண்டவர்களைக் கொண்ட குழு ஒன்றின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுதல் வேண்டும், அவர்கள் —*

(i) *பிரதமர் இவர் அந்தக் குழுவின் பெருந்தலைவராக இருப்பார்;*

(ii) *மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்; மற்றும்*

(iii) *பிரதமரால் நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர்.*

*விளக்கம்.— ஐயப்பாடுகளை களையும் நோக்கங்களுக்காக மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் என ஒருவர் அங்கீகரிக்கப்படாதவிடத்து, மக்களவையில் ஆளும் அரசிற்கு எதிரான பெரிய தனியொரு குழுவின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவராக கருதப்படுதல் வேண்டும் என்று இதன் மூலம் விளம்பபடுகிறது.*

*(4) மைய தகவல் ஆணையத்தின் விவகாரங்களின் பொது கண்காணிப்பு, நெறியுறுத்தல் மற்றும் மேலாண்மையனது, தகவல் ஆணையர்களால் உதவி புரியப்படக் கூடிய தலைமை தகவல் ஆணையரிடம் இருத்தல் வேண்டும் மற்றும் அவர் இந்தச் சட்டத்தின்படி வேறு அதிகார அமைப்பு எதனுடைய நெறியுறுத்தல்களுக்கும் உட்படுத்தப்பட்டிராமல் மைய தகவல் ஆணையத்தால் தன்னாட்சி உரிமையாக செயலாற்றப்படலாமெனக் கருத்து செய்யப்படலாமெனக் கூடிய அத்தகைய அதிகாரங்கள் எல்லாவற்றையும் செயலுறுத்தலாம் மற்றும் அத்தகைய செயல்கள் அல்லது செய்கைகள் எல்லாவற்றையும் செயலுறுத்தலாம்.*

*(5) முதன்மை தகவல் ஆணையரும் தகவல் ஆணையர்களும் சட்டம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், சமூக சேவை மேலாண்மை, இதழியல், மக்கள் ஊடகம் அல்லது அல்லது நிர்வாகம் மற்றும் ஆட்சி முறையில் பரந்த அறிவு மற்றும் அனுபவத்துடன் பொது வாழ்வில் மேம்பாட்டுக்குரிய நபர்களாக இருந்ததால் வேண்டும்.*

*(6) முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் ஒருவர், நேர்விற்கேற்ப நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினராக அல்லது மாநிலம் அல்லது ஒன்றிய பிரதேசம் ஒன்றின் சட்டமன்ற உறுப்பினராக, அல்லது வேறு ஆதாயப் பதவி எதையும் வகிப்பவராக அல்லது அரசியல் கட்சி எதனுடனும் தொடர்புடையவராக அல்லது வணிகம் எதையும் செய்பவராக அல்லது தொழில் எதையும் தொடர்ந்து செய்பவராக இருத்தல் கூடாது.*

*(7) மைய தகவல் ஆணையத்தின் தலைமையகம் தில்லியில் இருக்கும் மற்றும் மைய தகவல் ஆணையமானது, மைய அரசாங்கத்தின் முன் ஒப்புதலுடன் இந்தியாவின் வேறு இடங்களிலும் அலுவலகங்களை நிறுவிடலாம்.*

**பிரிவு-13. பதவி பணிக்காலம் மற்றும் பணியின் வரையறைகள்**

Term of Office and Conditions of Service

*(1) முதன்மை தகவல் ஆணையர் தனது பதவியை ஏற்கின்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அவர் மறுநியமனத்திற்கான தகுதி பெற்றவர் அல்ல.*

*வரம்புரையாக : யாதொரு முதன்மை தகவல் ஆணையரும் அகவை 65ஐ அடைந்த பின்னர், அவர் அவ்வாறு பதவி வகித்தல் கூடாது.*

*(2) தகவல் ஆணையர் ஒவ்வொருவரும் பதவியை ஏற்கின்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் காலத்திற்கு அல்லது அவர் 65 அகவை அடையும் வரை, இவற்றில் எது முந்தி வருகிறதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய தகவல் ஆணையராக மறு நியமனம் பெறத்தகுதி பெற்றவர் அல்ல.*

*வரம்புரையாக : தகவல் ஆணையர் ஒவ்வொருவரும், இந்த உட்பிரிவின்படி தனது பதவியை விட்டகலும்போது பிரிவு 12—இன் உட்பிரிவு (3)—இல் குறித்துரைக்கப்பட்ட முறையில் முதன்மை தகவல் ஆணையராக நியமனம் பெறத் தகுதியுடையவராவர்.*

*மேலும் வரம்புரையாக : தகவல் ஆனையரானவர் முதன்மை தகவல் ஆணையராக நியமிக்கப்படுமிடத்து, அவரது பதவிக் காலமானது தகவல் ஆணையர் மற்றும் தலைமை தகவல் ஆணையரைப் போன்று மொத்தத்தில் 5 ஆண்டுகளுக்கு மேற்படல் கூடாது.*

*முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் ஒருவர், தனது பதவியை ஏற்பதற்கு முன்னர் குடியரசுத் தலைவர் அல்லது அதற்காக அவரால் நியமிக்கப்பட்ட வேறு நபர் எவரேனும் முன்னிலையில், ஆணைமொழி அல்லது உறுதியுரை ஒன்றை முதாலம் இணைப்புப் படிவத்தின்படி செய்து கையொப்பமிட வேண்டும்,*

*(3)முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் ஒருவர், எப்போது வேண்டுமானாலும், குடியரசுத் தலைவருக்கு முகவரியிட்டு தன் கைப்பட எழுதுவதன் மூலமாக, தனது பதவியிலிருந்து விலகலாம்.*

*வரம்புரையாக : முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் ஒருவர், பிரிவு 14—இல் குறித்துரைக்கப்பட்ட முறையில் நீக்கப்படலாம்.*

*(4)* (a) *தலைமை தகவல் ஆணையருக்கு;*

(b) *தகவல் ஆணையர் ஒருவருக்கு,*

*செலுத்தப்படத்தக்க சம்பளங்களும் படிகளும் மற்றும் அவர்களது பணியின் விதிமுறைகளும், வரையறைகளும் முதன்மை தகவல் ஆணையரைப் பொறுத்து, தலைமை தேர்தல் ஆணையருடையதைப் போன்றும், தகவல் ஆணையர் ஒருவரைப் பொருத்து தேர்தல் ஆணையர் ஒருவருடையதைப் போன்றும் இருக்கும்.*

*வரம்புரையாக : முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் ஒருவர், அவரது பணி நியமனத்தின் பொது, இந்திய அரசாங்கத்தின் கீழான அல்லது மாநில அரசு ஒன்றின் கீழான முந்தைய பணி தொடர்பானதுமான (ஊனம் அல்லது காய ஓய்வூதியம் அல்லாத) ஓய்வூதியம் ஒன்றைப் பெறுபவராக இருப்பின், முதன்மை தகவல் ஆணையராக அல்லது தகவல் ஆணையர் ஒருவராக செய்யும் பணி தொடர்பான அவரது சம்பளமானது குறைந்ததாக மாற்றப்பட்ட ஓய்வூதியத்தின் பகுதி மற்றும் ஓய்வூதிய பணிக்கொடைத் தொகைக்கு சமமான ஓய்வூதியம் நீங்கலாக ஓய்வூக்கால பலங்களின் வேறு வடிவங்களுக்குச் சமமான ஓய்வூதியத்தை உள்ளடக்கும் ஓய்வூதியத் தொகையால் குறைக்கப்படுதல் வேண்டும்.*

*மேலும் வரம்புரையாக: முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் ஒருவர்,அவரது பணி நியமனத்தின்போது, மையச் சட்டம் அல்லது மாநிலச் சட்டம் எதனாலும் அல்லது எதன்படியும் நிறுவப்பட்ட குழுமம் ஒன்றிற்கு அல்லது மைய அரசாங்கம் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட அரசாங்கத்தால் உடைமையுரிமையாக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு ஆற்றிய முந்தைய பணி தொடர்பானதுமான ஓய்வுக்கால பலன்களை பெறுபவராக இருப்பின், முதன்மை தகவல் ஆணையராக அல்லது தகவல் ஆணையர் ஒருவராக செய்யும் பணி தொடர்பான அவரது ஊதியமானது ஓய்வுக்கால பலன்களுக்கு சமமான ஓய்வூதியத் தொகையால் குறைக்கப்படுதல் வேண்டும்.*

*வரம்புரையாக : முதன்மை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்களின் ஊதியம், படிகள் மற்றும் பணியின் இதர வரையறைகள் அவர்களது நியமனத்திற்கு பின்னர் அவர்களுக்கு பாதகமாக வேறுபடுத்தப்படுதல் கூடாது.*

*(6) முதன்மை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்கள் இந்தச் சட்டத்தின் படி அவர்கள் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமாகும். அத்தகைய அலுவலர்களை மற்றும் பணியாட்களை அவர்களுக்கு மைய அரசாங்கம் அளித்தல் வேண்டும், மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட அந்த அலுவலர்கள் மற்றும் பிற பணியாட்களுக்கு கொடுக்கப்படத்தக்க சம்பளங்கள் மற்றும் படிகள் மற்றும் அவர்களது பணியின் விதிமுறைகளும், வரையறைகளும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.*

**பிரிவு-14. முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையரின் நீக்கம்** Removal of Cheif Information Commissioner or Information Commissioner

*(1)உட்பிரிவு (3)— இன் வகையங்களுக்கு உட்பட்டு, முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் எவரும் குடியரசுத் தலைவரால் உச்ச நீதிமன்றத்திற்கு சுட்டியரைக்கப்பட்டு விசாரணையின் பேரில், நேர்விற்கேற்ப முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் எவரும் மெய்ப்பிக்கப்பட்ட தவறான நடத்தை மற்றும் தகுதியின்மையின் அடிப்படையில் நீக்கப்படலாம் என்று அறிக்கை அளித்த பிறகு அத்தகைய அடிப்படையில் நீக்கப்படலாம் என்று அறிக்கை அளித்த பிறகு அத்தகைய அடிப்படையின் பேரில் குடியரசுத் தலைவரின் ஆணையின் பேரில் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.*

*(2) உட்பிரிவு (1) இன் படி உச்ச நீதிமன்றத்திற்கு சுட்டியுரைக்கட்டுள்ள முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையரை, குடியரசுத் தலைவர் ஆணைகள் பிறப்பிக்கின்ற வரை, குடியரசுத் தலைவரானவர் விசாரணையின் பொது பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யலாம், மற்றும் அவசியமெனக் கருதினால் பணியிடத்திற்கு வருவதிலிருந்தும் கூட தடை செய்யலாம்.*

*(3)உட்பிரிவு (1)— இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் குடியரசுத் தலைவர் ஆணையின் மூலம் நேர்விற்கேற்ப முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் ஒருவர்,_*

(a) *நொடிப்பு நிலையராக முடிவு செய்யப்பட்டிருப்பின்; அல்லது*

(b) *குடியரசுத் தலைவரின் கருத்தில் ஒழுக்கம் ஈனம் உள்ளடக்கிய குற்றம் ஒன்றிற்காக தண்டிக்கப்பட்டிருப்பின்; அல்லது*

(c) *அவரது பதவிக் காலத்தின்போது, அவரது பதவிக்கு அப்பாற்பட்ட கடமைகளுக்காக பணம் அளிக்கப்படும் பணி எதிலும் ஈடுபட்டிருப்பின்; அல்லது*

(d) *குடியரசுத் தலைவரின் கருத்தில் மன அலல்து உடல் ஊனம் காரணத்திற்காக பதவியில் தொடர தகுதியற்றவராகி இருப்பின்; அல்லது.*

(e) *முதன்மை தகவல் ஆணையராக அல்லது ஓர் தகவல் ஆணையராக தனது செய்கடமைகளை அநேகமாக குந்தகமாக பாதிக்கத்தக்க அத்தகைய நிதி அல்லது பிற நலனை அடைந்திருப்பின், அத்தகைய முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் எவரையும் பதவியிலிருந்து நீக்கலாம்.*

*(4) முதன்மை தகவல் ஆணையர் அல்லது தகவல் ஆணையர் ஒருவர், இந்திய அரசினால் அல்லது அதற்காக செய்யப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை எதிலும் எந்த வழியிலேனும் தொடர்புடையவராக அல்லது அக்கறையுடையவராக அல்லது அதற்கான ஆதாயத்தில் எந்த வழியிலேனும் அல்லது கூட்டு நிறுவனம் ஒன்றின் பிற உறுப்பினர்களுடன் பொதுவாகவும் வேறுவகையில் ஓர் உறுப்பினராக அல்லாமலும் அதிலிருந்து எழும் பயன் அல்லது ஆதாயம் எதிலும் பங்கு பெறுபவராக இருப்பின், அவர் உட்பிரிவு (1) இன் நோக்கங்களுக்காக, தவறான நடத்தைக் குற்றம் புரிந்தவராக கருதப்படுதல் வேண்டும்*

## அத்தியாயம்-4
## மாநில தகவல் ஆணையம்
The State Information Commission

### பிரிவு-15 மாநில தகவல் ஆணையத்தின் அமைப்பு
Constituion of State Information Commission

*(1) மாநில அரசு ஒவ்வொன்றும், அரசிதழில் அறிவிக்கை மூலம்,* ________________

*(மாநிலத்தின் பெயர்) தகவல் ஆணையம் என்று வழங்கப் பெற வேண்டியதும் இந்தச் சட்டத்தின் படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை செயலுறுத்தவும், மற்றும் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை ஆற்றுவதற்குமான அமைப்பு ஒன்றை அமைத்தல் வேண்டும்.*

*(2) மாநில தகவல் ஆணையமானது*

(a) *மாநில தலைமை தகவல் ஆணையரையும், மற்றும்*

(b) *அவசியமெனக் கருதப்படலாகும் பத்துக்கும் மேற்படாத எண்ணிக்கையிலான மாநில தகவல் ஆணையர்களையும், உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.*

*(3)மாநில தலைமை தகவல் ஆணையரும் மாநில தகவல் ஆணையர்களும் கீழ்கண்டவர்களைக் கொண்ட குழு ஒன்றின் பரிந்துரையின் பேரில் ஆளுநரால் நியமிக்கப்படுதல் வேண்டும், அவர்கள்—*

(i) *முதல் அமைச்சர், அந்தக் குழுவின் பெருந்தலைவராக இருப்பார்;*

(ii) *சட்டப்பேரவையின் எதிர்கட்சித் தலைவர்; மற்றும்*

(iii) *முதல் அமைச்சரால் நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர்.*

*விளக்கம் — ஐயப்பாடுகளை களையும் நோக்ககங்களுக்காக சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் என ஒருவர் அங்கீகரிக்கப்படாதவிடத்து, சட்டப் பேரவையில் ஆளும் அரசிற்கு எதிரான பெரிய தனியொரு குழுவின் தலைவர் எதிர்கட்சித்தலைவராக கருதப்படுதல் வேண்டும் என்று இதன் மூலம் விளம்பப்படுகிறது.*

*(4) மாநில தகவல் ஆணையத்தின் விவகாரங்களின் பொதுவான கண்காணிப்பு, நெறியுறுத்தல் மற்றும் மேலான்மையானது, மாநில தகவல் ஆணையரிடம் இருத்தல் வேண்டும் மற்றும் அவர் இந்தச் சட்டத்தின்படி வேறு அதிகார அமைப்பு எதனுடைய நெறியுறுத்தல்களுக்கும் உட்படுத்தப்பட்டிராமல் மாநில தகவல் ஆணையத்தால் தன்னாட்சியுரிமையாக செயலாற்றப்படலாமெனக் கூடிய அல்லது செய்யப்படலாமெனக் கூடிய அத்தகைய அதிகாரங்கள் மற்றும் செயல்கள் அனைத்தையும் செயலுறுத்தலாம்.*

*(5) மாநில தலைமை தகவல் ஆணையரும் மாநில தகவல் ஆணையர்களும் சட்டம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சமூக சேவை, மேலாண்மை, இதழியல், மக்கள் ஊடகம் அல்லது நிருவாகம் மற்றும் ஆட்சிமுறையில் பரந்த அறிவு மற்றும் அனுபவத்துடன் பொது வாழ்வில் மேம்பாட்டுக்குரிய நபர்களாக இருத்தல் வேண்டும்.*

*(6)மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் ஒருவர் நேர்விற்கேற்ப நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினராக அல்லது மாநிலம் அல்லது ஒன்றியப் பிரதேசம் ஒன்றின் சட்டமன்ற உறுப்பினராக, அல்லது வேறு ஆதாயப் பதவி எதையும் வகிப்பவராக அல்லது அரசியல் கட்சி எதனுடனும் தொடர்புடையவராக அலது வணிகம் எதையும் செய்பவராக அல்லது தொழில் எதையும் தொடர்ந்து செய்பவராக இருத்தல் கூடாது.*

*(7) மாநில தகவல் ஆணையத்தின் தலைமையகம் அரசிதழில், மாநில அரசு அறிவிக்கை மூலம் குறித்துரைக்கலாகும் மாநிலத்தின் அத்தகைய இடத்தில் இருக்கும் மற்றும் மாநில தகவல் ஆணையமானது, மாநில அரசின் முன் ஒப்புதலுடன் மாநிலத்தில் வேறு இடங்களிலும் அலுவலகங்களை நிறுவலாம்.*

**பிரிவு-16 பதவி பணிக்காலம் மற்றும் பணியின் வரையறைகள்**
Term of Office and conditions of service

*(1) மாநில தலைமை தகவல் ஆணையர் பதவியை ஏற்கின்ற தேதியிலிருந்து*

*5 ஆண்டுகள் காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அவர் மறு நியமனத்திற்கான தகுதி பெற்றவர் அல்ல.*

*வரம்புரையாக : மாநில தலைமை தகவல் ஆணையர் அகவை 65 அடைந்த பின்னர், அவர் அவ்வாறு பதவி வகித்திடல் கூடாது.*

*(2) மாநில தகவல் ஆணையர் ஒவ்வொருவரும் பதவியை ஏற்கின்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் காலத்திற்கு அல்லது அவர் 65 அகவை அடையும் வரை, இவற்றில் எது முந்தி வருகிறதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய மாநில தகவல் ஆணையராக மறு நியமனம் பெறத் தகுதி பெற்றவர் அல்ல.*

*வரம்புரையாக: மாநில தகவல் ஆணையர் ஒவ்வொருவரும் இந்த உட்பிரிவின்படி தனது பதவியை விட்டகலும்போது பிரிவு 15 — இன் உட்பிரிவு (3)— இல் குறித்துரைக்கப்பட்ட முறையில் மாநில தலைமை தகவல் ஆணையராக நியமனம் பெறத் தகுதியுடையவராவர்.*

*மேலும் வரம்புரையாக : மாநில தகவல் ஆணையரானவர் மாநில தலைமை தகவல் ஆணையராக நியமிக்கப்படுமிடத்து, அவரது பதவிக்கலமானது மாநில தகவல் ஆணையர் மற்றும் மாநில தலைமை தகவல் ஆணையரைப் போன்று மொத்தத்தில் 5 ஆண்டுகளுக்கு மேற்படல் கூடாது.*

*(3) மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் ஒருவர், தனது பதவியை ஏற்பதற்கு முன்னர் ஆளுநர் அல்லது அதற்காக அவரால் நியமிக்கப்பட்ட வேறு நபர் எவரேனும் முன்னிலையில், ஆணைமொழி அல்லது உறுதியுரை ஒன்றை முதலாம் இணைப்புப் பட்டியலில், அந்த நோக்கத்திற்காக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி செய்து கையொப்பமிட வேண்டும்.*

*(4) மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் ஒருவர், எப்போது வேண்டுமானாலும், ஆளுநருக்கு முகவரியிட்டு தன கைப்பட எழுதுவதன் மூலமாக, தனது பதவியிலிருந்து விலகலாம்.*

*வரம்புரையாக : மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் ஒரவர், பிரிவு 14 — இல் குறித்துரைக்கப்பட்ட முறையில் நீக்கப்படலாம்.*

*(5)* (a) *மாநில தலைமை தகவல் ஆணையருக்கு;*

*(தீ) மாநில தகவல் ஆணையருக்கு, செலுத்தப்படத்தக்க ஊதியமும் படிகளும் மற்றும் அவர்களது பணியின் விதிமுறைகளும், வரையறைகளும் மாநில தலைமை தகவல் ஆணையரைப் பொறுத்து, தலைமை தேர்தல் ஆணையருடையதைப் போன்றும், மாநில தகவல் ஆணையர் ஒருவரைப் பொறுத்து மாநில அரசின் தலைமைச் செயலருடையதைப் போன்றும் இருக்கும்.*

*வரம்புரையாக : மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் ஒருவர், அவரது பணி நியமனத்தின் போது, இந்திய அரசின் கீழான அல்லது மாநில அரசு ஒன்றின் கீழான முந்தைய பணி எது தொடர்பானதுமான (ஊனம் அல்லது காய ஓய்வூதியம் அல்லாத) ஓய்வூதியம் ஒன்றைப் பெருபவராக இருப்பின், மாநில தலைமை தகவல் ஆணையராக அல்லது மாநில தகவல் ஆணையர் ஒருவராக செய்யும் பணி தொடர்பான அவரது சம்பளமானது குறைந்ததாக மாற்றப்பட்ட ஓய்வூதியத்தின் பகுதி மற்றும் ஓய்வூதிய பணிக்கொடைத் தொகைக்கு சமமான ஓய்வூதியம் நீங்கலாக ஓய்வூக்கால பலன்களின் வேறு வடிவங்களுக்குச் சமமான ஓய்வூதியத்தை உள்ளடக்கும் ஓய்வூதியத் தொகையால் குறைக்கப்படுதல் வேண்டும்.*

*மேலும் வரம்புரையாக : மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் ஒருவர்; அவரது பணி நியமனத்தின் போது மையச் சட்டம் அல்லது மாநிலச் சட்டம் எதனாலும் அல்லது எதன்படியும் நிறுவப்பட்ட குழுமம் ஒன்றிற்கு அல்லது மைய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கத்தால் உடைமையுரிமையாக்கப்பட்ட அல்லது கட்டுபடுத்தப்பட்ட அரசாங்க நிறுவனம் ஒன்றிக்கு ஆற்றிய முந்தைய பணி தொடர்பானதுமான ஓயுக்கால பலன்களை பெறுபவராக, இருக்குமிதத்து, மாநில தலைமை தலவல் ஆணையராக அல்லது மாநில தகவல் ஆணையர்*

ஒருவராக செய்யும் பணி தொடர்பான அவரது ஊதியமானது ஓய்வுக்கால பலன்களுக்கு சமமான ஓய்வுதியத் தொகையால் குறைக்கப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக : மாநில தலைமை தகவல் ஆணையர் மற்றும் மாநில தகவல் ஆணையர்களின் ஊதியம், படிகள் மற்றும் பணியின் இதர வரையறைகள் அவர்களது நியமனத்திற்கு பின்னர் அவர்களுக்கு பாதகமாக வேறுபடுத்தப்படுதல் கூடாது.

(6) மாநில தலைமை தகவல் ஆணையர் மற்றும் மாநில தகவல் ஆணையர்கள் இந்தச் சட்டத்தின்படி அவர்கள் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமாகும் அத்தகைய அலுவலர்களை மற்றும் பணியாட்களை அவர்களுக்கு மாநில அரசு அளித்தல் வேண்டும். மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, நியமிக்கப்பட்ட அந்த அலுவலர்கள் மற்றும் பிற பணியாட்களுக்கு கொடுக்கப்படத்தக்க சம்பளங்கள் மற்றும் படிகள், மற்றும் அவர்களது பணியின் விதிமுறைகளும் வரையறைகளும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

**பிரிவு -17. மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையரின் நீக்கம்** Removal of State Chief Information Commissioner or State Information Commissioner

1) உட்பிரிவு (3) — இன் வகையங்களுக்கு உட்பட்டு, மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் எவரும் ஆளுநரால் உச்ச நீதிமன்றத்திற்குச் செய்யப்பட சுட்டியுரைக்கப்பட்டு, விசாரணையின் பேரில், நேர்விர்கேற்ப மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் எவரும் மெய்ப்பிக்கப்பட்ட தவறான நடத்தை மற்றும் தகுதியின்மையின் அடிப்படையில் நீக்கப்படலாம் என்று அறிக்கையளித்த பிறகு, அத்தகைய அடிப்படையின் நீக்கப்படலாம் என்று அறிக்கையளித்த பிறகு, அத்தகைய அடிப்படையின் பேரில் ஆளுநரின் ஆணையினால் மட்டுமே அவரது பதவியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

2) உட்பிரிவு (1) — இன்படி உச்ச நீதிமன்றத்திற்கு சுட்டியுரைக்கப்பட்டுள்ள மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையரை, ஆளுநர் ஆணைகள் பிறப்பிக்கின்ற வரை, ஆளுனரானவர் விசாரணையின் போது பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யலாம், மற்றும்

*அவசியமெனக் கருதினால் அலுவலகத்திற்கு வருவதிலிருந்தும் கூட தடை செய்யலாம்.*

**3.தகவல்**

*3) உட்பிரிவு (1) இல் அடங்கியுள்ள எது எவ்வாறிப்பினும் ஆளுநர் ஆணையின் கழகம் நேர்விர்கேற்ப மாநில தலைமை தகவல், ஆணையர் ஒருவர் அல்லது மாநில தகவல் ஆணையர் ஒருவர்:—*

(a) *நொடிப்புநிலையராக முடிவு செய்யப்பட்டிருப்பின்; அல்லது*

(b) *ஆளுநரின் கருத்தில் ஒழுக்கம் ஈனம் உள்ளடக்கிய குற்றம் ஒன்றிற்காக, தண்டிக்கப்பட்டிருப்பின்; அல்லது*

(c) *அவரது பதவிக் காலத்தின்போது, அவரது பதவிக்கு அப்பாற்பட்ட அமைப்புகளுக்காக, பணம் அளிக்கப்படும் பணி எதிலும் ஈடுபட்டிருப்பின்; அல்லது*

(d) *ஆளுநரின் கருத்தில் மன அல்லது உடல் ஊனம் காரணத்திற்காக பதவியில் தொடர தகுதியற்றவராகி இருப்பின்; அல்லது*

(e) *மாநில தலைமை தகவல் ஆணையராக அல்லது மாநில தகவல் ஆணையராக தனது செய்கடமைகளை அநேகமாக குந்தகமாக, பாதிக்கத்தக்க அத்தகைய நீதி அல்லது பிற நலனை அடைந்திருப்பின், அத்தகைய தலைமை தகவல் ஆணையர் அல்லது தகாவல் ஆணையர் எவரையும் பதவியிலிருந்து விலக்கலாம்.*

*(4) மாநில தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர் எவரும், இந்திய அரசினால் அல்லது அதற்காக செய்யப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை எதிலும் இந்த வழியிலேனும் தொடர்புடையவராக அல்லது அக்கறையுடையவராக அல்லது அதற்கான ஆதாயத்தில் இந்த வழியிலேனும் அல்லது கூட்டு நிறுவனம் ஒன்றின் பிற உறுப்பினர்களுடன் பொதுவாகவும் வேறுவகையில் ஓர் உறுப்பினராக அல்லாமலும் அதிலிருந்து எழும் பயன் அல்லது கூட்டு நிறுவனம் ஒன்றின் பிற உறுப்பினர்களுடன் பொதுவாகவும் வேறுவகையில் ஓர் உறுப்பினராக அல்லாமலும் அதிலிருந்து எழும் பயன் அல்லது ஆதாயம் எதிலும் பங்கு பெறுபவராக இருப்பின், அவர், உட்பிரிவு (1) இன் நோக்கங்களுக்காக, தவறான நடத்தைக் குற்றம் புரிந்தவராக கருதப்பட்டால் வேண்டும்.*

# அத்தியாயம் -5

# தகவல் ஆணையங்களின் அதிகாரங்களும் செய்கடமைகளும், மேல்முறையீடு மற்றும் தண்டங்கள்

Powers and Functions of the Inforamation Commissions, Appeal and Penalties

## பிரிவு-18, ஆணையத்தின் அதிகாரங்களும் செய்கடமைகளும்

Powers and Function of Commission

*1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு நபர் ஒருவரிடமிருந்து*

(a) *இந்தச் சட்டத்தின்படி அத்தகைய அலுவலர் எவரும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை என்ற காரணத்தின் பேரில், அல்லது நேர்விற்கேற்ப மைய உதவி பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில உதவி பொதுத் தகவல் அலுவலரானவர் இந்தச் சட்டத்தின்படி தகவல் பெறுதலுக்கான அவரது அல்லது அவளது விண்ணப்பத்தை அல்லது மேல்முறையீட்டை நேர்விர்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலருக்கு அல்லது பிரிவு 19 — இன் உட்பிரிவு (1) — இல் குறித்துரைக்கப்பட்ட முதுநிலை அலுவலருக்கு அல்லது மைய தகவல் ஆணையத்திற்கு அல்லது மாநில தகவல் ஆணையத்திற்கு அனுப்புவதற்காக பெற்றுக் கொள்ள மறுத்ததால், நேர்விர்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர், அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலருக்கு வேண்டுகோள் ஒன்றை சமர்ப்பிக்க இயலாதிருக்கும் அந்த நபர் எவரிடமிருந்தும்;*

(b) *இந்தச் சட்டத்தின்படி வேண்டப்பட்ட தகவல் எதையும் அணுகிப் பெறல் மறுக்கப்பட்டிருக்கும் நபர் எவரிடமிருந்தும்;*

(c) *தகவலுக்கான வேண்டுகோள் ஒன்றிற்கு பதில் ஒன்று அல்லது இந்தச்சட்டத்தின்படி குறித்துரைக்கப்பட்டுள்ள கால வரையறைக்குள் தகவல் அணுகிப் பெறுதல் கொடுக்கப்படாத நபர் எவரிடமிருந்தும்;*

(d) *அவன் அல்லது அவள் முறையற்றது என கருதப்படும் கட்டணத் தொகை ஒன்றை செலுத்துவதற்கு வேண்டுறுத்தப்பட்டிருகிற நபர் எவரிடமிருந்தும்;*

(e) *இந்தச்சட்டத்தின்படி முழுமைபெறாத, தவறான எண்ணம் தோற்றுவிக்கும் அல்லது தவறான தகவல்*

அளிக்கப்பட்டுள்ளதாக அவன் அல்லது அவள் நம்புகிற நபர் எவரிடமிருந்தும்; மற்றும்

(f) இந்தச் சட்டத்தின்படி பதிவுருவினை அணுகிபெறுதலை வேண்டுதல் மற்றும் பெறுதல் தொடர்பான பிற விஷயம் எது குறித்தும் புகார் ஒன்றைப் பெற்று, அதை விசாரித்தல் வேண்டியது நேர்விர்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையத்தின் கடமையாகும்.

*(3)*நேர்விர்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையமானது அந்த விஷயத்தை விசாரிப்பதற்கு தகுந்த அடிப்படைகள் உள்ளதெனு உள் நிறைவடையுமிடத்து, அதுபற்றி விசாரணை ஒன்றை அது தொடங்கலாம்.

*(3)* நேர்விற்கேற்பமைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையமானது, இந்தப் பிரிவின்படி விஷயம் எதையும் விசாரிக்கையில், உரிமையியல் நடைமுறைச் சட்டம், *1908* — இன்படி உரிமை வழக்கு ஒன்றை விசாரிக்கையில், உரிமையியல் நீதிமன்றத்திடம் எத்தகைய அதிகாரங்கள் உள்ளனவோ அத்தகைய அதிகாரங்களை, பின்வரும் விஷயங்களில் கொண்டுருத்தல் வேண்டும், அதாவது:—

(a) ஆட்களின் வருகைக்கு அழைப்பாணை அனுப்பி வலிந்து செயற்படுத்துதல் மற்றும் ஆணைமொழியின் பேரில் வாய்மொழி அல்லது எழுத்துப்பூர்வமான சாட்சியத்தைக் கொடுக்கவும் மற்றும் ஆவணங்கள் அல்லது பொருட்களையும் முன்னிலைப்படுத்தவும் அவர்களைக் கட்டாயப்படுத்தல்;

(b) ஆவணங்களை கண்டறிந்து ஆய்வு செய்திட வேண்டுறுத்தல்;

(C) ஆணையுறுதி ஆவணத்தின்பேரில் சாட்சியம் பெறல்;

(d) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப்பதிவுரு அல்லது அதன் நகல்கள் எதற்கும் வேண்டுதற்கட்டளையிடல்;

(e) சாட்சிகளை அல்லது ஆவணங்கள் குறித்து விசாரிக்க அழைப்பாணை பிறப்பித்தல்; மற்றும்

(f) குறித்துரைக்கப்படலாகும் பிற விஷயம் எதுவும்.

*(4)* நேர்விற்கேற்ப நாடாளுமன்றத்தின், அல்லது மாநில சட்டமன்றத்தின் வேறு சட்டம் எதிலும் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், நேர்விற்கேற்ப

*மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையமானது, இந்தச் சடத்தின்படியிலான புகார் எதையும் விசாரிக்கும்போது, இந்தச் சட்டம் பொருந்துவதும் பொது அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளதுமான பதிவுறு எதையும் ஆய்வு செய்யலாம், மற்றும் அத்தகைய பதிவுறு எதுவும் அதனிடமிருந்து அடிப்படைகள் இதன் பேரிலும் நிறுத்தி வைக்கப்படலாகாது.*

**பிரிவு-19 மேல்முறையீடு-** Appeal

*(1) பிரிவு 7—இன் உட்பிரிவு (1)—இல் அல்லது உட்பிரிவு (3)— இன் கூறு (ணீ)— இல் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் முடிவு ஒன்றைப் பெற்றிராத அல்லது நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரின் முடிவு ஒன்றால் குறையுற்ற நபர் எவரும், அத்தகைய கால அளவு முடிவுற்றதிலிருந்து அல்லது அத்தகைய முடிவு ஒன்றைப் பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள் நேர்விற்கேற்ப மையபொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத்தகவல் அலுவலரின் பதவியில் முதுநிலையில் உள்ளவரும் பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றிலும் உள்ளவருமான அத்தகைய அலுவலரிடம் மேல்முறையீடு செய்திடலாம்.*

*வரம்புரையாக: குறித்த காலத்திற்குள் மேல்முறையீடு தாக்கல் செய்வதிலிருந்து மேல்முறையிட்டவர் போதுமான காரணத்தால் தடுக்கப்பட்டுள்ளார் என அத்தகைய அலுவலர் உளநிறைவடைந்தால் அந்த 30 நாட்களுக்கான கால அளவு முடிவடைந்த பிறகும் அந்த மேல்முறையீட்டை அவர் அல்லது அவர் ஏற்றுக்கொள்ளலாம்.*

*(2) பிரிவு 11—இன் படி மூன்றாம் தரப்பினர் தகவலை வெளிப்படுத்துவதற்கு நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர், அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் ஒருவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றிற்கு எதிராக மேல்முறையீடு ஒன்று செய்யப்படுமிடத்து, ஆணையின் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மூன்றாம் தரப்பினரால் மேல்முறையீடு செய்து கொள்ளப்பட வேண்டும்.*

*(3)உட்பிரிவு (1)— இன் படியான முடிவிற்கு எதிரான இரண்டாம் மேல்முறையீடானது எந்த தேதியில் அந்த முடிவு செய்யப்பட்டிருந்திருக்கிறதோ அல்லது உள்ளபடி*

*பெறப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் மைய தகவல் ஆணையத்திடம் அல்லது மாநில தகவல் ஆணையத்திடம் எழும்.*

*வரம்புரையாக: குறித்த காலத்திற்குள் மேல்முறையீடு தாக்கல் செய்வதிலிருந்து மேல்முறையீட்டாளர் போதுமான காரணத்தால் தடுக்கப்பட்டுள்ளார் என்று நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையம் உளநிறைவடைந்தால் அந்த 90 நாட்களுக்கான கால அவளவு முடிவடைந்த பிறகும் அந்த மேல்முறையீட்டை அது ஏற்றுக் கொள்ளலாம்.*

*(4) நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரின் எந்த முடிவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த முடிவு மூன்றாம் தரப்பினர் ஒருவரின் தகவலுக்கு தொடர்புடையதாக இருப்பின் நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையம் அந்த மூன்றாம் தரப்பினருக்கு அவரது முறையீடு கேட்கப்படுவதற்கான நியாயமான கேட்கை வாய்ப்பு ஒன்றை அளித்தல் வேண்டும்.*

*(5) மேல்முறையீட்டு நடவடிக்கைகள் எதிலும், வேண்டுகோள் ஒன்றின் மறுப்பு நியாயமானதே என்பதை மெய்ப்பிக்கும் சுமை நேர்விற்கேற்ப அந்த வேண்டுகோளை மறுத்த மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் மீது சார்ந்து இருக்கும்.*

*(6)உட்பிரிவு (1) மற்றும் உட்பிரிவு (2) — இன் படியான மேல்முறையீடு ஒன்று நேர்விற்கேற்ப, அந்த மேல்முறையீடு பெறப்பட்ட 30 நாட்களுக்குள் அல்லது அதை தாக்கல் செய்த நாளிலிருந்து 45 நாட்களுக்கு மேற்படாத எழுத்துருவில் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக அத்தகைய நீட்டிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப் பெறுதல் வேண்டும்.*

*(7)நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையத்தின் முடிவினை கட்டுப்படுத்தப்படக் கூடியதாகும்.*

*(8) நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையம் தனது முடிவினை,*

(a) *இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை கடைப்பிடித்தலை உறுதி செய்வதற்கு*

(i) அவ்வாறு வேண்டப்பட்டால், குறிப்பிட்ட வடிவம் ஒன்றில் தகவலை அணுகிப்பெறலை அளித்தல்

(ii) நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் ஒருவரை நியமித்தல்;

(iii) சில தகவலை அல்லது தகவலின் வகைகளை பதிப்பித்து வெளியிடல்

(iv) பதிவுருக்கள் பராமரித்தல், நிர்வகித்தல் மற்றும் அழித்தலுக்கு தொடர்புடைய அதன் நடைமுறைகளில் அவசியமான மாற்றங்களை செய்தல்;

(v) அதன் அலுவலர்களுக்கு தகவல் பெறும் உரிமை மீதான பயிற்சிக்கு வகை செய்தலை மேம்படுத்துதல்;

(vi) பிரிவு *4*—இன் உட்பிரிவு *(1)*—இன் கூறு (b)—க்கு இணங்கியவாறு ஆண்டறிக்கை ஒன்றை அதற்கு அளித்தல்;

ஆகியன உள்ளிட்ட அவசியமான அத்தகைய நடவடிக்கைகள் எதையும் எடுக்க பொது அதிகார அமைப்பை வேண்டுறுத்தவும்;

(b) இழப்பு எதற்காகவும் அல்லது அவதியுற்ற வேறு தீங்கிற்காக புகார்தாரருக்கு இழப்பீடு அளிக்க பொது அதிகார அமைப்பை வேண்டுறுத்தவும்;

(c) இந்தச் சட்டத்தின் படி வகை செய்யப்பட்ட தண்டங்கள் எதனையும் விதிக்கவும்;

(d) விண்ணப்பத்தை நிராகரிக்கவும், அதிகாரம் கொண்டுள்ளது;

*(9)* நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையமானது, மேல்முறையீட்டு உரிமை எதையும் உள்ளிட்ட தனது முடிவிற்கான அறிவிப்பை புகார்தாரருக்கும் பொது அதிகார அமைப்பிற்கும் கொடுத்தல் வேண்டும்.

*(10)* நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையமானது, மேல்முறையீட்டை குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைக்கு இணங்கியவாறு தீர்மானித்தல் வேண்டும்.

**பிரிவு-20. தண்டங்கள்** (Penalties)

*(1) நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையமானது, புகார் அல்லது மேல்முறையீடு எதையும் தீர்மானிக்கும் பொது நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர், தகுந்த காரணம் ஏதுமின்றி தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றை பெற மறுத்திருப்பதாக அலல்து பிரிவு 7—இன் உட்பிரிவு (1)—இல் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் தகவல் அளிக்காமல் இருப்பதாக அல்லது தகவலுக்கான வேண்டுகோளை தீய எண்ணத்துடன் மறுத்திருப்பதாக அல்லது தவறான முழுமையுறாத அல்லது தவறான எண்ணத்தைத் தோற்றுவிக்கும் தகவலை தெரிந்தே கொடுத்திருப்பதாக அலல்து வேண்டப்பட்ட தகவலை அழித்திருப்பதாக அல்லது தகவல் அளிப்பதை முறை எதனாலும் தடுத்திருப்பதாக கருதப்படுமிடத்து, அது விண்ணப்பம் பெறப்படுகிற அலது தகவல் அளிக்கப்படுகிற வரை நாளொன்றுக்கு ரூ.250/— க்கான தண்டம் ஒன்றை விதித்தல் வேண்டும், எனினும் அத்தகைய தண்டத்தின் மொத்தத் தொகையானது ரூ.25,000/—க்கு மேற்படலாகாது.*

*வரம்புரையாக: தண்டம் எதுவும் நேர்விற்கேற்ப மைய பொதுத்தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் மீது விதிக்கப்படுவதற்கு முன்னதாக அவரது முறையீடு கேட்கப்படுவதற்கு நியாயமான கேட்கை வாய்ப்பு ஒன்று அவருக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.*

*மேலும் வரம்புரையாக: தான் நியாயமாகவும் கவனமாகவும் செயல்பட்டேன் என்பதை மெய்ப்பிக்கும் சுமை, நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் மீது சார்ந்து இருக்கும்.*

*2) நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அலல்து மாநில தகவல் ஆணையமானது புகார் அல்லது மேல்முறையீடு எதையும் தீர்மானிக்கும் போது நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர் நியாயமான காரணம் ஏதுமின்றி மற்றும் தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றைப் பெற தொடர்ந்து மறுத்திருப்பதாக அல்லது பிரிவு 7—இன் உட்பிரிவு (1)—இல் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் தகவல் அளிக்காமல் இருப்பதாக அல்லது தகவலுக்கான வேண்டுகோளை தீய எண்ணத்துடன் மறுத்திருப்பதாக அல்லது தவறான*

*முழுமையுறாத அலல்து தவறான எண்ணத்தைத் தோற்றுவிக்கும் தகவலை தெரிந்தே கொடுத்திருப்பதாக அல்லது வேண்டப்பட்ட தகவலை அழித்திருப்பதாக அல்லது தகவல் அளிப்பதை முறை எதனாலும் தடுத்திருப்பதாக கருதப்படுமிடத்து, அது நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலருக்கு எதிராக அவருக்குப் பொருந்தும் பணி விதிகளின்படி ஒழுங்குமுறை நடவடிக்கைக்காக பரிந்துரைத்தல் வேண்டும்*

## அத்தியாயம் - 6

## பல்வகை Miscellaneous

*பிரிவு—21. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு* protection of action taken in good faith

*இந்தச் சட்டத்தை அல்லது இதன்கீழ்ச் செய்யப்பட்ட விதி அல்லது ஆனை எதையேனும் ஒட்டி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டுள்ள அல்லது செய்யக் கருதப்பட்டுள்ள எதற்காகவும், எவருக்கும், எதிராக உரிமை வழக்கோ, குற்ற வழக்கோ, அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவுமோ எடுக்கப்படுதல் கூடாது.*

**பிரிவு - 22. சட்டத்தின் மேலோங்கு செல்திறம்** Act to have overriding effect

*இந்தச் சட்டத்தின் வகையங்கள் அலுவல் சார் மறையங்கள் சட்டம் 1929 (1923) ல் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது வழக்கம் அல்லது வழக்காறு அல்லது அத்தகைய சட்டம் எதனின் காரணமகாவும் செயல்விளைவு பெற்றிருக்கின்ற முறையாவணம் எதிலும், அவற்றுக்கு முரணாக என்ன அடங்கியிருந்த போதிலும், செயல்விளைவு பெற்றிருத்தல் வேண்டும்.*

*பிரிவு — 23. நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குத் தடை* Bar of Jurisdiction of Courts

*இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணை எது குறித்தும் நீதிமன்றம் எதுவும் உரிமை வழக்கு, விண்ணப்பம் அல்லது பிற நடவடிக்கை ஏற்றுக் கொள்ளலாகாது மற்றும் அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின்படியான மேல்முறையீடு ஒன்றின் வழியாகத் தவிர வேறுவகையில் எதிர்த்து வாதிடப்பாடல் கூடாது.*

**பிரிவு - 24. சில அமைப்புகளுக்கு இச்சட்டம் பொருந்தாது**
Act not to apply to certain organisation

*(1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், மைய அரசாங்கத்தால் நிருவப்பட்டிருக்கிறதும், இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டதுமான நுண்ணறிவு மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அல்லது அத்தகைய அமைப்புகளால் அந்த அரசாங்கத்திற்கு அளிக்கப்படும் தகவல் எதற்கும், பொருந்திடாது.*

*வரம்புரையாக; ஊழல் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய குற்றச் சாட்டுகள் குறித்த தகவலானது இந்த உட்பிரிவின்படி தவிர்க்கப்படல் கூடாது.*

*மேலும் வரம்புரையாக : வேண்டப்பட்ட தகவலானது மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்ததாக இருக்கும் நேர்வில், மைய தகவல் ஆணையத்தின் ஒப்புதலுக்குப் பின்னரே அந்தத்தகவல் அளிக்கப்படுதல் வேண்டும், மற்றும் பிரிவு 7—இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய தகவலானது வேண்டுகோள் பெறப்பட்ட தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் அளிக்கப்படுதல் வேண்டும்.*

*(2) மைய அரசு, அரசிதழில், அறிவிக்கை வாயிலாக இணைப்புப்பட்டியலை அந்த அரசினால் நிறுவப்பட்ட நுண்ணறிவு அல்லது பாதுகாப்பு அமைப்பு வேறு எல்லாவற்றையும் அதில் சேர்ப்பதன் மூலம் அல்லது அதில் ஏற்கனவே சூழ்ந்துரைக்கப்பட்டுள்ள அமைப்பு எதையும் அதிலிருந்து நீக்குவதன் மூலம் திருத்தலாம் மற்றும் அத்தகைய அறிவிக்கையின் வெளியிடுகையின் பேரில் அத்தகைய அமைப்பு, நேர்விற்கேற்ப அதில் சேர்க்கப்பட்டதாக அல்லது, இணைப்புப் பட்டியலிலிருந்து விட்டுவிடப்பட்டதாக கருதப்பட்டால் வண்டும்.*

*(3) உட்பிரிவு (2) — இன் படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.*

*(4) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் மாநில அரசாங்கத்தால், அரசிதழில், அவ்வப்போது, அறிவிக்கை மூலம், குறித்துரைக்கப்படலானதும், அந்த அரசாங்கத்தால் நிறுவப் பெற்றதுமான, அத்தகைய நுண்ணறிவு மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு பொருந்துதல் ஆகாது.*

*வரம்புரையாக : ஊழல் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்த தகவலானது இந்த உட்பிரிவின்படி தவிர்க்கப்படல் கூடாது.*

*மேலும் வரம்புரையாக : வேண்டப்பட்ட தகவலானது மனித உரிமைகள் மீறல்கள் குற்றச்சாட்டுகள் குறித்தாக இருக்கும் நேர்வில், மாநில தகவல் ஆணையத்தின் ஒப்புதலுக்குப் பின்னரே அந்தத்தகவல் அளிக்கப்படுதல் வேண்டும், மற்றும் பிரிவு 7— இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,அத்தகைய தகவலானது வேண்டுகோள் பெறப்பட்ட தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் அளிக்கப்படுதல் வேண்டும்.*

*(5) உட்பிரிவு (4) — இன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், மாநில சட்டமன்றத்தின் முன்பு வைக்கபடுதல் வேண்டும்.*

**பிரிவு-25. கண்காணித்தலும் அறிக்கையளித்தலும்** Monitoring and reporting

*1) நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையமானது, நடைமுறைக்கு இயன்றவரை விரைவாக, ஒவ்வொரு ஆண்டின் முடிவிற்குப் பிறகும், அந்த ஆண்டில் இந்தச் சட்டத்தின் வகையங்களின் செயலாக்கம் குறித்த அறிக்கை ஒன்று தயாரித்து, அதன் நகல் ஒன்றை உரிய அரசிற்கு அனுப்ப வேண்டும்.*

*2) அமைச்சகம் அல்லது துறை ஒவ்வொன்றும் அவற்றின் அதிகரவர்ம்பிற்குட்பட்ட பொது அதிகார ஆயங்கள் தொடர்பாக இந்த பிரிவின்படி அந்த அறிக்கையை தயாரிக்க வேண்டுறுத்தப்பட்ட அத்தகை தகவலை சேகரித்து அவற்றை நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையத்திற்கு அல்லது மாநில தகவல் ஆணையத்திற்கு அளித்தல் வேண்டும் மற்றும் அந்தத் தகவலை அளித்தல் மற்றும் இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக பதிவுருக்களை வைத்திருத்தல் தொடர்பான வேண்டுறுத்தன்களை பினபற்ற வேண்டும்.*

*3) அறிக்கை ஒவ்வொன்றும் அந்த ஆண்டு குறித்த*

(a) *பொது அதிகார ஆயம் ஒவ்வொன்றிடமும் செய்யப்பட வேண்டுகோள்களின் எண்ணிக்கை:*

(b) *வேண்டுகோள்களைத் தொடர்ந்து ஆவணங்கள் அணுகி பெறலுக்கு விண்ணப்பதாரர்கள் உரிமையற்றவராகிறவிடத்து முடிவுகளின் எண்ணிக்கை. இந்தச் சட்டத்தின் எந்த வகையங்களின்படி அந்த*

முடிவுகள் செய்யப்பட்டதோ அந்த வகையங்கள் மற்றும் அத்தகைய வகையங்கள் வேண்டப்பட்ட தருணங்களின் எண்ணிக்கை;

(c) நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையத்திடம் மறு ஆய்விற்காக கட்டுரைக்கப்பட்ட மேல்முறையீடுகளின் விளைபயன்;

(d) இந்தச் சட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக அலுவலர் எவருக்கும் எதிராக எடுக்கப்பட்ட ஒழுங்குமுறை நடவடிக்கை பற்றிய விபரங்கள்:

(e) இந்தச் சட்டத்தின்படி பொது ஆணைக் குழு ஒவ்வொன்றாலும் வசூலிக்கப்பட்ட கட்டணங்களின் தொகை;

(f) இந்தச் சட்டத்தின் பொது இயல்பு மற்றும் எழுச்சியினை செயற்படுத்துவதற்கு பொது ஆணைக் குழுக்களின் முயற்சி ஒன்றை சுட்டிக்காட்டும் பொருண்மைகள் எதுவும்;

(g) இந்தச் சட்டம் அல்லது வேறு சட்டம் அல்லது பொதுச்சட்டம் அல்லது தகவலைப் பெறுவதற்கான உரிமையை இயங்க வைப்பதற்குத் தொடர்புடைய வேறு விஷயம் எதனின் மேம்பாடு. முன்னேற்றம், நவீனப்படுத்தல், சீர்திருத்தல் அல்லது திருத்தம் ஆகியவற்றிற்காக குறிப்பிட்ட பொது ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளை உள்ளடக்கி சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகள் ஆகியவற்றை குறிப்பிடுதல் வேண்டும்.

(4) நேர்விற்கேற்ப மைய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கமானது, நடைமுறைக்கு இயன்றவரை விரைவாக ஒவ்வொரு ஆண்டின் முடிவிற்குப் பிறகும், உட்பிரிவு (1)—இல் கட்டப்பட்டதும் நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையத்தினுடையதுமான அறிக்கையின் நகல் ஒன்றை நாடாளுமன்றத்தின் ஆணை ஒவ்வொன்றின் முன்னர், அல்லது நேர்விற்கேற்ப மாநில சட்டமன்றத்திற்கு இரண்டு அவைகள் இருக்குமிடத்து அத்தகைய அவை ஒவ்வொன்றின் முன்னர், மற்றும் அந்த மாநில சட்டமன்றத்திற்கு ஓரவை இருக்குமிடத்து, அந்த அவை முன்னர் வைக்கப்படச் செய்தல் வேண்டும்.

(5) இந்தச் சட்டத்தின்படியிலான பணிகளை செயலாற்றுதல் தொடர்பாக பொது ஆணைக் குழு ஒன்றின் நடைமுறையானது இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் அல்லது அதன்

*பொது இயல்புடன் ஒத்திசைந்திருக்கவில்லையென்று நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையத்திற்குத் தோன்றினால், அது அந்த அதிகார அமைப்பிற்கு தனது கருத்தில் அத்தகைய ஒத்திசைவை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டிருக்க வேண்டியதாக உள்ள நடவடிக்கைகளை குறித்துரைத்து பரிந்துரை ஒன்றைக் கொடுக்கலாம்.*

**பிரிவு-26 உரிய அரசாங்கம் செயல்முறைத் திட்டங்களை தயாரித்தல்** APPROPRIATE GOVERNMENT TO PREPARE PROGRAMMES

*1. உரிய அரசாங்கமானது, நிதி மற்றும் பிற வளங்கள் கிடைப்பதன் அலவிற்குட்பட்டு;—*

(a) *இந்தச் சட்டத்தின் கீழ் விளக்கப்பட்ட உரிமைகளை எவ்வாறு செயற்படுத்துவது என்பது குறித்து பொதுமக்களின், குறிப்பாக பின்தங்கிய சமூகத்தினரின் புரிந்துகொள்ளலை முன்னேற்றுவதற்கான கல்விச் செயல்முறைத் திட்டங்களை மேம்படுத்தலாம் மற்றும் ஏற்பாடு செய்யலாம்.*

(b) *கூறு (a) இல் குறிப்பிடப்பெற்ற செயல்திட்டங்களின் மேம்பாடு மற்றும் ஏற்பாட்டில் பங்கு பெறுவதற்கு மற்றும் அத்தகைய செயல்திட்டங்களை தாங்களே ஏற்று நடத்துவதற்கு பொது அதிகார அமைப்புகளை ஊக்கப்படுத்தலாம்;*

(c) *பொது ஆணைக் குழுக்கள் தங்கள் செயற்பாடுகள் பற்றி சரியான தகவலை உரிய தகுந்த நேரத்தில் மற்றும் திறம்பட பரவவிடுதலை மேம்படுத்தலாம்; மற்றும்*

(d) *நேர்விற்கேற்ப பொது ஆணைக் குழுக்களின் மைய பொதுத் தகவல் அலுவலர்கள் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கலாம் மற்றும் பொது ஆணைக் குழுக்கள் தமக்குத்தாமே பயன்படுத்திக் கொள்வதற்கான தொடர்புடைய பயிற்சி சாதனங்களை உருவாக்கலாம்.*

*(2) உரிய அரசாங்கமானது இந்தச் சட்டத்தின் தொடக்க நிலையிலிருந்து 18 திங்களுக்குள், அத்தகைய தகவல் கொண்ட வழிகாட்டி ஒன்றை தனது அலுவல் மொழியிலும், இந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட உரிமை எதையும் செயற்படுத்த விரும்பும் நபர் ஒருவரால் தகுந்தவாறு வேண்டுறுத்தப்படக்கூடியவாறு எளிமையாக புரிந்து கொள்ளக்*

*கூடிய வடிவிலும் முறையிலும், தொகுத்தல் வேண்டும்.*

*(3) உரிய அரசாங்கமானது அவசியமானால் உட்பிரிவு (2) — இல் குறிப்பிடப்பெற்ற வழிகாட்டு நெறிமுறைகளை முறையான கால இடைவெளிகளில் உட்பிரிவு (2)—இன் பொதுத்தன்மைக்கு குந்தகமின்றி இன்றைய நிலைக்கேற்ப வெளியிட வேண்டும்: அதில் உள்ளடங்குவதாவது —*

(a) *இந்தச் சட்டத்தின்படி நோக்கங்கள்;*

(b) *பிரிவு 5—இன் உட்பிரிவு (1)—இன் படி நியமிக்கப்பட்டவரும் நேர்விற்கேற்ப பொது ஆணைக் குழு ஒவ்வொன்றினுடைய மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலரின் அஞ்சல் மற்றும் தெரு முகவரி, தொலைபேசி மற்றும் தொலைநிழலச்சு எண் மற்றும் கிடைப்பதாக இருப்பின் மின்னணு அஞ்சல் முகவரி;*

(C) *நேர்விற்கேற்ப மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் ஒன்றை அணுகிப் பெறுதலுக்கான வேண்டுகோள் செய்யப்படுதல் வேண்டிய முறை மற்றும் படிவம்;*

(d) *இந்தச் சட்டத்தின் படி நேர்விற்கேற்ப பொது ஆணைக்குழு ஒன்றின் மைய பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநில பொதுத் தகவலருக்கு கிடைக்கும் உதவி மற்றும் அவர்களது கடமைகள்;*

(e) *நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையத்திடமிருந்து கிடைக்கும் உதவி;*

(f) *ஆணையத்தில் மேல்முறையீடு ஒன்றை தாக்கல் செய்யும் முறை உட்பட இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட உரிமை அல்லது விதிக்கப்பட்ட கடமை ஒன்று குறித்து செய்யப்பட்ட செய்கை அல்லது செய்யத் தவறுகை தொடர்பாக சட்டப்படி கிடைக்கும் எல்லாத் தீர்வழிகளும்;*

(g) *பிரிவு 4 க்கு இணங்கியபடி பதிவேடுகளின் வகையினங்களை தம்மிச்சையாக வெளியிடுவதற்கு வகை செய்யும் வகையங்கள்;*

(h) *தகவல் ஒன்றைப் பெறலுக்கான வேண்டுகோள்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் குறித்த அறிவிப்புகள்; மற்றும்*

(i) *இந்தச் சட்டத்துடன் இணங்கியவாறு தகவல் ஒன்றை ஒழுங்குமுறைவிதிகள் அல்லது சுற்றறிக்கைகள் எதையும்,*

*(4) அவசியமானால், உரிய அரசாங்கமானது, அந்த வழிகாட்டு நெறிகளை முறையான கால இடைவெளிகளில் இன்றைய நிலைக்கேற்ப புதிதாக்கி வெளியிட வேண்டும்.*

**பிரிவு-27 விதிகள் இயற்றிட உரிய அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்** Power to make rules by Appropriate Government

*1) இந்தச் சட்டத்தின் வகையங்களை செயலுறுத்த உரிய அரசானது, அரசிதழில் செய்யும் அறிக்கை வாயிலாக, விதிகள் இயற்றிடலாம்.*

*2) குறிப்பாக மற்றும் முன் சென்ற அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு குந்தகமின்றி, அத்தகைய விதிகள் பின்வரும் விஷயங்கள் எல்லாவற்றிற்கும் அல்லது அவற்றில் எவற்றிற்காவதுவகை செய்யாலாம், அதாவது:—*

(a) *பிரிவு 4 — இன் உட்பிரிவு (4) — இன்படி பரவவிடப்பட வேண்டிய பொருள்வகைகளின் ஊடகச் செலவு அல்லது அச்சுக் கட்டணத் தொகை;*

(b) *பிரிவு 6 — இன் உட்பிரிவு (1) — இன்படி செலுத்தப்படத்தக்க கட்டணம்;*

(c) *பிரிவு 7 — இன் உட்பிரிவுகள் (1) மற்றும் (5) — இன்படி செலுத்தப்படத்தக்க கட்டணம்;*

(d) *பிரிவு 13— இன் உட்பிரிவு (6) மற்றும் பிரிவு 16 — இன் உட்பிரிவு (6) — இன்படி அலுவர்கள் மற்றும் இதர பணியாட்களின் பணிக்கு செலுத்தப்படத்தக்க ஊதியம் மற்றும் படிகள் மற்றும் அவர்கள் பணி பற்றிய விதிமுறைகளும், விதிமுறைகளும், வரையறைகளும்.*

(e) *பிரிவு 19 — இன் உட்பிரிவு (10) — இன்படி மேல்முறையீடுகளை தீர்மானிப்பதில் நேர்விற்கேற்ப மைய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையத்தால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை: மற்றும்*

(f) *வகுத்துரைக்கப்பட அல்லது வேண்டுருத்தப்பட்ட, பிற விஷயம் ஏதும்.*

**பிரிவு-28. விதிகள் இயற்றிட தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிற்குள்ள அதிகாரம்** power to make rules by Competent Authority

*1) இந்தச் சட்டத்தின் வகையகளை செயற்படுத்த தகுதி வாய்ந்த அதிகார அமைப்பானது, அரசிதழில் செய்யும் அறிவிக்கை வாயிலாக, விதிகள் இயற்றிடலாம்.*

*2) குறிப்பாக மற்றும் முன்சென்ற அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு குந்தகமின்றி, அத்தகைய விதிகள் பின்வரும் விஷயங்கள் எல்லாவற்றிற்கும் அல்லது அவற்றில் எவற்றிற்காவது வகை செய்யலாம்,*

**அதாவது:-**

a) *பிரிவு 4 — இன் உட்பிரிவு (4) — இன்படி பரவாவிடப்பட வேண்டிய பொருள்வகைகளின் ஊடகச் செலவு அல்லது அச்சுக் கட்டணத் தொகை*

b) *பிரிவு 6 — இன் உட்பிரிவு (1) — இன்படி செலுத்தப்படத்தக்க கட்டணம்;*

c) *பிரிவு 7 — இன் உட்பிரிவு (1) — இன்படி செலுத்தப்படத்தக்க கட்டணம்;*

d) *வகுத்துரைக்கப்பட அல்லது வேண்டுறுத்தப்பட்ட, பிற விஷயம் ஏதும்.*

**பிரிவு-29. விதிகளை முன் வைத்தல்** Laying of rules

*1) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும் அது வகுக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவொன்றிலும், அது அமர்வில் இருக்கையில், ஒரு கூட்டத் தொடரிலோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களிலோ மொத்தம் முப்பது நாட்கள் கொண்ட ஒரு கால அளவிற்கு அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும் மேற்சொன்ன கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது, என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்.*

*அல்லது நேர்விற்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும், எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு*

*எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யயப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கு குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.*

*இந்தப் பிரிவின்படி, மாநில அரசாங்கத்தால் செய்யப்பட்ட ஒவ்வொரு விதியும், அவ்வாறு செய்யப்பட்ட பின்னர், கூடிய விரைவில் மாநிலச் சட்டப் பேரவையின் முன் வைக்ககப்படுதல் வேண்டும்.*

**பிரிவு-30. இடர்பாடுகளைக் கலைவதற்குரிய அதிகாரம்**

Power to remove difficulties

*1) இந்தச் சட்டத்தின் வகையங்களை செயல்திறப்படுத்துவதில் ஏதேனும் இடையூறு எழுந்தால், மத்திய அரசு, இச்சட்டத்தின் வகையங்களுக்கு முரணின்றி, அந்த இடையூறை அகற்றலாம்.*

*வரம்புரையாக : இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து இரண்டாண்டு காலம் முடிவுற்ற பின்னர் அத்தகையதொரு ஆணையை இயற்றவியலாது.*

*2) ஆயினும், இச்சட்டத்தின் கீழ் இயற்றிய ஆணையை அது இயற்றப்பட்ட பின்னர் எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் நாடாளுமன்னத்தின் ஒவ்வொரு அவை முன்பும் வைக்க வேண்டும்.*

**பிரிவு-31. நீக்கறவு** Repeal

*தகவல் பெறும் சுதந்திரச் சட்டம், 2002 (சட்டம், எண்.5/2003) இதன் மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது.*

*முதலாம் இணைப்புப்பட்டியல்* (The First Schedule)

*(பார்க்க பிரிவுகள் 13(3) மற்றும் 16(3))*

*முதன்மை தகவல் ஆணையர் / தகவல் ஆணையர் / மாநில தலைமை தகவல் ஆணையர் / மாநில தகவல் ஆணையர் ஆகியோர்களால் செய்யப்பட வேண்டிய ஆணைமொழி அல்லது உறுதிமொழி*

*முதன்மை தகவல் ஆணையர் / தகவல் /ஆணையர் / மாநில தலைமை தகவல் ஆணையர் / மாநில தகவல் ஆணையர்—ஆக நியமனம் பெற்றுள்ள ———————————— ஆகிய நான், சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள இந்திய அரசமைப்பின் மீது உண்மையான நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டிருப்பேன் என்றும், எனது பணியின் கடமைகளை விருப்பு அல்லது அச்சமின்றி, பற்று அல்லது பாதக மனமின்றி*

*நேர்மையாகவும், நம்பிக்கையுடனும், எனது திறம், அறிவு மற்றும் கணிப்பிற்கு கூடிய வரை சிறப்பாக நிறைவேற்றுவேன் என்றும், அரசமைப்பையும் சட்டங்களையும் நிலைநிறுத்துவேன் என்றும் கடவுளின் பெயரால் ஆணைமொழிகின்றேன்.*

*உள்ளார்ந்து உருதிமொழிகின்றேன்.*

*இரண்டாம் இணைப்புப்பட்டியல்* (The Second Schedule)

*(பார்க்க பிரிவு 24)*

*மைய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட நுண்ணறிவு மற்றும் பாதுகாப்பு அமைப்புகள்* [Intellingence and Security Organisation established by the Central Government]

*1. நுண்ணறிவுத் துறை*

*2. அமைச்சரவை செயலகத்தின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு.*

*3. வருவாய் நுண்ணறிவு இயக்குநரகம்*

*4. மைய பொருளாதார நுண்ணறிவுத் துறை*

*5. அமலாக்க இயக்குநரகம்*

*6. போதைப்பொருள் கட்டுப்பாட்டுத் துறை*

*7. வான்பயண ஆராய்ச்சி மையம்.*

*8. சிறப்பு எல்லைப் படை*

*9. எல்லை பாதுகாப்புப் படை*

*10. மத்திய இடர்காப்பு காவற்படை*

*11. இந்தோ திபெத் எல்லைக் காவற்படை*

*12. மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை*

*13. தேசிய பாதுகாப்பு படைப் பிரிவினர்.*

*14. அசாம் சுழற் துப்பாக்கிப் படையினர்*

*15. சிறப்புச் சேவைத் துறை*

*16. சிறப்புப் பிரிவு (ம.பு.து.), குபி, தாத்ரா மற்றும் நிகோபார்*

*17. குற்றப் பிரிவு. — ம.பு.து. — கு.பி, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி.*

*18. சிறப்புப் பிரிவு. இலட்சத் தீவு காவற்படை.*

*தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம் — 1997*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 1997 — ஆம் ஆண்டு மே திங்கள் 4 —ஆம் நாளில் ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது. அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகின்றது:—*

*சட்ட எண். 24/1997*

*தமிழ்நாடு மாநிலத்தில் தகவல் பெறுவதற்கான உரிமையை நாடிப் பெறுவதற்கும் அது தொடர்பான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.*

*அரசின் நடவடிக்கை ஒவ்வொன்றும் பொது மக்களுக்கு வெளிப்படையாகத் தெரியவேண்டியது தேவையானதெனக் கருதப்படுவதாலும்.*

*மற்றும் இந்த நோக்கத்தை எய்துவதற்காக குடிமக்களில் ஒவ்வொருவரும் அரசிடமிருந்து தகவல் பெறுவதற்கு இயலுமாறு செய்தல் வேண்டும் என்பதாலும்:*

*இந்தியக் குடியரசின் நாற்பத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—*

**பிரிவு 1.குருந்தளைப்பும் தொடக்கமும்**

*(1) இந்தச் சட்டமானது, 1997—ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம் என வழங்கப்பெறும்.*

*(2) இது. உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

**பிரிவு 2.பொருள் வரையறைகள்**

*இந்தச் சட்டத்தில் தருவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—*

*(1)"தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு" என்றால், இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக அறிவிக்கை வாயிலாக, தகுதிவாய்ந்த அதிகார அமைப்பென அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட துணை ஆட்சியரின் படிநிலைக்குக் குறையாத அல்லது அதற்குச் சமமான ஒரு நிலையிலே அதற்கு மேற்பட்ட ஒரு நிலையிலோ உள்ள அதிகார அமைப்பு எதுவும் அல்லது அலுவலர் எவரும் என்று பொருள்படும்;*

*(2) "அரசு" என்றால், மாநில அரசு என்று பொருள்படும்;*

*(3)"தகவல்" என்பது, அரசின் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியேனும் அமைத்துருவாக்கப்பட்ட உள்ளாட்சி அல்லது பிற அதிகார அமைப்புகள் எதனின் அல்லது அதனால் கட்டுப்படுத்தப்பட்டு வருகிற சட்டமுறையிலான அதிகார அமைப்பொன்றின் அல்லது நிருவமொன்றின் அல்லது கழகமொன்றின் அலது கூட்டுறவுச் சங்கமொன்றின் அல்லது நிறுவனம் எதனின் விவகாரங்கள் தொடர்பான ஆவணம் எதனின் நகலையும் உள்ளடக்கும்.*

## பிரிவு 3.தகவல் பெற அணுகுவதற்கான உரிமை

*(1) உண்மையிலேயே தகவல் தேவைப்படுகின்ற நபர்கள் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின்படி குறித்துறைக்கப்பட்டுள்ள நடைமுறைக்கிணங்கிய வகையில் அத்தகைய தகவலைப் பெறுவதற்கான அணுகுறிமை கொண்டிருக்கலாம்.*

*(2) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், நபர் எவருக்கும்;—*

(a) *பாதுகாப்புப் படை தொடர்பான;*

(b) *எதனை வெளியிடுவதானது, நாட்டின் மற்றும் அரசின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றிற்குக் குந்தகம் விளைவிக்குமோ, அது தொடர்பான;*

(c) *எதனை வெளியிடுவதானது, சர்வதேச நாடுகளிடையேயுள்ள ஊறு விளைவிக்குமோ, அது தொடர்பான:*

(d) *அயல்நாட்டு அரசுகள், அயல்நாட்டு நீதிமன்றங்கள் அல்லது சர்வதேச நிறுவனங்களிலிருந்து கமுக்கமாகப் பெறப்பட்டது தொடர்பான;*

(e) (i) *அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களின் நடவடிக்கைகள்;*

(ii) *உள்நாட்டுக்குரிய கருத்து ஆலோசனை, பரிந்துரைகள், கலந்தாலோசனை மற்றும் ஆழ்ந்தாராய்வுகள்;*

(iii) *உள்நாட்டுக்குரிய கொள்கைப் பகுப்பாய்வு தொடர்பான திட்ட ஏற்பாடுகளும்; மாற்றுக்கொள்கைகளுக்கான விருப்பத் தெரிவுகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் வேண்டாமென விடப்பட்ட கொள்கை விருப்பத்தெரிவுகள்;*

(iv) *துறைகள், பொதுத்துறை அமைப்புகள் மற்றும் முறைப்படுத்தும் அமைப்புகள் ஆகியவற்றிற்கிடையே நடைபெறும் கமுக்கமான தகவல் பரிமாற்றம்,*

உள்ளடங்கலாக எதனை வெளியிடுவதானது உள்நாட்டுக்குரிய கலந்துரையாடலின் வெளிப்படையான மற்றும் நடுநிலையான தன்மைக்கு ஊறு விளைவிக்குமோ, அது தொடர்பான;

(f) அமைச்சர்களுக்கும் ஆளுநருக்கும் இடையே நடைபெறும் கமுக்கமான தகவல் பரிமாற்றம் தொடர்பான

(g) எதனை வெளியிடுவதானது. நேர்மையான விசாரணை மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அல்லது அதனைத் தகுதி வாய்ந்த முறையில் நிருவகிப்பது உள்ளடங்கலாக நீதி நிருவாகத்திற்கு குந்தகம் விளைவிக்குமோ அது தொடர்பான;

## 4. தகவல்

(h) எதனை வெளியிடுவதானது உண்மையில் எடுக்கப்படக் கூடியதான அல்லது பெரும்பாலும் எடுக்கப்படக்கூடியதான சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்ப்பாயம் எதனின் நடவடிக்கைகள் பொது பொது விசாரணை அல்லது முறைமை சார் புலனாய்வு நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்குமோ, அது தொடர்பான அல்லது எதனை வெளியிடுவதானது அத்தகைய நடவடிக்கைகளின் சூழ்நிலையையொட்டி எடுத்துச் சொல்லப்பட்டிருப்பதாக அலது பெரும்பாலும் சொல்லப்படக்கூடியதாக இருக்குமோ, அது தொடர்பான,

(i) சட்ட நுண்ணறிவுத் தொழிலின் சிறப்புரிமையை உள்ளடக்கியது தொடர்பான;

(j) எதனை வெளியிடுவதானது குற்றத்தைத் தடுப்பதற்கு புலனாய்வு செய்வதற்கு அல்லது கண்டு பிடிப்பதற்கு குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு குந்தகம் விளைவிக்குமோ அது தொடர்பான;

(k) எதனை வெளியிடுவதானது பொதுமக்கள் பாதுகாப்பிற்கு அல்லது பொது ஒழுங்கிற்கு ஊறு விளைவிக்குமோ அது தொடர்பான;

(l) எதனை வெளியிடுவதானது, நபரெவரின் வாழ்க்கை அல்லது உடல் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தவோ அல்லது சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவோ பாதுகாப்பு நோக்கங்களுக்காகவோ கமுக்கமாகக் கொடுக்கப்பட்ட தகவல் அல்லது உதவியின் ஆதர மூலத்தை அடையாளம் காட்டுவதாக இருக்குமோ, அது தொடர்பான.

(m) எதனை வெளியிடுவதானது சுற்றுப்புறச் சூழலுக்கும், மிகவும் அரிதான அல்லது அவற்றின் உயிருக்கு இடர் ஏற்படுவதான உயிரினங்களுக்கும் அவற்றின் இருப்பிடங்களுக்கும், அழிவு ஏற்படுதவதைப் பெரும்பாலும் அதிகப்படுத்துமோ அது தொடர்பான;

(n) எதனை வெளியிடுவதானது; பொருளாதரா நிலையைச் சமாளிப்பதில் அரசுக்குள்ள செயல் திறனுக்கு ஊறு விளைவிக்குமோ அலுவல் முறை வாணிகச் சந்தை செயற்பாடுகளை நடத்துவதற்கு குந்தகம் விளைவிக்குமோ அல்லது நபரெவரும் தகாத முறையிலான ஆதாயம் அல்லது அனுகூலம் பெறுவதற்கு வழிவகுக்குமோ அது தொடர்பான;

(o) எதனை வெளியிடுவதானது, வரிக்கணிப்புக்கு அல்லது வரியையும் தீர்வைகளையும் வசூலித்தலுக்கு ஊறு விளைவிக்குமோ அல்லது வரித்தவிர்ப்புக்கு அல்லது வரி ஏய்ப்பிற்கு ஏதுவாக இருக்கக்கூடுமோ அது தொடர்பான;

(p) வணிக கமுக்க விவரங்கள் வாணிக மறைபொருள்கள் அல்லது அறிவுத்திறம் தோய்ந்த சொத்து உள்ளடங்கலான எதனைத் தேவையின்றி வெளியிடுவதானது மூன்றாம் தரப்பினறொருவரின் போட்டிக்குரிய நிலைமைக்கு ஊறு விளைவிக்குமோ, அது தொடர்பான;

(q) எதனை வெளியிடுவதானது தகாத முறையில் ஆதாயம் அல்லது அனுகூலம் பெறுவதற்கு வழிவகுக்குமோ அல்லது

(i) ஒரு துரையின் அல்லது பிற பொது அமைப்பின் அல்லது அதிகார அமைப்பின் போட்டிக்குரிய நிலைமைக்கு;

(ii) பணியாளர் மேலாண்மை அல்லது வாணிக அல்லது ஒப்பந்த நடவடிக்கைகள் குறித்துபேரம் பேசி முடிவு செய்வதற்கு அல்லது திறம்பட நடத்துவதற்கு ஊறுவிளைவிக்குமோ, அது தொடர்பான;

(r) (i) கமுக்கமானது பாதுகாக்கப்படும் என்று சட்ட முறையிலான உத்தரவாதத்தின் பேரில், அல்லது

(ii) உள்ளபடியாகவோ அல்லது உட்கிடையாகவோ வழங்குவதற்கு சட்டக் கடப்பாடு இல்லாத மற்றும் வெளியிடுவதற்கு இசைவளிக்காத, நபரொருவரால் கமுக்கமாக வழங்கப்பட்டிருப்பதன் விளைவாக வைத்து வரப்படுவது தொடர்பான;

(s) எதனை வெளியிடுவதானது அது இயற்றுச் சட்டத்தின்படி ஒழுங்குமுறை விதியின்படி அல்லது சர்வதேச நாடுகளுடைய உடன்படிக்கையின்படி தடை செய்யப்படுவதாக இருக்குமோ அது தொடர்பான;

(t) எதனை வெளியிடுவதானது நாடாளுமன்றத்தின்/ சட்டமன்றப் பேரவையின்/மேலவையின் சிறப்புரிமையை (previlege) மீறுவதொன்றாக அமையுமோ அது தொடர்பான;

(u) 1872—ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் 123—ஆம் பிரிவிலும் 124—ஆம் பிரிவிலும் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் தொடர்பான;

(v) (i) குற்றச்செயலைச் செய்வதற்கு பெரும்பாலும் உதவுகிற;

(ii) சட்டக் காவலிலிருந்து தப்புவதற்கு உதவுகிற அல்லது அதனை எளிதாக்குகிற அல்லது சிறைக் காவலை பெரும்பாலும் பாதிக்கிற; அல்லது

(iii) குற்றவாளிகளின் குற்றச்செயல்களை புலனாய்வு செய்தல் அல்லது அவர்களைக் கைது செய்தல் அல்லது அவர்களின் மீது குற்ற வழக்குத் தொடர்தல், என்கிற நடவடிக்கைகளுக்கு பெரும்பாலும் முட்டுக் கட்டையாயிருக்கிற பொருட்பாடு எதுவும் தொடர்பான தகவல் எதுவும் கொடுக்கப்படுதலாகாது.

*(3)* (a) தகவலுக்காக அணுகுரிமை பெற விரும்புகிற நபரெவரும் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிற்கு வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் படிவத்திலும் வகுத்துரைக்கப்படக்கூடிய விவரங்களுடனான விண்ணப்பம் ஒன்றைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

(b) (a) எனும் கூறின்படி விண்ணப்பமொன்று செய்துகொள்ளப்பட்டு அந்தத் தகவலானது அந்தத் தகுதி வாய்ந்த அதிகார அமைப்புக்குக் கிடைக்கத்தக்கதாக இல்லாமல், ஆனால் வேறு துறையிடம் அல்லது அதிகார அமைப்பிடம் அத்தகவலானது இருக்குமிடத்து தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிற்கு கிடைத்திருக்கிறதோ அந்த தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிற்கு அவ்விண்ணப்பத்தை மாற்றம் செய்து அதற்கிணங்கிய வகையில் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கலாம். அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டு அவ்விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது, எந்த அதிகார

அமைப்பிடமிருந்து அது சாட்டி பனுப்பப்பட்டுள்ளதோ, அல்லது பெறப்பட்டுள்ளதோ அந்தத் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிடம், அவ்விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து முப்பது வேலை நாட்களுக்குள்ளாக அந்தத் தகவலைத் தருதல் வேண்டும்.

(c) விண்ணப்பமொன்று அவ்வாறு துறையொன்றுக்கோ, அதிகார அமைப்பொன்றுக்கோ மாற்றம் செய்யப்பட்டுள்ள விடுத்து, அந்தத் துறையின் அல்லது அதிகார அமைப்பொன்றுக்கோ மாற்றம் செய்யப்பட்டுள்ளவிடுத்து அந்தத் துறையின் அல்லது அதிகார அமைப்பின் தலைவரானவர் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பாக இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(d) (i) தகவலொன்றைக் கேட்டுப் பெறுவதற்கான விண்ணப்பமொன்று வரப்பெற்றதன் பேரில், தகுதி வாய்ந்த அதிகார அமைப்பானது, அதனைப்பரிசீலித்து நடைமுறையில் எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில், ஆனால் எந்தவொரு நேர்விலும் விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது வேலை நாட்களுக்குள்ளாக, அந்த வேண்டுகோளினை ஏற்று அலது ஏற்க மறுத்து அதன் பேரிலான ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும்.

(ii) பிற நேர்வுகளில், தகுதி வாய்ந்த அதிகார அமைப்பானது நடைமுறையில் எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் அந்த வேண்டுகோளின் பேரில் அதன் முடிவினை, விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்க நியாயமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

*(3)*(a) தகவல் எதையும் வெளியிடுவதானது, பெரும்பாலும் அமைதியைக் குலைக்கும் அல்லது வன்முறையை ஏற்படுத்தும் அல்லது மதம், மொழி, சாதி, இனம், சமூகம் ஆகியவற்றின் அடிப்படியில் பொது மக்களின் பிரிவினரிடையே இணக்கமின்மையை உருவாக்கும் என்று தகுதி வாய்ந்த அதிகார அமைப்பானது கருதுமாயின், அல்லது அது பொது மக்கள் நலனுக்கு ஊறு விளைவிப்பதாக இருக்குமாயின் அந்தத் தகவலை, தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது கொடுப்பதற்கு மறுத்தல் வேண்டும்.

(c) தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது,—

(i) பெறவிழையும் அத்தகைய தகவல் எதுவும் 3(2) எனும் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு

மேற்பட்ட வகைகள் எதொன்றின் கீழும் வருகின்றது; அல்லது.

(ii) பெறவிழையும் தகவலை வெளியிடுவதானது. பொது ஒழுங்கினைப் பேணி வருவதற்கும் அல்லது அத்தியாவசியப் பணிகளை பேணி வருவதற்கும் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கும் குந்தகம் விளைவிக்கின்றது;

(b) தகுதி வாய்ந்த அதிகார அமைப்பானது

(i) பெற விழையும் அத்தகைய தகவல் எதுவும் 3 (2) பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகைகள் ஏதோ ஒன்றின் கீழும் வருகின்றது அல்லது

(ii) பெற விழையும் தகவலை வெளியிடுவதானது பொது ஒழுங்கினை பேணி வருவதற்கும் அல்லது அத்தியாவசிய பணிகளை பேணி வருவதற்கும் அத்தியாவசிய பொருள்களை வழங்குவதற்கும் குருந்தகம் விளைவிக்கின்றது.

என்று கருதினால் (a) எனும் கூறின்படி செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பம் எதனையும், எழுத்துருவில் காரணங்களைப் பதிவு செய்து மறுத்து விடுதல் வேண்டும்.

**பிரிவு 4. மேல்முறையீடு**

1) தகுதிவாய்ந்த அதிகார அமைப்பின் ஆணையினால் குறையற்ற நபரெவரும் அல்லது முப்பது வேலை நாட்களுக்குள்ளாக தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிடமிருந்து ஆணை எதனையும் பெற்றிருக்காத நபரெவரும் வகுத்துறைக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, அரசிடமோ அல்லது அரசினால் அறிவிக்கப்படக் கூடிய பிற அதிகார அமைப்பிடமோமேல்முறையீடு செய்துகொள்ளலாம்.

2) அரசின் அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகார அமைப்பின் முடிவே இறுதியானதாகும்.

3) நபரெவரது தரப்பினையும் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்றினை அவருக்கு நல்கியதற்குப் பின்னர் அல்லாமல், அவரைப் பாதிக்கக் கூடிய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**பிரிவு 5. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு**

இந்தச் சட்டத்தினையொட்டி அல்லது அதன்படிச் செய்யப்பட விதிகளையொட்டி நல்லெண்ணத்தில் செய்த

*அல்லது செய்யக்கருதி செயல் எதற்காகவும், அதிகார அமைப்பு எதற்குமெதிராகவோ நபரெவருக்குமெதிராகவோ உரிமை வழக்கு குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் கூடாது.*

**பிரிவு 6. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**

*இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில், இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணையொன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதன வாயிராத வகையில், அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக தேவையானவை என்றோ உகந்தவை என்றோ, தனக்குத் தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்;*

*வரம்புரை ஆனால் அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் கால அளவு முடிவடைந்த பின்னர் பிறப்பிக்கப்படுதலாகாது.*

**பிரிவு 7. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**

*1) அரசு இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.*

*2)* (a) *இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட விதிகள் அனைத்தும் அதமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் அவை குறிப்பிட்டுதொரு நாளில் அவை நடைமுறைக்குவருதல் வேண்டுமென்று வெளிப்படையாக சொல்லப்பட்டாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளிலேயே நடைமுறைக்குவருதல், வேண்டும்.*

(b) *இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் குறிப்பிட தொரு நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி, அவை வெளியிடப்படும் நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமை விதிகள், 1997* The Tamil Nadu Right to Information Rules, 1997 [G.O.Rt.No.1757, PUBLIC (S.C)] *[1998, மே 6]*

NO.SRO *கி—26* (a)/98 *தமிழ்நாடு பெறுவதற்கான உரிமைச் சட்டம், 1997—இன் (தமிழ்நாடு சட்டம் 24/1997) பிரிவு 7—இன் உட்பிரிவு (1) — ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு ஆளுநர் பின்வருமாறு விதிகளை இயற்றுகிறார்.*

**விதிகள்**

**விதி 1. குறுந்தலைப்பு** (Short title)

*இந்தச் விதிகள் தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமை விதிகள், 1997 என்று வழங்கப்பெறும்*

**விதி 2. பொருள்வரையறைகள்** (Definition)

*இவ்விதிகளில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,*

*1) "சட்டம்" என்றால் தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம், 1997 (தமிழ் நாடு சட்டம் 24/1997) எனப் பொருள்படும்;*

*2) "மேல்முறையீட்டு அதிகார அமைப்பு" என்றால் சட்டத்தின் [4— வது பிரிவின் உட்பிரிவு (1)—ல்]2 குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பு எனப்பொருள்படும்.*

**விதி 3. தகவலை அணுகிப் பெரும் உரிமை** (Right to access to information)

*சட்டத்தின் கீழ் தகவல் எதையாவது அணுகிப் பெற விழையும் எவரொருவரும், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிடம் அஞ்சல் மூலம் அல்லது நேரில் விண்ணப்பமொன்றை செய்திடலாம். அவ்விண்ணப்பத்தை சட்டத்தின் 3—வது பிரிவின் உட்பிரிவுகள் (3) மற்றும் (4)— ல்வகை செய்யப்பட்டுள்ளவாறு தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு பரிசீலனை செய்தல் வேண்டும்.*

1. Published in Tamil Nadu Government Gazette (Extraordinary) Part III. Section I (a), dated 6th May 1998, Issue No.248 Pages 1-4

2. Substituted by G.O.Ms.No.1040, Public (Establishment I and LEG), dated 3rd August 1999, Published in Tamil Nadu Gaztte Part III-Section 1(a) dated 18th August 1999.Issue No.32. Page 191.

**விதி 4. மேல்முறையீடு** (Appeal)

*1) தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் ஆணை ஒன்றால் முறையற்ற நபர் எவரும். அத்தகைய ஆணையின் நகலுடன் தகுதி வாய்ந்த, அதிகார அமைப்பின் ஆணை கிடக்கப் பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடமிருந்து மேல்முறையீடு செய்து கொள்ளலாம். விண்ணப்பத் தேதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிடமிருந்து ஆணை எதையும் கிடைக்கப் பெறாத நபர் எவரும் அவரது விண்ணப்பத் தேதியிலிருந்து 30 வேலை நாட்கள்*

நிறைவடைந்த தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மேல்முறையீடு அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்து கொள்ளாம்.

2) மேல்முறையீடு ஒவ்வொன்றும்.—

(a) மேல்முரையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு குறித்த விபரங்கள்;

(b) எதிராக மேல்முறையீடு செய்யப்படும் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் ஆணை, ஏதேனும் இருப்பின், அது பெறப்பட்ட தேதி,

(c) மேல்முறையீட்டிற்கான கோருகின்ற நிவாரணம்.

(d) மேல்முறையீட்டாளர் அடிப்படைகள். ஆகியவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) (a)மேல்முறையீடு பெறப்பட்டதின் பேரில், மேல்முறையீட்டு அதிகார அமைப்பானது, குறித்துரைக்கப்பட்டுள்ள கால வரம்பிற்குள் அம்மேல்முரையீடுசெய்யப்பட்டுள்ளது என்பதை இயன்ற வரை விரைவாக ஆய்வு செய்து உறுதி செய்தல் வேண்டும்.

(b) மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் முன்னர் நடக்கும் நடவடிக்கைகளில் மேல்முரையிட்டாளருக்கு சேர்கை நல்கும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

(c) மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் ஆணை ஒவ்வொன்றும் தொடர்புடைய மேல்முறையீட்டாள் மற்றும் இந்த தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதோ, அதற்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

இணைப்பு

2[படிவம்]

[விதி 3—ஐப் பார்க்க]

பெறுகை

(தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் விபரம் இங்கு குறிப்பிடப்பட் வேண்டும்)

1) விண்ணப்பாதாரரின் முழுப்பெயர்

2) முகவரி

3) கோரப்படும் தகவலின் விபரங்கள் —

(i)கோரப்படும் தகவலின் தன்மை

(ii) அத்தகவல் தொடர்புடைய அலுவலகம் அல்லது துறையின் பெயர்

(iii) தகவலின் கருப்பொருள் அத்தகவலுக்கு தொடர்புடைய ஆண்டு மற்றும் இடம் அல்லது பகுதி

(iv) தகவல் தேவைப்படுவதின் நோக்கம்

இடம்:

தேதி:

விண்ணப்பதாரரின்
கையொப்பம்

விளம்புகை

————————மகனாகிய/மகளாகிய/மனைவியாகிய ——————வயதுடைய (விண்ணப்பதாரரின் பெயர்) ஆகிய நான் மேல்முறையீட்டில் அளிக்கப்பட்ட விவபரங்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரை உண்மையொன்றும் சரியென்றும் மற்றும் நான் இந்த மூலப் பொருண்மையையும் மறைக்கவில்லை என்றும் இதன் மூலம் விளம்புகிறேன்.

இடம் :

தேதி : மேல்முறையீட்டாளரின் கையொப்பம்

பெறுகை

——————————துறை செயலகம், சென்னை 600 009 / அதற்கு வேறு அதிகார அமைப்பு

3.Substuted by G.O.Ms.No.1040,Public (Establshshment i and LEG), dated 3rd August 1999 Publicshed in Tamil Nadu Gazette Part III-Section 1 (a) dated 18th August 1999, Issue No.32 page 191.

# முக்கிய முகவரிகள்

**மாண்புமிகு**

**முதலமைச்சர் தனிப் பிரிவு,**
**தலைமை செயலகம்,**
**சென்னை - 600 009.**

**உயர்திரு**

**தலைமைச் செயலாளர் அவர்கள்,**
**தமிழ்நாடு அரசு,**
**தலைமை செயலகம்,**
**சென்னை - 600 009.**

**உயர்திரு**

**முதன்மை செயலாளர் அவர்கள்,**
**ஆதி திராவிடர் நலத்துறை,**
**தலைமை செயலகம்,**
**சென்னை - 600 009.**
Ph : 044 - 25671848
Fax : 044 - 25672446
Email : adisec@tn.gov.

**உயர்திரு**

**காவால் துறை தலைமை இயக்குநர் அவர்கள்,**
**காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம்,**
**சென்னை - 600 002.**

**உயர்திரு**

**இயக்குநர் அவர்கள்,**
**தாழ்த்தப்பட்டோர் /**
**பழங்குடியினர் ஆணையம்,**
**சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு,**
**சென்னை - 600 036.**
Ph : 044 - 28276430, 2831285.

**உயர்திரு**

**தலைவர் அவர்கள்,**
**மாநில மனித உரிமை ஆணையம்,**
**143, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை,**
**கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600 028.**
Ph : 044 - 2495149,
Toll Free : 18001800345,
Fax : 044 - 24951486,
E-mail : shrc@tn.nic.in

**உயர்திரு**

**தலைவர் அவர்கள்,**
**மாநில பெண்கள் ஆணையம்,**
**735, தேவநேய பாவனார் நூலகம்**
**2வது தளம், அண்ணாசாலை,**
**சென்னை - 600 002.**
Ph : 044 - 28592750, 28551155.

**உயர்திரு**

**தேசிய மனித உரிமை ஆணையம்,**
**மானவ் அதிகார் பவன், சி - பிளாக் மிழிகி,**
**புது டில்லி - 110 023.**
Ph : 011 - 24651330,
Fax : 24651329.
Mobile : 098102 98900.
E-mail : covdnhrc@nic.in

**உயர்திரு**

**தலைவர் அவர்கள், தேசீய தாழ்த்தப்பட்டோர் /**
**பழங்குடியினர் ஆணையம்,**
**5வது தளம் - லோக்நாயக் பவன்,**
**புது டெல்லி - 110 003.**
Toll Fee : 1800 118 888
Fax : 011 - 24632298
Web : www.ncsc.nic.in
Ph : 011 24620969.

**உயர்திரு**

**தேசிய பெண்கள் ஆணையம்,**
**4, தீன்தயாள் உப்பந்தியாய மார்க்,**
**புது டெல்லி - 110 002.**
Ph : 011 - 23236204, 23219750.
Fax : 011 - 23236153.
E-mail : ms_new@nic.in. jsnew_wcd@nic.in.

**உயர்திரு**

**தமிழ்நாடு தலைமைத் தகவல் ஆணையம்,**
**89, டாக்டர் அழகப்பா சாலை,**
**புரசைவாக்கம்,**
**சென்னை - 600 084.**
Ph : 044 - 2603355.

**மாண்புமிகு**

V.M. **ராஜலட்சுமி அவர்கள்,**
**ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்,**
**ஜார்ஜ் ஜெயின் கோட்டை,**
**சென்னை.**
Cell : 9791561576.

**மாண்புமிகு**

**முதலமைச்சரின் நேர்முக உதவியாளர்,**
**தலைமை செயலகம்,**
**சென்னை - 600 009.**

***

# துணை நின்ற நூல்கள்


1. தோழர் ஜீவானந்தம் படைப்புகள்.
2. பாரதிதாசன் கவிதைகள்.
3. வேத மதம்.
4. சாதியத்தின் வேர்கள் - விளைவுகள்.
5. இந்தியாவில் சாதி
6. தாழ்த்தப்பட்ட சாதியினர் - தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 வெளியீடு, சட்ட - சமூக ஆராய்ச்சி மையம், சென்னை.
7. வன் கொடுமைத் தடுப்புச் சட்டத்தை வதைப்படுத்தும் போலீசார்,

அரங்க. குணசேகரன், வெளியீடு : தமிழக மனித உரிமைச் கழகம், தமிழ்நாடு - 2003.

8. வன் கொடுமைகளும் சட்ட அமலாக்கமும், எம்.ஏ., - பிரிட்டோ வெளியீடு, டாக்டர் அம்பேத்கர் பண்பாட்டு மையம், மதுரை 2007.
9. வன்கொடுமை தடுப்பு சட்டம், அ. சகாய பிலோமின்ராஜ், 2016.
10. இனையதளம்.
11. சாதி ஆணவ கொலைகள், 2015.
12. பஞ்சமி நிலம் எங்கள் உரிமை, 2000.



ARK.தமிழ்ச்செல்வன்

நட்பின் இலக்கணமாகவும், மூவேந்தர்கள் அநீதிகளுக்கு அஞ்சாமல் செயல்பட்ட சங்ககாலப் பெரும்புலவர் கபிலர் வாழ்ந்து கனல் புகுந்த தென்பெண்ணை நதிபாயும் ஒன்றுபட்ட தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரிர் பிறந்தவர் தோழர் ARK.தமிழ்ச்செல்வன். தனது 15வது வயதில் கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும்போது, புகழ்பெற்ற பழமையான சிவன் கோவில் வழிபாட்டு உரிமைக்கான போராட்டத்தில், ஆதிக்க சாதிவெறி சக்திகளால் பொய் வழக்குக்கு உள்ளாகி காவல்துறை நிர்வாணப்படுத்தி கொடுந்தாக்குதல் நடத்திய மன, உடல் வடுக்களோடு இன்றுவரையில் சாதியத்தையும், தீண்டாமையையும் எதிர்த்தும், ஜனநாயக உரிமைகள் மற்றும் உண்மையான ஜனநாயக சீர்திருத்தங்களுக்காகவும், சோசலிச பதாகையை உயர்த்தி பிடித்து மார்க்சிய தத்துவ வழியில் போராடி வருபவர். அந்த பகுதியில் குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் தோழர் என்று அன்புடன் அழைக்கப்படும் செயல்பாட்டாளர் ஆவார். பக்கத்து கிராமத்தில் 12 வயது மாணவியை மாரியம்மன் கோவிலில் பொட்டு கட்டி விட்ட கொடுமையை எதிர்த்து போராடி அச்சிறுமியை மீட்டது. காங்கேயனூர் தலித் மக்கள் கோவில் வழிபாட்டு உரிமைக்கான உக்கிரமான போராட்டத்தில் முன்னணி பாத்திரம் வகித்து கடலூர் சிறை கொட்டடியில் தள்ளப்பட்டது, பஞ்சமி நில மீட்பு, கல்வி வழிகாட்டுதல் என அவர் களங்கள் இன்று வரையில் தொடர்கின்றன. சாதி ஒழிப்பு களத்துக்கும், உழைக்கும் மக்கள் ஒற்றுமைக்கும் கள அனுபவத்தோடு ஆயுதமாய் இந்நூலை வழங்கியுள்ளார். பாராட்டுக்கள் வாழ்த்துக்கள்.

– பதிப்பகத்தார்



வெளியீடு :-
தென்பெண்ணை நதிக்கரை பதிப்பகம்
அறம்கண்டநல்லூர்
விலை : ரூ.250